ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

ஆழ்வார்கள் அருளிச் செய்த
நாலாயிர திவ்யப்ரபந்தம்

இரண்டாம் ஆயிரம்

http://svlife.org

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்
http://acharya.org

நாலாயிர திவ்யப்ரபந்தம் - இரண்டாம் ஆயிரம்

Copyright © 2023 by TCA Venkatesan

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods, without the prior written permission of the publisher, except in the case of brief quotations embodied in critical reviews and certain other noncommercial uses permitted by copyright law.

While all attempts have been made to verify the information provided within this publication, neither the author, nor the publisher assumes any responsibility for errors, omissions, or contrary interpretations on the subject matter within. No guarantees for any results are being made by the author or publisher, nor are any liabilities being assumed.

Neither the author nor the publisher assumes any responsibility or liability whatsoever on behalf of the purchaser or reader of this material.

Published By: SV Life, LLC
Cover Design: TCA Venkatesan

நாலாயிர திவ்யப்ரபந்தம் - இரண்டாம் ஆயிரம்

பொது தனியன்கள் 6
பெரிய திருமொழி 7
பெரிய திருமொழி தனியன்கள் 7
முதல் பத்து 8
முதல் திருமொழி - வாடினேன் 8
இரண்டாம் திருமொழி - வாலி மாவலத்து 10
மூன்றாம் திருமொழி - முற்ற மூத்து 12
நான்காம் திருமொழி - ஏனமுனாகி 14
ஐந்தாம் திருமொழி - கலையுங்கரியும் 16
ஆறாம் திருமொழி - வாணிலா முறுவல் 17
ஏழாம் திருமொழி - அங்கண் ஞாலம் 20
எட்டாம் திருமொழி - கொங்கலர்ந்த 21
ஒன்பதாம் திருமொழி - தாயே தந்தை 22
பத்தாம் திருமொழி - கண்ணார் கடல் சூழ் 24
இரண்டாம் பத்து 25
முதல் திருமொழி - வானவர் 25
இரண்டாம் திருமொழி - காசையாடை 26
மூன்றாம் திருமொழி - விற்பெரு விழவும் 28
நான்காம் திருமொழி - அன்றாயர் 30
ஐந்தாம் திருமொழி - பாராயது 32
ஆறாம் திருமொழி - நண்ணாத 34
ஏழாம் திருமொழி - திவளும் 36
எட்டாம் திருமொழி - திரிபுரம் 38
ஒன்பதாம் திருமொழி - சொல்லு 40
பத்தாம் திருமொழி - மஞ்சாடு 42
மூன்றாம் பத்து 45
முதல் திருமொழி - இருந்தண்மாநிலம் 45
இரண்டாம் திருமொழி - ஊன்வாட 46
மூன்றாம் திருமொழி - வாட மருதிடை 48
நான்காம் திருமொழி - ஒரு குறளாய் 50
ஐந்தாம் திருமொழி - வந்துனது 52
ஆறாம் திருமொழி - தூவிரிய 53
ஏழாம் திருமொழி - கள்வன் கொல் 55
எட்டாம் திருமொழி - நந்தா விளக்கே 56
ஒன்பதாம் திருமொழி - சலங்கொண்ட 58
பத்தாம் திருமொழி - திருமடந்தை 61
நான்காம் பத்து 63
முதல் திருமொழி - போதலர்ந்த 63
இரண்டாம் திருமொழி - கம்பமா 64
மூன்றாம் திருமொழி - பேரணிந்து 66
நான்காம் திருமொழி - மாற்றரசர் 68
ஐந்தாம் திருமொழி - தூம்புடை 70
ஆறாம் திருமொழி - தாவளந்து 72
ஏழாம் திருமொழி - கண்ணார் கடல் 73
எட்டாம் திருமொழி - கவளயானை 74
ஒன்பதாம் திருமொழி - நும்மைத் தொழுதோம் 76
பத்தாம் திருமொழி - ஆய்ச்சியர் 77
ஐந்தாம் பத்து 79
முதல் திருமொழி - அறிவதரியான் 79

இரண்டாம் திருமொழி - தாந்தம்....81
மூன்றாம் திருமொழி - வென்றி....82
நான்காம் திருமொழி - உந்திமேல்....84
ஐந்தாம் திருமொழி - வெருவாதாள்....86
ஆறாம் திருமொழி - கைம்மானம்....88
ஏழாம் திருமொழி - பண்டை....89
எட்டாம் திருமொழி - ஏழை ஏதலன்....92
ஒன்பதாம் திருமொழி - கையிலங்கு....94
பத்தாம் திருமொழி - தீதறு....95
ஆறாம் பத்து.... 98
முதல் திருமொழி - வண்டுணும்....98
இரண்டாம் திருமொழி - பொறுத்தேன்....100
மூன்றாம் திருமொழி - துறப்பேன்....101
நான்காம் திருமொழி - கண்ணும்....102
ஐந்தாம் திருமொழி - கலங்க....104
ஆறாம் திருமொழி - அம்பரமும்....105
ஏழாம் திருமொழி - ஆளும் பணியும்....107
எட்டாம் திருமொழி - மான்கொண்ட....109
ஒன்பதாம் திருமொழி - பெடை அடர்த்த....110
பத்தாம் திருமொழி - கிடந்த நம்பி....111
ஏழாம் பத்து.... 113
முதல் திருமொழி - கறவா மடநாகு....113
இரண்டாம் திருமொழி - புள்ளாய் ஏனமுமாய்....114
மூன்றாம் திருமொழி - சினவில்....115
நான்காம் திருமொழி - கண் சோர....118
ஐந்தாம் திருமொழி - தந்தை காலில்....120
ஆறாம் திருமொழி - சிங்கமதாய்....121
ஏழாம் திருமொழி - திருவுக்கும்....123
எட்டாம் திருமொழி - செங்கமலம்....125
ஒன்பதாம் திருமொழி - கள்ளம் மனம்....127
பத்தாம் திருமொழி - பெரும்புறக்கடல்....129
எட்டாம் பத்து.... 131
முதல் திருமொழி - சிலை இலங்கு....131
இரண்டாம் திருமொழி - தெள்ளியீர்....133
மூன்றாம் திருமொழி - கரையெடுத்த....135
நான்காம் திருமொழி - விண்ணவர்....136
ஐந்தாம் திருமொழி - தந்தைகாலில்....137
ஆறாம் திருமொழி - தொண்டீர்....140
ஏழாம் திருமொழி - வியமுடை....142
எட்டாம் திருமொழி - வானோரளவும்....143
ஒன்பதாம் திருமொழி - கைம்மானம்....146
பத்தாம் திருமொழி - வண்டார்....147
ஒன்பதாம் பத்து.... 148
முதல் திருமொழி - வங்கமாமுந்நீர்....148
இரண்டாம் திருமொழி - பொன்னிவர்....151
மூன்றாம் திருமொழி - தன்னை....153
நான்காம் திருமொழி - காவார்....154
ஐந்தாம் திருமொழி - தவளவிளம்பிறை....156
ஆறாம் திருமொழி - அக்கும்....158
ஏழாம் திருமொழி - தந்தைதாய்....159

எட்டாம் திருமொழி - முந்துற 162
ஒன்பதாம் திருமொழி - மூவரில் 164
பத்தாம் திருமொழி - எங்கள் 165
பத்தாம் பத்து 168
முதல் திருமொழி - ஒருநல்சுற்றம் 168
இரண்டாம் திருமொழி - இரக்கமின்றி 169
மூன்றாம் திருமொழி - ஏத்துகின்றோம் 171
நான்காம் திருமொழி - சந்தமலர் 173
ஐந்தாம் திருமொழி - பூங்கோதை 175
ஆறாம் திருமொழி - எங்கானும் 176
ஏழாம் திருமொழி - மானமுடைத்து 179
எட்டாம் திருமொழி - காதில் கடிப்பு 182
ஒன்பதாம் திருமொழி - புள்ளுருவாகி....183
பத்தாம் திருமொழி - திருத்தாய்....185
பதினோராம் பத்து.... 187
முதல் திருமொழி - குன்றமொன்று....187
இரண்டாம் திருமொழி - குன்றமெடுத்து 188
மூன்றாம் திருமொழி - மன்னிலங்கு....190
நான்காம் திருமொழி - நிலையிடம் 192
ஐந்தாம் திருமொழி - மானமரும்....194
ஆறாம் திருமொழி - மைந்நின்ற....195
ஏழாம் திருமொழி - நீள்நாகம் 198
எட்டாம் திருமொழி - மாற்றமுள 199
திருக்குறுந்தாண்டகம் 201
திருநெடுந்தாண்டகம் 204
சாற்றுமுறை.... 211

பொது தனியன்கள்

மணவாள மாமுனிகள் தனியன்
(அழகிய மணவாளன் அருளிச் செய்தது)

ஸ்ரீஸைலேஸ த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3 கு3ணார்ணவம் |
யதீந்த்3ர ப்ரவணம் வந்தே3 ரம்ய ஜாமாதரம் முநிம் ||

குரு பரம்பரை தனியன்
(கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

லக்ஷ்மீ நாத2 ஸமாரம்ப4ாம் நாத2யாமுந மத்4யமாம் |
அஸ்மத3ாசார்ய பர்யந்தாம் வந்தே3 கு3ரு பரம்பராம் ||

எம்பெருமானார் தனியன்
(கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

யோ நித்யம் அச்யுத பத3ாம்புஜ யுக்3மருக்ம
வ்யாமோஹதஸ் ததி3தராணி த்ருணாய மேநே |
அஸ்மத்3 கு3ரோர் ப4க3வதோ-ஸ்ய த3யைகஸிந்தே4ா:
ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்3யே ||

நம்மாழ்வார் தனியன்
(ஆளவந்தார் அருளிச் செய்தது)

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் |
ஆத்3யஸ்ய ந: குலபதேர் வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரி யுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ||

ஆழ்வார்கள் உடையவர் தனியன்
(ஸ்ரீ பராசர பட்டர் அருளிச் செய்தது)

பூதம் ஸரஸ்ய மஹத3ாஹ்வய ப4ட்ட நாத2
ஸ்ரீப4க்திஸார குலஸேக2ர யோகி3வாஹாந் |
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ரமிஸ்ராந்
ஸ்ரீமத் பராங்குஸ முநிம் ப்ரணதோ-ஸ்மி நித்யம் ||

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

பெரிய திருமொழி தனியன்கள்

திருக்கோட்டியூர் நம்பி அருளிச் செய்தது

கலயாமி கலித்$_4$வம்ஸம் கவிம் லோகதி$_3$வாகரம் |
யஸ்ய கோ$_3$பி$_4$: ப்ரகாஶாபி$_4$ராவித்$_3$யம் நிஹதம் தம: ||

எம்பெருமானார் அருளிச் செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி *
வாழி குறையலூர் வாழ் வேந்தன் * - வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன் *
தூயோன் சுடர்மான வேல்

ஆழ்வான் அருளிச் செய்தது

நெஞ்சுக்கிருள் கடி தீபம் * அடங்கா நெடும் பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம் * தமிழ நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம் ஆரண சாரம் * பர சமயப்
பஞ்சுக்கு அனலின் பொறி * பரகாலன் பனுவல்களே

எம்பார் அருளிச் செய்தது

எங்கள் கதியே! இராமானுச முனியே! *
சங்கைக் கெடுத்தாண்ட தவராசா! * - பொங்கு புகழ்
மங்கையர் கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும் *
தங்கு மனம் நீ எனக்குத் தா

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

முதல் பத்து

முதல் திருமொழி - வாடினேன்
பெரிய திருமந்திரத்தின் பெருமை

** வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் *
பெருந்துயர் இடும்பையில் பிறந்து *
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு *
அவர் தரும் கலவியே கருதி **
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் *
உணர்வெனும் பெரும் பதம் திரிந்து *
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 1

** ஆவியே! அமுதே! என நினைந்து உருகி *
அவர் அவர் பணைமுலை துணையா *
பாவியேன் உணராது எத்தனை பகலும் *
பழுது போய் ஒழிந்தன நாள்கள் **
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும் *
சூழ்புனற் குடந்தையே தொழுது * என்
நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 2

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் *
தெரிவைமார் உருவமே மருவி *
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் *
ஒழிந்தன கழிந்த அந்நாள்கள் **
காமனார் தாதை நம்முடை அடிகள் *
தம் அடைந்தார் மனத்து இருப்பார் *
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 3

வென்றியே வேண்டி வீழ் பொருட்கு இரங்கி *
வேற்கணார் கலவியே கருதி *
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன் *
என் செய்கேன்? நெடு விசும்பு அணவும் **
பன்றியாய் அன்று பாரகம் கீண்ட *
பாழியான் ஆழியான் அருளே *
நன்று நான் உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 4

கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன் *
கண்டவா திரிதந்தேனேலும் *
தெள்ளியேன் ஆனேன் செல் கதிக்கமைந்தேன் *
சிக்கெனத் திருவருள் பெற்றேன் **
உள்ளெலாம் உருகிக் குரல் தழுத்து ஒழிந்தேன் *
உடம்பெலாம் கண்ண நீர் சோர *
நள்ளிருள் அளவும் பகலும் நான் அழைப்பன் *
நாராயணா என்னும் நாமம் 5

** எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் *
எனக்கரசு என்னுடை வாணாள் *
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி *
அவர் உயிர் செகுத்த எம் அண்ணல் **
வம்புலாம் சோலை மாமதிள் *
தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி *
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 6

இற்பிறப்பு அறியீர் இவர் அவர் என்னீர் *
இன்னதோர் தன்மை என்றுணரீர் *
கற்பகம் புலவர் களைகண் என்று உலகில் *
கண்டவா தொண்டரைப் பாடும் **
சொற்பொருள் ஆளீர் சொல்லுகேன் வம்மின் *
சூழ்புனற் குடந்தையே தொழுமின் *
நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்ம்மின் *
நாராயணா என்னும் நாமம் 7

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும் *
கருத்துளே திருத்தினேன் மனத்தை *
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை *
பெருநிலத்து ஆருயிர்க்கு எல்லாம் **
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன் *
செல் கதிக்கு உய்யுமாறு எண்ணி *
நல்துணையாகப் பற்றினேன் அடியேன் *
நாராயணா என்னும் நாமம் 8

** குலம் தரும் செல்வம் தந்திடும் *
அடியார் படு துயர் ஆயின எல்லாம் *
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும் *
அருளொடு பெருநிலம் அளிக்கும் **
வலம் தரும் மற்றும் தந்திடும் *
பெற்ற தாயினும் ஆயின செய்யும் *
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் *
நாராயணா என்னும் நாமம் 9

** மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர் *
மங்கையார் வாள் கலி கன்றி *
செஞ்சொலால் எடுத்த தெய்வ நல்மாலை *
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்! **
துஞ்சும் போது அழைமின் துயர் வரில் நினைமின் *
துயரிலீர் சொல்லிலும் நன்றாம் *
நஞ்சு தான் கண்டீர் நம்முடை வினைக்கு *
நாராயணா என்னும் நாமம் 10

அடிவரவு: வாடினேன் ஆவியே சேமம் வென்றி கள்வனேன் எம்பிரான் இற்பிறப்பு கற்றிலேன் குலம் மஞ்சு வாலி

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

இரண்டாம் திருமொழி - வாலி மாவலத்து
திருப்பிரிதி

** வாலி மாவலத்து ஒருவனது உடல் கெட *
வரிசிலை வளைவித்து * அன்று
ஏலநாறு தண்தடம் பொழில் இடம் பெற *
இருந்த நல் இமயத்துள் **
ஆலி மாமுகில் அதிர் தர அருவரை *
அகடுற முகடேறி *
பீலி மாமயில் நடம் செயும் தடஞ்சுனைப் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 1

கலங்க மாக்கடல் அரிகுலம் பணி செய்ய *
அருவரை அணை கட்டி *
இலங்கை மாநகர் பொடி செய்த அடிகள் தாம் *
இருந்த நல் இமயத்து **
விலங்கல் போல்வன விறல் இருஞ்சினத்தன *
வேழங்கள் துயர் கூர *
பிலங்கொள் வாள் எயிற்று அரி அவை திரி தரு *
பிரிதி சென்றடை நெஞ்சே! 2

துடிகொள் நுண்ணிடைச் சுரிகுழல் *
துளங்கெயிற்று இளங்கொடி திறத்து * ஆயர்
இடிகொள் வெங்குரல் இனவிடை அடர்த்தவன் *
இருந்த நல் இமயத்து **
கடிகொள் வேங்கையின் நறுமலர் அமளியின் *
மணி அறை மிசை வேழம் *
பிடியினோடு வண்டு இசை சொலத் துயில் கொளும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 3

மறங்கொள் ஆளரி உருவென வெருவர *
ஒருவனது அகல் மார்வம்
திறந்து * வானவர் மணிமுடி பணி தர *
இருந்த நல் இமயத்துள் **
இறங்கி ஏனங்கள் வளை மருப்பு இடந்திடக் *
கிடந்து அருகெரி வீசும் *
பிறங்கு மாமணி அருவியொடு இழிதரு *
பிரிதி சென்றடை நெஞ்சே! 4

கரைசெய் மாக்கடல் கிடந்தவன் *
கனைகழல் அமரர்கள் தொழுதேத்த *
அரைசெய் மேகலை அலர்மகள் அவளொடும் *
அமர்ந்த நல் இமயத்து **
வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர் முளை *
அளைமிகு தேன் தோய்த்து *
பிரசவாரி தன் இளம்பிடிக்கு அருள் செயும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 5

பணங்கள் ஆயிரம் உடைய நல் அரவணைப்
பள்ளி கொள் * பரமா! என்று *
இணங்கி வானவர் மணிமுடி பணி தர *
இருந்த நல் இமயத்து **
மணங்கொள் மாதவி நெடுங்கொடி விசும்புற *
நிமிர்ந்து அவை முகில் பற்றி *
பிணங்கு பூம்பொழில் நுழைந்து வண்டு இசை சொலும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 6

கார் கொள் வேங்கைகள் கனவரை தழுவிய *
கறிவளர் கொடி துன்னி *
போர் கொள் வேங்கைகள் புனவரை தழுவிய *
பூம்பொழில் இமயத்துள் **
ஏர் கொள் பூஞ்சுனைத் தடம் படிந்து *
இனமலர் எட்டும் இட்டு இமையோர்கள் *
பேர்கள் ஆயிரம் பரவி நின்றடி தொழும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 7

இரவு கூர்ந்து இருள் பெருகிய வரை முழை *
இரும்பசி அது கூர *
அரவம் ஆவிக்கும் அகம் பொழில் தழுவிய *
அருவரை இமயத்து **
பரமன் ஆதி எம் பனி முகில் வண்ணன் என்று *
எண்ணி நின்று இமையோர்கள் *
பிரமனோடு சென்று அடி தொழும் பெருந்தகை *
பிரிதி சென்றடை நெஞ்சே! 8

ஓதி ஆயிர நாமங்கள் உணர்ந்தவர்க்கு *
உறுதுயர் அடையாமல் *
ஏதம் இன்றி நின்று அருளும் நம் பெருந்தகை *
இருந்த நல் இமயத்து **
தாது மல்கிய பிண்டி விண்டு அலர்கின்ற *
தழல் புரை எழில் நோக்கி *
பேதை வண்டுகள் எரி என வெருவரு *
பிரிதி சென்றடை நெஞ்சே! 9

** கரிய மாமுகில் படலங்கள் கிடந்து *
அவை முழங்கிட * களிறென்று
பெரிய மாசுணம் வரை எனப் பெயர் தரு *
பிரிதி எம்பெருமானை **
வரிகொள் வண்டறை பைம்பொழில் மங்கையர் *
கலியனது ஒலி மாலை *
அரிய இன்னிசை பாடும் நல் அடியவர்க்கு *
அருவினை அடையாவே 10

அடிவரவு: வாலி கலங்க துடி மறம் கரைசெய் பணன்ங்கள் கார் இரவு ஓதி கரிய முற்ற

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

மூன்றாம் திருமொழி - முற்ற மூத்து
திருவதரி

** முற்ற மூத்துக் கோல் துணையா * முன்னடி நோக்கி வளைந்து *
இற்ற கால் போல் தள்ளி மெள்ள * இருந்து அங்கு இளையா முன் **
பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி * பெரு முலையூடு * உயிரை
வற்ற வாங்கி உண்ட வாயான் * வதரி வணங்குதுமே 1

முதுகு பற்றிக் கைத்தலத்தால் * முன்னொரு கோல் ஊன்றி *
விதிர் விதிர்த்துக் கண் சுழன்று * மேற்கிளை கொண்டு இருமி **
இது என் அப்பர் மூத்த ஆறென்று * இளையவர் ஏசா முன் *
மது உண் வண்டு பண்கள் பாடும் * வதரி வணங்குதுமே 2

உறிகள் போல் மெய் நரம்பு எழுந்து * ஊன் தளர்ந்து உள்ளம் எள்கி *
நெறியை நோக்கிக் கண் சுழன்று * நின்று நடுங்கா முன் **
அறிதியாகில் நெஞ்சம்! அன்பாய் * ஆயிர நாமம் சொல்லி *
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் * வதரி வணங்குதுமே 3

பீளை சோரக் கண் இடுங்கிப் * பித்தெழ மூத்து இருமி *
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் * தள்ளி நடவா முன் **
காளையாகிக் கன்று மேய்த்துக் * குன்றெடுத்து அன்று நின்றான் *
வாளை பாயும் தண் தடம் சூழ் * வதரி வணங்குதுமே 4

பண்டு காமர் ஆனவாறும் * பாவையர் வாய் அமுதம்
உண்டவாறும் * வாழ்ந்தவாறும் * ஒக்க உரைத்து இருமி **
தண்டு காலா ஊன்றி ஊன்றித் * தள்ளி நடவா முன் *
வண்டு பாடும் தண்துழாயான் * வதரி வணங்குதுமே 5

எய்த்த சொல்லோடு ஈளை ஏங்கி * இருமி இளைத்து உடலம் *
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் * பேசி அயரா முன் **
அத்தன் எந்தை ஆதி மூர்த்தி * ஆழ்கடலைக் கடைந்த *
மைத்த சோதி எம்பெருமான் * வதரி வணங்குதுமே 6

பப்ப அப்பர் மூத்தவாறு * பாழ்ப்பது சீத்திரளை
ஒப்ப * ஐக்கள் போத உந்த * உன் தமர் காண்மின் என்று **
செப்பு நேர் மென்கொங்கை நல்லார் * தாம் சிரியாத முன்னம் *
வைப்பும் நங்கள் வாழ்வும் ஆனான் * வதரி வணங்குதுமே 7

ஈசி போமின் ஈங்கு இரேன்மின் * இருமி இளைத்தீர் * உள்ளம்
கூசியிட்டீர் என்று பேசும் * குவளை அங்கண்ணியர் பால் **
நாசம் ஆன பாசம் விட்டு * நன்னெறி நோக்கலுறில் *
வாசம் மல்கு தண்துழாயான் * வதரி வணங்குதுமே 8

புலன்கள் நைய மெய்யில் மூத்துப் * போந்திருந்து உள்ளம் எள்கி *
கலங்க ஐக்கள் போத உந்திக் * கண்ட பிதற்றா முன் **
அலங்கலாய தண்துழாய் கொண்டு * ஆயிர நாமம் சொல்லி *
வலங்கொள் தொண்டர் பாடி ஆடும் * வதரி வணங்குதுமே 9

** வண்டு தண்தேன் உண்டு வாழும் * வதரி நெடுமாலை *
கண்டல் வேலி மங்கை வேந்தன் * கலியன் ஒலி மாலை **
கொண்டு தொண்டர் பாடி ஆடக் * கூடிடில் நீள்விசும்பில் *
அண்டம் அல்லால் மற்று அவர்க்கு * ஓர் ஆட்சி அறியோமே 10

அடிவரவு: முற்ற முதுகு உறிகள் பீளை பண்டு எய்த்த பப்ப ஈசி புலன்கள் வண்டு ஏனம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

நான்காம் திருமொழி - ஏனமுனாகி
திருவதரியாச்சிரமம்

** ஏனமுனாகி இருநிலம் இடந்து *
அன்று இணையடி இமையவர் வணங்க *
தானவன் ஆகம் தரணியில் புரளத் *
தடஞ்சிலை குனித்த என் தலைவன் **
தேனமர் சோலைக் கற்பகம் பயந்த *
தெய்வ நல் நறுமலர் கொணர்ந்து *
வானவர் வணங்கும் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 1

கானிடை உருவைச் சுடு சரம் துரந்து *
கண்டு முன் கொடுந்தொழில் உரவோன் *
ஊனுடை அகலத்து அடுகணை குளிப்ப *
உயிர் கவர்ந்து உகந்த எம் ஒருவன் **
தேனுடைக் கமலத்து அயனொடு தேவர் *
சென்று சென்று இறைஞ்சிட * பெருகு
வானிடை முது நீர்க் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 2

இலங்கையும் கடலும் அடல் அருந்துப்பின் *
இருநிதிக்கு இறைவனும் * அரக்கர்
குலங்களும் கெட முன் கொடுந்தொழில் புரிந்த
கொற்றவன் * கொழுஞ்சுடர் சுழன்ற **
விலங்கலில் உரிஞ்சி மேல் நின்ற விசும்பில் *
வெண் துகில் கொடி என விரிந்து *
வலந்தரு மணி நீர்க் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 3

துணிவு இனி உனக்குச் சொல்லுவன் மனமே! *
தொழுதெழு தொண்டர்கள் தமக்கு *
பிணி ஒழித்து அமரர் பெருவிசும்பு அருளும் *
பேரருளாளன் எம்பெருமான் **
அணிமலர்க் குழலார் அரம்பையர் துகிலும் *
ஆரமும் வாரி வந்து * அணி நீர்
மணி கொழித்து இழிந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 4

பேய் இடைக்கிருந்து வந்த மற்றவள் தன் *
பெருமுலை சுவைத்திட * பெற்ற
தாய் இடைக்கிருத்தல் அஞ்சுவன் என்று தளர்ந்திட *
வளர்ந்த என் தலைவன் **
சேய் முகட்டுச்சி அண்டமும் சுமந்த *
செம்பொன்செய் விலங்கலில் இலங்கு *
வாய் முகட்டிழிந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 5

தேரணங்கு அல்குல் செழுங்கயல் கண்ணி திறத்து *
ஒரு மறத் தொழில் புரிந்து *
பாரணங்கு இமில் ஏறேழும் முன் அடர்த்த *
பனிமுகில் வண்ணன் எம்பெருமான் **
காரணம் தன்னால் கடும்புனல் கயத்த *
கருவரை பிளவெழக் குத்தி *
வாரணம் கொணர்ந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 6

வெந்திறல் களிறும் வேலை வாய் அமுதும் *
விண்ணொடு விண்ணவர்க்கு அரசும் *
இந்திரற்கு அருளி எமக்கும் ஈந்தருளும் *
எந்தை எம் அடிகள் எம்பெருமான் **
அந்தரத்து அமரர் அடியிணை வணங்க *
ஆயிர முகத்தினால் அருளி *
மந்தரத்து இழிந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 7

மான் முனிந்து ஒருகால் வரிசிலை வளைத்த
மன்னவன் * பொன்னிறத்து உரவோன் *
ஊன் முனிந்து அவனது உடல் இருபிளவா *
உகிர் நுதி மடுத்து ** அயன் அரனைத்
தான் முனிந்திட்ட * வெந்திறல் சாபம் தவிர்த்தவன் *
தவம் புரிந்து உயர்ந்த
மாமுனி கொணர்ந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 8

கொண்டல் மாருதங்கள் குலவரை தொகுநீர்க் *
குரைகடல் உலகுடன் அனைத்தும் *
உண்ட மாவயிற்றோன் ஒண்சுடர் ஏய்ந்த *
உம்பரும் ஊழியும் ஆனான் **
அண்டம் ஊடறுத்து அன்று அந்தரத்து இழிந்து *
அங்கு அவனியாள் அலமர * பெருகு
மண்டு மாமணி நீர்க் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்துள்ளானே 9

** வருந்திரை மணி நீர்க் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானை *
கருங்கடல் முந்நீர் வண்ணனை எண்ணிக் *
கலியன் வாயொலி செய்த பனுவல் **
வரம் செய்த ஐந்தும் ஐந்தும் வல்லார்கள் *
வானவர் உலகுடன் மருவி *
இருங்கடல் உலகம் ஆண்டு வெண்குடைக் கீழ் *
இமையவர் ஆகுவர் தாமே 10

அடிவரவு: ஏனம் கானிடை இலங்கை துணிவு பேய் தேர் வெந்திறல் மான் கொண்டல் வருந்திரை கலை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

ஐந்தாம் திருமொழி - கலையுங்கரியும்
திருச்சாளக்கிராமம்

** கலையும் கரியும் பரிமாவும் * திரியும் கானம் கடந்து போய் *
சிலையும் கணையும் துணை ஆகச் * சென்றான் வென்றிச் செறுக்களத்து **
மலை கொண்டு அலைநீர் அணை கட்டி * மதிள் நீர் இலங்கை வாளரக்கர்
தலைவன் * தலை பத்து அறுத்து உகந்தான் * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 1

கடம் சூழ் கரியும் பரிமாவும் * ஒலி மாந்தேரும் காலாளும் *
உடன் சூழ்ந்து எழுந்த கடி இலங்கை * பொடியா வடிவாய்ச் சரம் துரந்தான் **
இடம் சூழ்ந்து எங்கும் இருவிசும்பில் * இமையோர் வணங்க மணம் கமழும் *
தடம் சூழ்ந்து எங்கும் அழகாய * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 2

உலவு திரையும் குல வரையும் * ஊழி முதலா எண் திக்கும் *
நிலவும் சுடரும் இருளுமாய் நின்றான் * வென்றி விறல் ஆழி
வலவன் ** வானோர் தம் பெருமான் * மருவா அரக்கர்க்கு எஞ்ஞான்றும்
சலவன் * சலம் சூழ்ந்து அழகாய * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 3

ஊரான் குடந்தை உத்தமன் * ஒருகால் இருகால் சிலை வளைய *
தேரா அரக்கர் தேர் வெள்ளம் செற்றான் * வற்றா வருபுனல் சூழ்
பேரான் ** பேர் ஆயிரம் உடையான் * பிறங்கு சிறை வண்டு அறைகின்ற
தாரான் * தாரா வயல் சூழ்ந்த * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 4

அடுத்தார்த்து எழுந்தாள் பிலவாய் விட்டலற * அவள் மூக்கு அயில் வாளால்
விடுத்தான் * விளங்கு சுடர் ஆழி * விண்ணோர் பெருமான் நண்ணார் முன் **
கடுத்தார்த்து எழுந்த பெருமழையைக் * கல் ஒன்று ஏந்தி இனநிரைக் காத்
தடுத்தான் * தடம் சூழ்ந்து அழகாய * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 5

தாயாய் வந்த பேய் உயிரும் * தயிரும் இழுதும் உடன் உண்ட
வாயான் * தூய அரி உருவில் குறளாய்ச் சென்று * மாவலியை
ஏயான் இரப்ப ** மூவடி மண் இன்றே தா என்று * உலகேழும்
தாயான் * காயா மலர் வண்ணன் * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 6

ஏனோர் அஞ்ச வெஞ்சமத்துள் * அரியாய்ப் பரிய இரணியனை *
ஊனார் அகலம் பிளவெடுத்த * ஒருவன் தானே இருசுடராய் **
வானாய்த் தீயாய் மாருதமாய் * மலையாய் அலைநீர் உலகனைத்தும்
தானாய் * தானும் ஆனான் தன் * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 7

வெந்தார் என்பும் சுடு நீறும் * மெய்யில் பூசிக் கையகத்து * ஓர்
சந்தார் தலை கொண்டு உலகேழும் * திரியும் பெரியோன் தான் சென்று ** என்
எந்தாய்! சாபம் தீர் என்ன * இலங்கு அமுது நீர் திருமார்பில்
தந்தான் * சந்தார் பொழில் சூழ்ந்த * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 8

தொண்டாம் இனமும் இமையோரும் * துணை நூல் மார்பின் அந்தணரும் *
அண்டா! எமக்கே அருளாய் என்று * அணையும் கோயில் அருகெல்லாம் **
வண்டார் பொழிலின் பழனத்து * வயலின் அயலே கயல் பாய *
தண்தாமரைகள் முகம் மலர்த்தும் * சாளக்கிராமம் அடை நெஞ்சே! 9

** தாரா ஆரும் வயல் சூழ்ந்த * சாளக்கிராமத்து அடிகளை *
காரார் புறவின் மங்கை வேந்தன் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை **
ஆரார் உலகத்து அறிவுடையார் * அமரர் நல்நாட்டு அரசாள *
பேர் ஆயிரமும் ஓதுமின்கள் * அன்றி இவையே பிதற்றுமினே 10

அடிவரவு: கலை கடம் உலவு ஊரான் அடுத்து தாய் ஏனோர் வெந்தார் தொண்டு தாரா வாணிலா

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

ஆறாம் திருமொழி - வாணிலா முறுவல்
நைமிசாரணியம்

** வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் *
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன் * அதனைப் பிழை எனக் கருதிப் *
பேதையேன் பிறவி நோய் அறுப்பான் **
ஏணிலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி *
இளையவர் கலவியின் திறத்தை *
நாணினேன் வந்துன் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 1

சிலம்படி உருவிற் கருநெடுங்கண்ணார் *
திறத்தனாய் அறத்தையே மறந்து *
புலன் படிந்துண்ணும் போகமே பெருக்கிப் *
போக்கினேன் பொழுதினை வாளா **
அலம்புரி தடக்கை ஆயனே! மாயா! *
வானவர்க்கு அரசனே! * வானோர்
நலம் புரிந்து இறைஞ்சும் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 2

சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து *
சுரிகுழல் மடந்தையர் திறத்து *
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த தொண்டனேன் *
நமன் தமர் செய்யும் **
வேதனைக்கு ஒடுங்கி நடுங்கினேன் * வேலை
வெண்திரை அலமரக் கடைந்த *
நாதனே! வந்துன் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 3

வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து *
பிறர் பொருள் தாரம் என்று இவற்றை *
நம்பினார் இறந்தால் நமன் தமர் பற்றி *
எற்றி வைத்து ** எரி எழுகின்ற
செம்பினால் இயன்ற பாவையைப் * பாவீ!
தழுவென மொழிவதற்கு அஞ்சி *
நம்பனே! வந்துன் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 4

இடும்பையால் அடர்ப்புண்டு இடுமினோ துற்றென்று *
இரந்தவர்க்கு இல்லையே என்று *
நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன் அந்தோ! *
நினைக்கிலேன் வினைப் பயன் தன்னை **
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் *
படுவதோர் கொடுமிறைக்கு அஞ்சி *
நடுங்கி நான் வந்துன் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 5

கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து *
திரிந்து நாய் இனத்தொடும் திளைத்திட்டு *
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன் *
உணர்விலேன் ஆதலால் ** நமனார்
பாடியைப் பெரிதும் பரிசு அழித்திட்டேன் *
பரமனே! பாற்கடல் கிடந்தாய்! *
நாடி நான் வந்துன் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 6

நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் *
நீதி அல்லாதன செய்தும் *
துஞ்சினார் செல்லும் தொல்நெறி கேட்டே *
துளங்கினேன் விளங்கனி முனிந்தாய்! **
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினில் பிரியா *
வானவா! தானவர்க்கு என்றும்
நஞ்சனே! * வந்துன் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 7

ஏவினார் கலியார் நலிக என்று * என் மேல்
எங்ஙனே வாழுமாறு? * ஐவர்
கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன் *
குறுங்குடி நெடுங்கடல் வண்ணா! **
பாவினார் இன்சொல் பன்மலர் கொண்டு * உன்
பாதமே பரவி நான் பணிந்து * என்
நாவினால் வந்துன் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 8

ஊனிடைச் சுவர் வைத்து என்பு தூண் நாட்டி *
உரோமம் வேய்ந்து ஒன்பது வாசல் *
தானுடைக் குரம்பை பிரியும் போது * உன்தன்
சரணமே சரணம் என்று இருந்தேன் **
தேனுடைக் கமலத் திருவினுக்கு அரசே! * திரை
கொள் மா நெடுங்கடல் கிடந்தாய்! *
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன் *
நைமிசாரணியத்துள் எந்தாய்! 9

** ஏதம் வந்து அணுகா வண்ணம் நாம் எண்ணி *
எழுமினோ தொழுதும் என்று * இமையோர்
நாதன் வந்து இறைஞ்சும் * நைமிசாரணியத்து
எந்தையைச் சிந்தையுள் வைத்து **
காதலே மிகுத்த கலியன் வாயொலி செய் *
மாலை தான் கற்று வல்லார்கள் *
ஓதநீர் வையகம் ஆண்டு வெண்குடைக் கீழ் *
உம்பரும் ஆகுவர் தாமே 10

அடிவரவு: வாணிலா சிலம்பு சூதினை வம்பு இடும்பையால் கோடிய நெஞ்சினால் ஏவினார் ஊன் ஏதம் அங்கண்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

ஏழாம் திருமொழி - அங்கண் ஞாலம்
சிங்கவேள் குன்றம்

** அங்கண் ஞாலம் அஞ்ச * அங்கோர் ஆளரியாய் * அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் * போழ்ந்த புனிதன் இடம் **
பைங்கண் ஆனைக் கொம்பு கொண்டு * பத்திமையால் * அடிக் கீழ்ச்
செங்கண் ஆளி இட்டிறைஞ்சும் * சிங்கவேள் குன்றமே 1

அலைத்த பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோள் அரியாய் * அவுணன்
கொலைக் கையாளன் நெஞ்சு இடந்த * கூர் உகிராளன் இடம் **
மலைத்த செல் சாத்தெறிந்த பூசல் * வன்துடிவாய் கடுப்ப *
சிலைக் கை வேடர் தெழிப்பறாத * சிங்கவேள் குன்றமே 2

ஏய்ந்த பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோள் அரியாய் * அவுணன்
வாய்ந்த ஆகம் வள்ளுகிரால் * வகிர்ந்த அம்மானதிடம் **
ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும் * அன்றியும் நின்றழலால் *
தேய்ந்த வேயும் அல்லதில்லாச் * சிங்கவேள் குன்றமே 3

எவ்வம் வெவ்வேல் பொன் பெயரோன் * ஏதலன் இன்னுயிரை
வவ்வி * ஆகம் வள்ளுகிரால் * வகிர்ந்த அம்மானதிடம் **
கவ்வு நாயும் கழுகும் * உச்சிப் போதொடு கால் சுழன்று *
தெய்வம் அல்லால் செல்ல ஒண்ணாச் * சிங்கவேள் குன்றமே 4

மென்ற பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோள் அரியாய் * அவுணன்
பொன்ற ஆகம் வள்ளுகிரால் * போழ்ந்த புனிதன் இடம் **
நின்ற செந்தீ மொண்டு சூறை * நீள் விசும்பு ஊடிரிய *
சென்று காண்டற்கு அரிய கோயில் * சிங்கவேள் குன்றமே 5

எரிந்த பைங்கண் இலங்கு பேழ் வாய் * எயிற்றொடு இது எவ்வுரு என்று *
இரிந்து வானோர் கலங்கி ஓட * இருந்த அம்மானதிடம் **
நெரிந்த வேயின் முழையுள் நின்று * நீள் நெறிவாய் உழுவை *
திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும் * சிங்கவேள் குன்றமே 6

முனைத்த சீற்றம் விண் சுடப் போய் * மூவுலகும் பிறவும் *
அனைத்தும் அஞ்ச ஆளரியாய் * இருந்த அம்மானதிடம் **
கனைத்த தீயும் கல்லும் அல்லா * வில்லுடை வேடருமாய் *
தினைத்தனையும் செல்ல ஒண்ணாச் * சிங்கவேள் குன்றமே 7

நாத் தழும்ப நான்முகனும் * ஈசனுமாய் முறையால்
ஏத்த * அங்கோர் ஆளரியாய் * இருந்த அம்மானதிடம் **
காய்த்த வாகை நெற்றொலிப்பக் * கல் அதர் வேய்ங்கழை போய் *
தேய்த்த தீயால் விண் சிவக்கும் * சிங்கவேள் குன்றமே 8

நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் * நம்முடை நம்பெருமான் *
அல்லி மாதர் புல்க நின்ற * ஆயிரம் தோளன் இடம் **
நெல்லி மல்கிக் கல் உடைப்பப் * புல் இலை ஆர்த்து * அதர்வாய்ச்
சில்லு சில் என்று ஒல்லறாத * சிங்கவேள் குன்றமே 9

** செங்கண் ஆளி இட்டிறைஞ்சும் * சிங்கவேள் குன்றுடைய *
எங்கள் ஈசன் எம்பிரானை * இருந்தமிழ் நூற்புலவன் **
மங்கையாளன் மன்னு தொல் சீர் * வண்டறை தார்க் கலியன் *
செங்கையாளன் செஞ்சொல் மாலை * வல்லவர் தீதிலரே 10

அடிவரவு: அங்கண் அலைத்த ஏய்ந்த எவ்வம் மென்ற எரிந்த முனைத்த நா நல்லை செங்கண் கொங்கு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

எட்டாம் திருமொழி - கொங்கலர்ந்த
திருவேங்கடம் 1

** கொங்கலர்ந்த மலர்க் குருந்தம் ஒசித்த * கோவலன் எம்பிரான் *
சங்கு தங்கு தடங்கடல் துயில் கொண்ட * தாமரைக் கண்ணினன் **
பொங்கு புள்ளினை வாய் பிளந்த * புராணர் தம் இடம் * பொங்கு நீர்ச்
செங்கயல் திளைக்கும் சுனைத் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 1

பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம் * இரங்க வன்பேய் முலை *
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை * பிரான் அவன் பெருகும் இடம் **
வெள்ளியான் கரியான் * மணிநிற வண்ணன் என்றெண்ணி * நாள் தொறும்
தெள்ளியார் வணங்கும் மலைத் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 2

நின்ற மாமருது இற்று வீழ * நடந்த நின்மலன் நேமியான் *
என்றும் வானவர் கை தொழும் * இணைத் தாமரை அடி எம்பிரான் **
கன்றி மாரி பொழிந்திடக் * கடிது ஆநிரைக்கு இடர் நீக்குவான் *
சென்று குன்றம் எடுத்தவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 3

பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு * வென்ற பரஞ்சுடர் *
கோத்தங்கு ஆயர் தம் பாடியில் * குரவை பிணைந்த எம் கோவலன் **
ஏத்துவார் தம் மனத்துள்ளான் * இடவெந்தை மேவிய எம்பிரான் *
தீர்த்த நீர்த் தடஞ்சோலை சூழ் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 4

வண்கையான் அவுணர்க்கு நாயகன் * வேள்வியில் சென்று மாணியாய் *
மண் கையால் இரந்தான் * மராமரம் ஏழும் எய்த வலத்தினான் **
எண்கையான் இமயத்துள்ளான் * இருஞ்சோலை மேவிய எம்பிரான் *
திண்கைம்மா துயர் தீர்த்தவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 5

எண்திசைகளும் ஏழுலகமும் வாங்கிப் * பொன் வயிற்றில் பெய்து *
பண்டோர் ஆலிலைப் பள்ளி கொண்டவன் * பால்மதிக்கு இடர் தீர்த்தவன் **
ஒண்திறல் அவுணன் உரத்து உகிர் வைத்தவன் * ஒள் எயிற்றொடு *
திண்திறல் அரி ஆயவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 6

பாருநீர் எரி காற்றினோடு * ஆகாசமும் இவை ஆயினான் *
பேரும் ஆயிரம் பேச நின்ற * பிறப்பிலி பெருகும் இடம் **
காரும் வார்பனி நீள்விசும்பிடைச் * சோரு மாமுகில் தோய் தர *
சேரும் வார்பொழில் சூழ் * எழில் திருவேங்கடம் அடை நெஞ்சமே! 7

அம்பரம் அனல் கால் நிலம் * சலம் ஆகி நின்ற அமரர் கோன் *
வம்புலாம் மலர் மேல் * மலிமட மங்கை தன் கொழுனன் அவன் **
கொம்பின் அன்ன இடை மடக் குறமாதர் * நீள் இதணம் தொறும் *
செம்புனம் அவை காவல் கொள் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 8

** பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் * சொல்லி நின்று பின்னரும் *
பேசுவார் தமை உய்ய வாங்கிப் * பிறப்பறுக்கும் பிரான் இடம் **
வாச மாமலர் நாறுவார் * பொழில் சூழ் தரும் உலகுக்கெல்லாம் *
தேசமாய்த் திகழும் மலைத் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 9

** செங்கயல் திளைக்கும் சுனைத் * திருவேங்கடத்துறை செல்வனை *
மங்கையர் தலைவன் கலிகன்றி * வண்தமிழ்ச் செஞ்சொல் மாலைகள் **
சங்கை இன்றித் தரித்து உரைக்க வல்லார்கள் * தஞ்சமதாகவே *
வங்க மாகடல் வையம் காவலர் ஆகி * வானுலகு ஆள்வரே 10

அடிவரவு: கொங்கு பள்ளி நின்ற பார்த்தற்கு வண்கையான் எண்திசைகள் பார் அம்பரம் பேசுமின் செங்கயல் தாய்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

ஒன்பதாம் திருமொழி - தாயே தந்தை
திருவேங்கடம் 2

** தாயே தந்தை என்றும் * தாரமே கிளை மக்கள் என்றும் *
நோயே பட்டொழிந்தேன் * உன்னைக் காண்பதோர் ஆசையினால் **
வேயேய் பூம்பொழில் சூழ் * விரையார் திருவேங்கடவா! *
நாயேன் வந்தடைந்தேன் * நல்கி ஆள் என்னைக் கொண்டருளே 1

மானேய் கண் மடவார் * மயக்கில் பட்டு மாநிலத்து *
நானே நானாவித * நரகம் புகும் பாவம் செய்தேன் **
தேனேய் பூம்பொழில் சூழ் * திருவேங்கட மாமலை * என்
ஆனாய்! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 2

கொன்றேன் பல்லுயிரைக் * குறிக்கோள் ஒன்று இலாமையினால் *
என்றேனும் இரந்தார்க்கு * இனிதாக உரைத்து அறியேன் **
குன்றேய் மேகம் அதிர் * குளிர் மாமலை வேங்கடவா! *
அன்றே வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 3

குலம் தான் எத்தனையும் * பிறந்தே இறந்து எய்த்தொழிந்தேன் *
நலம் தான் ஒன்றுமிலேன் * நல்லதோர் அறம் செய்துமிலேன் **
நிலம் தோய் நீள்முகில் சேர் * நெறியார் திருவேங்கடவா! *
அலந்தேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 4

எப்பாவம் பலவும் * இவையே செய்து இளைத்து ஒழிந்தேன் *
துப்பா! நின்னடியே * தொடர்ந்து ஏத்தவும் கிற்கின்றிலேன் **
செப்பார் திண்வரை சூழ் * திருவேங்கட மாமலை * என்
அப்பா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 5

மண்ணாய் நீர் எரி கால் * மஞ்சுலாவும் ஆகாசமுமாம் *
புண்ணார் ஆக்கை தன்னுள் * புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன் **
விண்ணார் நீள்சிகர * விரையார் திருவேங்கடவா! *
அண்ணா! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 6

தெரியேன் பாலகனாய்ப் * பல தீமைகள் செய்துமிட்டேன் *
பெரியேன் ஆயின பின் * பிறர்க்கே உழைத்து ஏழை ஆனேன் **
கரி சேர் பூம்பொழில் சூழ் * கனமாமலை வேங்கடவா! *
அரியே! வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 7

நோற்றேன் பல்பிறவி * நுன்னைக் காண்பதோர் ஆசையினால் *
ஏற்றேன் இப்பிறப்பே * இடர் உற்றனன் எம்பெருமான்! **
கோல்தேன் பாய்ந்து ஒழுகும் * குளிர் சோலை சூழ் வேங்கடவா! *
ஆற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 8

பற்றேல் ஒன்றுமிலேன் * பாவமே செய்து பாவி ஆனேன் *
மற்றேல் ஒன்றறியேன் * மாயனே! எங்கள் மாதவனே! **
கல்தேன் பாய்ந்து ஒழுகும் * கமலச் சுனை வேங்கடவா! *
அற்றேன் வந்தடைந்தேன் * அடியேனை ஆட்கொண்டருளே 9

** கண்ணாய் ஏழுலகுக்கு * உயிராய எங்கார் வண்ணனை *
விண்ணோர் தாம் பரவும் * பொழில் வேங்கட வேதியனை **
திண்ணார் மாடங்கள் சூழ் * திருமங்கையர் கோன் கலியன் *
பண்ணார் பாடல் பத்தும் * பயில்வார்க்கு இல்லை பாவங்களே 10

அடிவரவு: தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன் நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
முதல் பத்து

பத்தாம் திருமொழி - கண்ணார் கடல் சூழ்
திருவேங்கடம் 3

** கண்ணார் கடல் சூழ் * இலங்கைக்கு இறைவன் தன் *
திண்ணாகம் பிளக்கச் * சரம் செல உய்த்தாய்! **
விண்ணோர் தொழும் * வேங்கட மாமலை மேய *
அண்ணா! அடியேன் * இடரைக் களையாயே 1

இலங்கைப் பதிக்கு * அன்று இறையாய * அரக்கர்
குலம் கெட்டு அவர் மாளக் * கொடிப் புள் திரித்தாய்! **
விலங்கல் குடுமித் * திருவேங்கடம் மேய *
அலங்கல் துளப முடியாய்! * அருளாயே 2

நீரார் கடலும் * நிலனும் முழுது உண்டு *
ஏர் ஆலம் இளந்தளிர் மேல் * துயில் எந்தாய்! **
சீரார் * திருவேங்கட மாமலை மேய *
ஆராவமுதே! * அடியேற்கு அருளாயே 3

உண்டாய் உறி மேல் * நறுநெய் அமுதாக *
கொண்டாய் குறளாய் * நிலம் ஈரடியாலே **
விண்தோய் சிகரத் * திருவேங்கடம் மேய *
அண்டா! அடியேனுக்கு * அருள் புரியாயே 4

தூணாய் அதனூடு * அரியாய் வந்து தோன்றி *
பேணா அவுணன் உடலம் * பிளந்திட்டாய்! **
சேணார் * திருவேங்கட மாமலை மேய *
கோணாகணையாய்! * குறிக்கொள் எனை நீயே 5

மன்னா * இம்மனிசப் பிறவியை நீக்கி *
தன் ஆக்கித் * தன் இன்னருள் செய்யும் தலைவன் **
மின்னார் முகில் சேர் * திருவேங்கடம் மேய *
என் ஆனை என் அப்பன் * என் நெஞ்சில் உளானே 6

மானேய் மடநோக்கி திறத்து * எதிர் வந்த *
ஆனேழ் விடை செற்ற * அணிவரைத் தோளா! **
தேனே! * திருவேங்கட மாமலை மேய *
கோனே! என் மனம் * குடி கொண்டு இருந்தாயே 7

சேயன் அணியன் * என சிந்தையுள் நின்ற
மாயன் * மணி வாள் ஒளி * வெண்தரளங்கள் **
வேய் விண்டு உதிர் * வேங்கட மாமலை மேய *
ஆயன் அடி அல்லது * மற்று அறியேனே 8

வந்தாய் என் மனம் புகுந்தாய் * மன்னி நின்றாய்! *
நந்தாத கொழுஞ்சுடரே! * எங்கள் நம்பீ! **
சிந்தாமணியே! * திருவேங்கடம் மேய
எந்தாய்! * இனி யான் உன்னை * என்றும் விடேனே 9

** வில்லார் மலி * வேங்கட மாமலை மேய *
மல்லார் திரள் தோள் * மணிவண்ணன் அம்மானை **
கல்லார் திரள் தோள் * கலியன் சொன்ன மாலை *
வல்லார் அவர் * வானவர் ஆகுவர் தாமே 10

அடிவரவு: கண் இலங்கை நீர் உண்டாய் தூணாய் மன்னா மானேய் சேயன் வந்தாய் வில் வானவர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

இரண்டாம் பத்து

முதல் திருமொழி - வானவர்
திருவேங்கடம் 4

** வானவர் தங்கள் சிந்தை போல * என் நெஞ்சமே! இனிது உவந்து * மா தவ
மானவர் தங்கள் சிந்தை * அமர்ந்து உறைகின்ற எந்தை **
கானவர் இடு கார் அகில் புகை * ஓங்கு வேங்கடம் மேவி * மாண் குறள்
ஆன அந்தணற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 1

உறவு சுற்றம் என்று ஒன்றிலா * ஒருவன் உகந்தவர் தம்மை * மண் மிசைப்
பிறவியே கெடுப்பான் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
குறவர் மாதர்களோடு * வண்டு குறிஞ்சி மருள் இசை பாடும் * வேங்கடத்து
அறவ நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 2

இண்டை ஆயின கொண்டு * தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் * வானிடைக்
கொண்டு போய் இடவும் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
வண்டு வாழ் வடவேங்கட மலை * கோயில் கொண்டு அதனோடும் * மீமிசை
அண்டம் ஆண்டு இருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 3

பாவியாது செய்தாய் என் நெஞ்சமே! * பண்டு தொண்டு செய்தாரை * மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய் * விசும்பு ஏற வைக்கும் எந்தை **
கோவி நாயகன் கொண்டல் உந்துயர் * வேங்கட மலை ஆண்டு * வானவர்
ஆவியாய் இருப்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 4

பொங்கு போதியும் பிண்டியும் உடைப் * புத்தர் நோன்பியர் பள்ளியுள் உறை *
தங்கள் தேவரும் தாங்களுமே ஆக * என் நெஞ்சம் என்பாய்! **
எங்கும் வானவர் தானவர் நிறைந்து ஏத்தும் * வேங்கடம் மேவி நின்றருள் *
அங்கண் நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 5

துவரி ஆடையர் மட்டையர் * சமண் தொண்டர்கள் மண்டி உண்டு பின்னரும் *
தமரும் தாங்களுமே தடிக்க * என் நெஞ்சம் என்பாய்! **
கவரி மாக்கணம் சேரும் * வேங்கடம் கோயில் கொண்ட கண்ணார் விசும்பிடை *
அமர நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 6

தருக்கினால் சமண் செய்து * சோறு தண்தயிரினால் திரளை * மிடற்றிடை
நெருக்குவார் அலக்கண் * அது கண்டு என் நெஞ்சம் என்பாய்! **
மருட்கள் வண்டுகள் பாடும் * வேங்கடம் கோயில் கொண்டு அதனோடும் * வானிடை
அருக்கன் மேவி நிற்பாற்கு * அடிமைத் தொழில் பூண்டாயே 7

சேயன் அணியன் சிறியன் பெரியன் என்பதும் * சிலர் பேசக் கேட்டிருந்
தே * என் நெஞ்சம் என்பாய்! * எனக்கு ஒன்று சொல்லாதே **
வேய்கள் நின்று வெண்முத்தமே சொரி * வேங்கட மலை கோயில் மேவிய *
ஆயர் நாயகற்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 8

கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய் * என் நெஞ்சம் என்பாய்! துணிந்து கேள் *
பாடி ஆடிப் பலரும் * பணிந்து ஏத்திக் காண்கிலா **
ஆடு தாமரையோனும் ஈசனும் * அமரர் கோனும் நின்று ஏத்தும் * வேங்கடத்து
ஆடு கூத்தனுக்கு * இன்று அடிமைத் தொழில் பூண்டாயே 9

** மின்னு மாமுகில் மேவு * தண்திருவேங்கட மலை கோயில் மேவிய *
அன்னமாய் நிகழ்ந்த * அமரர் பெருமானை **
கன்னி மாமதிள் மங்கையர் கலிகன்றி * இன்தமிழால் உரைத்த * இம்
மன்னு பாடல் வல்லார்க்கு * இடம் ஆகும் வான் உலகே 10

அடிவரவு: வானவர் உறவு இண்டை பாவியாது பொங்கு துவரி தருக்கினால் சேயன் கூடி மின்னு காசையாடை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

இரண்டாம் திருமொழி - காசையாடை
திருவெவ்வுளூர்

** காசை ஆடை மூடி ஓடிக் * காதல் செய்தான் அவன் ஊர் *
நாசமாக நம்ப வல்ல * நம்பி நம்பெருமான் **
வேயின் அன்ன தோள் மடவார் * வெண்ணெய் உண்டான் இவன் என்று *
ஏச நின்ற எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 1

தையலாள் மேல் காதல் செய்த * தானவன் வாள் அரக்கன் *
பொய் இலாத பொன் முடிகள் * ஒன்பதோடு ஒன்றும் ** அன்று
செய்த வெம்போர் தன்னில் * அங்கோர் செஞ்சரத்தால் உருள *
எய்த எந்தை எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 2

முன்னோர் தூது * வானரத்தின் வாயில் மொழிந்து * அரக்கன்
மன்னூர் தன்னை * வாளியினால் மாள முனிந்து ** அவனே
பின்னோர் தூது * ஆதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார் *
இன்னார் தூதன் என நின்றான் * எவ்வுள் கிடந்தானே 3

பந்தணைந்த மெல்விரலாள் * பாவை தன் காரணத்தால் *
வெந்திறல் ஏறு ஏழும் * வென்ற வேந்தன் விரிபுகழ் சேர் **
நந்தன் மைந்தனாக ஆகும் * நம்பி நம்பெருமான் *
எந்தை தந்தை தம் பெருமான் * எவ்வுள் கிடந்தானே 4

பாலனாகி ஞாலம் ஏழும் உண்டு * பண்டு ஆலிலை மேல் *
சால நாளும் பள்ளி கொள்ளும் * தாமரைக் கண்ணன் எண்ணில் **
நீலமார் வண்டுண்டு வாழும் * நெய்தல் அந்தண் கழனி *
ஏல நாறும் பைம்புறவில் * எவ்வுள் கிடந்தானே 5

சோத்த நம்பி என்று * தொண்டர் மிண்டித் தொடர்ந்து அழைக்கும் *
ஆத்த நம்பி செங்கண் நம்பி * ஆகிலும் தேவர்க்கு எல்லாம் **
மூத்த நம்பி முக்கணம்பி என்று * முனிவர் தொழுது
ஏத்தும் * நம்பி எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 6

திங்கள் அப்பு வான் எரி காலாகி * திசை முகனார் *
தங்கள் அப்பன் சாமி அப்பன் * பாகத்து இருந்த ** வண்டுண்
தொங்கல் அப்பு நீள்முடியான் * சூழ் கழல் சூட நின்ற *
எங்கள் அப்பன் எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 7

முனிவன் மூர்த்தி மூவராகி * வேதம் விரித்து உரைத்த
புனிதன் * பூவை வண்ணன் அண்ணல் * புண்ணியன் விண்ணவர் கோன் **
தனியன் சேயன் தான் ஒருவன் ஆகிலும் * தன் அடியார்க்கு
இனியன் * எந்தை எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 8

பந்திருக்கும் மெல்விரலாள் * பாவை பனிமலராள் *
வந்திருக்கும் மார்வன் * நீலமேனி மணிவண்ணன் **
அந்தரத்தில் வாழும் * வானோர் நாயகனாய் அமைந்த *
இந்திரற்கும் தம் பெருமான் * எவ்வுள் கிடந்தானே 9

** இண்டை கொண்டு தொண்டர் ஏத்த * எவ்வுள் கிடந்தானை *
வண்டு பாடும் பைம்புறவின் * மங்கையர் கோன் கலியன் **
கொண்ட சீரால் தண்தமிழ் செய் மாலை * ஈரைந்தும் வல்லார் *
அண்டம் ஆள்வது ஆணை * அன்றேல் ஆள்வர் அமருலகே 10

அடிவரவு: காசையாடை தையலாள் முன் பந்தணைந்த பாலன் சோத்தம் திங்கள் முனிவன் பந்திருக்கும் இண்டை வில்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

மூன்றாம் திருமொழி - விற்பெரு விழவும்
திருவல்லிக்கேணி

** விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் *
வேழமும் பாகனும் வீழ *
செற்றவன் தன்னை புரம் எரி செய்த *
சிவன் உறு துயர் களை தேவை **
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு *
பார்த்தன் தன் தேர் முன் நின்றானை *
சிற்றவை பணியால் முடி துறந்தானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 1

** வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை *
விழுமிய முனிவர் விழுங்கும் *
கோதில் இன்கனியை நந்தனார் களிற்றைக் *
குவலயத்தோர் தொழுது ஏத்தும் **
ஆதியை அமுதை என்னை ஆளுடை அப்பனை *
ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் * மாட மா மயிலைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 2

வஞ்சனை செய்யத் தாய் உருவாகி *
வந்த பேய் அலறி மண் சேர *
நஞ்சமர் முலையூடு உயிர் செக உண்ட *
நாதனைத் தானவர் கூற்றை **
விஞ்சை வானவர் சாரணர் சித்தர் *
வியந்துதி செய்யப் பெண் உருவாகி *
அஞ்சுவை அமுதம் அன்று அளித்தானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 3

இந்திரனுக்கு என்று ஆயர்கள் எடுத்த *
எழில் விழவில் பழ நடை செய் *
மந்திர விதியில் பூசனை பெறாது *
மழை பொழிந்திடத் தளர்ந்து ** ஆயர்
எந்தம்மோடு இன ஆநிரை தளராமல் *
எம்பெருமான்! அருள் என்ன *
அந்தமில் வரையால் மழை தடுத்தானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 4

இன் துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும் இன்பன் *
நற்புவி தனக்கு இறைவன் *
தன் துணை ஆயர் பாவை நப்பின்னை தனக்கு இறை *
மற்றையோர்க்கு எல்லாம்
வன் துணை ** பஞ்ச பாண்டவர்க்காகி வாயுரை
தூது சென்று * இயங்கும்
என் துணை * எந்தை தந்தை தம்மானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 5

அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கு
இளையவன் * அணியிழையைச் சென்று *
எந்தமக்கு உரிமை செய் எனத் தரியாது *
எம்பெருமான்! அருள் என்ன **
சந்தமல் குழலாள் அலக்கண் நூற்றுவர் தம் *
பெண்டிரும் எய்தி நூல் இழப்ப *
இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 6

** பரதனும் தம்பி சத்துருக்கனனும் *
இலக்குமனோடு மைதிலியும் *
இரவு நன்பகலும் துதி செய்ய நின்ற *
இராவணாந்தகனை எம்மானை **
குரவமே கமழும் குளிர் பொழிலூடு *
குயிலொடு மயில்கள் நின்றால *
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 7

** பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் *
வாயில் ஓர் ஆயிர நாமம் *
ஒள்ளியவாகிப் போத ஆங்கு அதனுக்கு *
ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி **
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் *
பிறை எயிற்றனல் விழி பேழ்வாய் *
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 8

** மீன் அமர் பொய்கை நாள் மலர் கொய்வான் *
வேட்கையினோடு சென்று இழிந்த *
கான் அமர் வேழம் கை எடுத்து அலறக் *
கரா அதன் காலினைக் கதுவ **
ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து *
சென்று நின்று ஆழி தொட்டானை *
தேன் அமர் சோலை மாட மா மயிலைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 9

** மன்னு தண்பொழிலும் வாவியும் மதிளும் *
மாட மாளிகையும் மண்டபமும் *
தென்னன் தொண்டையர் கோன் செய்த நல் மயிலைத் *
திருவல்லிக்கேணி நின்றானை **
கன்னி நன்மாட மங்கையர் தலைவன் *
காமரு சீர்க் கலிகன்றி *
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார் *
சுகம் இனிதாள்வர் வானுலகே 10

அடிவரவு: வில் வேதத்தை வஞ்சனை இந்திரனுக்கு இன்துணை அந்தகன் பரதன் பள்ளியில் மீனமர் மன்னு அன்றாயர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

நான்காம் திருமொழி - அன்றாயர்
திருநீர்மலை

** அன்றாயர் குலக் கொடியோடு * அணிமாமலர்
மங்கையொடு அன்பளவி * அவுணர்க்கு
என்தானும் இரக்கம் இலாதவனுக்கு * உறையும்
இடம் ஆவது ** இரும்பொழில் சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை *
தடம் திகழ் கோவல் நகர் *
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 1

காண்டா வனம் என்பதொர் காடு * அமரர்க்கு அரையன்
அது கண்டவன் நிற்க * முனே
மூண்டார் அழல் உண்ண முனிந்ததுவும் * அதுவன்றியும்
முன் உலகம் பொறை தீர்த்து
ஆண்டான் ** அவுணன் அவன் மார்பகலம் * உகிரால் வகிர்
ஆக முனிந்து * அரியாய்
நீண்டான் குறள் ஆகி நிமிர்ந்தவனுக்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 2

அலமன்னும் அடல் சுரி சங்கம் எடுத்து *
அடல் ஆழியினால் அணியார் உருவில் *
புலமன்னு வடம் புனை கொங்கையினாள் *
பொறை தீர முனாள் அடுவாள் அமரில் **
பல மன்னர் படச் சுடர் ஆழியினைப் *
பகலோன் மறையப் பணி கொண்டணி சேர் *
நில மன்னனுமாய் உலகாண்டவனுக்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 3

தாங்காததொர் ஆளரியாய் * அவுணன் தனை
வீட முனிந்து அவனால் அமரும் *
பூங்கோதையர் பொங்கெரி மூழ்க விளைத்து அதுவன்றியும் *
வென்றி கொள் வாள் அமரில் **
பாங்காக முன் ஐவரொடு அன்பளவிப் *
பதிற்றைந்து இரட்டிப் படை வேந்தர் பட *
நீங்காச் செருவில் நிறை காத்தவனுக்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 4

மாலும் கடல் ஆர மலைக் குவடிட்டு அணை கட்டி *
வரம்புருவ மதி சேர் *
கோல மதிளாய இலங்கை கெடப் *
படை தொட்டொரு கால் அமரில் அதிர **
காலம் இது என்று அயன் வாளியினால் *
கதிர் நீள்முடி பத்தும் அறுத்தமரும் *
நீலமுகில் வண்ணன் எமக்கு இறைவற்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 5

பாரார் உலகும் பனி மால் வரையும் *
கடலும் சுடரும் இவை உண்டும் * எனக்கு
ஆராதென நின்றவன் எம்பெருமான் *
அலை நீர் உலகுக்கு அரசாகிய ** அப்
பேரானை முனிந்த முனிக்கரையன் *
பிறர் இல்லை நுனக்கெனும் எல்லையினான் *
நீரார் பேரான் நெடுமால் அவனுக்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 6

புகரார் உருவாகி முனிந்தவனைப் *
புகழ் வீட முனிந்து உயிர் உண்டு * அசுரன்
நகர் ஆயின பாழ் பட நாமம் எறிந்து அதுவன்றியும் *
வென்றி கொள் வாள் அவுணன் **
பகராதவன் ஆயிர நாமம் *
அடிப் பணியாதவனைப் பணியால் அமரில் *
நிகர் ஆயவன் நெஞ்சு இடந்தான் அவனுக்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 7

பிச்சச் சிறு பீலி பிடித்து உலகில் *
பிணம் தின் மடவார் அவர் போல் * அங்ஙனே
அச்சம் இலர் நாண் இலரா தன்மையால் *
அவர் செய்கை வெறுத்து அணிமாமலர் தூய் **
நச்சி நமனார் அடையாமை *
நமக்கு அருள் செய் என உள்குழைந்து ஆர்வமொடு *
நிச்சம் நினைவார்க்கு அருள் செய்யுமவற்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 8

பேசும் அளவன்று இது வம்மின் நமர் *
பிறர் கேட்பதன் முன் பணிவார் வினைகள் *
நாசம் அது செய்திடும் ஆதன்மையால் *
அதுவே நமது உய்விடம் நாண்மலர் மேல் **
வாசம் அணி வண்டறை பைம்புறவில் *
மனம் ஐந்தொடு நைந்து உழல்வார் * மதியில்
நீசர் அவர் சென்று அடையாதவனுக்கு இடம் *
மாமலை ஆவது நீர்மலையே 9

** நெடுமால் அவன் மேவிய நீர்மலை மேல் *
நிலவும் புகழ் மங்கையர் கோன் * அமரில்
கடமா களி யானை வல்லான் * கலியன் ஒலி
செய் தமிழ் மாலை வல்லார்க்கு ** உடனே
விடுமால் வினை * வேண்டிடில் மேல் உலகும்
எளிதாயிடும் அன்றி இலங்கொலி சேர் *
கொடுமா கடல் வையகம் ஆண்டு *
மதிக்குடை மன்னவராய் அடி கூடுவரே 10

அடிவரவு: அன்றாயர் காண்டா அலம் தாங்காது மாலும் பார் புகர் பிச்சம் பேசும் நெடுமால் பாராயது

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

ஐந்தாம் திருமொழி - பாராயது
திருக்கடல்மல்லை 1

** பாராயது உண்டு உமிழ்ந்த பவளத் தூணைப் *
படுகடலில் அமுதத்தைப் பரி வாய் கீண்ட
சீரானை * எம்மானைத் தொண்டர் தங்கள்
சிந்தை உள்ளே * முளைத்து எழுந்த தீங்கரும்பினை **
போரானைக் கொம்பொசித்த போர் ஏற்றினைப் *
புணர் மருதம் இற நடந்த பொற்குன்றினை *
காரானை இடர் கடிந்த கற்பகத்தைக் *
கண்டது நான் கடல்மல்லைத் தலசயனத்தே 1

பூண்டு அவத்தம் பிறர்க்கு அடைந்து தொண்டுபட்டுப் *
பொய்ந்நூலை மெய்ந்நூல் என்று என்றும் ஓதி
மாண்டு * அவத்தம் போகாதே வம்மின் * எந்தை
என் வணங்கப்படுவானை ** கணங்கள் ஏத்தும்
நீண்ட அத்தைக் கருமுகிலை எம்மான் தன்னை *
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை *
காண்டவத்தைக் கனல் எரி வாய்ப் பெய்வித்தானைக் *
கண்டது நான் கடல்மல்லைத் தலசயனத்தே 2

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய் *
உலகுய்ய நின்றானை * அன்று பேய்ச்சி
விடம் பருகு வித்தகனைக் * கன்று மேய்த்து
விளையாட வல்லானை வரை மீகானில் **
தடம் பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில் *
தவ நெறிக்கு ஓர் பெரு நெறியை வையம் காக்கும் *
கடும் பரி மேல் கற்கியை நான் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 3

பேய்த் தாயை முலை உண்ட பிள்ளை தன்னைப் *
பிணை மருப்பின் கருங்களிற்றைப் பிணை மானோக்கின் *
ஆய்த் தாயர் தயிர் வெண்ணெய் அமர்ந்த கோவை *
அந்தணர் தம் அமுதத்தைக் குரவை முன்னே
கோத்தானை ** குடமாடு கூத்தன் தன்னைக் *
கோகுலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக்
காத்தானை * எம்மானைக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 4

பாய்ந்தானைத் திரி சகடம் பாறி வீழப் *
பாலகனாய் ஆலிலையில் பள்ளி இன்பம்
ஏய்ந்தானை * இலங்கொளி சேர் மணிக் குன்றன்ன *
ஈரிரண்டு மால்வரைத் தோள் எம்மான் தன்னை **
தோய்ந்தானை நிலமகள் தோள் தூதிற் சென்று * அப்
பொய்யறை வாய்ப் புகப் பெய்த மல்லர் மங்கக்
காய்ந்தானை * எம்மானைக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 5

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள் மேவிக் *
கிளர் பொறிய மறி திரிய அதனின் பின்னே
படர்ந்தானைப் * படு மதத்த களிற்றின் கொம்பு
பறித்தானைப் * பார் இடத்தை எயிறு கீற
இடந்தானை ** வளை மருப்பின் ஏனம் ஆகி *
இருநிலனும் பெரு விசும்பும் எய்தா வண்ணம்
கடந்தானை * எம்மானைக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 6

பேணாத வலி அரக்கர் மெலிய அன்று *
பெருவரைத் தோள் இற நெரித்து அன்றவுணர் கோனை *
பூண் ஆகம் பிளவெடுத்த போர் வல்லோனைப் *
பொரு கடலுள் துயில் அமர்ந்த புள் ஊர்தியை **
ஊணாகப் பேய் முலை நஞ்சு உண்டான் தன்னை *
உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை *
காணாது திரிதருவேன் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 7

பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானைப் *
பிறை எயிற்று அன்று அடல் அரியாய்ப் பெருகினானை *
தண்ணார்ந்த வார்புனல் சூழ் மெய்யம் என்னும் *
தடவரை மேல் கிடந்தானைப் பணங்கள் மேவி **
எண்ணானை எண்ணிறந்த புகழினானை *
இலங்கொளி சேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானை * கண்ணாரக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 8

தொண்டாயார் தாம் பரவும் அடியினானைப் *
படி கடந்த தாளாளற்கு ஆளாய் உய்தல்
விண்டானை * தென்னிலங்கை அரக்கர் வேந்தை *
விலங்கு உண்ண வலங்கை வாய்ச் சரங்கள் ஆண்டு **
பண்டாய வேதங்கள் நான்கும் * ஐந்து
வேள்விகளும் கேள்வியோடு அங்கம் ஆறும்
கண்டானை * தொண்டனேன் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 9

** பட நாகத்தணைக் கிடந்து அன்று அவுணர் கோனைப் *
பட வெகுண்டு மருதிடை போய்ப் பழன வேலி *
தடம் ஆர்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத் *
தாமரைக் கண் துயில் அமர்ந்த தலைவர் தம்மை **
கடம் ஆரும் கருங்களிறு வல்லான் * வெல் போர்க்
கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடல் *
திடமாக இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் *
தீவினையை முதல் அரிய வல்லார் தாமே 10

அடிவரவு: பாராயது பூண்டு உடம்பு பேய் பாய்ந்தானை கிடந்தானை பேணாத பெண் தொண்டாயார் படம் நண்ணாத

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

ஆறாம் திருமொழி - நண்ணாத
திருக்கடல்மல்லை 2

** நண்ணாத வாள் அவுணர் * இடைப் புக்கு * வானவரைப்
பெண்ணாகி * அமுதூட்டும் பெருமானார் ** மருவினிய
தண்ணார்ந்த கடல்மல்லைத் * தலசயனத்து உறைவாரை *
எண்ணாதே இருப்பாரை * இறைப் பொழுதும் எண்ணோமே 1

பார்வண்ண மடமங்கை * பனி நன்மாமலர்க் கிழத்தி *
நீர்வண்ணன் மார்வகத்தில் * இருக்கையை முன் நினைந்து அவன் ஊர் **
கார்வண்ண முது முந்நீர்க் * கடல்மல்லைத் தலசயனம் *
ஆர் எண்ணும் நெஞ்சு உடையார் * அவர் எம்மை ஆள்வாரே 2

** ஏனத்தின் உருவாகி * நிலமங்கை எழில் கொண்டான் *
வானத்திலவர் முறையால் * மகிழ்ந்து ஏத்தி வலங்கொள்ள **
கானத்தின் கடல்மல்லைத் * தலசயனத்து உறைகின்ற *
ஞானத்தின் ஒளி உருவை * நினைவார் என் நாயகரே 3

விண்டாரை வென்றாவி * விலங்கு உண்ண மெல்லியலார் *
கொண்டாடும் மல்லகலம் * அழல் ஏற வெஞ்சமத்துக்
கண்டாரை ** கடல்மல்லைத் * தலசயனத்து உறைவாரை *
கொண்டாடும் நெஞ்சு உடையார் * அவர் எங்கள் குல தெய்வமே 4

பிச்சச் சிறு பீலிச் * சமண் குண்டர் முதலாயோர் *
விச்சைக்கு இறை என்னும் * அவ்விறையைப் பணியாதே **
கச்சிக் கிடந்தவன் ஊர் * கடல்மல்லைத் தலசயனம் *
நச்சித் தொழுவாரை * நச்சு என்தன் நல்நெஞ்சே! 5

புலங்கொள் நிதிக் குவையோடு * புழைக் கைம்மா களிற்றினமும் *
நலங்கொள் நவமணிக் குவையும் * சுமந்து எங்கும் நான்றொசிந்து **
கலங்கள் இயங்கும் மல்லைக் * கடல்மல்லைத் தலசயனம் *
வலங்கொள் மனத்தாரவரை * வலங்கொள் என் மட நெஞ்சே! 6

பஞ்சிச் சிறு கூழை * உருவாகி மருவாத *
வஞ்சப் பெண் நஞ்சு உண்ட * அண்ணல் முன் நண்ணாத **
கஞ்சைக் கடந்தவன் ஊர் * கடல்மல்லைத் தலசயனம் *
நெஞ்சில் தொழுவாரைத் * தொழுவாய் என் தூய் நெஞ்சே! 7

செழு நீர் மலர்க் கமலம் * திரை உந்து வன்பகட்டால் *
உழு நீர் வயல் உழவர் உழப் * பின் முன் பிழைத்து எழுந்த **
கழு நீர் கடி கமழும் * கடல்மல்லைத் தலசயனம் *
தொழு நீர் மனத்தவரைத் * தொழுவாய் என் தூய் நெஞ்சே! 8

பிணங்கள் இடு காடு அதனுள் * நடம் ஆடு பிஞ்ஞகனோடு *
இணங்கு திருச்சக்கரத்து * எம்பெருமானார்க்கு இடம் ** விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக் * கடல்மல்லைத் தலசயனம் *
வணங்கும் மனத்தார் அவரை * வணங்கு என்தன் மட நெஞ்சே! 9

** கடி கமழும் நெடுமறுகில் * கடல்மல்லைத் தலசயனத்து *
அடிகள் அடியே நினையும் * அடியவர்கள் தம் அடியான் **
வடிகொள் நெடுவேல் வலவன் * கலிகன்றி ஒலி வல்லார் *
முடிகொள் நெடுமன்னவர் தம் * முதல்வர் முதல் ஆவாரே 10

அடிவரவு: நண்ணாத பார் ஏனத்தின் விண்டாரை பிச்சம் புலம் பஞ்சி செழுநீர் பிணங்கள் கடி திவளும்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

ஏழாம் திருமொழி - திவளும்
திருவிடவெந்தை
(தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்கும் பாசுரம்)

** திவளும் வெண்மதி போல் திருமுகத்து அரிவை *
செழுங்கடல் அமுதினில் பிறந்த
அவளும் * நின் ஆகத்து இருப்பதும் அறிந்தும் *
ஆகிலும் ஆசை விடாளால் **
குவளை அங்கண்ணி கொல்லி அம்பாவை * சொல்லு
நின் தாள் நயந்திருந்த
இவளை * உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 1

துளம் படு முறுவல் தோழியர்க்கு அருளாள் *
துணைமுலை சாந்து கொண்டு அணியாள் *
குளம் படு குவளைக் கண்ணிணை எழுதாள் *
கோல நல்மலர் குழற்கு அணியாள் **
வளம் படு முந்நீர் வையம் முன் அளந்த *
மால் என்னும் மால் இன மொழியாள் *
இளம் படி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 2

சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும் *
தடமுலைக்கு அணியிலும் தழலாம் *
போந்த வெண்திங்கள் கதிர் சுட மெலியும் *
பொருகடல் புலம்பிலும் புலம்பும் **
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம் *
வளைகளும் இறை நில்லா * என்தன்
ஏந்திழை இவளுக்கென் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 3

ஊழியிற்பெரிதால் நாழிகை என்னும் *
ஒண்சுடர் துயின்றதால் என்னும் *
ஆழியும் புலம்பும் அன்றிலும் உறங்கா *
தென்றலும் தீயினில் கொடிதாம் **
தோழியோ! என்னும் துணைமுலை அரக்கும் *
சொல்லுமின் என் செய்கேன்? என்னும் *
ஏழை என் பொன்னுக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 4

ஓதிலும் உன் பேர் அன்றி மற்றோதாள் *
உருகும் நின் திருவுரு நினைந்து *
காதன்மை பெரிது கையறவு உடையள் *
கயல் நெடுங்கண் துயில் மறந்தாள் **
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது *
தெள்ளியள் வள்ளி நுண்மருங்குல் *
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 5

தன் குடிக்கு ஏதும் தக்கவா நினையாள் *
தடங்கடல் நுடங்கெயில் இலங்கை *
வன் குடி மடங்க வாள் அமர் தொலைத்த *
வார்த்தை கேட்டு இன்புறும் மயங்கும் **
மின் கொடி மருங்குல் சுருங்க மேல் நெருங்கி *
மென்முலை பொன் பயந்திருந்த *
என் கொடி இவளுக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 6

உளம் கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும் *
உனக்கன்றி எனக்கு அன்பு ஒன்றிலளால் *
வளங்கனி பொழில் சூழ் மாலிருஞ்சோலை *
மாயனே! என்று வாய் வெருவும் **
களங்கனி முறுவல் காரிகை பெரிது *
கவலையோடு அவலம் சேர்ந்திருந்த *
இளங்கனி இவளுக்கென் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 7

** அலங்கெழு தடக்கை ஆயன் வாய் ஆம்பற்கு *
அழியுமால் என் உள்ளம் என்னும் *
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும் *
போதுமோ நீர்மலைக்கு என்னும் **
குலங்கெழு கொல்லி கோமளவல்லி *
கொடி இடை நெடு மழைக் கண்ணி *
இலங்கெழில் தோளிக்கு என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 8

பொன் குலாம் பயலை பூத்தன மெந்தோள் *
பொருகயல் கண்துயில் மறந்தாள் *
அன்பினால் உன் மேல் ஆதரம் பெரிது *
இவ்வணங்கினுக்கு உற்ற நோய் அறியேன் **
மின் குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி *
வீங்கிய வனமுலையாளுக்கு *
என் கொலாம்? குறிப்பில் என் நினைந்திருந்தாய்? *
இடவெந்தை எந்தை பிரானே! 9

** அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய *
எம் மாயனே! அருளாய் *
என்னும் இன்தொண்டர்க்கு இன்னருள் புரியும் *
இடவெந்தை எந்தை பிரானை **
மன்னு மாமாட மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் *
பன்னிய பனுவல் பாடுவார் *
நாளும் பழவினை பற்றறுப்பாரே 10

அடிவரவு: திவளும் துளம் சாந்தம் ஊழியில் ஓதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம் திரிபுரம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

எட்டாம் திருமொழி - திரிபுரம்
திருவட்டபுயகரம்

** திரிபுரம் மூன்று எரித்தானும் * மற்றை
மலர் மிசை மேல் அயனும் வியப்ப *
முரி திரை மாகடல் போல் முழங்கி *
மூவுலகும் முறையால் வணங்க **
எரியன கேசர வாள் எயிற்றோடு *
இரணியன் ஆகம் இரண்டு கூறா *
அரி உருவாம் இவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 1

வெந்திறல் வீரரில் வீரர் ஒப்பார் *
வேதம் உரைத்து இமையோர் வணங்கும் *
செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் *
தேவர் இவர் கொல்? தெரிக்க மாட்டேன் **
வந்து குறள் உருவாய் நிமிர்ந்து *
மாவலி வேள்வியில் மண்ணளந்த *
அந்தணர் போன்றிவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 2

செம்பொன் இலங்கு வலங்கை வாளி *
திண்சிலை தண்டொடு சங்கம் ஒள்வாள் *
உம்பர் இருசுடர் ஆழியோடு *
கேடகம் ஒண்மலர் பற்றி எற்றே! **
வெம்பு சினத்தடல் வேழம் வீழ *
வெண்மருப்பொன்று பறித்து * இருண்ட
அம்புதம் போன்றிவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 3

மஞ்சுயர் மாமணிக் குன்றம் ஏந்தி *
மாமழை காத்து ஒரு மாய ஆனை
அஞ்ச * அதன் மருப்பு அன்று வாங்கும் *
ஆயர் கொல்? மாயம் அறிய மாட்டேன் **
வெஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி *
வேதம் முன் ஓதுவர் நீதி வானத்து *
அஞ்சுடர் போன்றிவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 4

** கலைகளும் வேதமும் நீதி நூலும் *
கற்பமும் சொற்பொருள் தானும் * மற்றை
நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் *
நீர்மையினால் அருள் செய்து ** நீண்ட
மலைகளும் மாமணியும் * மலர்மேல்
மங்கையும் சங்கமும் தங்குகின்ற *
அலைகடல் போன்றிவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 5

எங்ஙனும் நாம் இவர் வண்ணம் எண்ணில் *
ஏதும் அறிகிலம் ஏந்திழையார் *
சங்கும் மனமும் நிறைவும் எல்லாம் *
தம் மனவாகப் புகுந்து ** தாமும்
பொங்கு கருங்கடல் பூவை காயா *
போதவிழ் நீலம் புனைந்த மேகம் *
அங்ஙனம் போன்றிவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 6

முழுசி வண்டாடிய தண்துழாயின் *
மொய்ம்மலர்க் கண்ணியும் * மேனி அஞ்சாந்து
இழுசிய கோலம் இருந்தவாறும் *
எங்ஙனம் சொல்லுகேன்? ஓவி நல்லார் **
எழுதிய தாமரை அன்ன கண்ணும் *
ஏந்தெழில் ஆகமும் தோளும் வாயும் *
அழகியதாம் இவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 7

மேவி எப்பாலும் விண்ணோர் வணங்க *
வேதம் உரைப்பர் முந்நீர் மடந்தை
தேவி * அப்பால் அதிர் சங்கம் இப்பால்
சக்கரம் * மற்றிவர் வண்ணம் எண்ணில் **
காவி ஒப்பார் கடலேயும் ஒப்பார் * கண்ணும்
வடிவும் நெடியராய் * என்
ஆவி ஒப்பார் இவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 8

தஞ்சம் இவர்க்கு என் வளையும் நில்லா *
நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு *
வஞ்சி மருங்குல் நெருங்க நோக்கி * வாய்
திறந்து ஒன்று பணித்தது உண்டு **
நஞ்சம் உடைத்து இவர் நோக்கும் நோக்கம் *
நான் இவர் தம்மை அறிய மாட்டேன் *
அஞ்சுவன் மற்றிவர் ஆர் கொல்? என்ன *
அட்டபுயகரத்தேன் என்றாரே 9

** மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் *
நீள்முடி மாலை வயிர மேகன் *
தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி *
அட்டபுயகரத்து ஆதி தன்னை **
கன்னி நன்மாமதிள் மங்கை வேந்தன் *
காமரு சீர்க் கலிகன்றி * குன்றா
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை *
ஏத்த வல்லார்க்கு இடம் வைகுந்தமே 10

அடிவரவு: திரிபுரம் வெந்திறல் செம்பொன் மஞ்சு கலைகளும் எங்ஙனும் முழுசி மேவி தஞ்சம் மன்னவன் சொல்லு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - சொல்லு
திருப்பரமேச்சுரவிண்ணகரம்

** சொல்லு வன்சொற்பொருள் தான் அவையாய்ச் *
சுவை ஊறொலி நாற்றமும் தோற்றமுமாய் *
நல் அரன் நாரணன் நான்முகனுக்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
பல்லவன் வில்லவன் என்று உலகில் * பலராய்ப்
பல வேந்தர் வணங்கு கழல்
பல்லவன் * மல்லையர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 1

கார் மன்னு நீள் விசும்பும் * கடலும் சுடரும்
நிலனும் மலையும் * தன் உந்தித்
தார் மன்னு தாமரைக் கண்ணன் இடம் * தட மாமதிள்
சூழ்ந்து அழகாய கச்சி **
தேர் மன்னு தென்னவனை முனையில் செரு வில் *
திறல் வாட்டிய திண் சிலையோன் *
பார் மன்னு பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 2

** உரந்தரு மெல்லணைப் பள்ளி கொண்டான் *
ஒரு கால் முன்னம் மா உருவாய்க் கடலுள் *
வரந்தரு மாமணிவண்ணன் இடம் * மணி மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
நிரந்தவர் மண்ணையில் புண் நுகர் வேல் *
நெடு வாயில் உகச் செருவில் முன நாள் *
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 3

அண்டமும் எண்திசையும் நிலனும் *
அலை நீரொடு வான் எரி கால் முதலா *
உண்டவன் எந்தை பிரானது இடம் * ஒளி மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
விண்டவர் இண்டைக் குழாமுடனே * விரைந்தார்
இரியச் செருவில் முனிந்து *
பண்டொரு கால் வளைத்தான் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 4

தூம்புடைத் திண்கை வன்தாள் களிற்றின் * துயர்
தீர்த்து அரவம் வெருவ * முன நாள்
பூம்புனல் பொய்கை புக்கான் அவனுக்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
தேம்பொழில் குன்றெயில் தென்னவனைத் * திசைப்பச்
செரு மேல் வியந்து அன்று சென்ற *
பாம்புடைப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 5

திண்படைக் கோள் அரியின் உருவாய்த் * திறலோன்
அகலம் செருவில் முன நாள் *
புண் படப் போழ்ந்த பிரானது இடம் * பொரு மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
வெண்குடை நீழல் செங்கோல் நடப்ப * விடை வெல்கொடி
வேற்படை முன் உயர்த்த *
பண்புடைப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 6

இலகிய நீள்முடி மாவலி தன் பெரு வேள்வியில் *
மாண் உருவாய் முன நாள் *
சலமொடு மாநிலம் கொண்டவனுக்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
உலகுடை மன்னவன் தென்னவனைக் * கன்னி
மாமதிள் சூழ் கருவூர் வெருவ *
பல படை சாய வென்றான் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 7

குடைத் திறல் மன்னவனாய் ஒரு கால் *
குரங்கைப் படையா * மலையால் கடலை
அடைத்தவன் எந்தை பிரானது இடம் * அணி மாடங்கள்
சூழ்ந்து அழகாய கச்சி **
விடைத் திறல் வில்லவன் நென்மெலியில் * வெருவச்
செரு வேல் வலங்கைப் பிடித்த *
படைத் திறல் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 8

பிறை உடை வாணுதல் பின்னை திறத்து *
முன்னே ஒரு கால் செருவில் உருமின் *
மறை உடை மால்விடை ஏழ் அடர்த்தாற்கு * இடம் தான்
தடம் சூழ்ந்து அழகாய கச்சி **
கறை உடை வாள் மற மன்னர் கெடக் *
கடல் போல் முழங்கும் குரல் கடுவாய் *
பறை உடைப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகரம் அதுவே 9

** பார் மன்னு தொல்புகழ்ப் பல்லவர் கோன் பணிந்த *
பரமேச்சுர விண்ணகர் மேல் *
கார் மன்னு நீள் வயல் மங்கையர் தம் தலைவன் *
கலிகன்றி குன்றாது உரைத்த **
சீர் மன்னு செந்தமிழ் மாலை வல்லார் *
திருமாமகள் தன் அருளால் * உலகில்
தேர் மன்னராய் ஒலி மாகடல் சூழ் *
செழுநீர் உலகாண்டு திகழ்வர்களே 10

அடிவரவு: சொல்லு கார் உரம் அண்டமும் தூம்பு திண் இலகிய குடை பிறை பார் மஞ்சாடு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
இரண்டாம் பத்து

பத்தாம் திருமொழி - மஞ்சாடு
திருக்கோவலூர்

** மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும் *
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம் *
எஞ்சாமல் வயிற்று அடக்கி ஆலின் மேல் ஓர் * இளந்தளிரில்
கண் வளர்ந்த ஈசன் தன்னை **
துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணைத் தென்பால் *
தூய நான்மறையாளர் சோமுச் செய்ய *
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 1

கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம் *
தீபம் கொண்டு அமரர் தொழப் பணங்கொள் பாம்பில் *
சந்தணி மென்முலை மலராள் தரணி மங்கை *
தாம் இருவர் அடி வருடும் தன்மையானை **
வந்தனை செய்து இசை ஏழ் ஆறங்கம் * ஐந்து
வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும் *
சிந்தனை செய்து இருபொழுதும் ஒன்றும் * செல்வத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 2

கொழுந்தலரும் மலர்ச் சோலைக் குழாங்கொள் பொய்கைக் *
கோள் முதலை வாள் எயிற்றுக் கொண்டற்கு எள்கி *
அழுந்திய மா களிற்றினுக்கு அன்று ஆழி ஏந்தி *
அந்தரம் மேவரத் தோன்றி அருள் செய்தானை **
எழுந்த மலர்க் கருநீலம் இருந்தில் காட்ட *
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட *
செழுந்தட நீர்க்கமலம் தீவிகை போல் காட்டும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 3

தாங்க அரும்போர் மாலி படப் பறவை ஊர்ந்து *
தராதலத்தோர் குறை முடித்த தன்மையானை *
ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் *
அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான் தன்னை **
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக் *
குழாவரி வண்டிசை பாடும் பாடல் கேட்டு *
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 4

கறை வளர் வேல் கரன் முதலாக் கவந்தன் வாலி *
கணை ஒன்றினால் மடிய இலங்கை தன்னுள் *
பிறை எயிற்று வாள் அரக்கர் சேனை எல்லாம் *
பெருந்தகையோடு உடன் துணித்த பெம்மான் தன்னை **
மறை வளரப் புகழ் வளர மாடந்தோறும் *
மண்டபம் ஒண்தொளி அனைத்தும் வாரம் ஓத *
சிறை அணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 5

உறி ஆர்ந்த நறுவெண்ணெய் ஒளியால் சென்று * அங்கு
உண்டானைக் கண்டு ஆய்ச்சி உரலோடு ஆர்க்க *
தறி ஆர்ந்த கருங்களிறே போல நின்று *
தடங்கண்கள் பனி மல்கும் தன்மையானை **
வெறி ஆர்ந்த மலர்மகள் நாமங்கையோடு *
வியன் கலை எண்தோளினாள் விளங்கு * செல்வச்
செறி ஆர்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 6

இருங்கை மா கரி முனிந்து பரியைக் கீறி *
இன விடைகள் ஏழ் அடர்த்து மருதம் சாய்த்து *
வரும் சகடம் இற உதைத்து மல்லை அட்டு *
வஞ்சம் செய் கஞ்சனுக்கு நஞ்சு ஆனானை **
கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று *
காய் எல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட *
செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 7

** பார் ஏறு பெரும் பாரம் தீரப் * பண்டு
பாரதத்துத் தூது இயங்கி * பார்த்தன் செல்வத்
தேர் ஏறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை *
செருக் களத்துத் திறல் அழியச் செற்றான் தன்னை **
போர் ஏறு ஒன்று உடையானும் அளகைக் கோனும் *
புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர் போல் *
சீர் ஏறு மறையாளர் நிறைந்த செல்வத் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 8

தூ வடிவின் பார்மகள் பூமங்கையோடு *
சுடர் ஆழி சங்கு இருபால் பொலிந்து தோன்ற *
கா வடிவின் கற்பகமே போல நின்று *
கலந்தவர்கட்கு அருள் புரியும் கருத்தினானை **
சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை *
செம்பொன் செய் திருவுருவம் ஆனான் தன்னை *
தீ வடிவின் சிவன் அயனே போல்வார் மன்னு *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 9

** வாரணம் கொள் இடர் கடிந்த மாலை * நீல
மரதகத்தை மழை முகிலே போல்வான் தன்னை *
சீரணங்கு மறையாளர் நிறைந்த * செல்வத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் என்று **
வாரணங்கு முலை மடவார் மங்கை வேந்தன் *
வாள் கலியன் ஒலி ஐந்தும் ஐந்தும் வல்லார் *
காரணங்களால் உலகம் கலந்தங்கு ஏத்தக் *
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே 10

அடிவரவு: மஞ்சாடு கொந்து கொழுந்து தாங்கு கறை உறி இருங்கை பார் தூவடிவின் வாரணம் இருந்தண்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

மூன்றாம் பத்து

முதல் திருமொழி - இருந்தண்மாநிலம்
திருவயிந்திரபுரம்

** இருந்தண் மாநிலம் ஏனமதாய் * வளை மருப்பினில் அகத்து ஒடுக்கி *
கருந்தண் மாகடல் கண் துயின்றவன் இடம் * கமல நன்மலர்த் தேறல்
அருந்தி ** இன்னிசை முரன்றெழும் அளி குலம் பொதுளி * அம்பொழில் ஊடே *
செருந்தி நாண்மலர் சென்றணைந்து உழி தரு * திருவயிந்திரபுரமே 1

மின்னும் ஆழி அங்கை அவன் * செய்யவள் உறை தரு திருமார்பன் *
பன்னு நான்மறைப் பல்பொருள் ஆகிய * பரன் இடம் வரைச் சாரல் **
பின்னும் மாதவிப் பந்தலில் பெடை வரப் * பிணி அவிழ் கமலத்து *
தென்னவென்று வண்டு இன்னிசை முரல் தரு * திருவயிந்திரபுரமே 2

வையம் ஏழும் உண்டு ஆலிலை வைகிய * மாயவன் அடியவர்க்கு *
மெய்யன் ஆகிய தெய்வ நாயகன் இடம் * மெய்தகு வரைச் சாரல் **
மொய்கொள் மாதவி செண்பகம் முயங்கிய * முல்லை அங்கொடி ஆட *
செய்ய தாமரைச் செழும் பணை திகழ் தரு * திருவயிந்திரபுரமே 3

மாறு கொண்டு உடன்று எதிர்ந்த வல்லவுணன் தன் * மார்பகம் இரு பிளவா *
கூறு கொண்டு அவன் குல மகற்கு * இன்னருள் கொடுத்தவன் இடம் ** மிடைந்து
சாறு கொண்ட மென்கரும்பு இளங்கழை * தகை விசும்புற மணி நீழல் *
சேறு கொண்ட தண்பழனமது எழில் திகழ் * திருவயிந்திரபுரமே 4

ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று * அகல் இடம் அளந்து * ஆயர்
பூங்கொடிக்கு இன விடை பொருதவன் இடம் * பொன்மலர் திகழ் ** வேங்கை
கோங்கு செண்பகக் கொம்பினில் * குதிகொடு குரக்கினம் இரைத்தோடி *
தேன் கலந்த தண்பலங்கனி நுகர் தரு * திருவயிந்திரபுரமே 5

கூன் உலாவிய மடந்தை தன் * கொடுஞ்சொலின் திறத்து இளங்கொடியோடும் *
கான் உலாவிய கருமுகில் திருநிறத்தவன் இடம் * கவின் ஆரும் **
வான் உலாவிய மதி தவழ் மால் வரை * மாமதிள் புடை சூழ *
தேன் உலாவிய செழும் பொழில் தழுவிய * திருவயிந்திரபுரமே 6

மின்னின் நுண்ணிடை மடக்கொடி காரணம் * விலங்கலின் மிசை இலங்கை
மன்னன் * நீள்முடி பொடி செய்த மைந்தனது இடம் * மணி வரை நீழல் **
அன்ன மாமலர் அரவிந்தத்து அமளியில் * பெடையொடும் இனிதமர *
செந்நெலார் கவரிக் குலை வீசு தண் * திருவயிந்திரபுரமே 7

விரை கமழ்ந்த மென்கருங்குழல் காரணம் * வில் இறுத்து அடல் மழைக்கு *
நிரை கலங்கிட வரை குடை எடுத்தவன் * நிலவிய இடம் தடமார் **
வரை வளம் திகழ் மதகரி மருப்பொடு * மலை வளர் அகில் உந்தி *
திரை கொணர்ந்து அணை செழு நதி வயல் புகு * திருவயிந்திரபுரமே 8

வேல் கொள் கைத்தலத்து அரசர் வெம்போரினில் * விசயனுக்காய் மணித் தேர் *
கோல் கொள் கைத்தலத்து எந்தை பெம்மான் இடம் * குலவு தண் வரைச் சாரல் **
கால் கொள் கண் கொடிக் கையெழக் * கமுகு இளம் பாளைகள் கமழ் சாரல் *
சேல்கள் பாய் தரு செழு நதி வயல் புகு * திருவயிந்திரபுரமே 9

** மூவராகிய ஒருவனை * மூவுலகு உண்டு உமிழ்ந்து அளந்தானை *
தேவர் தானவர் சென்று சென்று இறைஞ்சத் * தண் திருவயிந்திரபுரத்து **
மேவு சோதியை வேல் வலவன் * கலிகன்றி விரித்து உரைத்த *
பாவு தண் தமிழ் பத்திவை பாடிடப் * பாவங்கள் பயிலாவே 10

அடிவரவு: இருந்தண் மின்னும் வையம் மாறு ஆங்கு கூன் மின்னின் விரை வேல் மூவர் ஊன்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

இரண்டாம் திருமொழி - ஊன்வாட
திருச்சித்திரகூடம் 1

** ஊன் வாட உண்ணாது உயிர் காவல் இட்டு *
உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து *
தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா *
தமதா இமையோர் உலகாள கிற்பீர்! **
கான் ஆட மஞ்ஞைக் கணம் ஆட மாடே *
கயல் ஆடு கானீர்ப் பழனம் புடை போய் *
தேன் ஆட மாடக் கொடி ஆடு * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 1

காயோடு நீடு கனி உண்டு * வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் * ஐந்து
தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா *
திருமார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர்! **
வாயோது வேதம் மலிகின்ற தொல் சீர் *
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த *
தீயோங்க ஓங்கப் புகழ் ஓங்கு * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 2

வெம்பும் சினத்துப் புனக் கேழல் ஒன்றாய் *
விரிநீர் முது வெள்ளம் உள்புக்கு அழுந்த *
வம்புண் பொழில் சூழ் உலகு அன்று எடுத்தான் *
அடிப் போதணைவான் விருப்போடு இருப்பீர்! **
பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து *
படை மன்னவன் பல்லவர் கோன் பணிந்த *
செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்த * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 3

அருமாநிலம் அன்று அளப்பான் குறளாய் *
அவுணன் பெருவேள்வியில் சென்று இரந்த *
பெருமான் திருநாமம் பிதற்றி * நுந்தம்
பிறவித் துயர் நீங்குதும் என்ன கிற்பீர்! **
கருமா கடலுள் கிடந்தான் உவந்து *
கவை நா அரவினணைப் பள்ளியின் மேல் *
திருமால் திருமங்கையொடாடு * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 4

கோ மங்க வங்கக் கடல் வையம் உய்யக் *
குல மன்னர் அங்கம் மழுவில் துணிய *
தாம் அங்கு அமருள் படை தொட்ட வென்றித் *
தவமா முனியைத் தமக்காக்க கிற்பீர்! **
பூமங்கை தங்கிப் புலமங்கை மன்னிப் *
புகழ் மங்கை எங்கும் திகழப் புகழ் சேர் *
சேமங்கொள் பைம்பூம் பொழில் சூழ்ந்த * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 5

நெய்வாய் அழல் அம்பு துரந்து * முந்நீர்
துணியப் பணி கொண்டு அணியார்ந்து * இலங்கு
மையார் மணிவண்ணனை எண்ணி * நுந்தம்
மனத்தே இருத்தும்படி வாழ வல்லீர்! **
அவ்வாய் இளமங்கையர் பேசவும் தான் *
அருமாமறை அந்தணர் சிந்தை புக *
செவ்வாய்க் கிளி நான்மறை பாடு * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 6

மௌவல் குழல் ஆய்ச்சி மென்தோள் நயந்து *
மகரம் சுழலச் சுழல் நீர் பயந்த *
தெய்வத் திருமாமலர் மங்கை தங்கு *
திருமார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர்! **
கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில் *
கமழ் சந்தும் உந்தி நிவா வலங்கொள் *
தெய்வப் புனல் சூழ்ந்து அழகாய * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 7

மா வாயின் அங்கம் மதியாது கீறி *
மழைமா முது குன்று எடுத்து * ஆயர் தங்கள்
கோவாய் நிரை மேய்த்து உலகுண்ட மாயன் *
குரைமா கழல் கூடும் குறிப்புடையீர்! **
மூவாயிரம் நான்மறையாளர் * நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி *
தேவாதி தேவன் திகழ்கின்ற * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 8

செருநீல வேற்கண் மடவார் திறத்துச் *
 சினத்தோடு நின்று மனத்தால் வளர்க்கும் *
அருநீல பாவம் அகலப் புகழ் சேர் *
 அமரர்க்கும் எய்தாத அண்டத்து இருப்பீர்! **
பெருநீர் நிவா உந்தி முத்தம் கொணர்ந்து * எங்கும்
 வித்தும் வயலுள் கயல் பாய்ந்துகள *
திருநீலம் நின்று திகழ்கின்ற * தில்லைத்
 திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 9

** சீரார் பொழில் சூழ்ந்து அழகாய * தில்லைத்
 திருச்சித்ர கூடத்துறை செங்கண் மாலுக்கு *
ஆராத உள்ளத்தவர் கேட்டு உவப்ப *
 அலைநீர் உலகுக்கு அருளே புரியும் **
காரார் புயற்கைக் கலிகன்றி * குன்றா ஒலிமாலை
 ஓர் ஒன்பதோடு ஒன்றும் வல்லார் *
பாரார் உலகம் அளந்தான் அடிக் கீழ்ப் *
 பல காலம் நிற்கும்படி வாழ்வர் தாமே 10

அடிவரவு: ஊன் காயோடு வெம்பும் அருமா கோமங்க நெய் மௌவல் மாவாயின் செரு சீரார் வாட

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

மூன்றாம் திருமொழி - வாட மருதிடை
திருச்சித்திரகூடம் 2

** வாட மருதிடை போகி * மல்லரைக் கொன்று ஒக்கலித்திட்டு *
ஆடல் நன்மா உடைத்து * ஆயர் ஆநிரைக்கு அன்று இடர் தீர்ப்பான் **
கூடிய மாமழை காத்த * கூத்தன் என வருகின்றான் *
சேடுயர் பூம்பொழில் தில்லைச் * சித்திரகூடத்து உள்ளானே 1

பேய்மகள் கொங்கை நஞ்சுண்ட * பிள்ளை பரிசு இது என்றால் *
மா நிலமாமகள் * மாதர் கேள்வன் இவன் என்றும் ** வண்டுண்
பூமகள் நாயகன் என்றும் * புலங்கெழு கோவியர் பாடி *
தேமலர் தூவ வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 2

பண்டு இவன் வெண்ணெய் உண்டான் என்று * ஆய்ச்சியர் கூடி இழிப்ப *
எண்திசையோரும் வணங்க * இணை மருதூடு நடந்திட்டு **
அண்டரும் வானத்தவரும் * ஆயிர நாமங்களோடு *
திண்திறல் பாட வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 3

வளைக்கை நெடுங்கண் மடவார் * ஆய்ச்சியர் அஞ்சி அழைப்ப *
தளைத்தவிழ் தாமரைப் பொய்கைத் * தண்தடம் புக்கு அண்டர் காண **
முளைத்த எயிற்றழல் நாகத்து * உச்சியில் நின்று அது வாட *
திளைத்து அமர் செய்து வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 4

பருவக் கருமுகில் ஒத்து * முத்துடை மாகடல் ஒத்து *
அருவித் திரள் திகழ்கின்ற * ஆயிரம் பொன்மலை ஒத்து **
உருவக் கருங்குழல் ஆய்ச்சி திறத்து * இனமால் விடை செற்று *
தெருவில் திளைத்து வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 5

** எய்யச் சிதைந்தது இலங்கை மலங்க * வருமழை காப்பான் *
உய்யப் பருவரை தாங்கி * ஆநிரை காத்தான் என்றேத்தி **
வையத்தெவரும் வணங்க * அணங்கெழு மாமலை போலே *
தெய்வப் புள்ளேறி வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 6

ஆவர் இவை செய்தறிவார்? * அஞ்சன மாமலை போலே *
மேவு சினத்தடல் வேழம் * வீழ முனிந்து ** அழகாய
காவிமலர் நெடுங்கண்ணார் * கை தொழ வீதி வருவான் *
தேவர் வணங்கு தண்தில்லைச் * சித்திரகூடத்து உள்ளானே 7

பொங்கி அமரில் ஒரு கால் * பொன் பெயரோனை வெருவ *
அங்கவன் ஆகம் அளைந்திட்டு * ஆயிரம் தோள் எழுந்தாட **
பைங்கண் இரண்டு எரி கான்ற * நீண்ட எயிற்றொடு பேழ்வாய் *
சிங்க உருவின் வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 8

கருமுகில் போல்வதோர் மேனி * கையன ஆழியும் சங்கும் *
பெருவிறல் வானவர் சூழ * ஏழுலகும் தொழுது ஏத்த **
ஒரு மகள் ஆயர் மடந்தை * ஒருத்தி நிலமகள் * மற்றைத்
திருமகளோடும் வருவான் * சித்திரகூடத்து உள்ளானே 9

** தேனமர் பூம்பொழில் தில்லைச் * சித்திரகூடம் அமர்ந்த *
வானவர் தங்கள் பிரானை * மங்கையர் கோன் மருவார் **
ஊனமர் வேல் கலிகன்றி * ஒண்தமிழ் ஒன்பதோடு ஒன்றும் *
தான் இவை கற்று வல்லார் மேல் * சாரா தீவினை தாமே 10

அடிவரவு: வாட பேய் பண்டு வளை பருவம் எய்ய ஆவர் பொங்கி கருமுகில் தேனமர் ஒருகுறள்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

நான்காம் திருமொழி - ஒரு குறளாய்
திருக்காழிச் சீராமவிண்ணகரம்

** ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண் வேண்டி *
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி * ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த *
தாடாளன் தாள் அணைவீர்! ** தக்க கீர்த்தி
அருமறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும் *
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும் *
தெருவில் மலி விழா வளமும் சிறக்கும் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 1

நான்முகன் நாள் மிகைத் தருக்கை இருக்கு வாய்மை *
நலமிகு சீர் உரோமசனால் நவிற்றி * நக்கன்
ஊன் முகமார் தலை ஓட்டூண் ஒழித்த எந்தை *
ஒளிமலர்ச் சேவடி அணைவீர்! ** உழு சே ஓடச்
சூல் முகமார் வளை அளைவாய் உகுத்த முத்தைத் *
தொல் குருகு சினை என்னச் சூழ்ந்து இயங்க *
தேன் முகமார் கமல வயல் சேல் பாய் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 2

வையணைந்த நுதிக் கோட்டு வராகம் ஒன்றாய் *
மண்ணெல்லாம் இடந்து எடுத்து மதங்கள் செய்து *
நெய்யணைந்த திகிரியினால் வாணன் திண்தோள் *
நேர்ந்தவன் தாள் அணைகிற்பீர்! ** நெய்தலோடு
மையணைந்த குவளைகள் தம் கண்கள் என்றும் *
மலர்க் குமுதம் வாய் என்றும் கடைசிமார்கள் *
செய்யணைந்து களை களையாதேறும் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 3

பஞ்சிய மெல்லடிப் பின்னை திறத்து * முன்னாள்
பாய் விடைகள் ஏழ் அடர்த்து பொன்னன் பைம்பூண் *
நெஞ்சு இடந்து குருதி உக உகிர் வேல் ஆண்ட *
நின்மலன் தாள் அணைகிற்பீர்! ** நீல மாலைத்
தஞ்சுடைய இருள் தழைப்பத் தரளம் ஆங்கே *
தண்மதியின் நிலாக் காட்டப் பவளம் தன்னால் *
செஞ்சுடர் வெயில் விரிக்கும் அழகார் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 4

தெவ்வாய மற மன்னர் குருதி கொண்டு *
திருக்குலத்தில் இறந்தோர்க்குத் திருத்தி செய்து *
வெவ்வாய மா கீண்டு வேழம் அட்ட *
விண்ணவர் கோன் தாள் அணைவீர்! ** விகிர்த மாதர்
அவ்வாய வாள் நெடுங்கண் குவளை காட்ட *
அரவிந்தம் முகம் காட்ட அருகே ஆம்பல் *
செவ்வாயின் திரள் காட்டும் வயல் சூழ் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 5

பைங்கண் விறல் செம்முகத்து வாலி மாளப் *
படர் வனத்துக் கவந்தனொடும் படையார் திண்கை *
வெங்கண் விறல் விராதன் உக விற்குனித்த *
விண்ணவர் கோன் தாள் அணைவீர்! ** வெற்புப் போலும்
துங்க முக மாளிகை மேல் ஆயம் கூறும் *
துடி இடையார் முகக் கமலச் சோதி தன்னால் *
திங்கள் முகம் பனி படைக்கும் அழகார் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 6

பொருவில் வலம்புரி அரக்கன் முடிகள் பத்தும் *
புற்று மறிந்தன போலப் புவி மேல் சிந்த *
செருவில் வலம்புரி சிலைக் கை மலைத் தோள் வேந்தன் *
திருவடி சேர்ந்து உய்கிற்பீர்! ** திரை நீர்த்தெள்கி
மருவி வலம்புரி கைதைக் கழியூடாடி *
வயல் நண்ணி மழை தரு நீர் தவழ் கால் மன்னி *
தெருவில் வலம்புரி தரளம் ஈனும் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 7

பட்டரவேர் அகல் அல்குல் பவளச் செவ்வாய் *
பணை நெடுந்தோள் பிணை நெடுங்கண் பாலாம் இன்சொல் *
மட்டவிழும் குழலிக்கா வானோர் காவில் *
மரம் கொணர்ந்தான் அடி அணைவீர்! ** அணில்கள் தாவ
நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ *
நீள் பலவின் தாழ் சினையில் நெருங்கு * பீனத்
தெட்ட பழம் சிதைந்து மதுச் சொரியும் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 8

பிறை தங்கு சடையானை வலத்தே வைத்துப் *
பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து *
கறை தங்கு வேல் தடங்கண் திருவை மார்பில் *
கலந்தவன் தாள் அணைகிற்பீர்! ** கழுநீர் கூடித்
துறை தங்கு கமலத்துத் துயின்று * கைதைத்
தோடாரும் பொதி சோற்றுச் சுண்ணம் நண்ணி *
சிறை வண்டு களி பாடும் வயல் சூழ் * காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே 9

** செங்கமலத்து அயன் அனைய மறையோர் * காழிச்
சீராம விண்ணகர் என் செங்கண் மாலை *
அங்கமலத் தடவயல் சூழ் ஆலி நாடன் *
அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் **
கொங்கு மலர்க் குழலியர் வேள் மங்கை வேந்தன் *
கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன *
சங்க முகத் தமிழ் மாலை பத்தும் வல்லார் *
தடங்கடல் சூழ் உலகுக்குத் தலைவர் தாமே 10

அடிவரவு: ஒருகுறள் நான்முகன் வை பஞ்சிய தெவ்வாய பைங்கண் பொருவில் பட்டு பிறை செங்கமலத்து வந்து

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

ஐந்தாம் திருமொழி - வந்துனது
திருவாலி 1

** வந்துனது அடியேன் மனம் புகுந்தாய் * புகுந்ததற் பின் வணங்கும் * என்
சிந்தனைக்கு இனியாய்! * திருவே! என் ஆருயிரே! **
அந்தளிர் அணியார் * அசோகின் இளந்தளிர்கள் கலந்து * அவை எங்கும்
செந்தழல் புரையும் * திருவாலி அம்மானே! 1

நீலத் தட வரை * மாமணி நிகழக் கிடந்தது போல் * அரவணை
வேலைத் தலைக் கிடந்தாய்! * அடியேன் மனத்து இருந்தாய்! **
சோலைத் தலைக் கண மாமயில் நடம் ஆட * மழை முகில் போன்று எழுந்து * எங்கும்
ஆலைப் புகை கமழும் * அணியாலி அம்மானே! 2

நென்னல் போய் வரும் என்றென்று எண்ணி இராமை * என் மனத்தே புகுந்தது *
இம்மைக்கு என்றிருந்தேன் * எறி நீர் வளம் செறுவில் **
செந்நெல் கூழை வரம்பொரீஇ * அரிவார் முகத்தெழு வாளை போய் * கரும்பு
அந்நற் காடணையும் * அணியாலி அம்மானே! 3

மின்னின் மன்னு நுடங்கிடை * மடவார் தம் சிந்தை மறந்து வந்து * நின்
மன்னு சேவடிக்கே * மறவாமை வைத்தாயால் **
புன்னை மன்னு செருந்தி * வண்பொழில்வாய் அகன் பணைகள் கலந்து * எங்கும்
அன்னமன்னும் வயல் * அணியாலி அம்மானே! 4

நீடு பல் மலர்மாலை இட்டு * நின் இணையடி தொழுது ஏத்தும் * என் மனம்
வாட நீ நினையேல் * மரம் எய்த மாமுனிவா! **
பாடல் இன்னொலி சங்கின் ஓசை பரந்து * பல்பணையால் மலிந்து * எங்கும்
ஆடல் ஓசை அறா * அணியாலி அம்மானே! 5

கந்த மாமலர் எட்டும் இட்டு * நின் காமர் சேவடி கை தொழுதெழும் *
புந்தியேன் மனத்தே * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் **
சந்தி வேள்வி சடங்கு நான்மறை * ஓதி ஓதுவித்து ஆதியாய் வரும் *
அந்தணாளர் அறா * அணியாலி அம்மானே! 6

உலவு திரைக் கடல் பள்ளி கொண்டு வந்து * உன் அடியேன் மனம் புகுந்த * அப்
புலவ! புண்ணியனே! * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் **
நிலவு மலர்ப் புன்னை நாழல் நீழல் * தண்தாமரை மலரின் மிசை * மலி
அலவன் கண் படுக்கும் * அணியாலி அம்மானே! 7

சங்கு தங்கு தடங்கடல் * கடல் மல்லையுள் கிடந்தாய்! * அருள் புரிந்து
இங்கு என்னுள் புகுந்தாய்! * இனிப் போயினால் அறையோ! **
கொங்கு செண்பக மல்லிகை மலர் புல்கி * இன்னிள வண்டு போய் * இளந்
தெங்கின் தாதளையும் * திருவாலி அம்மானே! 8

ஓதி ஆயிர நாமமும் பணிந்து ஏத்தி * நின் அடைந்தேற்கு * ஒரு பொருள்
வேதியா! அரையா! * உரையாய் ஒரு மாற்றம் எந்தாய்! **
நீதி ஆகிய வேத மாமுனியாளர் * தோற்றம் உரைத்து * மற்றவர்க்கு
ஆதியாய் இருந்தாய்! * அணியாலி அம்மானே! 9

** புல்லி வண்டறையும் பொழில் புடை சூழ் * தென்னாலி இருந்த மாயனை *
கல்லின் மன்னு திண்தோள் * கலியன் ஒலி செய்த **
நல்ல இன்னிசை மாலை * நாலும் ஓர் ஐந்தும் ஒன்றும் நவின்று தாம் * உடன்
வல்லராய் உரைப்பார்க்கு * இடம் ஆகும் வான் உலகே 10

அடிவரவு: வந்து நீல நென்னல் மின்னின் நீடு கந்தம் உலவு ஸங்கு ஓதி புல்லி தூவிரிய

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

ஆறாம் திருமொழி - தூவிரிய
திருவாலி 2 - தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்

** தூ விரிய மலர் உழக்கித் * துணையோடும் பிரியாதே *
பூ விரிய மது நுகரும் * பொறி வரிய சிறு வண்டே! **
தீ விரிய மறை வளர்க்கும் * புகழாளர் திருவாலி *
ஏவரி வெஞ்சிலையானுக்கு * என் நிலைமை உரையாயே 1

பிணி அவிழு நறு நீல * மலர் கிழியப் பெடையோடும் *
அணிமலர் மேல் மது நுகரும் * அறுகால சிறு வண்டே! **
மணி கெழுநீர் மருங்கலரும் * வயலாலி மணவாளன் *
பணி அறியேன் நீ சென்று * என் பயலை நோய் உரையாயே 2

நீர் வானம் மண் எரி காலாய் * நின்ற நெடுமால் * தன்
தாராய நறுந்துளவம் * பெருந்தகையேற்கு அருளானே! **
சீராரும் வளர் பொழில் சூழ் * திருவாலி வயல் வாழும் *
கூர்வாய சிறு குருகே! * குறிப்பு அறிந்து கூறாயே 3

தான் ஆக நினையானேல் * தன் நினைந்து நைவேற்கு * ஓர்
மீனாய கொடி நெடுவேள் * வலி செய்ய மெலிவேனோ? **
தேன் வாய வரி வண்டே! * திருவாலி நகராளும் *
ஆனாயற்கு என்னுறு நோய் * அறியச் சென்று உரையாயே 4

வாளாய கண் பனிப்ப * மென்முலைகள் பொன் அரும்ப *
நாணாளும் * நின் நினைந்து நைவேற்கு ** ஓ! மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! * வரை எடுத்த
தோளாளா! * என்தனக்கு ஓர் * துணையாளன் ஆகாயே! 5

தாராய தண்துளவ * வண்டுழுத வரை மார்பன் *
போரானைக் கொம்பு ஒசித்த * புட்பாகன் என் அம்மான் **
தேராரும் நெடு வீதித் * திருவாலி நகராளும் *
காராயன் என்னுடைய * கனவளையும் கவர்வானோ! 6

கொண்டரவத் திரை உலவு * குரை கடல் மேல் குலவரை போல் *
பண்டரவு இன்னணைக் கிடந்து * பார் அளந்த பண்பாளா! **
வண்டமரும் வளர் பொழில் சூழ் * வயலாலி மைந்தா! * என்
கண் துயில் நீ கொண்டாய்க்கு * என் கனவளையும் கடவேனோ! 7

** குயில் ஆலும் வளர் பொழில் சூழ் * தண்குடந்தைக் குடமாடீ! *
துயிலாத கண்ணிணையேன் * நின் நினைந்து துயர்வேனோ! **
முயல் ஆலும் இளமதிக்கே * வளை இழந்தேற்கு * இது நடுவே
வயலாலி மணவாளா! * கொள்வாயோ மணி நிறமே! 8

நிலையாளா! நின் வணங்க * வேண்டாயே ஆயினும் * என்
முலையாள ஒரு நாள் * உன் அகலத்தால் ஆளாயே? **
சிலையாளா! மரம் எய்த திறலாளா! * திருமெய்ய
மலை ஆளா! * நீ ஆள வளை ஆள மாட்டோமே 9

** மையிலங்கு கருங்குவளை * மருங்கலரும் வயலாலி *
நெய்யிலங்கு சுடர் ஆழிப் * படையானை நெடுமாலை **
கையிலங்கு வேல் கலியன் * கண்டுரைத்த தமிழ் மாலை *
ஐயிரண்டும் இவை வல்லார்க்கு * அருவினைகள் அடையாவே 10

அடிவரவு: தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில் நிலையாளா மையிலங்கு கள்வன்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

ஏழாம் திருமொழி - கள்வன் கொல்
திருவாலி 3 - உடன்போக்கிற் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறிய பாசுரம்

** கள்வன் கொல்? யான் அறியேன் * கரியான் ஒரு காளை வந்து *
வள்ளி மருங்குல் * என்தன் மடமானினைப் போத என்று **
வெள்ளி வளைக் கைப் பற்றப் * பெற்ற தாயரை விட்டகன்று *
அள்ளல் அம்பூங்கழனி * அணி ஆலி புகுவர் கொலோ? 1

பண்டிவன் ஆயன் நங்காய்! * படிறன் புகுந்து * என் மகள் தன்
தொண்டை அஞ்செங்கனி வாய் * நுகர்ந்தானை உகந்து ** அவன் பின்
கெண்டை ஒண்கண் மிளிரக் * கிளி போல் மிழற்றி நடந்து *
வண்டமர் கானல் மல்கும் * வயல் ஆலி புகுவர் கொலோ? 2

அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! * அரக்கர் குலப் பாவை தன்னை *
வெஞ்சின மூக்கரிந்த * விறலோன் திறம் கேட்கில் ** மெய்யே
பஞ்சிய மெல்லடி * எம் பணைத் தோளி பரக்கழிந்து *
வஞ்சி அந்தண்பணை சூழ் * வயல் ஆலி புகுவர் கொலோ? 3

ஏதவன் தொல் பிறப்பு? * இளையவன் வளை ஊதி * மன்னர்
தூதுவன் ஆயவன் ஊர் * சொலுவீர்கள்! சொலீர் அறியேன் **
மாதவன் தன் துணையா நடந்தாள் * தடம் சூழ் புறவில் *
போது வண்டாடு செம்மல் * புனல் ஆலி புகுவர் கொலோ? 4

தாய் எனை என்று இரங்காள் * தடந்தோளி தனக்கு அமைந்த *
மாயனை மாதவனை * மதித்து என்னை அகன்ற இவள் **
வேய் அன தோள் விசிறிப் * பெடை அன்னம் என நடந்து *
போயின பூங்கொடியாள் * புனல் ஆலி புகுவர் கொலோ? 5

** என் துணை என்று எடுத்தேற்கு * இறையேனும் இரங்கிற்றிலள் *
தன் துணை ஆய என்தன் * தனிமைக்கும் இரங்கிற்றிலள் **
வன் துணை வானவர்க்காய் * வரம் செற்று அரங்கத்து உறையும் *
இன் துணைவன்னொடும் போய் * எழில் ஆலி புகுவர் கொலோ? 6

அன்னையும் அத்தனும் என்று * அடியோமுக்கு இரங்கிற்றிலள் *
பின்னை தன் காதலன் தன் * பெருந்தோள் நலம் பேணினளால் **
மின்னையும் வஞ்சியையும் * வென்றிலங்கும் இடையாள் நடந்து *
புன்னையும் அன்னமும் சூழ் * புனல் ஆலி புகுவர் கொலோ? 7

முற்றிலும் பைங்கிளியும் * பந்தும் ஊசலும் பேசுகின்ற *
சிற்றில் மென்பூவையும் * விட்டகன்ற செழுங்கோதை தன்னை **
பெற்றிலேன் முற்றிழையைப் * பிறப்பிலி பின்னே நடந்து *
மற்றெல்லாம் கை தொழப் போய் * வயல் ஆலி புகுவர் கொலோ? 8

காவி அங்கண்ணி எண்ணில் * கடி மாமலர்ப் பாவை ஒப்பாள் *
பாவியேன் பெற்றமையால் * பணைத் தோளி பரக்கழிந்து **
தூவி சேர் அன்னம் அன்ன நடையாள் * நெடுமாலொடும் போய் *
வாவி அந்தண்பணை சூழ் * வயல் ஆலி புகுவர் கொலோ? 9

** தாய் மனம் நின்றிரங்கத் * தனியே நெடுமால் துணையா *
போயின பூங்கொடியாள் * புனல் ஆலி புகுவர் என்று **
காய்சின வேல் கலியன் * ஒலி செய் தமிழ் மாலை பத்தும் *
மேவிய நெஞ்சுடையார் * தஞ்சம் ஆவது விண்ணுலகே 10

அடிவரவு: கள்வன் பண்டு அஞ்சுவன் ஏதவன் தாய் என்துணை அன்னையும் முற்றிலும் காவி தாய்மனம் நந்தா

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

எட்டாம் திருமொழி - நந்தா விளக்கே
திருநாங்கூர்த் திருப்பதி 11
1. திருமணிமாடக்கோயில்

** நந்தா விளக்கே! அளத்தற்கு அரியாய்! *
நர நாரணனே! கருமாமுகில் போல்
எந்தாய்! * எமக்கே அருளாய் என நின்று *
இமையோர் பரவும் இடம் ** எத்திசையும்
கந்தாரம் அந்தேன் இசை பாட மாடே *
களி வண்டு மிழற்ற நிழல் துதைந்து *
மந்தார நின்று மணமல்கு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1

முதலைத் தனி மா முரண் தீர அன்று *
முது நீர்த் தடத்துச் செங்கண் வேழம் உய்ய *
விதலைத்தலைச் சென்று அதற்கே உதவி *
வினை தீர்த்த அம்மான் இடம் ** விண் அணவும்
பதலைக் கபோதத்தொளி மாட நெற்றிப் *
பவளக் கொழுங்கால பைங்கால் புறவம் *
மதலைத்தலை மென்பெடை கூடு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 2

கொலைப் புண் தலைக் குன்றம் ஒன்று உய்ய * அன்று
கொடு மாமுதலைக்கு இடர் செய்து * கொங்கார்
இலைப் புண்டரீகத்தவள் இன்பம் அன்போடு *
அணைந்திட்ட அம்மான் இடம் ** ஆளரியால்
அலைப்புண்ட யானை மருப்பும் அகிலும் *
அணிமுத்தும் வெண்சாமரையோடு * பொன்னி
மலைப் பண்டம் அண்டத் திரை உந்து நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 3

சிறையார் உவணப் புள் ஒன்று ஏறி * அன்று
திசை நான்கும் நான்கும் இரிய * செருவில்
கறையார் நெடுவேல் அரக்கர் மடியக் *
கடல் சூழ் இலங்கை கடந்தான் இடம் தான் **
முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால்வேதர் *
ஐவேள்வி ஆறங்கர் ஏழின் இசையோர் *
மறையோர் வணங்கப் புகழ் எய்து நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 4

இழை ஆடு கொங்கைத்தலை நஞ்சம் உண்டிட்டு *
இளங்கன்று கொண்டு விளங்காய் எறிந்து *
தழை வாட வன்தாள் குருந்தம் ஒசித்துத் *
தடந்தாமரைப் பொய்கை புக்கான் இடம் தான் **
குழை ஆட வல்லிக் குலம் ஆட மாடே *
குயில் கூவ நீடு கொடி மாடம் மல்கு *
மழை ஆடு சோலை மயில் ஆலு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 5

பண்ணேர் மொழி ஆய்ச்சியர் அஞ்ச * வஞ்சப்
பகுவாய்க் கழுதுக்கு இரங்காது * அவள் தன்
உண்ணா முலை மற்றவள் ஆவியோடும் *
உடனே சுவைத்தான் இடம் ** ஓங்கு பைந்தாள்
கண்ணார் கரும்பின் கழை தின்று வைகிக் *
கழுநீரில் மூழ்கிச் செழுநீர்த் தடத்து *
மண் ஏந்து இள மேதிகள் வைகு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 6

தளைக் கட்டவிழ் தாமரை வைகு பொய்கைத் *
தடம் புக்கடங்கா விடங்கால் அரவம் *
இளைக்கத் திளைத்திட்டு அதன் உச்சி தன் மேல் *
அடி வைத்த அம்மான் இடம் ** மாமதியம்
திளைக்கும் கொடி மாளிகை சூழ் * தெருவில்
செழுமுத்து வெண்ணெற்கெனச் சென்று * மூன்றில்
வளைக்கை நுளைப் பாவையர் மாறு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 7

துளையார் கருமென்குழல் ஆய்ச்சியர் தம் *
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் * முற்றா
இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம் *
விளைவித்த அம்மான் இடம் ** வேல் நெடுங்கண்
முளை வாள் எயிற்று மடவார் பயிற்று *
மொழி கேட்டிருந்து முதிராத இன்சொல் *
வளை வாய கிள்ளை மறை பாடு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 8

விடை ஓட வென்று ஆய்ச்சி மென்தோள் நயந்த *
விகிர்தா! விளங்கு சுடர் ஆழி என்னும் *
படையோடு சங்கு ஒன்றுடையாய்! என நின்று *
இமையோர் பரவும் இடம் ** பைந்தடத்துப்
பெடையோடு செங்கால அன்னம் துகைப்பத் *
தொகைப் புண்டரீகத்திடைச் செங்கழுநீர் *
மடை ஓட நின்று மது விம்மு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 9

** வண்டார் பொழில் சூழ்ந்து அழகாய நாங்கூர் *
மணிமாடக் கோயில் நெடுமாலுக்கு * என்றும்
தொண்டாய தொல் சீர் வயல் மங்கையர் கோன் *
கலியன் ஒலி செய் தமிழ் மாலை வல்லார் **
கண்டார் வணங்கக் களி யானை மீதே *
கடல் சூழ் உலகுக்கு ஒரு காவலராய் *
விண் தோய் நெடு வெண்குடை நீழலின் கீழ் *
விரி நீர் உலகாண்டு விரும்புவரே 10

அடிவரவு: நந்தா முதலை கொலை சிறை இழை பண் தளை துளை விடை வண்டார் சலம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - சலங்கொண்ட
திருநாங்கூர்த் திருப்பதி 11
2. திருவைகுந்த விண்ணகரம்

** சலங்கொண்ட இரணியனது அகல் மார்வம் கீண்டு *
தடங்கடலைக் கடைந்து அமுதம் கொண்டு உகந்த காளை *
நலங்கொண்ட கருமுகில் போல் திருமேனி அம்மான் *
நாள்தோறும் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
சலங்கொண்டு மலர் சொரியும் மல்லிகை ஒண்செருந்தி *
சண்பகங்கள் மண நாறும் வண்பொழிலின் ஊடே *
வலங்கொண்டு கயல் ஓடி விளையாடு நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 1

திண்ணியதோர் அரி உருவாய்த் திசை அனைத்தும் நடுங்கத் *
தேவரொடு தானவர்கள் திசைப்ப * இரணியனை
நண்ணி அவன் மார்வகலத்து உகிர் மடுத்த நாதன் *
நாள்தோறும் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
எண்ணில் மிகு பெருஞ்செல்வத்து எழில் விளங்கு மறையும் *
ஏழ் இசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர் *
மண்ணில் மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 2

அண்டமும் இவ்வலை கடலும் அவனிகளும் எல்லாம் *
அமுது செய்த திருவயிற்றன் அரன் கொண்டு திரியும் *
முண்டமது நிறைத்து அவன்கண் சாபமது நீக்கும் *
முதல்வன் அவன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
எண்திசையும் பெருஞ்செந்நெல் இளந்தெங்கு கதலி *
இலைக்கொடி ஒண்குலைக் கமுகொடு இசலி வளம் சொரிய *
வண்டு பல இசை பாட மயில் ஆலு நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 3

கலை இலங்கும் அகலல்குல் அரக்கர் குலக் கொடியைக் *
காதொடு மூக்குடன் அரியக் கதறி அவள் ஓடி *
தலையில் அங்கை வைத்து மலை இலங்கை புகச் செய்த *
தடந்தோளன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
சிலை இலங்கு மணிமாடத்து உச்சி மிசைச் சூலம் *
செழுங்கொண்டல் அகடிரியச் சொரிந்த செழுமுத்தம் *
மலை இலங்கு மாளிகை மேல் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 4

மின் அனைய நுண்மருங்குல் மெல்லியற்கா * இலங்கை
வேந்தன் முடி ஒருபதும் தோள் இருபதும் போய் உதிர *
தன் நிகரில் சிலை வளைத்து அன்று இலங்கை பொடி செய்த *
தடந்தோளன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
செந்நெலொடு செங்கமலம் சேல் கயல்கள் வாளை *
செங்கழுநீரொடு மிடைந்து கழனி திகழ்ந்து எங்கும் *
மன்னு புகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 5

பெண்மை மிகு வடிவு கொடு வந்தவளை * பெரிய
பேயினது உருவு கொடு மாள உயிர் உண்டு *
திண்மை மிகு மருதொடு நற்சகடம் இறுத்து அருளும் *
தேவன் அவன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
உண்மை மிகு மறையொடு நற்கலைகள் நிறை பொறைகள் *
உதவு கொடை என்றிவற்றின் ஒழிவில்லா * பெரிய
வண்மை மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 6

விளங்கனியை இளங்கன்று கொண்டு உதிர எறிந்து *
வேல் நெடுங்கண் ஆய்ச்சியர்கள் வைத்த தயிர் வெண்ணெய் *
உளம் குளிர அமுது செய்து இவ்வுலகுண்ட காளை *
உகந்து இனிது நாள்தோறும் மருவி உறை கோயில் **
இளம்படி நற்கமுகு குலைத் தெங்கு கொடிச் செந்நெல் *
ஈன்கரும்பு கண்வளரக் கால் தடவும் புனலால் *
வளங்கொண்ட பெருஞ்செல்வம் வளரு மணி நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 7

ஆறாத சினத்தின் மிகு நரகன் உரம் அழித்த *
அடல் ஆழித் தடக்கையன் அலர்மகட்கும் அரற்கும் *
கூறாகக் கொடுத்தருளும் திருவுடம்பன் * இமையோர்
குல முதல்வன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
மாறாத மலர்க் கமலம் செங்கழுநீர் ததும்பி *
மது வெள்ளம் ஒழுக வயல் உழவர் மடை அடைப்ப *
மாறாத பெருஞ்செல்வம் வளரு மணி நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 8

வங்க மலி தடங்கடலுள் வானவர்களோடு *
மாமுனிவர் பலர் கூடி மாமலர்கள் தூவி *
எங்கள் தனி நாயகனே! எமக்கு அருளாய் என்னும் *
ஈசன் அவன் மகிழ்ந்து இனிது மருவி உறை கோயில் **
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக் குதிப்பச் *
சேல் உகளும் செழும்பணை சூழ் வீதி தொறும் மிடைந்து *
மங்குல் மதி அகடுரிஞ்சு மணிமாட நாங்கூர் *
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 9

** சங்கு மலி தண்டு முதல் சக்கரம் முன் ஏந்தும் *
தாமரைக்கண் நெடிய பிரான் தான் அமரும் கோயில் *
வங்க மலி கடல் உலகில் மலிவெய்து நாங்கூர் *
வைகுந்த விண்ணகர் மேல் வண்டறையும் பொழில் சூழ் **
மங்கையர் தம் தலைவன் மருவலர் தம் உடல் துணிய *
வாள் வீசும் பரகாலன் கலிகன்றி சொன்ன *
சங்கமலி தமிழ் மாலை பத்திவை வல்லார்கள் *
தரணியொடு விசும்பாளும் தன்மை பெறுவாரே 10

அடிவரவு: சலம் திண்ணியது அண்டமும் கலை மின் பெண்மை விளங்கனியை ஆறாத வன்ங்கம் சங்கு திருமடந்தை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
மூன்றாம் பத்து

பத்தாம் திருமொழி - திருமடந்தை
திருநாங்கூர்த் திருப்பதி 11
3. திருஅரிமேயவிண்ணகரம்

** திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத் *
தீவினைகள் போய் அகல அடியவர்கட்கு என்றும்
அருள் நடந்து * இவ்வேழ் உலகத்தவர் பணிய வானோர்
அமர்ந்தேத்த இருந்த இடம் * பெரும் புகழ் வேதியர் வாழ்
தரும் இடங்கள் மலர்கள் மிகு கைதைகள் செங்கழுநீர் *
தாமரைகள் தடங்கள் தொறும் இடங்கள் தொறும் திகழ *
அருவிடங்கள் பொழில் தழுவி எழில் திகழும் நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 1

வென்றி மிகு நரகன் உரமது அழிய விசிறும் *
விறல் ஆழித் தடக்கையன் விண்ணவர்கட்கு அன்று *
குன்று கொடு குரைகடலைக் கடைந்து அமுதம் அளிக்கும் *
குருமணி என் ஆரமுதம் குலவி உறை கோயில் **
என்றும் மிகு பெருஞ்செல்வத்து எழில் விளங்கு மறையோர் *
ஏழ் இசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர் *
அன்று உலகம் படைத்தவனை அனையவர்கள் நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 2

உம்பரும் இவ்வேழ் உலகும் ஏழ் கடலும் எல்லாம் *
உண்ட பிரான் அண்டர்கள் முன் கண்டு மகிழ்வெய்த *
கும்ப மிகு மத யானை மருப்பொசித்துக் * கஞ்சன்
குஞ்சி பிடித்தடித்த பிரான் கோயில் ** மருங்கெங்கும்
பைம்பொனொடு வெண்முத்தம் பல புன்னை காட்டப் *
பலங்கனிகள் தேன் காட்ட படவரவேர் அல்குல் *
அம்பனைய கண் மடவார் மகிழ்வெய்து நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 3

ஓடாத ஆளரியின் உருவமது கொண்டு * அன்று
உலப்பில் மிகு பெரு வரத்த இரணியனைப் பற்றி *
வாடாத வள்ளுகிரால் பிளந்து அவன் தன் மகனுக்கு *
அருள் செய்தான் வாழும் இடம் மல்லிகை செங்கழுநீர் **
சேடேறு மலர் செருந்தி செழுங்கமுகம் பாளை *
செண்பகங்கள் மணம் நாறும் வண்பொழிலின் ஊடே *
ஆடேறு வயல் ஆலைப் புகை கமழும் நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 4

கண்டவர் தம் மனம் மகிழ மாவலி தன் வேள்விக் *
அளவின் மிகு சிறு குறளாய் மூவடி என்று இரந்திட்டு *
அண்டமும் இவ்வலை கடலும் அவனிகளும் எல்லாம் *
அளந்த பிரான் அமரும் இடம் வளங்கொள் பொழில் அயலே **
அண்டமுறு முழவொலியும் வண்டினங்கள் ஒலியும் *
அருமறையின் ஒலியும் மடவார் சிலம்பின் ஒலியும் *
அண்டமுறும் அலைகடலின் ஒலி திகழும் நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 5

வாள் நெடுங்கண் மலர்க் கூந்தல் மைதிலிக்கா * இலங்கை
மன்னன் முடி ஒருபதும் தோள் இருபதும் போய் உதிர *
தாள் நெடுந்திண் சிலை வளைத்த தயரதன் சேய் * என்தன்
தனிச் சரண் வானவர்க்கு அரசு கருதும் இடம் தடமார் **
சேண் இடங்கொள் மலர்க் கமலம் சேல் கயல்கள் வாளை *
செந்நெலொடு மடுத்தரிய உதிர்ந்த செழுமுத்தம் *
வாள் நெடுங்கண் கடைசியர்கள் வாரும் அணி நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 6

தீ மனத்தான் கஞ்சனது வஞ்சனையில் திரியும் *
தேனுகனும் பூதனை தன் ஆருயிரும் செகுத்தான் *
காமனைத் தான் பயந்த கருமேனி உடை அம்மான் *
கருதும் இடம் பொருது புனல் துறை துறை முத்துந்தி **
நா மனத்தால் மந்திரங்கள் நால்வேதம் * ஐந்து
வேள்வியோடு ஆறங்கம் நவின்று கலை பயின்று * அங்
காமனத்து மறையவர்கள் பயிலும் அணி நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 7

கன்றதனால் விளவெறிந்து கனி உதிர்த்த காளை *
காமரு சீர் முகில் வண்ணன் காலிகள் முன் காப்பான் *
குன்றதனால் மழை தடுத்துக் குடமாடு கூத்தன் *
குலவும் இடம் கொடி மதிள்கள் மாளிகை கோபுரங்கள் **
துன்று மணி மண்டபங்கள் சாலைகள் * தூமறையோர்
தொக்கீண்டித் தொழுதியொடு மிகப்பயிலும் சோலை *
அன்றலர்வாய் மது உண்டு அங்கு அளி முரலும் நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 8

வஞ்சனையால் வந்தவள் தன் உயிர் உண்டு வாய்த்த
தயிர் உண்டு * வெண்ணெய் அமுதுண்டு * வலி மிக்க
கஞ்சன் உயிரது உண்டு இவ்வுலகுண்ட காளை *
கருதும் இடம் காவிரி சந்து அகில் கனகம் உந்தி **
மஞ்சுலவு பொழிலூடும் வயலூடும் வந்து
வளம் கொடுப்ப * மாமறையோர் மாமலர்கள் தூவி *
அஞ்சலித்து அங்கு அரி சரண் என்று இறைஞ்சும் அணி நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே! 9

** சென்று சின விடை ஏழும் பட அடர்த்துப் * பின்னை
செவ்வித் தோள் புணர்ந்து உகந்த திருமால் தன் கோயில் *
அன்று அயனும் அரன் சேயும் அனையவர்கள் நாங்கூர் *
அரிமேய விண்ணகரம் அமர்ந்த செழுங்குன்றை **
கன்றி நெடுவேல் வலவன் மங்கையர் தம் கோமான் *
கலிகன்றி ஒலிமாலை ஐந்தினொடு மூன்றும் *
ஒன்றினொடும் ஒன்றும் இவை கற்று வல்லார் * உலகத்து
உத்தமர்கட்கு உத்தமராய் உம்பரும் ஆவர்களே 10

அடிவரவு: திருமடந்தை வென்றி உம்பர் ஓடாத கண்டவர் வாள் தீமனத்தான் கன்று வஞ்சனையால் சென்று போது

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

நான்காம் பத்து

முதல் திருமொழி - போதலர்ந்த
திருநாங்கூர்த் திருப்பதி 11
4. திருத்தேவனார்தொகை

** போதலர்ந்த பொழிற் சோலைப் * புறம் எங்கும் பொரு திரைகள் *
தாதுதிர வந்தலைக்கும் * தடமண்ணித் தென்கரை மேல் *
மாதவன் தான் உறையும் இடம் * வயல் நாங்கை * வரி வண்டு
தேதென என்று இசை பாடும் * திருத்தேவனார் தொகையே 1

யாவருமாய் யாவையுமாய் * எழில் வேதப் பொருள்களுமாய் *
மூவருமாய் முதலாய * மூர்த்தி அமர்ந்து உறையும் இடம் **
மா வரும் திண்படை மன்னை * வென்றி கொள்வார் மன்னு நாங்கை *
தேவரும் சென்று இறைஞ்சு பொழில் * திருத்தேவனார் தொகையே 2

வானாடும் மண்ணாடும் * மற்றுள்ள பல்லுயிரும் *
தானாய எம்பெருமான் * தலைவன் அமர்ந்து உறையும் இடம் **
ஆனாத பெருஞ்செல்வத்து * அருமறையோர் நாங்கை தன்னுள் *
தேனாரும் மலர்ப் பொழில் சூழ் * திருத்தேவனார் தொகையே 3

இந்திரனும் இமையவரும் * முனிவர்களும் எழில் அமைந்த *
சந்த மலர்ச் சதுமுகனும் * கதிரவனும் சந்திரனும் **
எந்தை எமக்கு அருள் என நின்று * அருளும் இடம் எழில் நாங்கை *
சுந்தர நற்பொழில் புடை சூழ் * திருத்தேவனார் தொகையே 4

அன்டமும் இவ்வலை கடலும் * அவனிகளும் குலவரையும் *
உண்ட பிரான் உறையும் இடம் * ஒளிமணி சந்து அகில் கனகம் **
தெண்திரைகள் வரத் திரட்டும் * திகழ் மண்ணித் தென்கரை மேல் *
திண்திறலார் பயில் நாங்கைத் * திருத்தேவனார் தொகையே 5

ஞாலம் எல்லாம் அமுது செய்து * நான்மறையும் தொடராத *
பாலகனாய் ஆலிலையில் * பள்ளி கொள்ளும் பரமன் இடம் **
சாலி வளம் பெருகி வரும் * தடமண்ணித் தென்கரை மேல் *
சேல் உகளும் வயல் நாங்கைத் * திருத்தேவனார் தொகையே 6

ஓடாத ஆளரியின் * உருவாகி இரணியனை *
வாடாத வள்ளுகிரால் * பிளந்து அளைந்த மாலதிடம் **
ஏடேறு பெருஞ்செல்வத்து * எழில் மறையோர் நாங்கை தன்னுள் *
சேடேறு பொழில் தழுவு * திருத்தேவனார் தொகையே 7

வாராரும் இளங்கொங்கை * மைதிலியை மணம் புணர்வான் *
காரார் திண்சிலை இறுத்த * தனிக் காளை கருதும் இடம் **
ஏராரும் பெருஞ்செல்வத்து * எழில் மறையோர் நாங்கை தன்னுள் *
சீராரும் மலர்ப் பொழில் சூழ் * திருத்தேவனார் தொகையே 8

கும்ப மிகு மத யானை * பாகனொடும் குலைந்து வீழ *
கொம்பதனைப் பறித்து எறிந்த * கூத்தன் அமர்ந்து உறையும் இடம் **
வம்பவிழும் செண்பகத்தின் * மணம் கமழும் நாங்கை தன்னுள் *
செம்பொன் மதிள் பொழில் புடை சூழ் * திருத்தேவனார் தொகையே 9

** காரார்ந்த திருமேனிக் * கண்ணன் அமர்ந்து உறையும் இடம் *
சீரார்ந்த பொழில் நாங்கைத் * திருத்தேவனார் தொகை மேல் **
கூரார்ந்த வேற்கலியன் * கூறு தமிழ் பத்தும் வல்லார் *
ஏரார்ந்த வைகுந்தத்து * இமையவரோடு இருப்பாரே 10

அடிவரவு: போது யாவரும் வானாடும் இந்திரனும் அண்டமும் ஞாலம் ஓடாத வாராரும் கும்பம் காரார்ந்த கம்பமா

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

இரண்டாம் திருமொழி - கம்பமா
திருநாங்கூர்த் திருப்பதி 11
5. திருவண்புருடோத்தமம்

** கம்ப மாகடல் அடைத்து இலங்கைக்கு மன் * கதிர் முடி அவை பத்தும்
அம்பினால் அறுத்து * அரசு அவன் தம்பிக்கு * அளித்தவன் உறை கோயில் **
செம்பலா நிரை செண்பகம் மாதவி * சூதகம் வாழைகள் சூழ் *
வம்புலாம் கமுகு ஓங்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 1

பல்லவம் திகழ் பூங்கடம்பு ஏறி * அக்காளியன் பணவரங்கில் *
ஒல்லை வந்துறப் பாய்ந்து அருநடம் செய்த * உம்பர் கோன் உறை கோயில் **
நல்ல வெந்தழல் மூன்று நால்வேதம் * ஐவேள்வியோடு ஆறங்கம் *
வல்ல அந்தணர் மல்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 2

அண்டர் ஆனவர் வானவர் கோனுக்கு என்று * அமைத்த சோறது எல்லாம்
உண்டு * கோநிரை மேய்த்து அவை காத்தவன் * உகந்து இனிதுறை கோயில் **
கொண்டலார் முழவில் குளிர் வார் பொழில் * குல மயில் நடம் ஆட *
வண்டு தான் இசை பாடிடு நாங்கூர் * வண்புருடோத்தமமே 3

பருங்கை யானையின் கொம்பினைப் பறித்து * அதன் பாகனைச் சாடிப் புக்கு *
ஒறுங்க மல்லரைக் கொன்று * பின் கஞ்சனை உதைத்தவன் உறை கோயில் **
கரும்பினூடு உயர் சாலிகள் விளை தரு * கழனியில் மலி வாவி *
மருங்கெலாம் பொழில் ஓங்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 4

சாடு போய் விழத் தாள் நிமிர்த்து * ஈசன் தன் படையொடும் கிளையோடும்
ஓட * வாணனை ஆயிரம் தோள்களும் * துணித்தவன் உறை கோயில் **
ஆடு வான் கொடி அகல் விசும்பு அணவிப் போய்ப் * பகலவன் ஒளி மறைக்கும் *
மாட மாளிகை சூழ் தரு நாங்கூர் * வண்புருடோத்தமமே 5

அங்கையால் அடி மூன்று நீர் ஏற்று * அயன் அலர் கொடு தொழுது ஏத்த *
கங்கை போதரக் கால் நிமிர்த்து அருளிய * கண்ணன் வந்துறை கோயில் **
கொங்கை கோங்கு அவை காட்ட வாய் குமுதங்கள் காட்ட * மா பதுமங்கள் *
மங்கைமார் முகம் காட்டிடு நாங்கூர் * வண்புருடோத்தமமே 6

உளைய ஒண்திறல் பொன்பெயரோன் தனது * உரம் பிளந்து உதிரத்தை
அளையும் * வெஞ்சினத்து அரி பரி கீறிய * அப்பன் வந்துறை கோயில் **
இளைய மங்கையர் இணையடிச் சிலம்பினோடு * எழில் கொள் பந்து அடிப்போர் * கை
வளையில் நின்று ஒலி மல்கிய நாங்கூர் * வண்புருடோத்தமமே 7

வாளையார் தடங்கண் உமை பங்கன் * வன் சாபம் மற்றது நீங்க *
மூளையார் சிரத்து ஐயம் முன்னளித்த * எம் முகில் வண்ணன் உறை கோயில் **
பாளை வான்கமுகூடு உயர் தெங்கின் * வன்பழம் விழ வெருவிப் போய் *
வாளை பாய் தடம் சூழ் தரு நாங்கூர் * வண்புருடோத்தமமே 8

இந்து வார் சடை ஈசனைப் பயந்த * நான்முகனை தன் எழிலாரும் *
உந்தி மாமலர் மீமிசைப் படைத்தவன் * உகந்து இனிதுறை கோயில் **
குந்தி வாழையின் கொழுங்கனி நுகர்ந்து * தன் குருளையைத் தழுவிப் போய் *
மந்தி மாம்பணை மேல் வைகு நாங்கூர் * வண்புருடோத்தமமே 9

** மண்ணுள் ஆர் புகழ் வேதியர் நாங்கூர் * வண்புருடோத்தமத்துள் *
அண்ணல் சேவடிக் கீழ் அடைந்து உய்ந்தவன் * ஆலிமன் அருள்மாரி **
பண்ணுள் ஆர் தரப் பாடிய பாடல் * இப்பத்தும் வல்லார் * உலகில்
எண்ணிலாத பேரின்பம் உற்று * இமையவரோடும் கூடுவரே 10

அடிவரவு: கம்பம் பல்லவம் அண்டர் பருங்கை சாடு அங்கையால் உளைய வாளை இந்து மண்ணுளார் பேரணிந்து

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

மூன்றாம் திருமொழி - பேரணிந்து
திருநாங்கூர்த் திருப்பதி 11
6. திருச்செம்பொன்செய்கோயில்

** பேர் அணிந்து உலகத்தவர் தொழுது ஏத்தும் *
பேரருளாளன் எம்பிரானை *
வாரணி முலையாள் மலர்மகளோடு *
மண்மகளும் உடன் நிற்ப **
சீரணி மாட நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
காரணி மேகம் நின்றது ஒப்பானைக் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 1

பிறப்பொடு மூப்பு ஒன்று இல்லவன் தன்னைப் *
பேதியா இன்ப வெள்ளத்தை *
இறப்பு எதிர்காலக் கழிவும் ஆனானை *
ஏழ் இசையின் சுவை தன்னை **
சிறப்புடை மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
மறைப் பெரும் பொருளை வானவர் கோனைக் *
கண்டு நான் வாழ்ந்து ஒழிந்தேனே 2

திடவிசும்பு எரி நீர் திங்களும் சுடரும் *
செழுநிலத்து உயிர்களும் மற்றும் *
படர்பொருள்களுமாய் நின்றவன் தன்னை *
பங்கயத்து அயனவன் அனைய **
திடமொழி மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
கடல் நிற வண்ணன் தன்னை நான் அடியேன் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 3

வசை அறு குறளாய் மாவலி வேள்வி *
மண் அளவிட்டவன் தன்னை *
அசைவறும் அமரர் அடியிணை வணங்க *
அலைகடல் துயின்ற அம்மானை **
திசைமுகன் அனையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
உயர்மணி மகுடம் சூடி நின்றானைக் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 4

தீ மனத்து அரக்கர் திறல் அழித்தவனே! என்று *
சென்று அடைந்தவர் தமக்கு *
தாய் மனத்து இரங்கி அருளினைக் கொடுக்கும் *
தயரதன் மதலையைச் சயமே **
தேமலர்ப் பொழில் சூழ் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
காமனைப் பயந்தான் தன்னை நான் அடியேன் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 5

மல்லை மா முந்நீர் அதர்பட * மலையால்
அணை செய்து மகிழ்ந்தவன் தன்னை *
கல்லின் மீது இயன்ற கடிமதிள் இலங்கை
கலங்க * ஓர் வாளி தொட்டானை **
செல்வ நான்மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
அல்லி மாமலராள் தன்னொடும் அடியேன் *
கண்டு கொண்டு அல்லல் தீர்ந்தேனே 6

வெஞ்சினக் களிறும் வில்லொடு மல்லும் *
வெகுண்டு இறுத்து அடர்த்தவன் தன்னை *
கஞ்சனைக் காய்ந்த காளை அம்மானைக் *
கருமுகில் திருநிறத்தவனை **
செஞ்சொல் நான்மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
அஞ்சனக் குன்றம் நின்றது ஒப்பானைக் *
கண்டு கொண்டு அல்லல் தீர்ந்தேனே 7

** அன்றிய வாணன் ஆயிரம் தோளும் துணிய *
அன்று ஆழி தொட்டானை *
மின் திகழ் குடுமி வேங்கட மலை மேல் *
மேவிய வேத நல்விளக்கை **
தென்திசைத் திலதம் அனையவர் நாங்கைச் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை *
வணங்கி நான் வாழ்ந்து ஒழிந்தேனே 8

களங்கனி வண்ணா! கண்ணனே! *
என்தன் கார்முகிலே! என நினைந்திட்டு *
உளம் கனிந்திருக்கும் அடியவர் தங்கள் *
உள்ளத்துள் ஊறிய தேனை **
தெளிந்த நான்மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
வளங்கொள் பேரின்பம் மன்னி நின்றானை *
வணங்கி நான் வாழ்ந்து ஒழிந்தேனே 9

** தேன் அமர் சோலை நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
வானவர் கோனைக் கண்டமை சொல்லும் *
மங்கையார் வாட்கலிகன்றி **
ஊனமில் பாடல் ஒன்பதோடு ஒன்றும் *
ஒழிவின்றிக் கற்று வல்லார்கள் *
மான வெண்குடைக் கீழ் வையகம் ஆண்டு *
வானவர் ஆகுவர் மகிழ்ந்தே 10

அடிவரவு: பேரணிந்து பிறப்பு திட வசை தீமனத்து மல்லை வெஞ்சினம் அன்றிய களங்கனி தேனமர் மாற்றரசர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

நான்காம் திருமொழி - மாற்றரசர்
திருநாங்கூர்த் திருப்பதி 11
7. திருத்தெற்றியம்பலம்

** மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும் *
மற்றவர் தம் காதலிமார் குழையும் * தந்தை
கால் தளையும் உடன் கழல வந்து தோன்றிக் *
கதநாகம் காத்தளித்த கண்ணர் கண்டீர் **
நூற்றிதழ் கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்து *
இளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின் *
சேற்றளையில் வெண்முத்தம் சிந்தும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 1

பொற்றொடித் தோள் மடமகள் தன் வடிவு கொண்ட *
பொல்லாத வன்பேய்ச்சி கொங்கை வாங்கி *
பெற்றெடுத்த தாய் போல மடுப்ப * ஆரும்
பேணா நஞ்சுண்டு உகந்த பிள்ளை கண்டீர் **
நெல் தொடுத்த மலர் நீலம் நிறைந்த சூழல் *
இருஞ்சிறைய வண்டொலியும் நெடுங்கணார் தம் *
சிற்றடி மேல் சிலம்பொலியும் மிழற்றும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 2

படல் அடைத்த சிறுகுரம்பை நுழைந்து புக்குப் *
பசு வெண்ணெய் பதம் ஆரப் பண்ணை முற்றும் *
அடல் அடர்த்த வேற்கணார் தோக்கை பற்றி *
அலந்தலைமை செய்து உழலும் ஐயன் கண்டீர் **
மடல் எடுத்த நெடுந்தெங்கின் பழங்கள் வீழ *
மாங்கனிகள் திரட்டு உருட்டா வருநீர்ப் பொன்னி *
திடல் எடுத்து மலர் சுமந்தங்கு இழியு நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 3

வாராரும் முலை மடவாள் பின்னைக்காகி *
வளை மருப்பில் கடுஞ்சினத்து வந்தாள் ஆர்ந்த *
காரார் திண்விடை அடர்த்து வதுவை ஆண்ட *
கருமுகில் போல் திருநிறத்து என் கண்ணர் கண்டீர் **
ஏராரும் மலர்ப் பொழில்கள் தழுவி எங்கும் *
எழில் மதியைக் கால் தொடர விளங்கு சோதி *
சீராரும் மணிமாடம் திகழும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 4

கலை இலங்கும் அகல் அல்குல் கமலப் பாவை *
கதிர் முத்த வெண்ணகையாள் கருங்கண் ஆய்ச்சி *
முலை இலங்கும் ஒளி மணிப்பூண் வடமும் தேய்ப்ப *
மூவாத வரை நெடுந்தோள் மூர்த்தி கண்டீர் **
மலை இலங்கு நிரைச் சந்தி மாட வீதி *
ஆடவரை மடமொழியார் முகத்து * இரண்டு
சிலை விலங்கி மனம் சிறை கொண்டிருக்கும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 5

தான் போலும் என்று எழுந்தான் தரணியாளன் *
அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் *
கோன் போலும் என்று எழுந்தான் குன்றம் அன்ன *
இருபது தோள் உடன் துணித்த ஒருவன் கண்டீர் **
மான் போலும் மென்னோக்கின் செய்ய வாயார் *
மரகதம் போல் மடக்கிளியைக் கை மேல் கொண்டு *
தேன் போலும் மென்மழலை பயிற்றும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 6

பொங்கிலங்கு புரிநூலும் தோலும் தாழப் *
பொல்லாத குறள் உருவாய்ப் பொருந்தா வாணன் *
மங்கலம் சேர் மறை வேள்வி அதனுள் புக்கு *
மண்ணகலம் குறை இரந்த மைந்தன் கண்டீர் **
கொங்கலர்ந்த மலர்க் குழலார் கொங்கை தோய்ந்த *
குங்குமத்தின் குழம்பு அளைந்த கோலம் தன்னால் *
செங்கலங்கல் வெண்மணல் மேல் தவழு நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 7

சிலம்பின் இடை சிறு பரல் போல் பெரிய மேரு *
திருக்குளம்பில் கணகணப்பத் திருவாகாரம்
குலுங்க * நில மடந்தை தனை இடந்து புல்கிக் *
கோட்டிடை வைத்து அருளிய எங்கோமான் கண்டீர் **
இலங்கிய நான்மறை அனைத்தும் அங்கம் ஆறும் *
ஏழிசையும் கேள்விகளும் எண்திக்கு எங்கும் *
சிலம்பிய நற்பெரும் செல்வம் திகழும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 8

ஏழுலகும் தாழ் வரையும் எங்கும் மூடி *
எண்திசையும் மண்டலமும் மண்டி * அண்டம்
மோழை எழுந்து ஆழி மிகும் ஊழி வெள்ளம் *
முன் அகட்டில் ஒடுக்கிய எம் மூர்த்தி கண்டீர் **
ஊழி தொறும் ஊழி தொறும் உயர்ந்த செல்வத்து *
ஓங்கிய நான்மறை அனைத்தும் தாங்கு நாவர் *
சேழுயர்ந்த மணிமாடம் திகழும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 9

** சீரணிந்த மணிமாடம் திகழு நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலை *
கூரணிந்த வேல்வலவன் ஆலி நாடன் *
கொடிமாட மங்கையர் கோன் குறையல் ஆளி **
பாரணிந்த தொல் புகழான் கலியன் சொன்ன *
பாமாலை இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் *
சீரணிந்த உலகத்து மன்னராகிச் *
சேண் விசும்பில் வானவராய்த் திகழ்வர் தாமே 10

அடிவரவு: மாற்றரசர் பொற்றொடி படல் வாராரும் கலை தான் பொங்கு சிலம்பின் ஏழுலகும் சீரணிந்த தூம்பு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

ஐந்தாம் திருமொழி - தூம்புடை
திருநாங்கூர்த் திருப்பதி 11
8. திருமணிக்கூடம்

** தூம்புடைப் பனைக் கை வேழம் * துயர் கெடுத்து அருளி * மன்னு
காம்புடைக் குன்றம் ஏந்திக் * கடுமழை காத்த எந்தை **
பூம்புனல் பொன்னி முற்றும் * புகுந்து பொன் வரண்ட * எங்கும்
தேம்பொழில் கமழும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 1

கவ்வை வாள் எயிற்று வன்பேய் * கதிர் முலை சுவைத்து * இலங்கை
வவ்விய இடும்பை கூரக் * கடுங்கணை துரந்த எந்தை **
கொவ்வை வாய் மகளிர் கொங்கைக் * குங்குமம் கழுவிப் போந்த *
தெய்வ நீர் கமழும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 2

மாத் தொழில் மடங்கச் செற்று * மறுதிற நடந்து * வன்தாள்
சேத் தொழில் சிதைத்துப் * பின்னை செவ்வித் தோள் புணர்ந்த எந்தை **
நாத் தொழில் மறை வல்லார்கள் * நயந்து அறம் பயந்த * வண்கைத்
தீத் தொழில் பயிலும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 3

தாங்க அரும்சினத்து வந்தாள் * தடக்கை மா மருப்பு வாங்கி *
பூங்குருந்து ஒசித்துப் புள்வாய் பிளந்து * எருதடர்த்த எந்தை **
மாங்கனி நுகர்ந்த மந்தி * வந்து வண்டு இரிய * வாழைத்
தீங்கனி நுகரும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 4

கருமகள் இலங்கையாட்டி * பிலங்கொள் வாய் திறந்து * தன் மேல்
வருமவள் செவியும் மூக்கும் * வாளினால் தடிந்த எந்தை **
பெருமகள் பேதை மங்கை * தன்னொடும் பிரிவிலாத *
திருமகள் மருவு நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 5

கெண்டையும் குறளும் புள்ளும் * கேழலும் அரியும் மாவும் *
அண்டமும் சுடரும் * அல்லா ஆற்றலும் ஆய எந்தை **
ஒண்திறல் தென்னன் ஓட * வடவரசு ஓட்டம் கண்ட *
திண்திறலாளர் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 6

குன்றமும் வானும் மண்ணும் * குளிர் புனல் திங்களோடு *
நின்ற வெஞ்சுடரும் * அல்லா நிலைகளும் ஆய எந்தை **
மன்றவும் வயலும் காவும் * மாடமும் மணம் கொண்டு * எங்கும்
தென்றல் வந்துலவும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 7

சங்கையும் துணிவும் பொய்யும் * மெய்யும் இத்தரணி ஓம்பும் *
பொங்கிய முகிலும் * அல்லாப் பொருள்களும் ஆய எந்தை **
பங்கயம் உகுத்த தேறல் * பருகிய வாளை பாய *
செங்கயல் உகளும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 8

பாவமும் அறமும் வீடும் * இன்பமும் துன்பம் தானும் *
கோவமும் அருளும் * அல்லாக் குணங்களும் ஆய எந்தை **
மூவரில் எங்கள் மூர்த்தி * இவன் என முனிவரோடு *
தேவர் வந்து இறைஞ்சும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 9

** திங்கள் தோய் மாட நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானை *
மங்கையர் தலைவன் வண்தார்க் * கலியன் வாயொலிகள் வல்லார் **
பொங்கு நீர் உலகம் ஆண்டு * பொன்னுலகாண்டு * பின்னும்
வெங்கதிர்ப் பரிதி வட்டத்து * ஊடு போய் விளங்குவாரே 10

அடிவரவு: தூம்பு கவ்வை மாத்தொழில் தாங்கரும் கருமகள் கெண்டை குன்றம் சங்கை பாவம் திங்கள் தாவளந்து

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

ஆறாம் திருமொழி - தாவளந்து
திருநாங்கூர்த் திருப்பதி 11
9. திருக்காவளம்பாடி

** தாவளந்து உலக முற்றும் * தடமலர்ப் பொய்கை புக்கு *
நா வளம் நவின்று அங்கேத்த * நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்! **
மா வளம் பெருகி மன்னு * மறையவர் வாழும் * நாங்கைக்
காவளம்பாடி மேய * கண்ணனே! களைகண் நீயே 1

மண்ணிடந்து ஏனம் ஆகி * மாவலி வலி தொலைப்பான் *
விண்ணவர் வேண்டச் சென்று * வேள்வியில் குறை இரந்தாய் **
துண்ணென மாற்றார் தம்மைத் * தொலைத்தவர் நாங்கை மேய *
கண்ணனே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 2

உருத்தெழு வாலி மார்பில் * ஒரு கணை உருவ ஓட்டி *
கருத்துடைத் தம்பிக்கு * இன்பக் கதிர் முடி அரசு அளித்தாய் **
பருத்தெழு பலவும் மாவும் * பழம் விழுந்து ஒழுகும் நாங்கை *
கருத்தனே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 3

முனை முகத்து அரக்கன் மாள * முடிகள் பத்து அறுத்து வீழ்த்து * ஆங்கு
அனையவற்கு இளையவற்கே * அரசு அளித்து அருளினானே! **
சுனைகளில் கயல்கள் பாயச் * சுரும்பு தேன் நுகரும் நாங்கை *
கனை கழல் காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 4

பட அரவு உச்சி தன் மேல் * பாய்ந்து பல் நடங்கள் செய்து *
மடவரல் மங்கை தன்னை * மார்வகத்து இருத்தினானே! **
தடவரை தங்கு மாடத் * தகு புகழ் நாங்கை மேய *
கடவுளே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 5

மல்லரை அட்டு மாளக் * கஞ்சனை மலைந்து கொன்று *
பல்லரசு அவிந்து வீழப் * பாரதப் போர் முடித்தாய்! **
நல்லரண் காவின் நீழல் * நறை கமழ் நாங்கை மேய *
கல்லரண் காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 6

மூத்தவற்கு அரசு வேண்டி * முன்பு தூது எழுந்தருளி *
மாத்தமர் பாகன் வீழ * மத கரி மருப்பு ஒசித்தாய்! **
பூத்தமர் சோலை ஓங்கிப் * புனல் பரந்து ஒழுகு நாங்கை *
காத்தனே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 7

ஏவிளம் கன்னிக்காகி * இமையவர் கோனைச் செற்று *
காவளம் கடிதிறுத்துக் * கற்பகம் கொண்டு போந்தாய்! **
பூவளம் பொழில்கள் சூழ்ந்த * புரந்தரன் செய்த நாங்கை *
காவளம்பாடி மேய * கண்ணனே! களைகண் நீயே 8

சந்தமாய் சமயம் ஆகிச் * சமய ஐம்பூதம் ஆகி *
அந்தமாய் ஆதி ஆகி * அருமறை அவையும் ஆனாய்! **
மந்தமார் பொழில்கள் தோறும் * மடமயில் ஆலு நாங்கை *
கந்தமார் காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 9

** மாவளம் பெருகி மன்னு * மறையவர் வாழும் * நாங்கைக்
காவளம்பாடி மேய * கண்ணணைக் கலியன் சொன்ன **
பா வளம் பத்தும் வல்லார் * பார் மிசை அரசராகி *
கோவிளமன்னர் தாழக் * குடை நிழல் பொலிவர் தாமே 10

அடிவரவு: தாவளம் மண் உருத்து முனை படம் மல்ல்ரை மூத்தவற்கு ஏவிளம் சந்தம் மாவளம் கண்ணார்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

ஏழாம் திருமொழி - கண்ணார் கடல்
திருநாங்கூர்த் திருப்பதி 11
10. திருவெள்ளக்குளம்

** கண்ணார் கடல் போல் * திருமேனி கரியாய்! *
நண்ணார் முனை * வென்றி கொள்வார் மன்னு நாங்கூர் **
திண்ணார் மதிள் சூழ் * திருவெள்ளக்குளத்துள்
அண்ணா! * அடியேன் இடரைக் களையாயே 1

கொந்தார் துளவ * மலர் கொண்டு அணிவானே! *
நந்தாத பெரும் புகழ் * வேதியர் நாங்கூர் **
செந்தாமரை நீர்த் * திருவெள்ளக்குளத்துள்
எந்தாய்! * அடியேன் இடரைக் களையாயே 2

குன்றால் குளிர் மாரி * தடுத்து உகந்தானே! *
நன்றாய பெரும் புகழ் * வேதியர் நாங்கூர் **
சென்றார் வணங்கும் * திருவெள்ளக்குளத்துள்
நின்றாய்! * நெடியாய்! அடியேன் இடர் நீக்கே 3

கானார் கரி கொம்பது * ஒசித்த களிறே! *
நானா வகை * நல்லவர் மன்னிய நாங்கூர் **
தேனார் பொழில் சூழ் * திருவெள்ளக்குளத்துள்
ஆனாய்! * அடியேனுக்கு அருள் புரியாயே 4

** வேடார் திருவேங்கடம் * மேய விளக்கே! *
நாடார் புகழ் * வேதியர் மன்னிய நாங்கூர் **
சேடார் பொழில் சூழ் * திருவெள்ளக்குளத்தாய்! *
பாடா வருவேன் * வினை ஆயின பாற்றே 5

கல்லால் கடலை * அணை கட்டி உகந்தாய்! *
நல்லார் பலர் * வேதியர் மன்னிய நாங்கூர் **
செல்வா! * திருவெள்ளக்குளத்து உறைவானே! *
எல்லா இடரும் * கெடுமாறு அருளாயே 6

கோலால் நிரை மேய்த்த * எங்கோவலர் கோவே! *
நாலாகிய * வேதியர் மன்னிய நாங்கூர் **
சேலார் வயல் சூழ் * திருவெள்ளக்குளத்துள்
மாலே! * என வல்வினை தீர்த்து அருளாயே 7

வாராகம் அதாகி * இம்மண்ணை இடந்தாய்! *
நாராயணனே! * நல்ல வேதியர் நாங்கூர் **
சீரார் பொழில் சூழ் * திருவெள்ளக்குளத்துள் *
ஆராவமுதே! * அடியேற்கு அருளாயே 8

பூவார் திருமாமகள் * புல்கிய மார்பா! *
நாவார் புகழ் * வேதியர் மன்னிய நாங்கூர்த் **
தேவா! * திருவெள்ளக்குளத்து உறைவானே! *
ஆவா! அடியான் * இவன் என்று அருளாயே 9

** நல் அன்புடை * வேதியர் மன்னிய நாங்கூர் *
செல்வன் * திருவெள்ளக்குளத்து உறைவானை **
கல்லின் மலி தோள் * கலியன் சொன்ன மாலை *
வல்லர் என வல்லவர் * வானவர் தாமே 10

அடிவரவு: கண்ணார் கொந்து குன்றால் கான் வேடு கல்லால் கோலால் வாராகமது பூவார் நல்லன்பு கவளயானை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

எட்டாம் திருமொழி - கவளயானை
திருநாங்கூர்த் திருப்பதி 11
11. திருப்பார்த்தன்பள்ளி
திருமாலினிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்டு தாய் இரங்கிக் கூறிய பாசுரம்

** கவள யானைக் கொம்பு ஒசித்த * கண்ணன் என்றும் காமரு சீர் *
குவளை மேகம் அன்ன மேனி * கொண்ட கோன் என் ஆனை என்றும் **
தவள மாட நீடு நாங்கைத் * தாமரையாள் கேள்வன் என்றும் *
பவள வாயாள் என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 1

கஞ்சன் விட்ட வெஞ்சினத்த * களிறு அடர்த்த காளை என்றும் *
வஞ்சமேவி வந்த பேயின் * உயிரை உண்ட மாயன் என்றும் **
செஞ்சொலாளர் நீடு நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பஞ்சி அன்ன மெல்லடியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 2

அண்டர் கோன் என் ஆனை என்றும் * ஆயர் மாதர் கொங்கை புல்கு
செண்டன் என்றும் * நான்மறைகள் * தேடி ஓடும் செல்வன் என்றும் **
வன்டுலவு பொழில் கொள் நாங்கை * மன்னு மாயன் என்றென்று ஓதி *
பண்டு போல் அன்று என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 3

கொல்லை ஆனாள் பரிசழிந்தாள் * கோல் வளையார் தம் முகப்பே *
மல்லை முந்நீர் தட்டிலங்கை * கட்டழித்த மாயன் என்றும் **
செல்வம் மல்கு மறையோர் நாங்கை * தேவ தேவன் என்றென்று ஓதி *
பல்வளையாள் என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 4

அரக்கர் ஆவி மாள அன்று * ஆழ்கடல் சூழ் இலங்கை செற்ற *
குரக்கரசன் என்றும் * கோலவில்லி என்றும் ** மாமதியை
நெருக்கு மாட நீடு நாங்கை * நின்மலன் என்றென்று ஓதி *
பரக்கழிந்தாள் என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 5

ஞாலம் முற்றும் உன்டு உமிழ்ந்த * நாதன் என்றும் நானிலம் சூழ் *
வேலை அன்ன கோல மேனி * வண்ணன் என்றும் மேல் எழுந்து **
சேல் உகளும் வயல் கொள் நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பாலின் நல்ல மென்மொழியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 6

நாடி என்தன் உள்ளம் கொண்ட * நாதன் என்றும் * நான்மறைகள்
தேடி என்றும் காண மாட்டாச் * செல்வன் என்றும் ** சிறை கொள் வண்டு
சேடுலவு பொழில் கொள் நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பாடகம் சேர் மெல்லடியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 7

உலகம் ஏத்தும் ஒருவன் என்றும் * ஒண்சுடரோடு உம்பர் எய்தா *
நிலவும் ஆழிப் படையன் என்றும் * நேசன் என்றும் ** தென்திசைக்குத்
திலதம் அன்ன மறையோர் நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பலரும் ஏச என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 8

கண்ணன் என்றும் வானவர்கள் * காதலித்து மலர்கள் தூவும் *
எண்ணன் என்றும் இன்பன் என்றும் * ஏழுலகுக்கு ஆதி என்றும் **
திண்ண மாட நீடு நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பண்ணின் அன்ன மென்மொழியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 9

** பாருள் நல்ல மறையோர் நாங்கைப் * பார்த்தன்பள்ளிச் செங்கண் மாலை *
வார்கொள் நல்ல முலை மடவாள் பாடலைத் * தாய் மொழிந்த மாற்றம் **
கூர்கொள் நல்ல வேல் கலியன் * கூறு தமிழ் பத்தும் வல்லார் *
ஏர்கொள் நல்ல வைகுந்தத்துள் * இன்பம் நாளும் எய்துவாரே 10

அடிவரவு: கவளம் கஞ்சன் அண்டர் கொல்லை அரக்கர் ஞாலம் நாடி உலகம் கண்ணன் பாருள் நும்மை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

ஒன்பதாம் திருமொழி - நும்மைத் தொழுதோம்
திருவிந்தளூர்

** நும்மைத் தொழுதோம் * நுந்தம் பணி செய்திருக்கும் நும் அடியோம் *
இம்மைக்கு இன்பம் பெற்றோம் * எந்தாய்! இந்தளூரீரே! **
எம்மைக் கடிதாக் கருமம் அருளி * ஆவா! என்று இரங்கி *
நம்மை ஒருகால் காட்டி நடந்தால் * நாங்கள் உய்யோமே? 1

** சிந்தை தன்னுள் நீங்காது இருந்த திருவே! * மருவினிய
மைந்தா! * அந்தண் ஆலி மாலே! * சோலை மழகளிறே! **
நந்தா விளக்கின் சுடரே! * நறையூர் நின்ற நம்பீ! * என்
எந்தாய்! இந்தளூராய்! * அடியேற்கு இறையும் இரங்காயே! 2

பேசுகின்றது இதுவே * வையம் ஈரடியால் அளந்த *
மூசி வண்டு முரலும் * கண்ணி முடியீர்! ** உம்மைக் காணும்
ஆசை என்னும் * கடலில் வீழ்ந்து இங்கு அயர்த்தோம் * அயலாரும்
ஏசுகின்றது இதுவே காணும் * இந்தளூரீரே! 3

ஆசை வழுவாது ஏத்தும் * எமக்கிங்கு இழுக்கு ஆய்த்து * அடியோர்க்குத்
தேசம் அறிய * உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு **
காசின் ஒளியின் திகழும் வண்ணம் * காட்டீர் எம்பெருமான்! *
வாசி வல்லீர்! இந்தளூரீர்! * வாழ்ந்தே போம் நீரே 4

தீ எம்பெருமான் நீர் எம்பெருமான் * திசையும் இரு நிலனு
மாய் * எம்பெருமான் ஆகி நின்றால் * அடியோம் காணோமால் **
தாய் எம்பெருமான் * தந்தை தந்தை ஆவீர் * அடியோமுக்
கே எம்பெருமான் அல்லீரோ? நீர் * இந்தளூரீரே! 5

சொல்லாது ஒழியகில்லேன் * அறிந்த சொல்லில் * நும் அடியார்
எல்லாரோடும் ஒக்க * எண்ணி இருந்தீர் அடியேனை **
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் * நமக்கு இவ்வுலகத்து *
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் * இந்தளூரீரே! 6

மாட்டீர் ஆனீர் பணி நீர் கொள்ள * எம்மைப் பணி அறியா
வீட்டீர் * இதனை வேறே சொன்னோம் * இந்தளூரீரே! **
காட்டீர் ஆனீர் * நுந்தம் அடிக்கள் காட்டில் * உமக்கு இந்த
நாட்டே வந்து தொண்டர் ஆன * நாங்கள் உய்யோமே? 7

முன்னை வண்ணம் பாலின் வண்ணம் * முழுதும் நிலை நின்ற *
பின்னை வண்ணம் கொன்டல் வண்ணம் * வண்ணம் எண்ணுங்கால் **
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் * புரையும் திருமேனி *
இன்ன வண்ணம் என்று காட்டீர் * இந்தளூரீரே! 8

எந்தை தந்தை தம்மான் என்றென்று * எமர் ஏழ் அளவும் *
வந்து நின்ற தொண்டரோர்க்கே * வாசி வல்லீரால் **
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர் * சிறிதும் திருமேனி *
இந்த வண்ணம் என்று காட்டீர் * இந்தளூரீரே 9

** ஏரார் பொழில் சூழ் * இந்தளூரில் எந்தை பெருமானை *
காரார் புறவின் மங்கை வேந்தன் * கலியன் ஒலி செய்த **
சீரார் இன்சொல் மாலை * கற்றுத் திரிவார் உலகத்தில் *
ஆரார் அவரே * அமரர்க்கு என்றும் அமரர் ஆவாரே 10

அடிவரவு: நும்மை சிந்தை பேசுகின்றது ஆசை தீ சொல்லாது மாட்டீர் முன்னை எந்தை ஏரார் ஆய்ச்சியர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
நான்காம் பத்து

பத்தாம் திருமொழி - ஆய்ச்சியர்
திருவெள்ளியங்குடி

** ஆய்ச்சியர் அழைப்ப வெண்ணெய் உண்டு ஒருகால் *
ஆலிலை வளர்ந்த எம்பெருமான் *
பேய்ச்சியை முலை உண்டு இணை மருது இறுத்துப் *
பெருநிலம் அளந்தவன் கோயில் **
காய்த்த நீள் கமுகும் கதலியும் தெங்கும் *
எங்கும் மாம்பொழில்களின் நடுவே *
வாய்த்த நீர் பாயும் மண்ணியின் தென்பால் *
திருவெள்ளியங்குடி அதுவே 1

ஆநிரை மேய்த்து அன்று அலைகடல் அடைத்திட்டு *
அரக்கர் தம் சிரங்களை உருட்டி *
கார் நிறை மேகம் கலந்ததோர் உருவக் *
கண்ணனார் கருதிய கோயில் **
பூ நிரைச் செருந்தி புன்னை முத்தரும்பிப் *
பொதும்பிடை வரிவண்டு மிண்டி *
தேன் இரைத்து உண்டு அங்கு இன்னிசை முரலும் *
திருவெள்ளியங்குடி அதுவே 2

கடு விடம் உடைய காளியன் தடத்தைக் *
கலக்கி முன் அலக்கழித்து * அவன் தன்
படம் இறப் பாய்ந்து பல் மணி சிந்தப் *
பல் நடம் பயின்றவன் கோயில் **
படவரவு அல்குல் பாவை நல்லார்கள் *
பயிற்றிய நாடகத்து ஒலி போய் *
அடை புடை தழுவி அண்டம் நின்று அதிரும் *
திருவெள்ளியங்குடி அதுவே 3

கறவை முன் காத்துக் கஞ்சனைக் காய்ந்த *
காளமேகத் திரு உருவன் *
பறவை முன் உயர்த்துப் பாற்கடல் துயின்ற *
பரமனார் பள்ளி கொள் கோயில் **
துறை துறை தோறும் பொன்மணி சிதறும் *
தொகுதிரை மண்ணியின் தென்பால் *
செறிமணி மாடக் கொடி கதிர் அணவும் *
திருவெள்ளியங்குடி அதுவே 4

பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து *
பாரதம் கை எறிந்து * ஒருகால்
தேரினை ஊர்ந்து தேரினைத் துரந்த *
செங்கண்மால் சென்று உறை கோயில் **
ஏர் நிரை வயலுள் வாளைகள் மறுகி *
எமக்கிடம் அன்று இது என்று எண்ணி *
சீர் மலி பொய்கை சென்று அணைகின்ற *
திருவெள்ளியங்குடி அதுவே 5

காற்றிடைப் பூளை கரந்தன அரந்தை
உறக் * கடல் அரக்கர் தம் சேனை *
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த *
கோலவில்லி இராமன் தன் கோயில் **
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள் *
ஊழ்த்து வீழ்ந்தன உண்டு மண்டி *
சேற்றிடைக் கயல்கள் உகள் திகழ் வயல் சூழ் *
திருவெள்ளியங்குடி அதுவே 6

ஒள்ளிய கருமம் செய்வன் என்று உணர்ந்த *
மாவலி வேள்வியில் புக்கு *
தெள்ளிய குறளாய் மூவடி கொண்டு *
திக்குற வளர்ந்தவன் கோயில் **
அள்ளி அம்பொழில்வாய் இருந்து வாழ் குயில்கள் *
அரி அரி என்றவை அழைப்ப *
வெள்ளியார் வணங்க விரைந்து அருள் செய்வான் *
திருவெள்ளியங்குடி அதுவே 7

முடி உடை அமரர்க்கு இடர் செய்யும் *
அசுரர் தம் பெருமானை * அன்று அரியாய்
மடி இடை வைத்து மார்வை முன் கீண்ட *
மாயனார் மன்னிய கோயில் **
படி இடை மாடத்து அடியிடைத் தூணில் *
பதித்த பன்மணிகளின் ஒளியால் *
விடி பகல் இரவென்று அறிவரிதாய *
திருவெள்ளியங்குடி அதுவே 8

குடி குடியாகக் கூடி நின்று அமரர் *
குணங்களே பிதற்றி நின்று ஏத்த *
அடியவர்க்கு அருளி அரவணைத் துயின்ற *
ஆழியான் அமர்ந்து உறை கோயில் **
கடி உடைக் கமலம் அடி இடை மலரக் *
கரும்பொடு பெருஞ்செந்நெல் அலைய *
வடிவுடை அன்னம் பெடையொடும் சேரும் *
வயல் வெள்ளியங்குடி அதுவே 9

** பண்டு முன் ஏனமாகி அன்று ஒருகால் *
பார் இடந்து எயிற்றினில் கொண்டு *
தெண்திரை வருடப் பாற்கடல் துயின்ற *
திருவெள்ளியங்குடியானை **
வண்டறை சோலை மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் *
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள் *
ஆள்வர் இக்குரை கடல் உலகே 10

அடிவரவு: ஆய்ச்சி ஆநிரை கடு கறவை பாரினை காற்று ஒள்ளிய முடி குடி பண்டு அறிவது

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

ஐந்தாம் பத்து

முதல் திருமொழி - அறிவதரியான்
திருப்புள்ளம்பூதங்குடி

** அறிவது அரியான் அனைத்துலகும் உடையான் * என்னை ஆளுடையான் *
குறிய மாணி உருவாய * கூத்தன் மன்னி அமரும் இடம் **
நறிய மலர் மேல் சுரும்பார்க்க * எழிலார் மஞ்ஞை நடம் ஆட *
பொறிகொள் சிறை வண்டு இசை பாடும் * புள்ளம்பூதங்குடி தானே 1

கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து * உலகம் கைப்படுத்து *
பொள்ளைக் கரத்த போதகத்தின் * துன்பம் தவிர்த்த புனிதன் இடம் **
பள்ளச் செறுவில் கயல் உகளப் * பழனக் கழனி அதனுள் போய் *
புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும் * புள்ளம்பூதங்குடி தானே 2

மேவா அரக்கர் தென்னிலங்கை * வேந்தன் வீயச் சரம் துரந்து *
மா வாய் பிளந்து மல் அடர்த்து * மருதம் சாய்த்த மாலதிடம் **
காவார் தெங்கின் பழம் வீழக் * கயல்கள் பாயக் குருகு இரியும்*
பூவார் கழனி எழில் ஆரும் * புள்ளம்பூதங்குடி தானே 3

வெற்பால் மாரி பழுதாக்கி * விறல் வாள் அரக்கர் தலைவன் தன் *
வற்பார் திரள் தோள் ஐந்நான்கும் * துணித்த வல்வில் இராமன் இடம் **
கற்பார் புரிசை செய் குன்றம் * கவினார் கூடம் மாளிகைகள் *
பொற்பார் மாடம் எழில் ஆரும் * புள்ளம்பூதங்குடி தானே 4

மையார் தடங்கண் கருங்கூந்தல் * ஆய்ச்சி மறைய வைத்த தயிர் *
நெய்யார் பாலோடு அமுது செய்த * நேமி அங்கை மாயன் இடம் **
செய்யார் ஆரல் இரை கருதிச் * செங்கால் நாரை சென்றணையும் *
பொய்யா நாவின் மறையாளர் * புள்ளம்பூதங்குடி தானே 5

மின்னின் அன்ன நுண்மருங்குல் * வேயேய் தடந்தோள் மெல்லியற்கா *
மன்னு சினத்த மழ விடைகள் * ஏழ் அன்று அடர்த்த மாலதிடம் **
மன்னு முது நீர் அரவிந்த மலர் மேல் * வரிவண்டு இசை பாட *
புன்னை பொன்னேய் தாதுதிர்க்கும் * புள்ளம்பூதங்குடி தானே 6

குடையா விலங்கல் கொண்டு ஏந்தி * மாரி பழுது ஆநிரை காத்து *
சடையான் ஓட அடல் வாணன் * தடந்தோள் துணித்த தலைவன் இடம் **
குடியா வண்டு கள்ளுண்ணக் * கோல நீலம் மட்டுகுக்கும் *
புடையார் கழனி எழில் ஆரும் * புள்ளம்பூதங்குடி தானே 7

கறையார் நெடுவேல் மறமன்னர் வீய * விசயன் தேர் கடவி *
இறையான் கையில் நிறையாத * முண்டம் நிறைத்த எந்தை இடம் **
மறையால் முத்தீ அவை வளர்க்கும் * மன்னு புகழால் வண்மையால் *
பொறையால் மிக்க அந்தணர் வாழ் * புள்ளம்பூதங்குடி தானே 8

துன்னி மண்ணும் விண்ணாடும் * தோன்றாது இருளாய் மூடிய நாள் *
அன்னமாகி அருமறைகள் * அருளிச் செய்த அமலன் இடம் **
மின்னு சோதி நவமணியும் * வேயின் முத்தும் சாமரையும் *
பொன்னும் பொன்னி கொணர்ந்து அலைக்கும் * புள்ளம்பூதங்குடி தானே 9

** கற்றா மறித்து காளியன் தன் * சென்னி நடுங்க நடம் பயின்ற *
பொற்றாமரையாள் தன் கேள்வன் * புள்ளம்பூதங்குடி தன் மேல் **
கற்றார் பரவும் மங்கையர் கோன் * காரார் புயற்கைக் கலிகன்றி *
சொல் தான் ஈரைந்து இவை பாடச் * சோர நில்லா துயர் தாமே 10

அடிவரவு: அறிவது கள்ளம் மேவா வெற்பால் மையார் மின்னின் குடை கறை துன்னி கற்றா தாம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

இரண்டாம் திருமொழி - தாந்தம்
திருக்கூடலூர்

** தாம் தம் பெருமை அறியார் * தூது
வேந்தர்க்காய * வேந்தர் ஊர் போல் **
காந்தள் விரல் * மென்கலை நன்மடவார் *
கூந்தல் கமழும் * கூடலூரே 1

செறுந்திண் திமில் ஏறுடைய * பின்னை
பெறுந்தண் கோலம் * பெற்றார் ஊர் போல் **
நறுந்தண் தீம் * தேன் உண்ட வண்டு *
குறிஞ்சி பாடும் * கூடலூரே 2

பிள்ளை உருவாய்த் * தயிர் உண்டு * அடியேன்
உள்ளம் புகுந்த * ஒருவர் ஊர் போல் **
கள்ள நாரை வயலுள் * கயல் மீன்
கொள்ளை கொள்ளும் * கூடலூரே 3

கூற்றேர் உருவின் குறளாய் * நிலம் நீர்
ஏற்றான் * எந்தை பெருமான் ஊர் போல் **
சேற்றேர் உழவர் * கோதைப் போதூண் *
கோல் தேன் முரலும் * கூடலூரே 4

தொண்டர் பரவச் * சுடர் சென்று அணவ *
அண்டத்து அமரும் * அடிகள் ஊர் போல் **
வண்டல் அலையுள் * கெண்டை மிளிர *
கொண்டல் அதிரும் * கூடலூரே 5

தக்கன் வேள்வி * தகர்த்த தலைவன் *
துக்கம் துடைத்த * துணைவர் ஊர் போல் **
எக்கலிடு * நுண்மணல் மேல் * எங்கும்
கொக்கின் பழம் வீழ் * கூடலூரே 6

கருந்தண் கடலும் * மலையும் உலகும் *
அருந்தும் அடிகள் * அமரும் ஊர் போல் **
பெருந்தண் முல்லைப் * பிள்ளை ஓடி *
குருந்தம் தழுவும் * கூடலூரே 7

கலை வாழ் பிணையோடு அணையும் * திருநீர்
மலை வாழ் எந்தை * மருவும் ஊர் போல் **
இலை தாழ் தெங்கின் * மேல் நின்று * இளநீர்க்
குலை தாழ் கிடங்கின் * கூடலூரே 8

பெருகு காதல் அடியேன் * உள்ளம்
உருகப் புகுந்த * ஒருவர் ஊர் போல் **
அருகு கைதை மலர * கெண்டை
குருகு என்று அஞ்சும் * கூடலூரே 9

** காவிப் பெருநீர் வண்ணன் * கண்ணன்
மேவித் திகழும் * கூடலூர் மேல் **
கோவைத் தமிழால் * கலியன் சொன்ன *
பாவைப் பாடப் * பாவம் போமே 10

அடிவரவு: தாம் செறும் பிள்ளை கூற்றேர் தொண்டர் தக்கன் கருந்தண் கலை பெருகு காவி வென்றி

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

மூன்றாம் திருமொழி - வென்றி
திருவெள்ளறை

** வென்றி மாமழு ஏந்தி முன் மண்
மிசை மன்னரை * மூவெழுகால்
கொன்ற தேவ! * நின் குரை கழல் தொழுவதோர்
வகை * எனக்கு அருள் புரியே **
மன்றில் மாம்பொழில் நுழை தந்து *
மல்லிகை மௌவலின் போது அலர்த்தி *
தென்றல் மாமணம் கமழ் தர வரு *
திருவெள்ளறை நின்றானே 1

வசை இல் நான்மறை கெடுத்த அம்மலர்
அயற்கு அருளி * முன் பரிமுகமாய் *
இசை கொள் வேத நூல் என்றிவை பயந்தவனே! *
எனக்கு அருள் புரியே **
உயர் கொள் மாதவிப் போதொடு உலாவிய *
மாருதம் வீதியின் வாய் *
திசை எல்லாம் கமழும் பொழில் சூழ் *
திருவெள்ளறை நின்றானே 2

வெய்யனாய் உலகு ஏழுடன் நலிந்தவன் *
உடலகம் இரு பிளவா *
கையில் நீள் உகிர்ப் படை அது வாய்த்தவனே! *
எனக்கு அருள் புரியே **
மையின் ஆர்தரு வரால் இனம் பாய *
வண் தடத்திடைக் கமலங்கள் *
தெய்வ நாறும் ஒண்பொய்கைகள் சூழ் *
திருவெள்ளறை நின்றானே 3

வாம் பரி உக மன்னர் தம் உயிர் செக *
ஐவர்கட்கு அரசு அளித்த *
காம்பினார் திருவேங்கடப் பொருப்ப! *
நின் காதலை அருள் எனக்கு **
மாம்பொழில் தளிர் கோதிய மடக்குயில் *
வாயது துவர்ப்பெய்த *
தீம்பலங்கனித் தேன் அது நுகர் *
திருவெள்ளறை நின்றானே 4

மானவேல் ஒண்கண் மடவரல் * மண்மகள்
அழுங்க முந்நீர்ப் பரப்பில் *
ஏனமாகி அன்று இரு நிலம் இடந்தவனே! *
எனக்கு அருள் புரியே **
கான மாமுல்லை கழைக் கரும்பேறி *
வெண்முறுவல் செய்து அலர்கின்ற *
தேனின் வாய் மலர் முருகு உகுக்கும் *
திருவெள்ளறை நின்றானே 5

பொங்கு நீள்முடி அமரர்கள் தொழுது எழ *
அமுதினைக் கொடுத்து அளிப்பான் *
அங்கோர் ஆமை அதாகிய ஆதி! *
நின் அடிமையை அருள் எனக்கு **
தங்கு பேடையோடு ஊடிய மதுகரம் *
தையலார் குழல் அணைவான் *
திங்கள் தோய் சென்னி மாடம் சென்றணை *
திருவெள்ளறை நின்றானே 6

ஆறினோடு ஒரு நான்குடை நெடுமுடி *
அரக்கன் தன் சிரம் எல்லாம் *
வேறு வேறுக வில்லது வளைத்தவனே! *
எனக்கு அருள் புரியே **
மாறில் சோதிய மரதகப் பாசடைத் *
தாமரை மலர் வார்ந்த *
தேறல் மாந்தி வண்டு இன்னிசை முரல் *
திருவெள்ளறை நின்றானே 7

முன் இவ்வேழுலகு உணர்வின்றி இருள் மிக *
உம்பர்கள் தொழுது ஏத்த *
அன்னமாகி அன்று அருமறை பயந்தவனே! *
எனக்கு அருள் புரியே **
மன்னு கேதகை சூதகம் என்றிவை *
வனத்திடைச் சுரும்பினங்கள் *
தென்னவென்று வண்டு இன்னிசை முரல் *
திருவெள்ளறை நின்றானே 8

ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று *
அகலிடம் முழுதினையும் *
பாங்கினால் கொண்ட பரம! நிற்பணிந்து
எழுவேன் * எனக்கு அருள் புரியே **
ஓங்கு பிண்டியின் செம்மலர் ஏறி * வண்டு
உழிதர * மாவேறித்
தீங்குயில் மிழற்றும் படப்பைத் *
திருவெள்ளறை நின்றானே 9

** மஞ்சுலா மணிமாடங்கள் சூழ் *
திருவெள்ளறை அதன் மேய *
அஞ்சனம் புரையும் திரு உருவனை *
ஆதியை அமுதத்தை **
நஞ்சு உலாவிய வேல் வலவன் *
கலிகன்றி சொல் ஐயிரண்டும் *
எஞ்சல் இன்றி நின்றேத்த வல்லார் *
இமையோர்க்கு அரசு ஆவர்களே 10

அடிவரவு: வென்றி வசை வெய்ய வாம்பரி மானவேல் பொங்கு ஆறு முன் ஆங்கு மஞ்சு உந்திமேல்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

நான்காம் திருமொழி - உந்திமேல்
திருவரங்கம் 1

** உந்தி மேல் நான்முகனைப் படைத்தான் * உலகு உண்டவன்
எந்தை பெம்மான் * இமையோர்கள் தாதைக்கு * இடம் என்பரால் **
சந்தினோடு மணியும் கொழிக்கும் * புனல் காவிரி *
அந்தி போலும் நிறத்து ஆர்வயல் சூழ் * தென்னரங்கமே 1

வையம் உண்டு ஆலிலை மேவு மாயன் * மணி நீள் முடி *
பைகொள் நாகத்தணையான் * பயிலும் இடம் என்பரால் **
தையனல்லார் குழல் மாலையும் * மற்றவர் தடமுலை *
செய்ய சாந்தும் கலந்திழி புனல் சூழ் * தென்னரங்கமே 2

பண்டு இவ்வையம் அளப்பான் சென்று * மாவலி கையில் நீர்
கொண்ட * ஆழித் தடக்கைக் * குறளன் இடம் என்பரால் **
வண்டு பாடும் மதுவார் புனல் * வந்திழி காவிரி *
அண்ட நாறும் பொழில் சூழ்ந்து * அழகார் தென்னரங்கமே 3

விளைத்த வெம்போர் விறல் வாள் அரக்கன் * நகர் பாழ் பட *
வளைத்த வல்வில் தடக்கை அவனுக்கு * இடம் என்பரால் **
துளைக்கை யானை மருப்பும் அகிலும் * கொணர்ந்து உந்தி * முன்
திளைக்கும் செல்வப் புனல் காவிரி சூழ் * தென்னரங்கமே 4

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன் * வான் புக *
அம்பு தன்னால் முனிந்த * அழகன் இடம் என்பரால் **
உம்பர் கோனும் உலகேழும் * வந்து ஈண்டி வணங்கும் * நல்
செம்பொன் ஆரும் மதிள் சூழ்ந்து * அழகார் தென்னரங்கமே 5

கலை உடுத்த அகல் அல்குல் * வன்பேய் மகள் தாய் என *
முலை கொடுத்தாள் உயிர் உண்டவன் * வாழ் இடம் என்பரால் **
குலை எடுத்த கதலிப் * பொழிலூடும் வந்து உந்தி * முன்
அலை எடுக்கும் புனல் காவிரி சூழ் * தென்னரங்கமே 6

கஞ்சன் நெஞ்சும் கடு மல்லரும் * சகடமும் காலினால் *
துஞ்ச வென்ற சுடர் ஆழியான் * வாழ் இடம் என்பரால் **
மஞ்சு சேர் மாளிகை * நீடு அகில் புகையும் * மறையோர்
செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும் * தென்னரங்கமே 7

ஏனம் மீன் ஆமையோடு * அரியும் சிறு குறளுமாய் *
தானும் ஆய * தரணித் தலைவன் இடம் என்பரால் **
வானும் மண்ணும் நிறையப் * புகுந்து ஈண்டி வணங்கும் * நல்
தேனும் பாலும் கலந்து அன்னவர் சேர் * தென்னரங்கமே 8

சேயன் என்றும் மிகப் பெரியன் * நுண் நேர்மையினாய * இம்
மாயை யாரும் அறியா வகையான் * இடம் என்பரால் **
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்து * ஆர்புனல் காவிரி *
ஆய பொன் மாமதிள் சூழ்ந்து * அழகார் தென்னரங்கமே 9

** அல்லி மாதர் அமரும் * திருமார்வன் அரங்கத்தை *
கல்லின் மன்னு மதிள் * மங்கையர் கோன் கலிகன்றி சொல் **
நல்லிசை மாலைகள் * நாலிரண்டும் இரண்டும் உடன் *
வல்லவர் தாம் உலகாண்டு * பின் வானுலகு ஆள்வரே 10

அடிவரவு: உந்திமேல் வையம் பண்டு விளைத்த வம்பு கலை கஞ்சன் ஏனம் சேயன் அல்லி வெருவாதாள்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

ஐந்தாம் திருமொழி - வெருவாதாள்
திருவரங்கம் 2

** வெருவாதாள் வாய் வெருவி *
வேங்கடமே! வேங்கடமே! என்கின்றாளால் *
மருவாளால் என் குடங்கால் * வாள் நெடுங்கண்
துயில் மறந்தாள் ** வண்டார் கொண்டல்
உருவாளன் வானவர் தம் உயிராளன் *
ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் சிந்திக்கேனே? 1

கலை ஆளா அகல் அல்குல் * கனவளையும்
கை ஆளா என் செய்கேன் நான்? *
விலை ஆளா அடியேனை * வேண்டுதியோ?
வேண்டாயோ? என்னும் ** மெய்ய
மலை ஆளன் வானவர் தம் தலையாளன் *
மராமரம் ஏழ் எய்த வென்றிச்
சிலை ஆளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் சிந்திக்கேனே? 2

மானாய மென்னோக்கி * வாள் நெடுங்கண்
நீர் மல்கும் வளையும் சோரும் *
தேனாய நறுந்துழாய் அலங்கலின் *
திறம் பேசி உறங்காள் காண்மின் **
கானாயன் கடி மனையில் தயிர் உண்டு
நெய் பருக * நந்தன் பெற்ற
ஆனாயன் * என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 3

தாய் வாயில் சொற்கேளாள் * தன் ஆயத்தோடு
அணையாள் தடமென் கொங்கை
யே * ஆரச் சாந்தணியாள் * எம்பெருமான்
திருவரங்கம் எங்கே? என்னும் **
பேய் மாய முலை உண்டு இவ்வுலகுண்ட பெரு
வயிற்றன் * பேசில் நங்காய்! *
மாமாயன் என் மகளைச் செய்தனகள் *
மங்கைமீர்! மதிக்கிலேனே 4

பூண்முலை மேல் சாந்தணியாள் * பொருகயல்
கண் மை எழுதாள் பூவை பேணாள் *
ஏண் அறியாள் எத்தனையும் * எம்பெருமான்
திருவரங்கம் எங்கே ? என்னும் **
நாண்மலராள் நாயகனாய் * நாம் அறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி *
ஆண்மகனாய் என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 5

தாதாடு வன மாலை * தாரானோ?
என்றென்றே தளர்ந்தாள் காண்மின் *
யாதானும் ஒன்று உரைக்கில் * எம்பெருமான்
திருவரங்கம் என்னும் ** பூமேல்
மாதாளன் குடமாடி மதுசூதன் *
மன்னர்க்காய் முன்னம் சென்ற
தூதாளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் சொல்லுகேனே? 6

வாராளும் இளங்கொங்கை * வண்ணம்
வேறு ஆயினவாறு எண்ணாள் * எண்ணில்
பேராளன் பேர் அல்லால் பேசாள் * இப்பெண்
பெற்றேன் என் செய்கேன் நான்? *
தாராளன் தண்குடந்தை நகராளன் *
ஐவர்க்காய் அமரில் உய்த்த
தேராளன் * என் மகளைச் செய்தனகள் *
எங்ஙனம் நான் செப்புகேனே? 7

உறவாதும் இலள் என்று * ஒழியாது
பலர் ஏசும் அலர் ஆயிற்றால் *
மறவாதே எப்பொழுதும் * மாயவனே!
மாதவனே! என்கின்றளால் **
பிறவாத பேராளன் பெண்ணாளன்
மண்ணாளன் * விண்ணோர் தங்கள்
அறவாளன் * என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 8

பந்தோடு கழல் மருவாள் * பைங்கிளியும்
பால் ஊட்டாள் பாவை பேணாள் *
வந்தானோ! திருவரங்கன் * வாரானோ?
என்றென்றே வளையும் சோரும் **
சந்தோகன் பௌழியன் ஐந்தழல் ஓம்பு *
தைத்திரியன் சாம வேதி *
அந்தோ! வந்து என் மகளைச் செய்தனகள் *
அம்மனைமீர்! அறிகிலேனே 9

** சேல் உகளும் வயல் புடை சூழ் * திருவரங்கத்து
அம்மானைச் சிந்தை செய்த *
நீல மலர்க்கண் மடவாள் நிறை அழிவைத் *
தாய் மொழிந்த அதனை ** நேரார்
கால வேல் பரகாலன் * கலிகன்றி ஒலி
மாலை கற்று வல்லார் *
மாலை சேர் வெண்குடைக் கீழ் மன்னவராய்ப் *
பொன்னுலகில் வாழ்வர் தாமே 10

அடிவரவு: வெருவாதாள் கலை மான தாய் பூண் தாதாடு வாராளும் உறவு பந்தோடு சேல் கைம்மானம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

ஆறாம் திருமொழி - கைம்மானம்
திருவரங்கம் 3

** கைம்மான மழகளிற்றைக் * கடல் கிடந்த கருமணியை *
மைம்மான மரதகத்தை * மறை உரைத்த திருமாலை **
எம்மானை எனக்கு என்றும் இனியானைப் * பனி காத்த
அம்மானை * யான் கண்டது * அணிநீர்த் தென்னரங்கத்தே 1

** பேரானைக் * குறுங்குடி எம்பெருமானை * திருத்தண்கால்
ஊரானைக் * கரம்பனூர் உத்தமனை ** முத்திலங்கு
காரார் திண்கடல் ஏழும் * மலை ஏழு இவ்வுலகு ஏழுண்டும் *
ஆராதென்று இருந்தானைக் * கண்டது தென்னரங்கத்தே 2

ஏனாகி உலகு இடந்து * அன்று இருநிலனும் பெரு விசும்பும் *
தானாய பெருமானைத் * தன்னடியார் மனத்து என்றும் **
தேனாகி அமுதாகித் * திகழ்ந்தானை மகிழ்ந்து ஒருகால் *
ஆனாயன் ஆனானைக் * கண்டது தென்னரங்கத்தே 3

வளர்ந்தவனைத் தடங்கடலுள் * வலி உருவில் திரிசகடம் *
தளர்ந்து அதிர உதைத்தவனைத் * தரியாது அன்று இரணியனைப்
பிளந்தவனை ** பெருநிலம் ஈரடி நீட்டிப் * பண்டொரு நாள்
அளந்தவனை * யான் கண்டது * அணிநீர்த் தென்னரங்கத்தே 4

நீர் அழலாய் நெடு நிலனாய் * நின்றானை * அன்று அரக்கன்
ஊர் அழலால் உண்டானைக் * கண்டார் பின் காணாமே **
பேர் அழலாய்ப் பெரு விசும்பாய்ப் * பின் மறையோர் மந்திரத்தின் *
ஆர் அழலால் உண்டானைக் * கண்டது தென்னரங்கத்தே 5

தன் சினத்தைத் தவிர்த்து அடைந்தார் * தவ நெறியை * தரியாது
கஞ்சனைக் கொன்று * அன்று உலகம் உண்டு உமிழ்ந்த கற்பகத்தை **
வெஞ்சினத்த கொடுந்தொழிலோன் * விசை உருவை அசைவித்த *
அஞ்சிறைப் புட்பாகனை * யான் கண்டது தென்னரங்கத்தே 6

** சிந்தனையைத் தவ நெறியைத் * திருமாலை * பிரியாது
வந்து எனது மனத்து இருந்த * வடமலையை ** வரிவண்டார்
கொந்து அணைந்த பொழில் கோவல் * உலகு அளப்பான் அடி நிமிர்த்த
அந்தணனை * யான் கண்டது * அணிநீர்த் தென்னரங்கத்தே 7

துவரித்த உடையவர்க்கும் * தூய்மை இல்லாச் சமணர்க்கும் *
அவர்கட்கு அங்கு அருள் இல்லா * அருளானை ** தன் அடைந்த
எமர்கட்கும் அடியேற்கும் * எம்மாற்கும் எம் அனைக்கும் *
அமரர்க்கும் பிரானாரைக் * கண்டது தென்னரங்கத்தே 8

பொய் வண்ணம் மனத்து அகற்றிப் * புலன் ஐந்தும் செல வைத்து *
மெய் வண்ணம் நினைந்தவர்க்கு * மெய் நின்ற வித்தகனை **
மைவண்ணம் கருமுகில் போல் * திகழ் வண்ணம் மரதகத்தின் *
அவ்வண்ண வண்ணனை * யான் கண்டது தென்னரங்கத்தே 9

** ஆ மருவி நிரை மேய்த்த * அணி அரங்கத்து அம்மானை *
காமரு சீர்க் கலிகன்றி * ஒலி செய்த மலி புகழ் சேர் **
நா மருவு தமிழ் மாலை * நால் இரண்டோடு இரண்டினையும் *
தாமருவி வல்லார் மேல் * சாரா தீவினை தானே 10

அடிவரவு: கைம்மானம் பேரானை ஏனாகி வளர்ந்தவனை நீர் தம் சிந்தனை துவரித்த போய் ஆமருவி பண்டை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

ஏழாம் திருமொழி - பண்டை
திருவரங்கம் 4

** பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
 பதங்களும் * பதங்களின் பொருளும் *
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி அனலும் *
 பெருகிய புனலொடு நிலனும் **
கொண்டல் மாருதமும் குரை கடல் ஏழும் *
 ஏழு மாமலைகளும் விசும்பும் *
அண்டமும் தானாய் நின்ற எம்பெருமான் *
 அரங்க மா நகர் அமர்ந்தானே 1

இந்திரன் பிரமன் ஈசன் என்று இவர்கள் *
எண்ணில் பல் குணங்களே இயற்ற *
தந்தையும் தாயும் மக்களும் மிக்க
சுற்றமும் * சுற்றி நின்று அகலாப்
பந்தமும் ** பந்தம் அறுப்பதோர் மருந்தும்
பான்மையும் * பல் உயிர்க்கு எல்லாம் *
அந்தமும் வாழ்வும் ஆய எம்பெருமான் *
அரங்க மா நகர் அமர்ந்தானே 2

மன்னு மாநிலனும் மலைகளும் கடலும் *
வானமும் தானவர் உலகும் *
துன்னு மா இருளாய்த் துலங்கொளி சுருங்கித் *
தொல்லை நான்மறைகளும் மறைய **
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப் *
பிறங்கிருள் நிறம் கெட * ஒரு நாள்
அன்னமாய் அன்றங்கு அருமறை பயந்தான் *
அரங்க மா நகர் அமர்ந்தானே 3

மா இரும் குன்றம் ஒன்று மத்தாக *
மாசுணம் அதனோடும் அளவி *
பா இரும் பௌவம் பகடு விண்டலறப் *
படுதிரை விசும்பிடைப் படர **
சே இரு விசும்பும் திங்களும் சுடரும் *
தேவரும் தாம் உடன் திசைப்ப *
ஆயிரம் தோளால் அலை கடல் கடைந்தான் *
அரங்க மா நகர் அமர்ந்தானே 4

எங்ஙனே உய்வர்? தானவர் நினைந்தால் *
இரணியன் இலங்கு பூண் அகலம் *
பொங்கு வெங்குருதி பொன் மலை பிளந்து *
பொழி தரும் அருவி ஒத்து இழிய **
வெங்கண் வாள் எயிற்றோர் வெள்ளி மா விலங்கல் *
விண் உறக் கனல் விழித்து எழுந்தது *
அங்ஙனே ஒக்க அரி உருவானான் *
அரங்கமா நகர் அமர்ந்தானே 5

ஆயிரம் குன்றம் சென்று தொக்கனைய *
அடல் புரை எழில் திகழ் திரள் தோள் *
ஆயிரம் துணிய அடல் மழுப் பற்றி *
மற்றவன் அகல் விசும்பு அணைய **
ஆயிரம் பெயரால் அமரர் சென்று இறைஞ்ச *
அறி துயில் அலை கடல் நடுவே *
ஆயிரம் சுடர் வாய் அரவணைத் துயின்றான் *
அரங்க மா நகர் அமர்ந்தானே 6

சுரி குழல் கனி வாய்த் திருவினைப் பிரித்த *
கொடுமையிற் கடுவிசை அரக்கன் *
எரி விழித்து இலங்கு மணி முடி பொடி செய்து *
இலங்கை பாழ் படுப்பதற்கு எண்ணி **
வரி சிலை வளைய அடுசரம் துரந்து *
மறி கடல் நெறி பட * மலையால்
அரிகுலம் பணி கொண்டு அலை கடல் அடைத்தான் *
அரங்க மா நகர் அமர்ந்தானே 7

ஊழியாய் ஓமத்து உச்சியாய் * ஒருகால்
உடைய தேர் ஒருவனாய் * உலகில்
சூழி மால் யானைத் துயர் கெடுத்து * இலங்கை
மலங்க அன்று அடுசரம் துரந்து **
பாழியால் மிக்க பார்த்தனுக்கு அருளிப் *
பகலவன் ஒளி கெட * பகலே
ஆழியால் அன்று அங்கு ஆழியை மறைத்தான் *
அரங்க மா நகர் அமர்ந்தானே 8

பேயின் ஆர்முலை ஊண் பிள்ளையாய் ஒருகால் *
பெரு நிலம் விழுங்கி அது உமிழ்ந்த
வாயனாய் * மாலாய் ஆலிலை வளர்ந்து *
மணி முடி வானவர் தமக்குச்
சேயனாய் ** அடியேற்கு அணியனாய் வந்து *
என் சிந்தையுள் வெந்துயர் அறுக்கும் *
ஆயனாய் அன்று குன்றம் ஒன்று எடுத்தான் *
அரங்கமா நகர் அமர்ந்தானே 9

** பொன்னும் மாமணியும் முத்தமும் சுமந்து *
பொருதிரை மாநதி புடை சூழ்ந்து *
அன்னம் மாடுலவும் அலை புனல் சூழ்ந்த *
அரங்க மா நகர் அமர்ந்தானை **
மன்னு மா மாட மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் *
பன்னிய பனுவல் பாடுவார் * நாளும்
பழவினை பற்றறுப்பாரே 10

அடிவரவு: பண்டை இந்திரன் மன்னு மாயிரும் எங்ஙனே ஆயிரம் சுரி ஊழி பேயினார் பொன்னும் ஏழை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

எட்டாம் திருமொழி - ஏழை ஏதலன்
திருவரங்கம் 5

** ஏழை ஏதலன் கீழ் மகன் என்னாது
இரங்கி * மற்று அவற்கு இன்னருள் சுரந்து *
மாழை மான் மட நோக்கி உன் தோழி *
உம்பி எம்பி என்று ஒழிந்திலை ** உகந்து
தோழன் நீ எனக்கு இங்கு ஒழி என்ற
சொற்கள் வந்து * அடியேன் மனத்து இருந்திட *
ஆழி வண்ண! நின் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 1

வாத மாமகன் மற்கடம் விலங்கு *
மற்றோர் சாதி என்று ஒழிந்திலை * உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச் * செய்
தகவினுக்கு இல்லை கைம்மாறு என்று **
கோதில் வாய்மையினாயொடும் உடனே *
உண்பன் நான் என்ற ஓண்பொருள் * எனக்கும்
ஆதல் வேன்டும் என்று அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 2

கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை *
வைகு தாமரை வாங்கிய வேழம் *
முடியும் வண்ணம் ஓர் முழு வலி முதலை
பற்ற * மற்று அது நின் சரண் நினைப்ப **
கொடிய வாய் விலங்கின் உயிர் மலங்கக் *
கொண்ட சீற்றம் ஒன்றுண்டு உளது அறிந்து * உன்
அடியனேனும் வந்து அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 3

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம் *
வெருவி வந்து நின் சரண் எனச் சரணா *
நெஞ்சில் கொண்டு நின் அஞ்சிறைப் பறவைக்கு *
அடைக்கலம் கொடுத்து அருள் செய்தது அறிந்து **
வெஞ்சொல் ஆளர்கள் நமன் தமர் கடியர் *
கொடிய செய்வன உள * அதற்கு அடியேன்
அஞ்சி வந்து நின் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 4

மாக மாநிலம் முழுவதும் வந்து இறைஞ்சும் *
மலர் அடி கண்ட மாமறையாளன் *
தோகை மாமயில் அன்னவர் இன்பம் *
துற்றிலாமையில் அத்த! இங்கு ஒழிந்து **
போகம் நீ எய்திப் பின்னும் நம் இடைக்கே *
போதுவாய் என்ற பொன் அருள் * எனக்கும்
ஆக வேண்டும் என்று அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 5

மன்னு நான்மறை மாமுனி பெற்ற
மைந்தனை * மதியாத வெங்கூற்றம்
தன்னை அஞ்சி * நின் சரண் எனச் சரணாய்த் *
தகவில் காலனை உக முனிந்து ஒழியா **
பின்னை என்றும் நின் திருவடி பிரியா வண்ணம் *
எண்ணிய பேரருள் * எனக்கும்
அன்னது ஆகும் என்று அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 6

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும் *
உனக்கு முன் தந்த அந்தணன் ஒருவன் *
காதல் என் மகன் புகல் இடம் காணேன் *
கண்டு நீ தருவாய் எனக்கென்று **
கோதில் வாய்மையினான் உனை வேண்டிய *
குறை முடித்து அவன் சிறுவனைக் கொடுத்தாய் *
ஆதலால் வந்து உன் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 7

வேத வாய்மொழி அந்தணன் ஒருவன் *
எந்தை! நின் சரண் என்னுடை மனைவி *
காதல் மக்களைப் பயத்தலும் காணாள் *
கடியதோர் தெய்வம் கொண்டு ஒளிக்கும் என்றழைப்ப **
ஏதலார் முன்னே இன்னருள் அவற்குச்
செய்து * உன் மக்கள் மற்றிவர் என்று கொடுத்தாய் *
ஆதலால் வந்து உன் அடியிணை அடைந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 8

** துளங்கு நீண்முடி அரசர் தம் குரிசில் *
தொண்டை மன்னவன் திண் திறல் ஒருவற்கு *
உளங்கொள் அன்பினோடு இன்னருள் சுரந்து *
அங்கு ஓடு நாழிகை ஏழுடன் இருப்ப **
வளங்கொள் மந்திரம் மற்று அவற்கு அருளிச்
செய்தவாறு * அடியேன் அறிந்து * உலகம்
அளந்த பொன்னடியே அடைந்து உய்ந்தேன் *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே! 9

** மாடமாளிகை சூழ் திருமங்கை
மன்னன் * ஒன்னலர் தங்களை வெல்லும் *
ஆடல் மா வலவன் கலி கன்றி *
அணிபொழில் திருவரங்கத்து அம்மானை **
நீடு தொல் புகழ் ஆழி வல்லானை *
எந்தையை நெடுமாலை நினைந்த *
பாடல் பத்து இவை பாடுமின் தொண்டீர்! *
பாட நும்மிடைப் பாவம் நில்லாவே 10

அடிவரவு: ஏழை வாதம் கடி நஞ்சு மன்னு ஓது வேதம் துளங்கு மாடம் கை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - கையிலங்கு
திருப்பேர்நகர்

** கை இலங்கு ஆழி சங்கன் * கருமுகில் திருநிறத்தன் *
பொய் இலன் மெய்யன் தன் தாள் * அடைவரேல் அடிமை ஆக்கும் **
செய் அலர் கமலம் ஓங்கு * செறி பொழில் தென்திருப்பேர் *
பை அரவணையான் நாமம் * பரவி நான் உய்ந்தவாறே! 1

வங்கம் ஆர் கடல்கள் ஏழும் * மலையும் வானகமும் மற்றும் *
அங்கண் மா ஞாலம் எல்லாம் * அமுது செய்து உமிழ்ந்த எந்தை **
திங்கள் மாமுகில் அணவு * செறி பொழில் தென்திருப்பேர் *
எங்கள் மால் இறைவன் நாமம் * ஏத்தி நான் உய்ந்தவாறே! 2

ஒருவனை உந்திப் பூ மேல் * ஓங்குவித்து ஆகம் தன்னால் *
ஒருவனைச் சாபம் நீக்கி * உம்பர் ஆள் என்று விட்டான் **
பெருவரை மதிள்கள் சூழ்ந்த * பெருநகர் அரவணை மேல் *
கருவரை வண்ணன் தென்பேர் * கருதி நான் உய்ந்தவாறே! 3

ஊன் அமர் தலை ஒன்று ஏந்தி * உலகெலாம் திரியும் ஈசன் *
ஈன் அமர் சாபம் நீக்காய் என்ன * ஒண் புனலை ஈந்தான் **
தேன் அமர் பொழில்கள் சூழ்ந்த * செறி வயல் தென்திருப்பேர் *
வானவர் தலைவன் நாமம் * வாழ்த்தி நான் உய்ந்தவாறே! 4

வக்கரன் வாய் முன் கீண்ட * மாயனே! என்று வானோர்
புக்கு * அரண் தந்து அருளாய் என்னப் * பொன் ஆகத்தானை **
நக்கரி உருவமாகி * நகம் கிளர்ந்து இடந்து உகந்த *
சக்கரச் செல்வன் தென்பேர்த் * தலைவன் தாள் அடைந்து உய்ந்தேனே 5

விலங்கலால் கடல் அடைத்து * விளங்கிழை பொருட்டு * வில்லால்
இலங்கை மாநகர்க்கு இறைவன் * இருபது புயம் துணித்தான் **
நலங்கொள் நான்மறை வல்லார்கள் * ஒத்தொலி ஏத்தக் கேட்டு *
மலங்கு பாய் வயல் திருப்பேர் * மருவி நான் வாழ்ந்தவாறே! 6

வெண்ணெய் தான் அமுது செய்ய * வெகுண்டு மத்தாய்ச்சி ஓச்சி *
கண்ணியர் குறுங்கயிற்றால் * கட்ட வெட்டென்று இருந்தான் **
திண்ண மாமதிள்கள் சூழ்ந்த * தென்திருப்பேருள் * வேலை
வண்ணனார் நாமம் நாளும் * வாய் மொழிந்து உய்ந்தவாறே! 7

அம்பொனார் உலகம் ஏழும் அறிய * ஆய்ப்பாடி தன்னுள் *
கொம்பனார் பின்னை கோலம் * கூடுதற்கு ஏறு கொன்றான் **
செம்பொனார் மதிள்கள் சூழ்ந்த * தென்திருப்பேருள் மேவும் *
எம்பிரான் நாமம் நாளும் * ஏத்தி நான் உய்ந்தவாறே! 8

நால் வகை வேதம் ஐந்து வேள்வி * ஆறங்கம் வல்லார் *
மேலை வானவரில் மிக்க * வேதியர் ஆதி காலம் **
சேல் உகள் வயல் திருப்பேர்ச் * செங்கண் மாலோடும் வாழ்வார் *
சீல மா தவத்தர் சிந்தை ஆளி * என் சிந்தையானே 9

** வண்டறை பொழில் திருப்பேர் * வரி அரவணையில் பள்ளி
கொண்டு * உறைகின்ற மாலைக் * கொடி மதிள் மாட மங்கை **
திண்திறல் தோள் கலியன் * செஞ்சொலால் மொழிந்த மாலை *
கொண்டிவை பாடி ஆடக் * கூடுவர் நீள் விசும்பே 10

அடிவரவு: கை வங்கம் ஒருவனை ஊன் வக்கரன் விலங்கலால் வெண்ணெய் அம்பொன் நால் வண்டறை தீதறு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஐந்தாம் பத்து

பத்தாம் திருமொழி - தீதறு
திருநந்திபுரவிண்ணகரம்

** தீதறு நிலத்தொடு எரி காலினொடு *
        நீர்கெழு விசும்பும் அவையாய் *
மாசறு மனத்தினொடு உறக்கமொடு இறக்கை *
        அவை ஆய பெருமான் **
தாய் செற உளைந்து தயிர் உண்டு குடமாடு *
        தடமார்வர் தகை சேர் *
நாதன் உறைகின்ற நகர் *
        நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 1

உய்யும் வகை உண்டு சொன செய்யில் *
உலகேழும் ஒழியாமை முன நாள் *
மெய்யின் அளவே அமுது செய்ய வல *
ஐயன் அவன் மேவு நகர் தான் **
மைய வரிவண்டு மது உண்டு கிளையோடு *
மலர் கிண்டி அதன் மேல் *
நைவளம் நவிற்று பொழில் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 2

உம்பர் உலகேழு கடல் ஏழு மலை ஏழும் *
ஒழியாமை முன நாள் *
தம் பொன் வயிறு ஆரளவும் உண்டு அவை உமிழ்ந்த *
தடமார்வர் தகை சேர் **
வம்பு மலர்கின்ற பொழில் பைம்பொன் வரு தும்பி மணி *
கங்குல் வயல் சூழ் *
நம்பன் உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 3

பிறையின் ஒளி எயிறிலக முறுகி எதிர்
பொருதும் என * வந்த அசுரர் *
இறைகள் அவை நெறு நெறன வெறிய அவர்
வயிறழல * நின்ற பெருமான் **
சிறை கொள் மயில் குயில் பயில மலர்கள்
உக அளி முரல * அடிகொள் நெடு மா *
நறை செய் பொழில் மழை தவழும் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 4

மூள எரி சிந்தி முனிவெய்தி அமர் செய்தும்
என * வந்த அசுரர் *
தோளும் அவர் தாளும் முடியோடு பொடியாக *
நொடியாம் அளவு எய்தான் **
வாளும் வரி வில்லும் வளை ஆழி கதை
சங்கம் இவை * அங்கை உடையான் *
நாளும் உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 5

தம்பியொடு தாம் ஒருவர் தன் துணைவி
காதல் * துணையாக முன நாள் *
வெம்பி எரி கானகம் உலாவும் அவர் தாம் *
இனிது மேவு நகர் தான் **
கொம்பு குதி கொண்டு குயில் கூவ மயில்
ஆலும் * எழிலார் புறவு சேர் *
நம்பி உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 6

தந்தை மனம் உந்து துயர் நந்த இருள்
வந்த விறல் * நந்தன் மதலை *
எந்தை இவன் என்று அமரர் கந்த மலர் கொண்டு
தொழ * நின்ற நகர் தான் **
மந்த முழவோசை மழையாக எழு கார் *
மயில்கள் ஆடு பொழில் சூழ் *
நந்தி பணி செய்த நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 7

எண்ணில் நினைவு எய்தி இனி இல்லை இறை
என்று * முனியாளர் திரு ஆர் *
பண்ணில் மலி கீதமொடு பாடி அவர்
ஆடலொடு * கூட எழில் ஆர் **
மண்ணில் இது போல நகர் இல்லை என *
வானவர்கள் தாம் மலர்கள் தூய் *
நண்ணி உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 8

வங்க மலி பௌவம் அது மா முகடின்
உச்சி புக * மிக்க பெருநீர் *
அங்கம் அழியார் அவனது ஆணை தலை
சூடும் * அடியார் அறிதியேல் **
பொங்கு புனல் உந்து மணி கங்குல் இருள்
சீறும் ஒளி * எங்கும் உளதால் *
நங்கள் பெருமான் உறையும் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 9

** நறை செய் பொழில் மழை தவழும் *
நந்திபுர விண்ணகரம் நண்ணி உறையும் *
உறை கொள் புகர் ஆழி சுரி சங்கம் *
அவை அங்கை உடையானை ** ஒளி சேர்
கறை வளரும் வேல் வல்ல * கலியன் ஒலி
மாலை இவை ஐந்தும் ஐந்தும் *
முறையில் இவை பயில வல அடியவர்கள்
கொடுவினைகள் * முழுதகலுமே 10

அடிவரவு: தீதறு உய்யும் உம்பர் பிறை மூள தம்பியொடு தந்தை எண்ணில் வங்கம் நறைசெய் வண்டு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

ஆறாம் பத்து

முதல் திருமொழி - வண்டுணும்
திருவிண்ணகர் 1

** வண்டுணு நறுமலர் இண்டை கொண்டு * பண்டை
நம் வினை கெட என்று * அடி மேல்
தொண்டரும் அமரரும் பணிய நின்று *
அங்கு அண்டமொடு அகல் இடம் அளந்தவனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 1

அண்ணல் செய்து அலை கடல் கடைந்து * அதனுள்
கண் நுதல் நஞ்சுண்ணக் கண்டவனே! *
விண்ணவர் அமுதுண அமுதில் வரும் *
பெண்ணமுது உண்ட எம்பெருமானே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 2

குழல் நிற வண்ண! நின் கூறு கொண்ட *
தழல் நிற வண்ணன் நண்ணார் நகரம்
விழ * நனி மலை சிலை வளைவு செய்து *
அங்கு அழல் நிற அம்பது ஆனவனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 3

நிலவொடு வெய்யில் நிலவிரு சுடரும் *
உலகமும் உயிர்களும் உண்டு ஒருகால் *
கலை தரு குழவியின் உரு வினையாய் *
அலைகடல் ஆலிலை வளர்ந்தவனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 4

பார் எழு கடல் எழு மலை எழுமாய்ச் *
சீர் கெழும் இவ்வுலகு ஏழும் எல்லாம் *
ஆர் கெழு வயிற்றினில் அடக்கி நின்று *
அங்கோர் எழுத்தோர் உரு ஆனவனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 5

கார் கெழு கடல்களும் மலைகளுமாய் *
ஏர் கெழும் உலகமும் ஆகி * முத
லார்களும் அறிவரு நிலையினை ஆய்ச் *
சீர் கெழு நான்மறை ஆனவனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 6

உருக்குறு நறுநெய் கொண்டார் அழலில் *
இருக்குறும் அந்தணர் சந்தியின் வாய் *
பெருக்கமொடு அமரர்கள் அமர நல்கும் *
இருக்கினில் இன்னிசை ஆனவனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 7

காதல் செய்து இளையவர் கலவி தரும் *
வேதனை வினை அது வெருவுதலாம் *
ஆதலின் உனதடி அணுகுவன் நான் *
போதலார் நெடு முடிப் புண்ணியனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 8

சாதலும் பிறத்தலும் என்று இவற்றைக் * காதல்
செய்யாது உன கழல் அடைந்தேன் *
ஓதல் செய் நான்மறை ஆகி * உம்பர்
ஆதல் செய் மூவுரு ஆனவனே! **
ஆண்டாய்! உனைக் காண்பதோர் *
அருள் எனக்கு அருளுதியேல் *
வேண்டேன் மனை வாழ்க்கையை *
விண்ணகர் மேயவனே! 9

** பூ மரு பொழில் அணி * விண்ணகர் மேல் *
காமரு சீர்க் * கலி கன்றி சொன்ன **
பா மரு தமிழ் இவை * பாட வல்லார் *
வாமனன் அடி இணை * மருவுவரே 10

அடிவரவு: வண்டு அண்ணல் குழல் நிலவோடு பார் கார் உருக்குறு காதல் சாதல் பூமரு பொறுத்தேன்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

இரண்டாம் திருமொழி - பொறுத்தேன்
திருவிண்ணகர் 2

** பொறுத்தேன் புன் சொல் நெஞ்சில் * பொருள் இன்பம் என இரண்டும்
இறுத்தேன் * ஐம்புலன்கள் கடனாயின * வாயிலொட்டி
அறுத்தேன் ** ஆர்வச் செற்றம் அவை தன்னை * மனத்து அகற்றி
வெறுத்தேன் * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 1

மறந்தேன் உன்னை முன்னம் * மறந்த மதியின் மனத்தால் *
இறந்தேன் எத்தனையும் * அதனால் இடும்பைக் குழியில் **
பிறந்தே எய்த்து ஒழிந்தேன் * பெருமான்! திருமார்பா! *
சிறந்தேன் நின் அடிக்கே * திருவிண்ணகர் மேயவனே! 2

மானேய் நோக்கியர் தம் * வயிற்றுக் குழியில் உழைக்கும் *
ஊனேர் ஆக்கை தன்னை * உதவாமை உணர்ந்து உணர்ந்து **
வானே! மாநிலமே! * வந்து உவந்து என் மனத்து இருந்த
தேனே! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 3

பிறிந்தேன் பெற்ற மக்கள் * பெண்டிர் என்றிவர் பின் உதவாது
அறிந்தேன் * நீ பணித்த அருள் என்னும் * ஒள் வாள் உருவி
எறிந்தேன் ** ஐம்புலன்கள் இடர் தீர * எறிந்து வந்து
செறிந்தேன் * நின் அடிக்கே * திருவிண்ணகர் மேயவனே! 4

பாண் தேன் வண்டறையும் குழலார்கள் * பல்லாண்டு இசைப்ப *
ஆண்டார் வையம் எல்லாம் * அரசாகி ** முன் ஆண்டவரே
மாண்டார் என்று வந்தார் அந்தோ! * மனை வாழ்க்கை தன்னை
வேண்டேன் * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 5

கல்லா ஐம்புலன்கள் அவை * கண்டவாறு செய்ய கில்லேன் *
மல்லா! மல் அமருள் மல்லர் மாள * மல் அடர்த்த
மல்லா! ** மல்லல் அம்சீர் * மதிள் நீர் இலங்கை அழித்த
வில்லா! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 6

வேறா யான் இரந்தேன் * வெகுளாது மனக்கொள் எந்தாய்! *
ஆறா வெந்நரகத்து * அடியேனை இடக் கருதி **
கூறா ஐவர் வந்து குமைக்கக் * குடி விட்டவரை *
தேறாது உன் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 7

தீ வாய் வல்வினையார் * உடன் நின்று சிறந்தவர் போல் *
மேவா வெந்நரகத்து * இட உற்று விரைந்து வந்தார் **
மூவா வானவர் தம் முதல்வா! * மதி கோள் விடுத்த
தேவா! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 8

போதார் தாமரையாள் * புலவிக் குல வானவர் தம்
கோதா! * கோதில் செங்கோல் * குடை மன்னர் இடை நடந்த
தூதா! * தூமொழியாய்! சுடர் போல் * என் மனத்து இருந்த
வேதா! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 9

** தேன் ஆர் பூம் புறவில் * திருவிண்ணகர் மேயவனை *
வான் ஆரும் மதிள் சூழ் * வயல் மங்கையர் கோன் ** மருவார்
ஊன் ஆர் வேல் கலியன் * ஒலி செய் தமிழ் மாலை வல்லார் *
கோனாய் வானவர் தம் * கொடி மாநகர் கூடுவரே 10

அடிவரவு: பொறுத்தேன் மறந்தேன் மானேய் பிறிந்தேன் பாண் கல்லா வேறா தீவாய் போதார் தேனார் துறப்பேன்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

மூன்றாம் திருமொழி - துறப்பேன்
திருவிண்ணகர் 3

** துறப்பேன் அல்லேன் * இன்பம் துறவாது * நின் உருவம்
மறப்பேன் அல்லேன் * என்றும் மறவாது ** யான் உலகில்
பிறப்பேனாக எண்ணேன் * பிறவாமைப் பெற்றது * நின்
திறத்தேன் ஆதன்மையால் * திருவிண்ணகரானே! 1

துறந்தேன் ஆர்வச் செற்றச் * சுற்றம் துறந்தமையால் *
சிறந்தேன் நின் அடிக்கே * அடிமை திருமாலே! **
அறம் தானாய்த் திரிவாய்! * உன்னை என் மனத்தகத்தே *
திறம்பாமல் கொண்டேன் * திருவிண்ணகரானே! 2

மானேய் நோக்கு நல்லார் * மதி போல் முகத்து உலவும் *
ஊனேய் கண் வாளிக்கு * உடைந்து ஓட்டந்து உன் அடைந்தேன் **
கோனே! குறுங்குடியுள் குழகா! * திருநறையூர்த்
தேனே! * வருபுனல் சூழ் * திருவிண்ணகரானே! 3

சாந்தேந்து மென்முலையார் * தடந்தோள் புணர் இன்ப வெள்ளத்து
ஆழ்ந்தேன் * அருநரகத்து அழுந்தும் * பயன் படைத்தேன் **
போந்தேன் புண்ணியனே! * உன்னை எய்தி என் தீவினைகள்
தீர்ந்தேன் * நின் அடைந்தேன் * திருவிண்ணகரானே! 4

மற்றோர் தெய்வம் எண்ணேன் * உன்னை என் மனத்து வைத்துப்
பெற்றேன் * பெற்றதுவும் * பிறவாமை எம்பெருமான்! **
வற்றா நீள் கடல் சூழ் * இலங்கை இராவணனைச்
செற்றாய்! * கொற்றவனே! * திருவிண்ணகரானே! 5

மை ஒண்கருங்கடலும் * நிலனும் மணி வரையும் *
செய்ய சுடர் இரண்டும் * இவையாய நின்னை ** நெஞ்சில்
உய்யும் வகை உணர்ந்தேன் * உண்மையால் இனி * யாது மற்றோர்
தெய்வம் பிறிது அறியேன் * திருவிண்ணகரானே! 6

வேறே கூறுவது உண்டு * அடியேன் விரித்து உரைக்கும்
ஆறே * நீ பணியாது அடை * நின் திருமனத்து **
கூறேன் நெஞ்சு தன்னால் * குணம் கொண்டு * மற்றோர் தெய்வம்
தேறேன் உன்னை அல்லால் * திருவிண்ணகரானே! 7

முளிந்து ஈந்த வெங்கடத்து * மூரிப் பெரும் களிற்றால் *
விளிந்தீந்த மாமரம் போல் * வீழ்ந்தாரை நினையாதே **
அளிந்து ஓர்ந்த சிந்தை * நின் பால் அடியேற்க்கு * வான் உலகம்
தெளிந்தே என்று எய்துவது? * திருவிண்ணகரானே! 8

சொல்லாய் திருமார்வா! * உனக்காகித் தொண்டு பட்ட
நல்லேனை * வினைகள் நலியாமை * நம்பு நம்பீ **
மல்லா! குடமாடி! * மதுசூதனே! * உலகில்
செல்லா நல் இசையாய்! * திருவிண்ணகரானே! 9

** தாரார் மலர்க் கமலத் * தடம் சூழ்ந்த தண் புறவில் *
சீரார் நெடு மறுகில் * திருவிண்ணகரானை **
காரார் புயல் தடக்கைக் * கலியன் ஒலி மாலை *
ஆரார் இவை வல்லார் * அவர்க்கு அல்லல் நில்லாவே 10

அடிவரவு: துறப்பேன் துறந்தேன் மானேய் சாந்து மற்றோர் மை வேறே முளிந்தீந்த சொல்லாய் தாரார் கண்ணும்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

நான்காம் திருமொழி - கண்ணும்
திருநறையூர் 1

** கண்ணும் சுழன்று * பீளையோடு ஈளை வந்து ஏங்கினால் *
பண் இன்மொழியார் * பைய நடமின் என்னாத முன் **
விண்ணும் மலையும் * வேதமும் வேள்வியும் ஆயினான் *
நண்ணு நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 1

கொங்குண் குழலார் * கூடி இருந்து சிரித்து * நீர்
இங்கு என்? இருமி * எம்பால் வந்தது என்று இகழாத முன் **
திங்கள் எரி கால் * செஞ்சுடர் ஆயவன் தேசுடை *
நங்கள் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 2

கொங்கார் குழலார் * கூடி இருந்து சிரித்து * எம்மை
எங்கோலம் ஐயா! * என்? இனிக் காண்பது என்னாத முன் **
செங்கோல் வலவன் * தான் பணிந்து ஏத்தித் திகழும் ஊர் *
நங்கோன் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 3

கொம்பும் அரவமும் * வல்லியும் வென்ற நுண்ணேர் இடை *
வம்புண் குழலார் * வாசல் அடைத்து இகழாத முன் **
செம்பொன் கமுகு இனம் தான் * கனியும் செழும் சோலை சூழ் *
நம்பனறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 4

விலங்கும் கயலும் * வேலும் ஒண் காவியும் வென்ற கண் *
சலம் கொண்ட சொல்லார் தாங்கள் * சிரித்து இகழாத முன் **
மலங்கும் வராலும் * வாளையும் பாய் வயல் சூழ் தரு *
நலங்கொள் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 5

மின்னேர் இடையார் * வேட்கையை மாற்றி இருந்து *
என் நீர் இருமி * எம்பால் வந்தது? என்று இகழாத முன் **
தொன்னீர் இலங்கை மலங்க * விலங்கு எரி ஊட்டினான் *
நன்னீர் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 6

வில்லேர் நுதலார் * வேட்கையை மாற்றிச் சிரித்து * இவன்
பொல்லான் திரைந்தான் என்னும் * புறன் உறை கேட்பதன் முன் **
சொல்லார் மறை நான்கு ஓதி * உலகில் நிலாயவர் *
நல்லார் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 7

வாள் ஒண்கண் நல்லார் தாங்கள் * மதனன் என்றார் தம்மை *
கேண்மின்கள் ஈளையோடு * ஏங்கு கிழவன் என்னாத முன் **
வேள்வும் விழவும் * வீதியில் என்றும் அறாத ஊர் *
நாளும் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 8

கனி சேர்ந்து இலங்கு நல் வாயவர் * காதன்மை விட்டிட *
குனி சேர்ந்து உடலம் * கோலில் தளர்ந்து இளையாத முன் **
பனி சேர் விசும்பில் * பால் மதி கோள் விடுத்தான் இடம் *
நனி சேர் நறையூர் * நாம் தொழுதும் எழு நெஞ்சமே! 9

** பிறை சேர் நுதலார் * பேணுதல் நம்மை இலாத முன் *
நறை சேர் பொழில் சூழ் * நறையூர் தொழு நெஞ்சமே! என்ற **
கறையார் நெடுவேல் மங்கையர் கோன் * கலிகன்றி சொல் *
மறவாது உரைப்பவர் * வானவர்க்கு இன்னரசு ஆவரே 10

அடிவரவு: கண்ணும் கொங்குண் கொங்கார் கொம்பு விலங்கு மின் வில் வாள் கனி பிறை கலங்க

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

ஐந்தாம் திருமொழி - கலங்க
திருநறையூர் 2

** கலங்க முந்நீர் கடைந்து * அமுதம் கொண்டு * இமையோர்
துளங்கல் தீர * நல்கு சோதிச் சுடர் ஆய **
வலங்கை ஆழி இடங்கைச் சங்கம் * உடையான் ஊர் *
நலங்கொள் வாய்மை * அந்தணர் வாழும் நறையூரே 1

முனை ஆர் சீயம் ஆகி * அவுணன் முரண் மார்வம் *
புனை வாள் உகிரால் * போழ்பட ஈர்ந்த புனிதன் ஊர் **
சினை ஆர் தே மாம் * செந்தளிர் கோதிக் குயில் கூவும் *
நனை ஆர் சோலை சூழ்ந்து * அழகாய நறையூரே 2

ஆனைப் புரவித் * தேரொடு காலாள் அணி கொண்ட *
சேனைத் தொகையைச் சாடி * இலங்கை செற்றான் ஊர் **
மீனைத் தழுவி வீழ்ந்து எழும் * மள்ளர்க்கு அலமந்து *
நானப் புதலில் * ஆமை ஒளிக்கும் நறையூரே 3

உறியார் வெண்ணெய் உண்டு * உரலோடும் கட்டுண்டு *
வெறியார் கூந்தல் * பின்னை பொருட்டு ஆன் வென்றான் ஊர் **
பொறியார் மஞ்ஞை * பூம்பொழில் தோறும் நடம் ஆட *
நறு நாண்மலர் மேல் * வண்டு இசை பாடும் நறையூரே 4

விடை ஏழ் வென்று * மென்தோள் ஆய்ச்சிக்கு அன்பனாய் *
நடையால் நின்ற * மருதம் சாய்த்த நாதன் ஊர் **
பெடையோடு அன்னம் * பெய்வளையார் தம் பின் சென்று *
நடையோடு இயலி * நாணி ஒளிக்கும் நறையூரே 5

பகு வாய் வன்பேய் * கொங்கை சுவைத்து ஆருயிர் உண்டு *
புகு வாய் நின்ற * போதகம் வீழப் பொருதான் ஊர் **
நெகு வாய் நெய்தல் * பூ மது மாந்திக் கமலத்தின் *
நகு வாய் மலர் மேல் * அன்னம் உறங்கும் நறையூரே 6

முந்து நூலும் முப்புரி நூலும் * முன் ஈந்த *
அந்தணாளன் பிள்ளையை * அஞ்ஞான்று அளித்தான் ஊர் **
பொந்தில் வாழும் பிள்ளைக்காகிப் * புள் ஓடி *
நந்து வாரும் * பைம்புனல் வாவி நறையூரே 7

வெள்ளைப் புரவித் தேர் * விசயற்காய் விறல் வியூகம்
விள்ள * சிந்துக் கோன் விழ* ஊர்ந்த விமலன் ஊர் **
கொள்ளைக் கொழு மீன் உண் * குருகு ஓடிப் பெடையோடும் *
நள்ளக் கமலத் * தேறல் உகுக்கும் நறையூரே 8

** பாரை ஊரும் பாரம் தீரப் * பார்த்தன் தன் *
தேரை ஊரும் * தேவ தேவன் சேரும் ஊர் **
தாரை ஊரும் * தண்தளிர் வேலி புடை சூழ *
நாரை ஊரும் * நல் வயல் சூழ்ந்த நறையூரே 9

** தாமத் துளப * நீள் முடி மாயன் தான் நின்ற *
நாமத் திரள் மாமாளிகை சூழ்ந்த * நறையூர் மேல் **
காமக் கதிர் வேல் வல்லான் * கலியன் ஒலி மாலை *
சேமத் துணையாம் * செப்பும் அவர்க்குத் திருமாலே 10

அடிவரவு: கலங்க முனை ஆனை உறியார் விடை பகுவாய் முந்து வெள்ளை பாரை தாமம் அம்பரம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

ஆறாம் திருமொழி - அம்பரமும்
திருநறையூர் 3

** அம்பரமும் பெருநிலனும் திசைகள் எட்டும் *
அலைகடலும் குலவரையும் உண்ட கண்டன் *
கொம்பமரும் வட மரத்தின் இலை மேல் * பள்ளி
கூடினான் திருவடியே கூட கிற்பீர்! **
வம்பவிழும் செண்பகத்தின் வாசம் உண்டு *
மணிவண்டு வகுளத்தின் மலர் மேல் வைகு *
செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில் *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 1

கொழுங்கயலாய் நெடு வெள்ளம் கொண்ட காலம் *
குலவரையின் மீதோடி அண்டத்து அப்பால் *
எழுந்து இனிது விளையாடும் ஈசன் எந்தை *
இணையடிக் கீழ் இனிது இருப்பீர்! இனவண்டாலும் **
உழும் செறுவில் மணி கொணர்ந்து கரை மேல் சிந்தி *
உலகெல்லாம் சந்தனமும் அகிலும் கொள்ள *
செழும் பொன்னி வளம் கொடுக்கும் சோழன் சேர்ந்த *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 2

பவ்வ நீர் உடை ஆடையாகச் சுற்றிப் *
பார் அகலம் திருவடியாப் பவனம் மெய்யா *
செவ்வி மாதிரம் எட்டும் தோளா * அண்டம்
திருமுடியா நின்றான் பால் செல்ல கிற்பீர் **
கவ்வை மாகளிறு உந்தி வெண்ணியேற்றக் *
கழல் மன்னர் மணி முடி மேல் காகம் ஏற *
தெய்வ வாள் வலம் கொண்ட சோழன் சேர்ந்த *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 3

பைங்கண் ஆள் அரி உருவாய் வெருவ நோக்கிப் *
பருவரைத் தோள் இரணியனைப் பற்றி வாங்கி *
அங்கை வாள் உகிர் நுதியால் அவனது ஆகம் *
அங்குருதி பொங்குவித்தான் அடிக் கீழ் நிற்பீர்! **
வெங்கண் மாகளிறு உந்தி வெண்ணியேற்ற *
விறல் மன்னர் திறல் அழிய வெம்மா உய்த்த *
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில் *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 4

அன்று உலக மூன்றினையும் அளந்து * வேறோர்
அரி உருவாய் இரணியனது ஆகம் கீண்டு *
வென்று அவனை விண்ணுலகில் செல உய்த்தாற்கு *
விருந்தாவீர்! மேல் எழுந்து விலங்கல் பாய்ந்து **
பொன் சிதறி மணி கொணர்ந்து கரை மேல் சிந்திப் *
புலம் பரந்து நிலம் பரக்கும் பொன்னி நாடன் *
தென் தமிழன் வட புலக் கோன் சோழன் சேர்ந்த *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 5

தன்னாலே தன் உருவம் பயந்த தானாய்த் *
தயங்கொளி சேர் மூவுலகும் தானாய் வானாய் *
தன்னாலே தன் உருவில் மூர்த்தி மூன்றாய்த் *
தான் ஆயன் ஆயினான் சரண் என்று உய்வீர்! **
மின்னாடு வேல் ஏந்து விளந்தை வேளை *
விண்ணேறத் தனி வேல் உய்த்து உலகம் ஆண்ட *
தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 6

முலைத் தடத்த நஞ்சுண்டு துஞ்சப் பேய்ச்சி *
முது துவரைக் குலபதியாக் காலிப் பின்னே *
இலைத் தடத்த குழல் ஊதி ஆயர் மாதர் *
இன வளை கொண்டான் அடிக் கீழ் எய்த கிற்பீர்! **
மலைத் தடத்த மணி கொணர்ந்து வையம் உய்ய *
வளம் கொடுக்கும் வரு புனல் அம்பொன்னி நாடன் *
சிலைத் தடக்கைக் குலச் சோழன் சேர்ந்த கோயில் *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 7

முருக்கு இலங்கு கனித் துவர் வாய்ப் பின்னை கேள்வன் *
மன் எல்லாம் முன் அவியச் சென்று * வென்றிச்
செருக் களத்துத் திறல் அழியச் செற்ற வேந்தன் *
சிரம் துணித்தான் திருவடி நும் சென்னி வைப்பீர்! **
இருக்கிலங்கு திருமொழி வாய் எண்தோள் ஈசற்கு *
எழில் மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட *
திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்த கோயில் *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 8

தாராளன் தண்ணரங்க வாளன் * பூ மேல்
தனி ஆளன் முனியாளர் ஏத்த நின்ற
பேராளன் * ஆயிரம் பேர் உடைய ஆளன் *
பின்னைக்கு மணவாளன் பெருமை கேட்பீர்! **
பாராளர் அவர் இவர் என்று அழுந்தை ஏற்ற *
படை மன்னர் உடல் துணியப் பரிமா உய்த்த *
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில் *
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே 9

** செம்மொழி வாய் நால் வேத வாணர் வாழும் *
திருநறையூர் மணிமாடச் செங்கண்மாலை *
பொய்ம்மொழி ஒன்றில்லாத மெய்ம்மை ஆளன் *
புல மங்கைக் குல வேந்தன் புலமை ஆர்ந்த **
அம்மொழி வாய்க் கலிகன்றி இன்பப் பாடல் *
பாடுவார் வியன் உலகில் நமனார் பாடி *
வெம்மொழி கேட்டு அஞ்சாதே மெய்ம்மை சொல்லில் *
விண்ணவர்க்கு விருந்தாகும் பெருந்தக்கோரே 10

அடிவரவு: அம்பரம் கொழு பவ்வம் பைங்கண் அன்று தன்னாலே முலை முருக்கு தாராளன் செம்மொழி ஆளும்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

ஏழாம் திருமொழி - ஆளும் பணியும்
திருநறையூர் 4

** ஆளும் பணியும் அடியேனைக் கொண்டான் * விண்ட நிசாசரரை *
தோளும் தலையும் துணிவு எய்தச் * சுடு வெஞ்சிலை வாய்ச் சரம் துரந்தான் **
வேளும் சேயும் அனையாரும் * வேற்கணாரும் பயில் வீதி *
நாளும் விழவின் ஒலி ஓவா * நறையூர் நின்ற நம்பியே 1

முனியாய் வந்து மூவெழுகால் * முடி சேர் மன்னர் உடல் துணிய *
தனி வாய் மழுவின் படை ஆண்ட * தாரார் தோளான் வார்புறவில் **
பனி சேர் முல்லை பல் அரும்பப் * பானல் ஒருபால் கண் காட்ட *
நனி சேர் கமலம் முகம் காட்டும் * நறையூர் நின்ற நம்பியே 2

தெள்ளார் கடல் வாய் விட வாய * சின வாள் அரவில் துயில் அமர்ந்து *
துள்ளா வரு மான் வீழ * வாளி துரந்தான் இரந்தான் மாவலி மண் **
புள்ளார் புறவில் பூங்காவி * புலன் கொள் மாதர் கண் காட்ட *
நள் ஆர் கமலம் முகம் காட்டும் * நறையூர் நின்ற நம்பியே 3

ஒளியா வெண்ணெய் உண்டான் என்று * உரலோடு ஆய்ச்சி ஒண்கயிற்றால் *
விளியா ஆர்க்க ஆப்புண்டு * விம்மி அழுதான் மென்மலர் மேல் **
களியா வண்டு கள் உண்ணக் * காமர் தென்றல் அலர் தூற்ற *
நளிர் வாய் முல்லை முறுவலிக்கும் * நறையூர் நின்ற நம்பியே 4

வில்லார் விழவில் வடமதுரை * விரும்பி விரும்பா மல் அடர்த்து *
கல்லார் திரள் தோள் கஞ்சனைக் காய்ந்தான் * பாய்ந்தான் காளியன் மேல் **
சொல்லார் சுருதி முறை ஓதிச் * சோமுச் செய்யும் தொழிலினோர் *
நல்லார் மறையோர் பலர் வாழும் * நறையூர் நின்ற நம்பியே 5

வள்ளி கொழுனன் முதலாய * மக்களோடு முக்கணான்
வெள்கி ஓட * விறல் வாணன் * வியன் தோள் வனத்தைத் துணித்து உகந்தான் **
பள்ளி கமலத்திடைப் பட்ட * பகு வாய் அலவன் முகம் நோக்கி *
நள்ளி ஊடும் வயல் சூழ்ந்த * நறையூர் நின்ற நம்பியே 6

மிடையா வந்த வேல் மன்னர் வீய * விசயன் தேர் கடவி *
குடையா வரை ஒன்று எடுத்து ஆயர் கோவாய் நின்றான் * கூர் ஆழிப்
படையான் ** வேதம் நான்கு ஐந்து வேள்வி * அங்கம் ஆறு இசை ஏழ் *
நடையா வல்ல அந்தணர் வாழ் * நறையூர் நின்ற நம்பியே 7

பந்தார் விரலாள் பாஞ்சாலி * கூந்தல் முடிக்கப் பாரதத்து *
கந்தார் களிற்றுக் கழல் மன்னர் கலங்கச் * சங்கம் வாய் வைத்தான் **
செந்தாமரை மேல் அயனோடு * சிவனும் அனைய பெருமையோர் *
நந்தா வண்கை மறையோர் வாழ் * நறையூர் நின்ற நம்பியே 8

ஆறும் பிறையும் அரவமும் * அடம்பும் சடை மேல் அணிந்து * உடலம்
நீறும் பூசி ஏறூரும் * இறையோன் சென்று குறை இரப்ப **
மாறொன்று இல்லா வாச நீர் * வரை மார்பகலத்து அளித்து உகந்தான் *
நாறும் பொழில் சூழ்ந்து அழகாய * நறையூர் நின்ற நம்பியே 9

** நன்மை உடைய மறையோர் வாழ் * நறையூர் நின்ற நம்பியை *
கன்னி மதிள் சூழ் வயல் மங்கைக் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை **
பன்னி உலகில் பாடுவார் * பாடு சாரா பழ வினைகள் *
மன்னி உலகம் ஆண்டு போய் * வானோர் வணங்க வாழ்வாரே 10

அடிவரவு: ஆளும் முனி தெள்ளார் ஒளியா வில்லார் வள்ளி மிடையா பந்தார் ஆறும் நன்மை மான்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

எட்டாம் திருமொழி - மான்கொண்ட
திருநறையூர் 5

** மான் கொண்ட தோல் * மார்வில் மாணியாய் * மாவலி மண்
தான் கொண்டு * தாளால் அளந்த பெருமானை **
தேன் கொண்ட சாரல் * திருவேங்கடத்தானை *
நான் சென்று நாடி * நறையூரில் கண்டேனே 1

முந்நீரை முன்னாள் * கடைந்தானை * மூழ்த்த நாள்
அந்நீரை மீனாய் * அமைத்த பெருமானை **
தென்னாலி மேய * திருமாலை எம்மானை *
நன்னீர் வயல் சூழ் * நறையூரில் கண்டேனே 2

தூ வாய புள் ஊர்ந்து * வந்து துறை வேழம் *
மூவாமை நல்கி * முதலை துணித்தானை **
தேவாதி தேவனைச் * செங்கமலக் கண்ணானை *
நாவாய் உளானை * நறையூரில் கண்டேனே 3

ஓடா அரியாய் * இரணியனை ஊன் இடந்த *
சேடார் பொழில் சூழ் * திருநீர்மலையானை **
வாடா மலர்த் துழாய் * மாலை முடியானை *
நாள்தோறும் நாடி * நறையூரில் கண்டேனே 4

கல்லார் மதிள் சூழ் * கடி இலங்கைக் கார் அரக்கன் *
வல்லாகம் கீள * வரி வெஞ்சரம் துரந்த
வில்லானை ** செல்வ விபீடணற்கு * வேறாக *
நல்லானை நாடி * நறையூரில் கண்டேனே 5

உம்பர் உலகோடு * உயிர் எல்லாம் உந்தியில் *
வம்பு மலர் மேல் * படைத்தானை மாயோனை **
அம்பு அன்ன கண்ணாள் * அசோதை தன் சிங்கத்தை *
நம்பனை நாடி * நறையூரில் கண்டேனே 6

கட்டேறு நீள் சோலைக் * காண்டவத்தைத் தீ மூட்டி
விட்டானை * மெய்யம் அமர்ந்த பெருமானை **
மட்டேறு கற்பகத்தை * மாதர்க்காய் * வண் துவரை
நட்டானை நாடி * நறையூரில் கண்டேனே 7

மண்ணின் மீ பாரம் கெடுப்பான் * மற மன்னர் *
பண்ணின் மேல் வந்த * படை எல்லாம் பாரதத்து **
விண்ணின் மீது ஏற * விசயன் தேர் ஊர்ந்தானை *
நண்ணி நான் நாடி * நறையூரில் கண்டேனே 8

** பொங்கேறு நீள் சோதிப் * பொன் ஆழி தன்னோடும் *
சங்கேறு கோலத் * தடக்கைப் பெருமானை **
கொங்கேறு சோலைக் * குடந்தைக் கிடந்தானை *
நங்கோனை நாடி * நறையூரில் கண்டேனே 9

** மன்னு மதுரை * வசுதேவர் வாழ் முதலை *
நன்னறையூர் நின்ற நம்பியை ** வம்பவிழ் தார்
கன்னவிலும் தோளான் * கலியன் ஒலி வல்லார் *
பொன் உலகில் வானவர்க்குப் * புத்தேளிர் ஆகுவரே 10

அடிவரவு: மான் முந்நீரை தூவாய ஓடா கல்லார் உம்பர் கட்டேறு மண்ணின் பொங்கு மன்னு பெடை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - பெடை அடர்த்த
திருநறையூர் 6

** பெடை அடர்த்த மடவன்னம் * பிரியாது * மலர்க் கமலம்
மடல் எடுத்து மது நுகரும் * வயல் உடுத்த திருநறையூர் **
முடை அடர்த்த சிரம் ஏந்தி * மூவுலகும் பலி திரிவோன் *
இடர் கெடுத்த திருவாளன் * இணை அடியே அடை நெஞ்சே! 1

கழி ஆரும் கன சங்கம் * கலந்து எங்கும் நிறைந்தேறி *
வழி ஆர முத்து ஈன்று * வளங்கொடுக்கும் திருநறையூர் **
பழி ஆரும் விறல் அரக்கன் * பருமுடிகள் அவை சிதற *
அழல் ஆறும் சரம் துரந்தான் * அடி இணையே அடை நெஞ்சே! 2

சுளை கொண்ட பலங்கனிகள் * தேன் பாய கதலிகளின் *
திளை கொண்ட பழம் கெழுமு * திகழ் சோலைத் திருநறையூர் **
வளை கொண்ட வண்ணத்தன் * பின் தோன்றல் * மூவுலகோடு
அளை வெண்ணெய் உண்டான் தன் * அடி இணையே அடை நெஞ்சே! 3

துன்றோளித் துகிற்படலம் * துன்னி எங்கும் மாளிகை மேல் *
நின்றார வான் மூடும் * நீள் செல்வத் திருநறையூர் **
மன்றாரக் குடம் ஆடி * வரை எடுத்து மழை தடுத்த *
குன்றாரும் திரள் தோளன் * குரைகழலே அடை நெஞ்சே! 4

அகிற்குறடும் சந்தனமும் * அம்பொன்னும் அணிமுத்தும் *
மிகக் கொணர்ந்து திரை உந்து * வியன் பொன்னித் திருநறையூர் **
பகல் கரந்த சுடர் ஆழிப் படையான் * இவ்வுலகேழும் *
புகக் கரந்த திருவயிற்றன் * பொன் அடியே அடை நெஞ்சே! 5

பொன் முத்தும் அரி உகிரும் * புழைக் கைம்மா கரிக்கோடும் *
மின்னத் தண்திரை உந்தும் * வியன் பொன்னித் திருநறையூர் **
மின் ஒத்த நுண்மருங்குல் * மெல்லியலை * திருமார்பில்
மன்னத் தான் வைத்து உகந்தான் * மலர் அடியே அடை நெஞ்சே! 6

சீர் தழைத்த கதிர்ச் செந்நெல் * செங்கமலத்து இடை இடையின் *
பார் தழைத்துக் கரும்பு ஓங்கிப் * பயன் விளைக்கும் திருநறையூர் **
கார் தழைத்த திரு உருவன் * கண்ண பிரான் விண்ணவர் கோன் *
தார் தழைத்த துழாய் முடியன் * தளிர் அடியே அடை நெஞ்சே! 7

** குலை ஆர்ந்த பழுக்காயும் * பசுங்காயும் பாளை முத்தும் *
தலை ஆர்ந்த இளங்கமுகின் * தடஞ்சோலைத் திருநறையூர் **
மலை ஆர்ந்த கோலம் சேர் * மணிமாடம் மிக மன்னி *
நிலை ஆர நின்றான் தன் * நீள் கழலே அடை நெஞ்சே! 8

மறை ஆரும் பெருவேள்விக் * கொழும் புகை போய் வளர்ந்து எங்கும் *
நிறை ஆர வான் மூடும் * நீள் செல்வத் திருநறையூர் **
பிறை ஆரும் சடையானும் * பிரமனும் முன் தொழுது ஏத்த *
இறை ஆகி நின்றான் தன் * இணை அடியே அடை நெஞ்சே! 9

** திண்களக மதிள் புடை சூழ் * திருநறையூர் நின்றானை *
வண்களக நிலவு எறிக்கும் * வயல் மங்கை நகராளன் **
பண்கள் அகம் பயின்ற சீர்ப் * பாடல் இவை பத்தும் வல்லார் *
விண்கள் அகத்து இமையவராய் * வீற்றிருந்து வாழ்வாரே 10

அடிவரவு: பெடை கழி சுளை துன்று அகில் பொன் சீர் குலை மறை திண் கிடந்த

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஆறாம் பத்து

பத்தாம் திருமொழி - கிடந்த நம்பி
திருநறையூர் 7

** கிடந்த நம்பி குடந்தை மேவிக் * கேழலாய் உலகை
இடந்த நம்பி * எங்கள் நம்பி * எறிஞர் அரண் அழிய **
கடந்த நம்பி கடியார் இலங்கை * உலகை ஈரடியால் *
நடந்த நம்பி நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 1

விடம் தான் உடைய அரவம் வெருவச் * செருவில் முன நாள் * முன்
தடந்தாமரை நீர்ப் பொய்கை புக்கு * மிக்க தாடாளன் **
இடந்தான் வையம் கேழல் ஆகி * உலகை ஈரடியால் *
நடந்தானுடைய நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 2

பூணாது அனலும் * தறு கண் வேழம் மறுக * வளை மருப்பைப்
பேணான் வாங்கி * அமுதம் கொண்ட பெருமான் திருமார்வன் **
பாணா வண்டு முரலும் கூந்தல் * ஆய்ச்சி தயிர் வெண்ணெய் *
நாணாது உண்டான் நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 3

கல்லார் மதிள் சூழ் * கச்சி நகருள் நச்சி * பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க * இருந்த அம்மான் ** இலங்கைக் கோன்
வல்லாள் ஆகம் * வில்லால் முனிந்த எந்தை * விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 4

குடையா வரையால் * நிரை முன் காத்த பெருமான் * மருவாத
விடை தான் ஏழும் வென்றான் * கோவல் நின்றான் ** தென்னிலங்கை
அடையா அரக்கர் வீயப் * பொருது மேவி வெங்கூற்றம் *
நடையா உண்ணக் கண்டான் நாமம் * நமோ நாராயணமே 5

கான எண்கும் குரங்கும் * முசுவும் படையா * அடல் அரக்கர்
மானம் அழித்து நின்ற * வென்றி அம்மான் ** எனக்கு என்றும்
தேனும் பாலும் அமுதுமாய * திருமால் திருநாமம் *
நானும் சொன்னேன் நமரும் உரைமின் * நமோ நாராயணமே 6

நின்ற வரையும் கிடந்த கடலும் * திசையும் இருநிலனும் *
ஒன்றும் ஒழியா வண்ணம் * எண்ணி நின்ற அம்மானார் **
குன்று குடையா எடுத்த * அடிகளுடைய திருநாமம் *
நன்று காண்மின் தொண்டீர்! சொன்னேன் * நமோ நாராயணமே 7

கடுங்கால் மாரி கல்லே பொழிய * அல்லே எமக்கு என்று
படுங்கால் * நீயே சரண் என்று * ஆயர் அஞ்ச அஞ்சா முன் **
நெடுங்கால் குன்றம் குடை ஒன்று ஏந்தி * நிரையைச் சிரமத்தால் *
நடுங்கா வண்ணம் காத்தான் நாமம் * நமோ நாராயணமே 8

பொங்கு புணரிக் கடல் சூழ் ஆடை * நில மாமகள் மலர் மா
மங்கை * பிரமன் சிவன் இந்திரன் * வானவர் நாயகராய **
எங்கள் அடிகள் இமையோர் * தலைவருடைய திருநாமம் *
நங்கள் வினைகள் தவிர உரைமின் * நமோ நாராயணமே 9

** வாவித் தடம் சூழ் மணி முத்தாற்று * நறையூர் நெடுமாலை *
நாவில் பரவி நெஞ்சில் கொண்டு * நம்பி நாமத்தை **
காவித் தடங்கண் மடவார் கேள்வன் * கலியன் ஒலி மாலை *
மேவிச் சொல்ல வல்லார் பாவம் * நில்லா வீயுமே 10

அடிவரவு: கிடந்த விடம் பூணாது கல் குடை கானம் நின்ற கடுங்கால் பொங்கு வாவி கறவா

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

ஏழாம் பத்து

முதல் திருமொழி - கறவா மடநாகு
திருநறையூர் 8

** கறவா மட நாகு * தன் கன்று உள்ளினாற் போல் *
மறவாது அடியேன் * உன்னையே அழைக்கின்றேன் **
நறவார் பொழில் சூழ் * நறையூர் நின்ற நம்பி! *
பிறவாமை எனைப் பணி * எந்தை பிரானே! 1

வற்றா முது நீரொடு * மால் வரை ஏழும் *
துற்றாக முன் துற்றிய * தொல் புகழோனே! **
அற்றேன் அடியேன் * உன்னையே அழைக்கின்றேன் *
பெற்றேன் அருள் தந்திடு * என் எந்தை பிரானே! 2

தாரேன் பிறர்க்கு * உன் அருள் என்னிடை வைத்தாய் *
ஆரேன் அதுவே * பருகிக் களிக்கின்றேன் **
காரேய் கடலே மலையே * திருக்கோட்டி
யூரே * உகந்தாயை * உகந்து அடியேனே 3

புள் வாய் பிளந்த * புனிதா! என்று அழைக்க *
உள்ளே நின்று * என் உள்ளம் குளிரும் ஒருவா! **
கள்வா! * கடல்மல்லைக் கிடந்த கரும்பே! *
வள்ளால்! உன்னை * எங்ஙனம் நான் மறக்கேனே? 4

வில்லேர் நுதல் * வேல் நெடுங்கண்ணியும் நீயும் *
கல்லார் கடுங்கானம் * திரிந்த களிறே! **
நல்லாய்! நரநாரணனே! * எங்கள் நம்பி! *
சொல்லாய் உன்னை * யான் வணங்கித் தொழுமாறே 5

பணி ஏய் பரங்குன்றின் * பவளத் திரளே! *
முனியே! * திருமூழிக்களத்து விளக்கே! **
இனியாய தொன்டரோம் * பருகு இன்னமுதாய
கனியே! * உன்னைக் கண்டு கொன்டு உய்ந்தொழிந்தேனே 6

கதியேல் இல்லை * நின் அருள் அல்லது எனக்கு *
நிதியே! * திருநீர்மலை நித்திலத்தொத்தே! **
பதியே! பரவித் தொழும் * தொண்டர் தமக்குக்
கதியே! * உன்னைக் கண்டு கொண்டு * உய்ந்தொழிந்தேனே 7

அத்தா! அரியே! என்று * உன்னை அழைக்க *
பித்தா என்று பேசுகின்றார் * பிறர் என்னை **
முத்தே! மணிமாணிக்கமே! * முளைக்கின்ற
வித்தே! * உன்னை எங்ஙனம் * நான் விடுகேனே? 8

தூயாய்! சுடர் மாமதி போல் * உயிர்க்கு எல்லாம் *
தாயாய் அளிக்கின்ற * தண்தாமரைக் கண்ணா! **
ஆயா! அலைநீர் உலகேழும் * முன் உண்ட
வாயா! * உன்னை எங்ஙனம் * நான் மறக்கேனே? 9

** வண்டார் பொழில் சூழ் * நறையூர் நம்பிக்கு * என்றும்
தொண்டாய்க் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை **
தொன்டீர்! இவை பாடுமின் * பாடி நின்றாட *
உன்டே விசும்பு * உந்தமக்கு இல்லை துயரே 10

அடிவரவு: கறவா வற்றா தாரேன் புள் வில் பனி கதி அத்தான் தூயாய் வண்டார் புள்ளய்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

இரண்டாம் திருமொழி - புள்ளாய் ஏனமுமாய்
திருநறையூர் 9

** புள்ளாய் ஏனமுமாய்ப் புகுந்து * என்னை உள்ளம் கொண்ட
கள்வா! என்றலும் * என் கண்கள் நீர்கள் சோர்தருமால் **
உள்ளே நின்று உருகி * நெஞ்சம் உன்னை உள்ளியக்கால் *
நள்ளேன் உன்னை அல்லால் * நறையூர் நின்ற நம்பீயோ! 1

ஓடா ஆளரியின் * உருவாய் மருவி * என்தன்
மாடே வந்து * அடியேன் மனம் கொள்ள வல்ல மைந்தா! **
பாடேன் தொண்டர் தம்மைக் * கவிதைப் பனுவல் கொண்டு *
நாடேன் உன்னை அல்லால் * நறையூர் நின்ற நம்பீயோ! 2

எம்மானும் எம் அனையும் * எனைப் பெற்று ஒழிந்ததற் பின் *
அம்மானும் அம்மனையும் * அடியேனுக்காகி நின்ற **
நன்மான ஒண்சுடரே! * நறையூர் நின்ற நம்பீ! * உன்
மைம்மான வண்ணம் அல்லால் * மகிழ்ந்து ஏத்த மாட்டேனே 3

சிறியாய் ஓர் பிள்ளையுமாய் * உலகுண்டு ஓர் ஆலிலை மேல்
உறைவாய்! * என் நெஞ்சின் உள்ளே உறைவாய் * உறைந்தது தான் **
அறியாது இருந்து அறியேன் அடியேன் * அணிவண்டு கிண்டும் *
நறை வாரும் பொழில் சூழ் * நறையூர் நின்ற நம்பீயோ! 4

நீண்டாயை வானவர்கள் * நினைந்து ஏத்திக் காண்பரிதால் *
ஆண்டாய் என்று ஆதரிக்கப்படுவாய்க்கு * நான் அடிமை
பூண்டேன் ** என் நெஞ்சின் உள்ளே * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் *
நாண் தான் உனக்கு ஒழிந்தேன் * நறையூர் நின்ற நம்பீயோ! 5

என் தாதை தாதை அப்பால் * எழுவர் பழவடிமை
வந்தார் * என் நெஞ்சின் உள்ளே * வந்தாயைப் போகல் ஒட்டேன் **
அந்தோ! என் ஆருயிரே! * அரசே! அருள் எனக்கு *
நந்தாமல் தந்த எந்தாய்! * நறையூர் நின்ற நம்பீயோ! 6

மன் அஞ்ச ஆயிரம் தோள் * மழுவில் துணித்த மைந்தா! *
என் நெஞ்சத்துள் இருந்து * இங்கு இனிப் போய்ப் பிறர் ஒருவர் **
வன்னெஞ்சம் புக்கிருக்க ஒட்டேன் * வளைத்து வைத்தேன் *
நன்னெஞ்ச அன்ன மன்னும் * நறையூர் நின்ற நம்பீயோ! 7

எப்போதும் பொன்மலர் இட்டு * இமையோர் தொழுது * தங்கள்
கைப்போது கொண்டு இறைஞ்சிக் * கழல் மேல் வணங்க நின்றாய் **
இப்போது என் நெஞ்சின் உள்ளே * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் *
நற்போது வண்டு கிண்டும் * நறையூர் நின்ற நம்பீயோ! 8

ஊன் ஏர் ஆக்கை தன்னை * உழந்து ஓம்பி வைத்தமையால் *
யானாய் என்தனக்காய் * அடியேன் மனம் புகுந்த
தேனே! ** தீங்கரும்பின் தெளிவே! * என் சிந்தை தன்னால் *
நானே எய்தப் பெற்றேன் * நறையூர் நின்ற நம்பீயோ! 9

** நன்னீர் வயல் புடை சூழ் * நறையூர் நின்ற நம்பியை *
கன்னீர மால் வரைத் தோள் * கலிகன்றி மங்கையர் கோன் **
சொன்னீர சொல் மாலை * சொல்லுவார்கள் * சூழ் விசும்பில்
நன்னீர்மையால் மகிழ்ந்து * நெடுங்காலம் வாழ்வாரே 10

அடிவரவு: புள் ஓடா எம்மானும் சிறியாய் நீண்டாய் எந்தாதை மன் எப்போதும் ஊனேர் நன்னீர் சினவில்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

மூன்றாம் திருமொழி - சினவில்
திருநறையூர் 10

** சினவில் செங்கண் அரக்கர் உயிர் மாளச் *
செற்ற வில்லி என்று கற்றவர் தந்தம்
மனவுள் கொண்டு * என்றும் எப்போதும் நின்று ஏத்தும்
மாமுனியை * மரம் ஏழ் எய்த மைந்தனை **
நனவில் சென்றார்க்கும் நண்ணற்கு அரியானை *
நான் அடியேன் நறையூர் நின்ற நம்பியை *
கனவில் கண்டேன் இன்று கண்டமையால் * என்
கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே 1

தாய் நினைந்த கன்றே ஒக்க * என்னையும்
தன்னையே நினைக்கச் செய்து * தான் எனக்
காய் நினைந்து அருள் செய்யும் அப்பனை *
அன்று இவ்வையகம் உண்டு உமிழ்ந்திட்ட
வாயனை ** மகரக் குழைக் காதனை
மைந்தனை * மதிள் கோவல் இடைகழி
ஆயனை * அமரர்க்கு அரி ஏற்றை * என்
அன்பனை அன்றி ஆதரியேனே 2

வந்த நாள் வந்து என் நெஞ்சிடம் கொண்டான் *
மற்றோர் நெஞ்சு அறியான் * அடியேனுடைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க்கு என்னைச்
சேர் கொடான் * இது சிக்கெனப் பெற்றேன் **
கொந்துலாம் பொழில் சூழ் குடந்தைத் தலைக்
கோவினைக் * குடம் ஆடிய கூத்தனை *
எந்தையை எந்தை தந்தை தம்மானை *
எம்பிரானை எத்தால் மறக்கேனே? 3

உரங்களால் இயன்ற மன்னர் மாளப் *
பாரதத்து ஒரு தேர் ஐவர்க்காய்ச் சென்று *
இரங்கி ஊர்ந்து அவர்க்கு இன்னருள் செய்யும்
எம்பிரானை * வம்பார் புனல் காவிரி **
அரங்கம் ஆளி என் ஆளி விண் ஆளி *
ஆழி சூழ் இலங்கை மலங்கச் சென்று *
சரங்கள் ஆண்ட தண்தாமரைக் கண்ணனுக்கு அன்றி *
என் மனம் தாழ்ந்து நில்லாதே 4

ஆங்கு வெந்நரகத்து அழுந்தும் போது *
அஞ்சேல் என்று அடியேனை அங்கே வந்து
தாங்கு * தாமரை அன்ன பொன்னார் அடி
எம்பிரானை * உம்பர்க்கு அணியாய் நின்ற **
வேங்கடத்து அரியைப் பரி கீறியை *
வெண்ணெய் உண்டு உரலினிடை ஆப்புண்ட
தீங்கரும்பினை * தேனை நன்பாலினை அன்றி *
என் மனம் சிந்தை செய்யாதே 5

எட்டனைப் பொழுது ஆகிலும் * என்றும்
என் மனத்து அகலாது இருக்கும் புகழ் *
தட்டலர்த்த பொன்னே அலர் கோங்கின் *
தாழ் பொழில் திருமாலிருஞ்சோலை அங்
கட்டியை ** கரும்பு ஈன்ற இன்சாற்றைக் *
காதலால் மறை நான்கும் முன் ஓதிய
பட்டனை * பரவைத் துயில் ஏற்றை * என்
பண்பனை அன்றிப் பாடல் செய்யேனே 6

பண்ணின் இன்மொழி யாழ் நரம்பில் பெற்ற *
பாலை ஆகி இங்கே புகுந்து * என்
கண்ணும் நெஞ்சும் வாயும் இடங்கொண்டான் *
கொண்ட பின் மறையோர் மனம் தன்னுள் **
விண்ணுளார் பெருமானை எம்மானை *
வீங்கு நீர் மகரம் திளைக்கும் கடல்
வண்ணன் * மாமணி வண்ணன் எம் அண்ணல் *
வண்ணமே அன்றி வாய் உரையாதே 7

இனி எப்பாவம் வந்து எய்தும்? சொல்லீர் *
எமக்கு இம்மையே அருள் பெற்றமையால் * அடும்
துனியைத் தீர்த்து இன்பமே தருகின்றதோர் *
தோற்றத் தொன்னெறியை ** வையம் தொழப்படும்
முனியை வானவரால் வணங்கப்படும்
முத்தினைப் * பத்தர் தாம் நுகர்கின்றதோர்
கனியை * காதல் செய்து என் உள்ளம் கொண்ட
கள்வனை * இன்று கண்டு கொண்டேனே 8

என் செய்கேன் அடியேன்? உரையீர் * இதற்கு
என்றும் என் மனத்தே இருக்கும் புகழ் *
தஞ்சை ஆளியைப் பொன் பெயரோன் * நெஞ்சம்
அன்று இடந்தவனைத் தழலே புரை **
மின் செய் வாள் அரக்கன் நகர் பாழ் படச் *
சூழ்கடல் சிறை வைத்து இமையோர் தொழும் *
பொன் செய் மால் வரையை மணிக் குன்றினை
அன்றி * என் மனம் போற்றி என்னாதே 9

** தோடு விண்டலர் பூம்பொழில் மங்கையர்
தோன்றல் * வாள் கலியன் திருவாலி
நாடன் * நன்னறையூர் நின்ற நம்பி தன் **
நல்ல மாமலர்ச் சேவடி சென்னியில்
சூடியும் தொழுதும் எழுந்தாடியும் *
தொண்டர்கட்கு அவன் சொன்ன சொல் மாலை *
பாடல் பத்து இவை பாடுமின் தொண்டீர்! *
பாட நும்மிடைப் பாவம் நில்லாவே 10

அடிவரவு: சினவில் தாய் உரங்கள் ஆங்கு எட்டனை பண்ணின் இனி என்செய்கேன் தோடு கண்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

நான்காம் திருமொழி - கண் சோர
திருச்சேறை

** கண் சோர வெங்குருதி வந்திழிய *
வெந்தழல் போல் கூந்தலாளை *
மண் சேர முலை உண்ட மாமதலாய்! *
வானவர் தம் கோவே! என்று **
விண் சேரும் இளந்திங்கள் அகடுரிஞ்சு *
மணி மாட மல்கு * செல்வத்
தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார்
காண்மின் * என் தலை மேலாரே 1

அம்புருவ வரி நெடுங்கண் * அலர் மகளை
வரை அகலத்து அமர்ந்து * மல்லல்
கொம்புருவ விளங்கனி மேல் * இளங்கன்று
கொண்டு எறிந்த கூத்தர் போலாம் **
வம்பலரும் தண்சோலை வண்சேறை *
வான் உந்து கோயில் மேய *
எம்பெருமான் தாள் தொழுவார் * எப்பொழுதும்
என் மனத்தே இருக்கின்றாரே 2

மீதோடி வாள் எயிறு மின் இலக *
முன் விலகும் உருவினாளை *
காதோடு கொடி மூக்கு அன்று உடன் அறுத்த *
கைத்தலத்தா! என்று நின்று **
தாதோடு வண்டலம்பும் * தண்சேறை
எம்பெருமான் தாளை ஏத்தி *
போதோடு புனல் தூவும் புண்ணியரே *
விண்ணவரில் பொலிகின்றாரே 3

தேர் ஆளும் வாள் அரக்கன் * தென் இலங்கை
வெஞ்சமத்துப் பொன்றி வீழ *
போர் ஆளும் சிலை அதனால் * பொரு கணைகள்
போக்குவித்தாய் என்று ** நாளும்
தார் ஆளும் வரை மார்பன் * தண்சேறை
எம்பெருமான் உம்பர் ஆளும் *
பேராளன் பேர் ஓதும் பெரியோரை *
ஒரு காலும் பிரிகிலேனே 4

வந்திக்கும் மற்றவர்க்கும் * மாசுடம்பில்
வல் அமணர் தமக்கும் அல்லேன் *
முந்திச் சென்று அரி உருவாய் இரணியனை *
முரண் அழித்த முதல்வர்க்கு அல்லால் **
சந்தப் பூ மலர்ச் சோலைத் * தண்சேறை
எம்பெருமான் தாளை * நாளும்
சிந்திப்பார்க்கு என் உள்ளம் * தேன் ஊறி
எப்பொழுதும் தித்திக்குமே 5

பண்டு ஏனமாய் உலகை அன்று இடந்த *
பண்பாளா என்று நின்று *
தொண்டானேன் திருவடியே துணை அல்லால் *
துணை இலேன் சொல்லுகின்றேன் **
வண்டேந்தும் மலர்ப் புறவில் * வண்சேறை
எம்பெருமான் அடியார் தம்மை *
கண்டேனுக்கு இது காணீர் * என் நெஞ்சும்
கண் இணையும் களிக்குமாறே 6

பை விரியும் வரி அரவில் * படுகடலுள்
துயில் அமர்ந்த பண்பா! என்றும் *
மை விரியும் மணி வரை போல் * மாயவனே!
என்றென்றும் வண்டார் நீலம் **
செய் விரியும் தண்சேறை எம்பெருமான் *
திருவடியைச் சிந்தித்தேற்கு * என்
ஐயறிவும் கொண்டானுக்கு ஆள் ஆனார்க்கு
ஆளாம் * என் அன்பு தானே 7

உண்ணாது வெங்கூற்றம் * ஓவாது
பாவங்கள் சேரா * மேலை
விண்ணோரும் மண்ணோரும் வந்து இறைஞ்சும் *
மென்தளிர் போல் அடியினானை **
பண்ணார வண்டு இயம்பும் * பைம்பொழில் சூழ்
தண்சேறை அம்மான் தன்னை *
கண்ணாரக் கண்டு உருகிக் * கை ஆரத்
தொழுவாரைக் கருதுங்காலே 8

கள்ளத்தேன் பொய் அகத்தேன் ஆதலால் *
போதருகால் கவலை என்னும் *
வெள்ளத்தேற்கு என் கொலோ? * விளை வயலுள்
கரு நீலம் களைஞர் தாளால்
தள்ள ** தேன் மண நாறும் * தண்சேறை
எம்பெருமான் தாளை * நாளும்
உள்ளத்தே வைப்பாருக்கு இது காணீர் *
என் உள்ளம் உருகுமாறே 9

** பூ மாண் சேர் கருங்குழலார் போல் நடந்து *
வயல் நின்ற பெடையோடு * அன்னம்
தே மாவின் இன்னிழலில் கண் துயிலும் *
தண்சேறை அம்மான் தன்னை **
வா மான் தேர்ப் பரகாலன் * கலிகன்றி
ஒலி மாலை கொண்டு தொண்டீர்! *
தூ மாண் சேர் பொன்னடி மேல் சூட்டுமின் * நும்
துணைக் கையால் தொழுது நின்றே 10

அடிவரவு: கண் அம்பு மீதோடி தேராளும் வந்திக்கும் பண்டு பைவிரியும் உண்ணாது கள்ளத்தேன் பூமாண் தந்தை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

ஐந்தாம் திருமொழி - தந்தை காலில்
திருவழுந்தூர் 1
[தலைவனைப் புணர்ந்து பிரிந்த தலைவி தனது பாங்கியர்க்குத் தலைவன் பதி உரைத்த பாசுரம்]

** தந்தை காலில் பெருவிலங்கு * தாள் அவிழ * நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானார் * மருவி நின்ற ஊர் போலும் **
முந்தி வானம் மழை பொழிய * மூவா உருவின் மறையாளர் *
அந்தி மூன்றும் அனல் ஓம்பும் * அணியார் வீதி அழுந்தூரே 1

பாரித்து எழுந்த * படை மன்னர் தம்மை மாள * பாரதத்துத்
தேரில் பாகனாய் ஊர்ந்த * தேவ தேவன் ஊர் போலும் **
நீரில் பணைத்த நெடுவாளைக்கு * அஞ்சிப் போன குருகினங்கள் *
ஆரல் கவுளோடு அருகணையும் * அணியார் வயல் சூழ் அழுந்தூரே 2

செம்பொன் மதிள் சூழ் தென்னிலங்கைக்கு இறைவன் * சிரங்கள் ஐயிரண்டும் *
உம்பர் வாளிக்கு இலக்காக * உதிர்த்த உரவோன் ஊர் போலும் **
கொம்பில் ஆர்ந்த மாதவி மேல் * கோதி மேய்ந்த வண்டினங்கள் *
அம்பராவும் கண்மடவார் * ஐம்பால் அணையும் அழுந்தூரே 3

வெள்ளத்துள் ஓர் ஆலிலை மேல் * மேவி அடியேன் மனம் புகுந்து * என்
உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் * நின்றார் நின்ற ஊர் போலும் **
புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடிப் * போன காதல் பெடையோடும் *
அள்ளல் செறுவில் கயல் நாடும் * அணியார் வயல் சூழ் அழுந்தூரே 4

பகலும் இரவும் தானேயாய்ப் * பாரும் விண்ணும் தானேயாய் *
நிகரில் சுடராய் இருளாகி * நின்றார் நின்ற ஊர் போலும் **
துகிலின் கொடியும் தேர்த் துகளும் * துன்னி மாதர் கூந்தல் வாய் *
அகிலின் புகையால் முகில் ஏய்க்கும் * அணியார் வீதி அழுந்தூரே 5

ஏடிலங்கு தாமரை போல் * செவ்வாய் முறுவல் செய்தருளி *
மாடு வந்து என் மனம் புகுந்து * நின்றார் நின்ற ஊர் போலும் **
நீடு மாடத் தனிச் சூலம் * போழக் கொண்டல் துளி தூவ *
ஆடல் அரவத்து ஆர்ப்பு ஒவா * அணியார் வீதி அழுந்தூரே 6

மாலைப் புகுந்து மலர் அணை மேல் வைகி * அடியேன் மனம் புகுந்து * என்
நீலக் கண்கள் பனி மல்க * நின்றார் நின்ற ஊர் போலும் **
வேலைக் கடல் போல் நெடு வீதி * விண் தோய் சுதை வெண்மணி மாடத்து *
ஆலைப் புகையால் அழல் கதிரை மறைக்கும் * வீதி அழுந்தூரே 7

வஞ்சி மருங்குல் இடை நோவ * மணந்து நின்ற கனவகத்து * என்
நெஞ்சு நிறையக் கை கூப்பி * நின்றார் நின்ற ஊர் போலும் **
பஞ்சி அன்ன மெல்லடி * நற்பாவைமார்கள் * ஆடகத்தின்
அஞ்சிலம்பின் ஆர்ப்பு ஓவா * அணியார் வீதி அழுந்தூரே 8

என் ஐம்புலனும் எழிலும் கொண்டு * இங்கே நெருநல் எழுந்தருளி *
பொன் அங்கலைகள் மெலிவு எய்தப் * போன புனிதர் ஊர் போலும் **
மன்னு முதுநீர் அரவிந்த மலர் மேல் * வரிவண்டு இசை பாட *
அன்னம் பெடையோடு உடன் ஆடும் * அணியார் வயல் சூழ் அழுந்தூரே 9

** நெல்லில் குவளை கண் காட்ட * நீரில் குமுதம் வாய் காட்ட *
அல்லிக் கமலம் முகம் காட்டும் * கழனி அழுந்தூர் நின்றானை **
வல்லிப் பொதும்பில் குயில் கூவும் * மங்கை வேந்தன் பரகாலன் *
சொல்லில் பொலிந்த தமிழ் மாலை * சொல்லப் பாவம் நில்லாவே 10

அடிவரவு: தந்தை பாரித்து செம்பொன் வெள்ளத்துள் பகல் ஏடு மாலை வஞ்சி
என்னைம்புலனும் நெல்லில் சிங்கம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

ஆறாம் திருமொழி - சிங்கமதாய்
திருவழுந்தூர் 2

** சிங்கம் அதாய் அவுணன் * திறல் ஆகம் முன் கீண்டுகந்த *
சங்கம் இடத்தானைத் * தழல் ஆழி வலத்தானை **
செங்கமலத்து அயன் அனையார் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
அங்கமலக் கண்ணனை * அடியேன் கண்டு கொண்டேனே 1

கோவானார் மடியக் * கொலை ஆர் மழுக் கொண்டருளும் *
மூவா வானவனை * முழு நீர் வண்ணனை ** அடியார்க்கு
ஆவா! என்று இரங்கித் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
தேவாதி தேவனை * யான் கண்டு கொண்டு திளைத்தேனே 2

உடையானை * ஒலி நீர் உலகங்கள் படைத்தானை *
விடையான் ஓட அன்று * விறல் ஆழி விசைத்தானை **
அடையார் தென்னிலங்கை அழித்தானை * அணி அழுந்தூர்
உடையானை * அடியேன் அடைந்து உய்ந்து போனேனே 3

குன்றால் மாரி தடுத்தவனைக் * குல வேழம் அன்று
பொன்றாமை * அதனுக்கு அருள் செய்த போர் ஏற்றை **
அன்று ஆவின் நறுநெய் அமர்ந்து உண்ண * அணி அழுந்தூர்
நின்றானை * அடியேன் கண்டு கொண்டு நிறைந்தேனே 4

கஞ்சனைக் காய்ந்தானைக் * கண்ணமங்கையுள் நின்றானை *
வஞ்சனப் பேய் முலையூடு * உயிர் வாய் மடுத்து உண்டானை **
செஞ்சொல் நான்மறையோர் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
அஞ்சனக் குன்றம் தன்னை * அடியேன் கண்டு கொண்டேனே 5

பெரியானை * அமரர் தலைவற்கும் பிரமனுக்கும் *
உரி யானை உகந்தான் அவனுக்கும் * உணர்வதனுக்கு
அரியானை ** அழுந்தூர் மறையோர்கள் * அடி பணியும்
கரியானை * அடியேன் கண்டு கொண்டு களித்தேனே 6

திருவாழ் மார்வன் தன்னைத் * திசை மண் நீர் எரி முதலா *
உருவாய் நின்றவனை * ஒலி சேரும் மாருதத்தை **
அருவாய் நின்றவனைத் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
கருவார் கற்பகத்தைக் * கண்டு கொண்டு களித்தேனே 7

நிலை ஆளாக * என்னை உகந்தானை * நிலமகள் தன்
முலை ஆள் வித்தகனை * முது நான்மறை வீதி தொறும் **
அலை ஆரும் கடல் போல் முழங்கும் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
கலை ஆர் சொற்பொருளைக் * கண்டு கொண்டு களித்தேனே 8

** பேரானைக் * குடந்தைப் பெருமானை * இலங்கொளி சேர்
வாரார் வனமுலையாள் * மலர் மங்கை நாயகனை **
ஆரா இன்னமுதைத் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
காரார் கருமுகிலைக் * கண்டு கொண்டு களித்தேனே 9

** திறல் முருகன் அனையார் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
அற முதல்வன் அவனை * அணி ஆலியர் கோன் மருவார் **
கறை நெடுவேல் வலவன் * கலிகன்றி சொல் ஐயிரண்டும் *
முறை வழுவாமை வல்லார் * முழுதாள்வர் வான் உலகே 10

அடிவரவு: சிங்கமது கோ உடையானை குன்றால் கஞ்சனை பெரியானை திருவாழ் நிலை பேரானை திறல் திரு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

ஏழாம் திருமொழி - திருவுக்கும்
திருவழுந்தூர் 3

** திருவுக்கும் திருவாகிய செல்வா! *
 தெய்வத்துக்கு அரசே! செய்ய கண்ணா! *
உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே! *
 உலகுண்ட ஒருவா! திருமார்பா **
ஒருவற்கு ஆற்றி உய்யும் வகை அன்றால் *
 உடன் நின்று ஐவர் என்னுள் புகுந்து * ஒழியாது
அருவித் தின்றிட அஞ்சி நின் அடைந்தேன் *
 அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 1

பந்தார் மெல்விரல் நல்வளைத் தோளி *
 பாவை பூமகள் தன்னொடும் உடனே
வந்தாய் * என் மனத்தே மன்னி நின்றாய் *
 மால்வண்ணா! மழை போல் ஒளிவண்ணா! **
சந்தோகா! பௌழியா! தைத்திரியா! *
 சாம வேதியனே! நெடுமாலே! *
அந்தோ! நின்னடி அன்றி மற்றறியேன் *
 அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 2

நெய்யார் ஆழியும் சங்கமும் ஏந்தும் *
 நீண்ட தோள் உடையாய்! * அடியேனைச்
செய்யாத உலகத்திடைச் செய்தாய் *
 சிறுமைக்கும் பெருமைக்கும் உள் புகுந்து **
பொய்யால் ஐவர் என் மெய்குடி ஏறிப் *
 போற்றி வாழ்வதற்கு அஞ்சி நின் அடைந்தேன் *
ஐயா! நின்னடி அன்றி மற்றறியேன் *
 அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 3

பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன் *
 பார் மன்னர் மன்னர் தாம் பணிந்து ஏத்தும்
வரனே! * மாதவனே! மதுசூதா! *
 மற்றோர் நல்துணை நின் அலால் இலேன் காண் **
நரனே! நாரணனே! திருநறையூர்
 நம்பீ! * எம்பெருமான்! உம்பர் ஆளும்
அரனே! * ஆதிவராகம் முன் ஆனாய்! *
 அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 4

விண்டான் விண் புக வெஞ்சமத்து அரியாய்ப் *
பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து *
பண்டு ஆன் உய்ய ஓர் மால்வரை ஏந்தும் *
பண்பாளா! பரனே! பவித்திரனே! **
கண்டேன் நான் கலி யுகத்ததன் தன்மை *
கருமம் ஆவதும் என்தனக்கு அறிந்தேன் *
அண்டா! நின்னடி அன்றி மற்றறியேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 5

தோயா இன்தயிர் நெய் அமுது உண்ணச் *
சொன்னார் சொல்லி நகும் பரிசே * பெற்ற
தாயால் ஆப்புண்டு இருந்து அழுது ஏங்கும்
தாடாளா! * தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய்! ** கிரேத திரேத துவாபர
கலி யுகம் இவை * நான்கும் முன் ஆனாய்! *
ஆயா! நின்னடி அன்றி மற்றறியேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 6

கறுத்துக் கஞ்சனை அஞ்ச முனிந்தாய்! *
கார்வண்ணா! கடல் போல் ஒளிவண்ணா! *
இறுத்திட்டு ஆன்விடை ஏழும் முன் வென்றாய்! *
எந்தாய்! அந்தரம் ஏழும் முன் ஆனாய்! **
பொறுத்துக் கொண்டு இருந்தால் பொறுக்கொணா *
போகமே நுகர்வான் புகுந்து * ஐவர்
அறுத்துத் தின்றிட அஞ்சி நின் அடைந்தேன் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 7

நெடியானே! கடி ஆர் கலி நம்பீ! *
நின்னையே நினைந்து இங்கு இருப்பேனை *
கடியார் காளையர் ஐவர் புகுந்து *
காவல் செய்த அக்காவலைப் பிழைத்து **
குடி போந்து உன்னடிக் கீழ் வந்து புகுந்தேன் *
கூறை சோறு இவை தந்து எனக்கருளி *
அடியேனைப் பணி ஆண்டு கொள் எந்தாய்! *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 8

கோவாய் ஐவர் என் மெய்குடி ஏறிக் *
கூறை சோறு இவை தா என்று குமைத்துப்
போகார் * நான் அவரைப் பொறுக்ககிலேன்
புனிதா! * புட்கொடியாய்! நெடுமாலே! **
தீ வாய் நாகணையில் துயில்வானே! *
திருமாலே! இனிச் செய்வது ஒன்று அறியேன் *
ஆவா என்று அடியேற்கு இறை இரங்காய் *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! 9

** அன்னம் மன்னு பைம்பூம்பொழில் சூழ்ந்த *
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானை *
கன்னி மன்னு திண்தோள் கலிகன்றி
ஆலி நாடன் * மங்கைக் குல வேந்தன் **
சொன்ன இன்தமிழ் நன்மணிக் கோவை *
தூய மாலை இவை பத்தும் வல்லார் *
மன்னி மன்னவராய் உலகாண்டு *
மான வெண்குடைக் கீழ் மகிழ்வாரே 10

அடிவரவு: திருவுக்கும் பந்தார் நெய் பரனே விண்டான் தோயா கறுத்து நெடியானே கோவாய் அன்னம் செங்கமலம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

எட்டாம் திருமொழி - செங்கமலம்
திருவழுந்தூர் 4

** செங்கமலத் திருமகளும் புவியும் * செம்பொன்
திருவடியின் இணை வருட முனிவர் ஏத்த *
வங்க மலி தடங்கடலுள் அனந்தன் என்னும் *
வரி அரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின் **
எங்கு மலி நிறை புகழ் நால் வேதம் * ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை *
அங்கமலத்து அயன் அனையார் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 1

முன் இவ்வுலகு ஏழும் இருள் மண்டி உண்ண *
முனிவரொடு தானவர்கள் திசைப்ப * வந்து
பன்னு கலை நால் வேதப் பொருளை எல்லாம் *
பரிமுகமாய் அருளிய எம் பரமன் காண்மின் **
செந்நெல் மலி கதிர்க் கவரி வீசச் * சங்கம்
அவை முரலச் செங்கமல மலரை ஏறி *
அன்னம் மலி பெடையோடும் அமரும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 2

குலத் தலைய மத வேழம் பொய்கை புக்குக் *
கோள் முதலை பிடிக்க அதற்கு அனுங்கி நின்று *
நிலத் திகழும் மலர்ச் சுடரேய் சோதீ! என்ன *
நெஞ்சிடர் தீர்த்து அருளிய என் நிமலன் காண்மின் **
மலைத் திகழ் சந்தகில் கனக மணியும் கொண்டு *
வந்துந்தி வயல்கள் தொறும் மடைகள் பாய *
அலைத்து வரும் பொன்னி வளம் பெருகும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 3

சிலம்பு முதல் கலன் அணிந்தோர் செங்கண் குன்றம் *
திகழ்ந்தது எனத் திருவுருவம் பன்றி ஆகி *
இலங்கு புவி மடந்தை தனை இடந்து புல்கி *
எயிற்றிடை வைத்து அருளிய எம் ஈசன் காண்மின் **
புலம்பு சிறை வண்டொலிப்பப் பூகம் தொக்க *
பொழில்கள் தொறும் குயில் கூவ மயில்கள் ஆல *
அலம்பு திரைப் புனல் புடை சூழ்ந்து அழகார் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 4

சின மேவும் அடல் அரியின் உருவம் ஆகித் *
திறல் மேவும் இரணியனது ஆகம் கீண்டு *
மன மேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி *
மாள உயிர் வவ்விய எம் மாயோன் காண்மின் **
இன மேவு வரிவளைக் கை ஏந்தும் கோவை *
ஏய்வாய மரகதம் போல் கிளியின் இன்சொல் *
அன மேவு நடை மடவார் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 5

வானவர் தம் துயர் தீர வந்து தோன்றி *
மாண் உருவாய் மூவடி மாவலியை வேண்டி *
தான் அமர ஏழ் உலகும் அளந்த வென்றித் *
தனி முதல் சக்கரப் படை என் தலைவன் காண்மின் **
தேன் அமரும் பொழில் தழுவும் எழில் கொள் வீதிச் *
செழுமாட மாளிகைகள் கூடம் தோறும் *
ஆன தொல் சீர் மறையாளர் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 6

பந்தணைந்த மெல்விரலாள் சீதைக்காகிப் *
பகலவன் மீது இயங்காத இலங்கை வேந்தன் *
அந்தமில் திண்கரம் சிரங்கள் புரண்டு வீழ *
அடுகணையால் எய்துகந்த அம்மான் காண்மின் **
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் *
திசைமுகனே அனையவர்கள் செம்மை மிக்க *
அந்தணர் தம் ஆகுதியின் புகை ஆர் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 7

கும்ப மிகு மத வேழம் குலையக் கொம்பு
பறித்து * மழ விடை அடர்த்துக் குரவை கோத்து *
வம்பவிழும் மலர்க் குழலாள் ஆய்ச்சி வைத்த *
தயிர் வெண்ணெய் உண்டுகந்த மாயோன் காண்மின் **
செம்பவள மரதகம் நன்முத்தம் காட்டத் *
திகழ் பூகம் கதலி பல வள மிக்கு எங்கும் *
அம்பொன் மதிள் பொழில் புடை சூழ்ந்து அழகார் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 8

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும் *
ஒண்கரியும் உருள்சகடும் உடையச் செற்ற *
நீடேறு பெருவலித் தோள் உடைய வென்றி *
நிலவு புகழ் நேமி அங்கை நெடியோன் காண்மின் **
சேடேறு பொழில் தழுவும் எழில் கொள் வீதித் *
திருவிழவில் மணி அணிந்த திண்ணை தோறும் *
ஆடேறு மலர்க் குழலார் பயிலும் செல்வத்து *
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே 9

** பன்றியாய் மீனாகி அரியாய்ப் * பாரைப்
படைத்துக் காத்து உண்டுமிழ்ந்த பரமன் தன்னை *
அன்று அமரர்க்கு அதிபதியும் அயனும் சேயும் *
அடி பணிய அணி அழுந்தூர் நின்ற கோவை **
கன்றி நெடுவேல் வலவன் ஆலி நாடன் *
கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடல் *
ஒன்றினொடு நான்கும் ஓரைந்தும் வல்லார் *
ஒலிகடல் சூழ் உலகாளும் உம்பர் தாமே 10

அடிவரவு: செங்கமலம் முன் குலம் சிலம்பு வானவர் பந்து கும்பம் ஊடேறு பன்றி கள்ளம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - கள்ளம் மனம்
திருச்சிறுபுலியூர்

** கள்ளம் மனம் விள்ளும் வகை * கருதிக் கழல் தொழுவீர் *
வெள்ளம் முது பரவைத் * திரை விரிய ** கரை எங்கும்
தெள்ளும் மணி திகழும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
உள்ளும் * எனது உள்ளத்துள்ளும் * உறைவாரை உள்ளீரே 1

தெருவில் திரி சிறு நோன்பியர் * செஞ்சோற்றொடு கஞ்சி
மருவி * பிரிந்தவர் வாய் மொழி * மதியாது வந்து அடைவீர்! **
திருவில் பொலி மறையோர் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
உருவக் குறள் அடிகள் * அடி உணர்மின் உணர்வீரே 2

பறையும் வினை தொழுது உய்மின் நீர் * பணியும் சிறு தொண்டீர்! *
அறையும் புனல் ஒருபால் * வயல் ஒருபால் பொழில் ஒருபால் **
சிறை வண்டினம் அறையும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
உறையும் * இறை அடி அல்லது * ஒன்று இறையும் அறியேனே 3

வானார் மதி பொதியும் சடை * மழுவாளியொடு ஒருபால் *
தான் ஆகிய தலைவன் அவன் * அமரர்க்கு அதிபதியாம் **
தேனார் பொழில் தழுவும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஆன் ஆயனது * அடி அல்லது * ஒன்றறியேன் அடியேனே 4

நந்தா நெடு நரகத்திடை * நணுகா வகை * நாளும்
எந்தாய்! என * இமையோர் தொழுதேத்தும் இடம் ** எறி நீர்ச்
செந்தாமரை மலரும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
அந்தாமரை அடியாய்! * உனது அடியேற்கு அருள் புரியே 5

முழு நீலமும் மலர் ஆம்பலும் * அரவிந்தமும் விரவி *
கழுநீரொடு மடவார் அவர் * கண் வாய் முகம் அலரும் **
செழுநீர் வயல் தழுவும் * சிறுபுலியூர்ச் சலசயனம் *
தொழு நீர்மையது உடையார் * அடி தொழுவார் துயர் இலரே 6

** சேய் ஓங்கு * தண் திருமாலிருஞ்சோலை மலை உறையும்
மாயா! * எனக்கு உரையாய் இது * மறை நான்கின் உளாயோ? **
தீ ஓம்பு கை மறையோர் * சிறுபுலியூர்ச் சலசயனத்து
ஆயோ? * உனது அடியார் மனத்தாயோ? * அறியேனே 7

மை ஆர் வரி நீலம் * மலர்க் கண்ணார் மனம் விட்டிட்டு *
உய்வான் உன கழலே * தொழுது எழுவேன் கிளி மடவார் **
செவ்வாய் மொழி பயிலும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
ஐவாய் அரவணை மேல் * உறை அமலா! அருளாயே 8

** கரு மா முகில் உருவா! * கனல் உருவா! புனல் உருவா! *
பெரு மால் வரை உருவா! * பிற உருவா! நினதுருவா! **
திருமாமகள் மருவும் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
அருமாகடல் அமுதே! * உனது அடியே சரணாமே 9

** சீரார் நெடு மறுகில் * சிறுபுலியூர்ச் சலசயனத்து *
ஏரார் முகில்வண்ணன் தனை * இமையோர் பெருமானை **
காரார் வயல் மங்கைக்கு இறை * கலியன் ஒலி மாலை *
பாரார் இவை பரவித் தொழப் * பாவம் பயிலாவே 10

அடிவரவு: கள்ளம் தெருவில் பறையும் வான் நந்தா முழு சேயோங்கு மையார் கரு சீரார் பெரும்புறம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஏழாம் பத்து

பத்தாம் திருமொழி - பெரும்புறக்கடல்
திருக்கண்ணமங்கை

** பெரும்புறக்கடலை அடல் ஏற்றினைப் *
பெண்ணை ஆணை * எண்ணில் முனிவர்க்கு அருள்
தரும் தவத்தை முத்தின் திரள் கோவையைப் *
பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை **
அரும்பினை அலரை அடியேன் மனத்து ஆசையை *
அமுதம் பொதி இன்சுவை *
கரும்பினைக் கனியைச் சென்று நாடிக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 1

மெய்ந்நலத் தவத்தைத் திவத்தைத் தரும் *
மெய்யைப் பொய்யினைக் கையில் ஓர் சங்குடை *
மைந்நிறக் கடலைக் கடல் வண்ணனை *
மாலை ஆலிலைப் பள்ளி கொள் மாயனை **
நென்னலைப் பகலை இற்றை நாளினை *
நாளையாய் வரும் திங்களை ஆண்டினை *
கன்னலைக் கரும்பினிடைத் தேறலைக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 2

எங்களுக்கு அருள் செய்கின்ற ஈசனை *
வாச வார் குழலாள் மலை மங்கை தன்
பங்கனை * பங்கில் வைத்து உகந்தான் தன்னைப் *
பான்மையைப் பனி மாமதியம் தவழ் **
மங்குலைச் சுடரை வட மாமலை உச்சியை *
நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை * பகலைச் சென்று நாடிக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 3

பேய் முலைத்தல நஞ்சு உண்ட பிள்ளையைத் *
தெள்ளியார் வணங்கப்படும் தேவனை *
மாயனை மதிள் கோவல் இடைகழி மைந்தனை *
அன்றி அந்தணர் சிந்தையுள்
ஈசனை ** இலங்கும் சுடர்ச் சோதியை *
எந்தையை எனக்கு எய்ப்பினில் வைப்பினை *
காசினை மணியைச் சென்று நாடிக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 4

** ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை *
இம்மையை மறுமைக்கு மருந்தினை *
ஆற்றலை அண்டத்து அப்புறத்து உய்த்திடும்
ஐயனைக் * கையில் ஆழி ஒன்று ஏந்திய
கூற்றினை ** குரு மாமணிக் குன்றினை *
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை *
காற்றினைப் புனலைச் சென்று நாடிக் **
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 5

துப்பனைத் துரங்கம் படச் சீறிய
தோன்றலைச் * சுடர் வான் கலன் பெய்ததோர்
செப்பினை * திருமங்கை மணாளனைத் *
தேவனைத் திகழும் பவளத்தொளி
ஒப்பனை ** உலகேழினை ஊழியை *
ஆழி ஏந்திய கையனை அந்தணர்
கற்பினை * கழுநீர் மலரும் வயல் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 6

திருத்தனைத் திசை நான்முகன் தந்தையைத் *
தேவ தேவனை மூவரில் முன்னிய
விருத்தனை * விளங்கும் சுடர்ச் சோதியை *
விண்ணை மண்ணினைக் கண்ணுதல் கூடிய
அருத்தனை ** அரியைப் பரி கீறிய
அப்பனை * அப்பில் ஆர் அழலாய் நின்ற
கருத்தனை * களி வண்டறையும் பொழில் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 7

வெஞ்சினக் களிற்றை விளங்காய் விழக் *
கன்று வீசிய ஈசனை * பேய் மகள் துஞ்ச
நஞ்சு சுவைத்து உண்ட தோன்றலைத் *
தோன்றல் வாள் அரக்கன் கெடத் தோன்றிய
நஞ்சினை ** அமுதத்தினை நாதனை *
நச்சுவார் உச்சி மேல் நிற்கும் நம்பியை *
கஞ்சனைத் துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 8

பண்ணினைப் பண்ணில் நின்றதோர் பான்மையைப் *
பாலுள் நெய்யினை மால் உருவாய் நின்ற
விண்ணினை * விளங்கும் சுடர்ச் சோதியை *
வேள்வியை விளக்கின் ஒளி தன்னை **
மண்ணினை மலையை அலை நீரினை *
மாலை மாமதியை மறையோர் தங்கள்
கண்ணினை * கண்கள் ஆரளவும் நின்று *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 9

** கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன் என்று *
காதலால் கலிகன்றி உரை செய்த *
வண்ண ஒண்தமிழ் ஒன்பதோடு ஒன்றிவை *
வல்லராய் உரைப்பார் மதியம் தவழ் **
விண்ணில் விண்ணவராய் மகிழ்வு எய்துவர் *
மெய்ம்மை சொல்லில் வெண்சங்கம் ஒன்று ஏந்திய
கண்ண! * நின்தனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் * கவியின் பொருள் தானே 10

அடிவரவு: பெரு மெய் எங்களுக்கு பேய் ஏற்றினை துப்பனை திருத்தனை வெஞ்சினம் பண்ணினை கண்ணமங்கையுள் சிலை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

எட்டாம் பத்து

முதல் திருமொழி - சிலை இலங்கு
திருக்கண்ணபுரம் 1
[தலைமகனிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்ட தாய் வியந்து கூறிய பாசுரம்]

** சிலை இலங்கு பொன்னாழி * திண்படை தண்டு
ஒண்சங்கம் என்கின்றாளால் *
மலை இலங்கு தோள் நான்கே * மற்று அவனுக்கு
எற்றே காண் என்கின்றாளால் **
முலை இலங்கு பூம்பயலை * முன்போட
அன்போடி இருக்கின்றாளால் *
கலை இலங்கு மொழியாளர் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 1

** செரு வரை முன் ஆசறுத்த * சிலை அன்றோ?
கைத்தலத்தது என்கின்றாளால் *
பொரு வரை முன் போர் தொலைத்த * பொன்னாழி
மற்றொரு கை என்கின்றாளால் **
ஒருவரையும் நின் ஒப்பார் * ஒப்பிலா
என் அப்பா! என்கின்றாளால் *
கரு வரை போல் நின்றானைக் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 2

துன்னு மாமணி முடி மேல் * துழாய் அலங்கல்
தோன்றுமால் என்கின்றாளால் *
மின்னு மாமணி மகர குண்டலங்கள் *
வில் வீசும் என்கின்றாளால் **
பொன்னின் மாமணி ஆரம் * அணி ஆகத்து
இலங்குமால் என்கின்றாளால் *
கன்னி மாமதிள் புடை சூழ் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 3

தார் ஆய தண் துளப * வண்டுழுத
வரை மார்பன் என்கின்றாளால் *
போர் ஆனைக் கொம்பொசித்த * புட்பாகன்
என் அம்மான் என்கின்றாளால் **
ஆரானும் காண்மின்கள் * அம்பவளம்
வாய் அவனுக்கு என்கின்றாளால் *
கார் வானம் நின்றதிரும் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 4

அடித்தலமும் தாமரையே * அங்கைகளும்
பங்கயமே என்கின்றாளால் *
முடித் தலமும் பொற்பூணும் * என் நெஞ்சத்து
உள் அகலாது என்கின்றாளால் **
வடித் தடங்கண் மலரவளோ * வரை ஆகத்து
உள் இருப்பாள் என்கின்றாளால் *
கடிக்கமலம் கள் உகுக்கும் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 5

பேர் ஆயிரம் உடைய பேர் ஆளன் *
பேர் ஆளன் என்கின்றாளால் *
ஏரார் கன மகர குண்டலத்தன் *
எண்தோளன் என்கின்றாளால் **
நீரார் மழை முகிலே * நீள் வரையே
ஒக்குமால் என்கின்றாளால் *
காரார் வயல் அமரும் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 6

செவ்வரத்த உடை ஆடை * அதன் மேல் ஓர்
சிவளிகைக் கச்சு என்கின்றாளால் *
அவ்வரத்த அடி இணையும் * அங்கைகளும்
பங்கயமே என்கின்றாளால் **
மை வளர்க்கும் மணி உருவம் * மரகதமோ!
மழை முகிலோ! என்கின்றாளால் *
கை வளர்க்கும் அழல் ஆளர் * கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொலோ? 7

கொற்றப் புள் ஒன்றேறி * மன்றூடே
        வருகின்றான் என்கின்றாளால் *
வெற்றிப் போர் இந்திரற்கும் * இந்திரனே
        ஒக்குமால் என்கின்றாளால் **
பெற்றக்கால் அவன் ஆகம் * பெண் பிறந்தோம்
        உய்யோமோ! என்கின்றாளால் *
கற்ற நூல் மறை ஆளர் * கண்ணபுரத்து
        அம்மானைக் கண்டாள் கொலோ? 8

வண்டமரும் வனமாலை * மணி முடி மேல்
        மண நாறும் என்கின்றாளால் *
உண்டிவர் பால் அன்பு எனக்கென்று * ஒரு காலும்
        பிரிகிலேன் என்கின்றாளால் **
பண்டிவரைக் கண்டு அறிவது எவ்வூரில்? *
        யாம் என்றே பயில்கின்றாளால் *
கண்டவர் தம் மனம் வழங்கும் * கண்ணபுரத்து
        அம்மானைக் கண்டாள் கொலோ? 9

** மா வளரு மென்னோக்கி * மாதராள்
        மாயவனைக் கண்டாள் என்று *
கா வளரும் கடிபொழில் சூழ் * கண்ணபுரத்து
        அம்மானைக் கலியன் சொன்ன **
பா வளரும் தமிழ் மாலை * பன்னிய நூல்
        இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் *
பூ வளரும் கற்பகம் சேர் * பொன்னுலகில்
        மன்னவராய்ப் புகழ் தக்கோரே 10

அடிவரவு: சிலை செருவரை துன்னு தார் அடி பேர் செவ்வரத்த கொற்றம் வண்டு மாவளரும் தெள்ளியீர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

இரண்டாம் திருமொழி - தெள்ளியீர்
திருக்கண்ணபுரம் 2
[தலைவியின் நிலை கண்ட தாய் தலைமகனை இயற்பழித்தும், தலைமகளது இளமைக்கு இரங்கியும் கூறிய பாசுரம்]

** தெள்ளியீர்! * தேவர்க்கும் தேவர் திருத்தக்கீர்! *
வெள்ளியீர்! * வெய்ய விழு நிதி வண்ணர் ** ஓ!
துள்ளூ நீர்க் * கண்ணபுரம் தொழுதாள் இவள்
கள்வியோ! * கை வளை கொள்வது தக்கதே? 1

** நீணிலா முற்றத்து * நின்று இவள் நோக்கினாள் *
காணுமோ! * கண்ணபுரம் என்று காட்டினாள் **
பாணனார் திண்ணம் இருக்க * இனி இவள்
நாணுமோ? * நன்று நன்று நறையூரர்க்கே 2

** அருவி சோர் வேங்கடம் * நீர்மலை என்று வாய்
வெருவினாள் * மெய்யம் வினவி இருக்கின்றாள் **
பெருகு சீர்க் * கண்ணபுரம் என்று பேசினாள்
உருகினாள் * உள் மெலிந்தாள் * இது என் கொலோ? 3

உண்ணும் நாள் இல்லை * உறக்கமும் தான் இல்லை *
பெண்மையும் சால * நிறைந்திலள் பேதை தான் **
கண்ணன் ஊர் கண்ணபுரம் தொழும் * கார்க்கடல்
வண்ணர் மேல் * எண்ணம் இவட்கு இது என் கொலோ? 4

கண்ணன் ஊர் * கண்ணபுரம் தொழும் காரிகை *
பெண்மையென் * தன்னுடை உண்மை உரைக்கின்றாள் **
வெண்ணெய் உண்டு ஆப்புண்ட * வண்ணம் விளம்பினாள் *
வண்ணமும் * பொன் நிறம் ஆவது ஒழியுமே 5

வடவரை நின்றும் வந்து * இன்று கணபுரம்
இடவகை கொள்வது * யாம் என்று பேசினாள் **
மடவரல் மாதர் என் பேதை * இவர்க்கு இவள்
கடவது என்? * கண் துயில் இன்று இவர் கொள்ளவே 6

** தரங்க நீர் பேசினும் * தண் மதி காயினும் *
இரங்குமோ? * எத்தனை நாள் இருந்து எள்கினாள்? **
துரங்கம் வாய் கீண்டு உகந்தானது * தொன்மை ஊர் *
அரங்கமே என்பது * இவள் தனக்கு ஆசையே 7

தொண்டெல்லாம் நின் அடியே * தொழுது உய்யுமா
கண்டு * தான் கணபுரம் கை தொழப் போயினாள் **
வண்டுலாம் கோதை என் பேதை * மணி நிறம்
கொண்டு தான் * கோயின்மை செய்வது தக்கதே? 8

முள் எயிறு ஏய்ந்தில * கூழை முடி கொடா *
தெள்ளியள் என்பதோர் * தேசிலள் என் செய்கேன்? **
கள்ளவிழ் சோலைக் * கணபுரம் கை தொழும்
பிள்ளையை * பிள்ளை என்று எண்ணப் பெறுவரே? 9

** கார் மலி * கண்ணபுரத்து எம் அடிகளை *
பார் மலி மங்கையர் கோன் * பரகாலன் சொல் **
சீர் மலி பாடல் * இவை பத்தும் வல்லவர் *
நீர் மலி வையத்து * நீடு நிற்பார்களே 10

அடிவரவு: தெள்ளியீர் நீணிலா அருவி உண்ணும் கண்ணன் வடவரை தரங்கம் தொண்டு முள் கார் கரை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

மூன்றாம் திருமொழி - கரையெடுத்த
திருக்கண்ணபுரம் 3
[தலைமகனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்; அறத்தொடு நிற்றல்]

** கரை எடுத்த சுரிசங்கும் * கன பவளத்து எழுகொடியும் *
திரை எடுத்து வருபுனல் சூழ் * திருக்கண்ணபுரத்து உறையும் **
விரை எடுத்த துழாய் அலங்கல் * விறல் வரைத் தோள் புடை பெயர *
வரை எடுத்த பெருமானுக்கு * இழந்தேன் என் வரிவளையே 1

அரி விரவு முகில் கணத்தால் * அகில் புகையால் வரையோடும் *
தெரிவரிய மணிமாடத் * திருக்கண்ணபுரத்து உறையும் **
வரி அரவின்னணைத் துயின்று * மழை மதத்த சிறு தறு கண் *
கரி வெருவ மருப்பொசித்தாற்கு * இழந்தேன் என் கனவளையே 2

துங்க மாமணி மாட * நெடு முகட்டின் சூலிகை போம் *
திங்கள் மாமுகில் துணிக்கும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
பைங்கண் மால் விடை அடர்த்துப் * பனி மதி கோள் விடுத்துகந்த *
செங்கண்மால் அம்மானுக்கு * இழந்தேன் என் செறிவளையே 3

கண மருவு மயில் அகவு * கடிபொழில் சூழ் நெடு மறுகில் *
திண மருவு கனமதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து உறையும் **
மண மருவு தோள் ஆய்ச்சி * ஆர்க்கப் போய் உரலோடும் *
புணர் மருதம் இற நடந்தாற்கு * இழந்தேன் என் பொன்வளையே 4

வாய் எடுத்த மந்திரத்தால் * அந்தணர் தம் செய் தொழில்கள் *
தீ எடுத்து மறை வளர்க்கும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
தாய் எடுத்த சிறு கோலுக்கு * உளைந்தோடித் தயிர் உண்ட *
வாய் துடைத்த மைந்தனுக்கு * இழந்தேன் என் வரிவளையே 5

மடல் எடுத்த நெடுந்தாழை * மருங்கெல்லாம் வளர் பவளம் *
திடல் எடுத்துச் சுடர் இமைக்கும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
அடல் அடர்த்து அன்று இரணியனை * முரண் அழிய அணி உகிரால் *
உடல் எடுத்த பெருமானுக்கு * இழந்தேன் என் ஒளிவளையே 6

வண்டமரும் மலர்ப் புன்னை * வரி நீழல் அணி முத்தம் *
தெண்திரைகள் வரத் திரட்டும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
எண்திசையும் எழுசுடரும் * இருநிலனும் பெருவிசும்பும் *
உண்டுமிழ்ந்த பெருமானுக்கு * இழந்தேன் என் ஒளிவளையே 7

கொங்கு மலி கருங்குவளை * கண்ணாகத் தெண்கயங்கள் *
செங்கமல முக மலர்த்தும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
வங்க மலி தடங்கடலுள் * வரி அரவின் அணைத் துயின்ற *
செங்கமல நாபனுக்கு * இழந்தேன் என் செறிவளையே 8

வாராளும் இளங்கொங்கை * நெடும் பணைத் தோள் மடப் பாவை *
சீராளும் வரை மார்பன் * திருக்கண்ணபுரத்து உறையும் **
பேராளன் ஆயிரம் பேர் * ஆயிர வாய் அரவணை மேல் *
பேராளர் பெருமானுக்கு * இழந்தேன் என் பெய்வளையே 9

** தே மருவு பொழில் புடை சூழ் * திருக்கண்ணபுரத்து உறையும்
வாமனனை * மறிகடல் சூழ் * வயலாலி வளநாடன் **
காமரு சீர்க் கலிகன்றி * கண்டுரைத்த தமிழ் மாலை *
நா மருவி இவை பாட * வினையாய நண்ணாவே 10

அடிவரவு: கரை அரி துங்கம் கணம் வாய் மடல் வண்டு கொங்கு வாராளும் தேமருவு விண்ணவர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

நான்காம் திருமொழி - விண்ணவர்
திருக்கண்ணபுரம் 4
[தலைமகனிடத்து ஈடுபட்ட தலைவி ஆற்றாது தும்பியை நோக்கிக் கூறிய பாசுரம்]

** விண்ணவர் தங்கள் பெருமான் * திருமார்வன் *
மண்ணவர் எல்லாம் வணங்கும் * மலி புகழ் சேர் **
கண்ணபுரத்து எம்பெருமான் * கதிர் முடி மேல் *
வண்ண நறுந்துழாய் * வந்தூதாய் கோல் தும்பீ! 1

வேத முதல்வன் * விளங்கு புரிநூலன் *
பாதம் பரவிப் * பலரும் பணிந்தேத்தி **
காதன்மை செய்யும் * கண்ணபுரத்து எம்பெருமான் *
தாது நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 2

விண்ட மலர் எல்லாம் * ஊதி நீ என் பெறுதி? *
அண்ட முதல்வன் * அமரர்கள் எல்லாரும் **
கண்டு வணங்கும் * கண்ணபுரத்து எம்பெருமான் *
வண்டு நறுந்துழாய் * வந்தூதாய் கோல் தும்பீ! 3

நீர் மலிகின்றதோர் * மீனாய் ஓர் ஆமையுமாய் *
சீர் மலிகின்றதோர் * சிங்க உருவாகி **
கார் மலி வண்ணன் * கண்ணபுரத்து எம்பெருமான் *
தார் மலி தண்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 4

ஏரார் மலர் எல்லாம் * ஊதி நீ என் பெறுதி? *
பாரார் உலகம் * பரவப் பெருங்கடலுள் **
கார் ஆமையான * கண்ணபுரத்து எம்பெருமான் *
தாரார் நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 5

மார்வில் திருவன் * வலன் ஏந்து சக்கரத்தன் *
பாரைப் பிளந்த * பரமன் பரஞ்சோதி **
காரில் திகழ் * காயா வண்ணன் கதிர் முடி மேல் *
தாரில் நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 6

வாமனன் கற்கி * மதுசூதன் மாதவன் *
தார் மன்னு * தாசரதி ஆய தடமார்வன் **
காமன் தன் தாதை * கண்ணபுரத்து எம்பெருமான் *
தாம நறுந்துழாய் * தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! 7

நீல மலர்கள் * நெடு நீர் வயல் மருங்கில் *
சால மலர் எல்லாம் * ஊதாதே ** வாள் அரக்கர்
காலன் * கண்ணபுரத்து எம்பெருமான் கதிர் முடி மேல் *
கோல நறுந்துழாய் * கொண்டூதாய் கோல் தும்பீ! 8

நந்தன் மதலை * நிலமங்கை நல்துணைவன் *
அந்த முதல்வன் * அமரர்கள் தம் பெருமான் **
கந்தம் கமழ் * காயா வண்ணன் கதிர் முடி மேல் *
கொந்து நறுந்துழாய் * கொண்டூதாய் கோல் தும்பீ! 9

** வண்டமரும் சோலை * வயல் ஆலி நல்நாடன் *
கண்ட சீர் வென்றிக் * கலியன் ஒலி மாலை **
கொண்டல் நிற வண்ணன் * கண்ணபுரத்தானை *
தொண்டரோம் பாட * நினைந்தூதாய் கோல் தும்பீ! 10

அடிவரவு: விண்ணவர் வேதம் விண்ட நீர் ஏரார் மார்வில் வாமனன் நீலம் நந்தன் வண்டமரும் தந்தை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

ஐந்தாம் திருமொழி - தந்தைகாலில்
திருக்கண்ணபுரம் 5
[தலைவனைப் பிரிந்த தலைவி அந்திப்பொழுதில் தலைவன் வாராது தாழ்த்த, தென்றல் முதலியவற்றால் வருந்திக் கூறுதல்]

** தந்தை காலில் விலங்கற * வந்து
தோன்றிய தோன்றல் பின் * தமியேன் தன்
சிந்தை போயிற்றுத் * திருவருள்
அவனிடைப் பெறும் அளவு இருந்தேனை **
அந்தி காவலன் அமுதுறு
பசுங்கதிர் * அவை சுட அதனோடும் *
மந்த மாருதம் வனமுலை
தடவந்து * வலி செய்வது ஒழியாதே 1

மாரி மாக்கடல் வளை வணற்கு இளையவன் *
வரை புரை திருமார்பில் *
தாரின் ஆசையில் போயின நெஞ்சமும் *
தாழ்ந்ததோர் துணை காணேன் **
ஊரும் துஞ்சிற்று உலகமும் துயின்றது *
ஒளியவன் விசும்பு இயங்கும் *
தேரும் போயிற்றுத் திசைகளும்
மறைந்தன * செய்வது ஒன்று அறியேனே 2

ஆயன் மாயமே அன்றி மற்று என்
கையில் * வளைகளும் இறை நில்லா *
பேயின் ஆருயிர் உண்டிடும்
பிள்ளை * நம் பெண் உயிர்க்கு இரங்குமோ? **
தூய மாமதிக் கதிர் சுடத்
துணை இல்லை * இணைமுலை வேகின்றதால் *
ஆயன் வேயினுக்கு அழிகின்றது
உள்ளமும் * அஞ்சேல் என்பார் இலையே 3

கயங்கொள் புண் தலைக் களிறுந்து
வெந்திறல் * கழல் மன்னர் பெரும் போரில் *
மயங்க வெண்சங்கம் வாய் வைத்த
மைந்தனும் * வந்திலன் மறிகடல் நீர் **
தயங்கு வெண்திரைத் திவலை நுண்பனி
எனும் * தழல் முகந்து இளமுலை மேல் *
இயங்கு மாருதம் விலங்கில் என்
ஆவியை * எனக்கெனப் பெறலாமே 4

ஏழு மாமரம் துளை படச்
சிலை வளைத்து * இலங்கையை மலங்குவித்த
ஆழியான் * நமக்கு அருளிய
அருளொடும் * பகல் எல்லை கழிகின்றதால் **
தோழி! நாம் இதற்கென் செய்தும்?
துணை இல்லை * சுடர் படு முது நீரில் *
ஆழ ஆழ்கின்ற ஆவியை அடுவதோர் *
அந்தி வந்து அடைகின்றதே 5

முரியும் வெண்திரை முதுகயம்
தீப்பட * முழங்கு அழல் எரி அம்பின் *
வரிகொள் வெஞ்சிலை வளைவித்த
மைந்தனும் * வந்திலன் என் செய்கேன்? **
எரியும் வெங்கதிர் துயின்றது *
பாவியேன் இணை நெடுங்கண் துயிலா *
கரிய நாழிகை ஊழியின்
பெரியன * கழியுமாறு அறியேனே 6

கலங்க மாக்கடல் கடைந்தடைத்து *
இலங்கையர் கோனது வரை ஆகம்
மலங்க * வெஞ்சமத்து அடுசரம்
துரந்த * எம் அடிகளும் வாரானால் **
இலங்கு வெங்கதிர் இளமதி
அதனொடும் * விடை மணி அடும் * ஆயன்
விலங்கல் வேயினது ஓசையுமாய் *
இனி விளைவது ஒன்று அறியேனே 7

முழுது இவ்வையகம் முறை கெட
மறைதலும் * முனிவனும் முனிவெய்தி *
மழுவினால் மன்னர் ஆருயிர்
வவ்விய * மைந்தனும் வாரானால் **
ஒழுகு நுண்பனிக்கு ஒடுங்கிய
பேடையை * அடங்க அஞ்சிறை கோலி *
தழுவு நள்ளிருள் தனிமையின்
கடியதோர் * கொடுவினை அறியேனே 8

கனஞ்செய் மாமதிள் கணபுரத்தவனொடும் *
கனவினில் அவன் தந்த *
மனஞ்செய் இன்பம் வந்து உள்புக
வெள்கி * என் வளை நெக இருந்தேனை **
சினஞ்செய் மால்விடைச் சிறு மணி
ஓசை * என் சிந்தையைச் சிந்துவிக்கும் *
அனந்தல் அன்றிலின் அரி குரல் *
பாவியேன் ஆவியை அடுகின்றதே 9

** வார்கொள் மென்முலை மடந்தையர் *
தடங்கடல் வண்ணனைத் தாள் நயந்து *
ஆர்வத்தால் அவர் புலம்பிய
புலம்பலை * அறிந்து முன் உரை செய்த **
கார்கொள் பைம்பொழில் மங்கையர்
காவலன் * கலிகன்றி ஒலி வல்லார் *
ஏர் கொள் வைகுந்த மாநகர்
புக்கு * இமையவரொடும் கூடுவரே 10

அடிவரவு: தந்தை மாரி ஆயன் கயம் ஏழு முரியும் கலங்க முழுது கனஞ்செய் வார்கொள் தொண்டீர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

ஆறாம் திருமொழி - தொண்டீர்
திருக்கண்ணபுரம் 6

** தொண்டீர்! உய்யும் வகை கண்டேன் *
துளங்கா அரக்கர் துளங்க * முன்
திண்தோள் நிமிரச் சிலை வளையச் *
சிறிதே முனிந்த திருமார்பன் **
வண்டார் கூந்தல் மலர்மங்கை *
வடிக்கண் மடந்தை மான் நோக்கம்
கண்டான் * கண்டு கொண்டு உகந்த *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 1

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப் *
பொன்ற அன்று புள் ஊர்ந்து *
பெருந்தோள் மாலி தலை புரளப் *
பேர்ந்த அரக்கர் தென்னிலங்கை **
இருந்தார் தம்மை உடன் கொண்டு * அங்கு
எழிலார் பிலத்துப் புக்கொளிப்ப *
கருந்தாள் சிலை கைக்கொண்டான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 2

வல்லி இடையாள் பொருட்டாக *
மதிள் நீர் இலங்கையார் கோவை *
அல்லல் செய்து வெஞ்சமத்துள் *
ஆற்றல் மிகுந்த ஆற்றலான் **
வல்லாள் அரக்கர் குலப் பாவை வாட *
முனி தன் வேள்வியை *
கல்விச் சிலையால் காத்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 3

மல்லை முந்நீர் அதர்பட *
வரிவெஞ்சிலை கால் வளைவித்து *
கொல்லை விலங்கு பணி செய்யக் *
கொடியோன் இலங்கை புகல் உற்று **
தொல்லை மரங்கள் புகப் பெய்து *
துவலை நிமிர்ந்து வான் அணவ *
கல்லால் கடலை அடைத்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 4

ஆமை ஆகி அரி ஆகி *
அன்னம் ஆகி * அந்தணர் தம்
ஓமம் ஆகி ஊழி ஆகி *
உவரி சூழ்ந்த நெடும் புணரி **
சேம மதிள் சூழ் இலங்கைக் கோன் *
சிரமும் கரமும் துணித்து * முன்
காமற் பயந்தான் கருதும் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 5

வருந்தாதிரு நீ மடநெஞ்சே! *
நம் மேல் வினைகள் வாரா * முன்
திருந்தா அரக்கர் தென்னிலங்கை *
செந்தீ உண்ணச் சிவந்து ஒரு நாள் **
பெருந்தோள் வாணற்கு அருள் புரிந்து *
பின்னை மணாளன் ஆகி * முன்
கருந்தாள் களிறொன்று ஒசித்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 6

இலையார் மலர்ப் பூம்பொய்கை வாய் *
முதலை தன்னால் அடர்ப்புண்டு *
கொலையார் வேழம் நடுக்குற்றுக்
குலைய * அதனுக்கு அருள் புரிந்தான் **
அலைநீர் இலங்கைத் தசக்கிரீவற்கு *
இளையோற்கு அரசை அருளி * முன்
கலைமாச் சிலையால் எய்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 7

மாலாய் மனமே! அருந்துயரில் *
வருந்தாதிரு நீ * வலி மிக்க
கால் ஆர் மருதும் காய் சினத்த
கழுதும் * கதமாக் கழுதையும் **
மால் ஆர் விடையும் மதகரியும் *
மல்லர் உயிரும் மடிவித்து *
காலால் சகடம் பாய்ந்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 8

குன்றால் மாரி பழுதாக்கிக் *
கொடியேர் இடையாள் பொருட்டாக *
வன்தாள் விடை ஏழ் அன்று அடர்த்த *
வானோர் பெருமான் மாமாயன் **
சென்றான் தூது பஞ்சவர்க்காய்த் *
திரிகாற் சகடம் சினம் அழித்து *
கன்றால் விளங்காய் எறிந்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 9

** கருமாமுகில் தோய் நெடுமாடக் *
கண்ணபுரத்து எம் அடிகளை *
திருமாமகளால் அருள் மாரி *
செழுநீர் ஆலி வளநாடன் **
மருவார் புயற்கைக் கலிகன்றி *
மங்கை வேந்தன் ஒலி வல்லார் *
இருமாநிலத்துக்கு அரசாகி *
இமையோர் இறைஞ்ச வாழ்வாரே 10

அடிவரவு: தொண்டீர் பொருந்தா வல்லி மல்லை ஆமை வருந்தாது இலை மால் குன்றால் கருமா வியம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

ஏழாம் திருமொழி - வியமுடை
திருக்கண்ணபுரம் 7

** வியம் உடை விடை இனம் * உடைதர மடமகள் *
குயமிடை தடவரை * அகலம் அது உடையவர் **
நயம் உடை நடை அனம் * இளையவர் நடை பயில் *
கயமிடை கணபுரம் * அடிகள் தம் இடமே 1

இணை மலி மருதினொடு * எருதிற இகல் செய்து *
துணை மலி முலையவள் * மணம் மிகு கலவியுள் **
மணமலி விழவினொடு * அடியவர் அளவிய *
கணம் மலி கணபுரம் * அடிகள் தம் இடமே 2

புயல் உறு வரை மழை * பொழி தர மணி நிரை *
மயல் உற வரை குடை * எடுவிய நெடியவர் **
முயல் துளர் மிளை முயல் துள * வளவிளை வயல் *
கயல் துளு கணபுரம் * அடிகள் தம் இடமே 3

ஏதலர் நகை செய * இளையவர் அளை வெணெய் *
போது செய்து அமரிய * புனிதர் நல்விரை மலர் **
கோதிய மதுகரம் * குலவிய மலர்மகள் *
காதல் செய் கணபுரம் * அடிகள் தம் இடமே 4

தொண்டரும் அமரரும் * முனிவரும் தொழுதெழ *
அண்டமொடு அகல் இடம் * அளந்தவர் அமர் செய்து **
விண்டவர் பட * மதிள் இலங்கை முன் எரி எழ *
கண்டவர் கணபுரம் * அடிகள் தம் இடமே 5

மழுவியல் படை உடை * அவன் இடம் மழை முகில் *
தழுவிய உருவினர் * திருமகள் மருவிய **
கொழுவிய செழுமலர் * முழுசிய பறவை பண் *
எழுவிய கணபுரம் * அடிகள் தம் இடமே 6

பரிதியொடு அணிமதி * பனி வரை திசை நிலம் *
எரி தியொடு எனவின * இயல்வினர் செலவினர் **
சுருதியொடு அருமறை * முறை சொலும் அடியவர் *
கருதிய கணபுரம் * அடிகள் தம் இடமே 7

படி புல்கும் அடி இணை * பலர் தொழ மலர் வைகு *
கொடி புல்கு தடவரை * அகலம் அது உடையவர் **
முடி புல்கு நெடுவயல் * படை செல அடிமலர் *
கடி புல்கு கணபுரம் * அடிகள் தம் இடமே 8

புலமனு மலர் மிசை * மலர்மகள் புணரிய *
நிலமகள் எனவின * மகளிர்கள் இவரொடும் **
வலமனு படை உடை * மணிவணர் நிதி குவை *
கலமனு கணபுரம் * அடிகள் தம் இடமே 9

** மலி புகழ் கணபுரம் உடைய * எம் அடிகளை *
வலி கெழு மதிள் அயல் * வயல் அணி மங்கையர் **
கலியன தமிழ் இவை * விழுமிய இசையினொடு *
ஒலி சொலும் அடியவர் * உறுதுயர் இலரே 10

அடிவரவு: வியம் இணை புயல் ஏதலர் தொண்டர் மழு பரிதியொடு படி புலம் மலிபுகழ் வானோர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

எட்டாம் திருமொழி - வானோரளவும்
திருக்கண்ணபுரம் 8 - தசாவதாரம்

** வானோர் அளவும் முது முந்நீர் *
வளர்ந்த காலம் * வலி உருவின்
மீனாய் வந்து வியந்து உய்யக்
கொண்ட * தண்தாமரைக் கண்ணன் **
ஆனா உருவின் ஆன் ஆயன் அவனை *
அம் மா விளை வயலுள் *
கானார் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 1

மலங்கு விலங்கு நெடு வெள்ளம்
மறுக * அங்கோர் வரை நட்டு *
இலங்கு சோதி ஆரமுதம் *
எய்தும் அளவோர் ஆமையாய் **
விலங்கல் திரியத் தடங்கடலுள் *
சுமந்து கிடந்த வித்தகனை *
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 2

பாரார் அளவும் முது முந்நீர் *
பரந்த காலம் * வளை மருப்பில்
ஏரார் உருவத்து ஏனமாய் *
எடுத்த ஆற்றல் அம்மானை **
கூரார் ஆரல் இரை கருதிக் *
குருகு பாயக் கயல் இரியும் *
காரார் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 3

உளைந்த அரியும் மானிடமும் *
உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து *
விளைந்த சீற்றம் விண் வெதும்ப *
வேற்றோன் அகலம் வெஞ்சமத்து **
பிளந்து வளைந்த உகிரானைப் *
பெருந்தண் ஸெந்நெல் குலை தடிந்து *
களஞ்செய் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 4

தொழுநீர் வடிவின் குறள் உருவாய் *
வந்து தோன்றி மாவலி பால் *
முழுநீர் வையம் முன் கொண்ட *
மூவா உருவின் அம்மானை **
உழுநீர் வயலுள் பொன் கிளைப்ப *
ஒருபால் முல்லை முகையோடும் *
கழுநீர் மலரும் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 5

வடி வாய் மழுவே படையாக *
வந்து தோன்றி மூவெழுகால் *
படியார் அரசு களை கட்ட *
பாழியானை அம்மானை **
குடியா வண்டு கொண்டுண்ணக் *
கோல நீலம் மட்டுகுக்கும் *
கடியார் புறவில் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 6

வையம் எல்லாம் உடன் வணங்க *
வணங்கா மன்னனாய்த் தோன்றி *
வெய்ய சீற்றக் கடி இலங்கை *
குடிகொண்டு ஓட வெஞ்சமத்து **
செய்த வெம்போர் நம் பரனைச் *
செழுந்தண் கானல் மண நாறும் *
கைதை வேலிக் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 7

ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் *
ஒருபால் தோன்றத் தான் தோன்றி *
வெற்றித் தொழிலார் வேல் வேந்தர் *
விண் பால் செல்ல வெஞ்சமத்து **
செற்ற கொற்றத் தொழிலானைச் *
செந்தீ மூன்றும் இல்லிருப்ப *
கற்ற மறையோர் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 8

துவரிக் கனி வாய் நிலமங்கை *
துயர் தீர்ந்து உய்யப் பாரதத்துள் *
இவரித்த அரசர் தடுமாற *
இருள் நாள் பிறந்த அம்மானை **
உவரி ஓதம் முத்துந்த *
ஒருபால் ஒருபால் ஒண்செந்நெல் *
கவரி வீசும் கண்ணபுரத்து *
அடியேன் கண்டு கொண்டேனே 9

** மீனோடு ஆமை கேழல் அரி
குறளாய் * முன்னும் இராமனாய்த்
தானாய் * பின்னும் இராமனாய்த் *
தாமோதரனாய்க் கற்கியும்
ஆனான் தன்னை ** கண்ணபுரத்து
அடியன் * கலியன் ஒலி செய்த *
தேனார் இன்சொல் தமிழ் மாலை *
செப்பப் பாவம் நில்லாவே 10

அடிவரவு: வானோர் மலங்கு பார் உளைந்த தொழு வடி வையம் ஒற்றை துவரி மீனோடு கைம்மானம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - கைம்மானம்
திருக்கண்ணபுரம் 9

** கைம்மான மத யானை * இடர் தீர்த்த கருமுகிலை *
மைம்மான மணியை * அணிகொள் மரதகத்தை **
எம்மானை எம்பிரானை * ஈசனை என் மனத்துள்
அம்மானை * அடியேன் அடைந்து உய்ந்து போனேனே 1

தரு மான மழை முகிலைப் * பிரியாது தன் அடைந்தார் *
வரு மானம் தவிர்க்கும் * மணியை அணி உருவில் **
திருமாலை அம்மானை * அமுதத்தைக் கடல் கிடந்த
பெருமானை * அடியேன் அடைந்து உய்ந்து பிழைத்தேனே 2

** விடை ஏழ் அன்றடர்த்து * வெகுண்டு விலங்கல் உற *
படையால் ஆழி தட்ட * பரமன் பரஞ்சோதி **
மடையார் நீலம் மல்கும் வயல் சூழ் * கண்ணபுரம் ஒன்று
உடையானுக்கு * அடியேன் ஒருவர்க்கு உரியேனோ? 3

** மிக்கானை * மறையாய் விரிந்த விளக்கை * என்னுள்
புக்கானைப் * புகழ் சேர் பொலிகின்ற பொன் மலையை **
தக்கானைக் * கடிகைத் தடங்குன்றின் மிசை இருந்த *
அக்காரக் கனியை * அடைந்து உய்ந்து போனேனே 4

வந்தாய் என் மனத்தே * வந்து நீ புகுந்த பின்னை *
எந்தாய்! போய் அறியாய் * இதுவே அமையாதோ? **
கொந்தார் பைம்பொழில் சூழ் * குடந்தைக் கிடந்து உகந்த
மைந்தா! * உன்னை என்றும் * மறவாமைப் பெற்றேனே 5

எஞ்சா வெந்நரகத்து * அழுந்தி நடுங்குகின்றேற்கு *
அஞ்சேல் என்று அடியேனை * ஆட்கொள்ள வல்லானை **
நெஞ்சே! நீ நினையாது * இறைப் பொழுதும் இருத்தி கண்டாய் *
மஞ்சார் மாளிகை சூழ் * வயல் ஆலி மைந்தனையே 6

பெற்றார் பெற்று ஒழிந்தார் * பின்னும் நின்று அடியேனுக்கு *
உற்றானாய் வளர்த்து * என் உயிர் ஆகி நின்றானை **
முற்றா மாமதி கோள் * விடுத்தானை எம்மானை *
எத்தால் யான் மறக்கேன்? * இது சொல் என் ஏழை நெஞ்சே! 7

கற்றார் பற்றறுக்கும் * பிறவிப் பெருங்கடலே *
பற்றா வந்து அடியேன் * பிறந்தேன் பிறந்த பின்னை **
வற்றா நீர்வயல் சூழ் * வயல் ஆலி அம்மானைப்
பெற்றேன் * பெற்றதுவும் * பிறவாமைப் பெற்றேனே 8

** கண்ணார் கண்ணபுரம் * கடிகை கடி கமழும் *
தண்ணார் தாமரை சூழ் * தலைச்சங்க மேல் திசையுள் **
விண்ணோர் நாண்மதியை * விரிகின்ற வெஞ்சுடரை *
கண்ணாரக் கண்டு கொண்டு * களிக்கின்றது இங்கு என்று கொலோ? 9

** செரு நீர வேல் வலவன் * கலிகன்றி மங்கையர் கோன் *
கரு நீர் முகில் வண்ணன் * கண்ணபுரத்தானை **
இரு நீர் இன் தமிழ் * இன்னிசை மாலைகள் கொண்டு தொண்டீர்! *
வரு நீர் வையம் உய்ய * இவை பாடி ஆடுமினே 10

அடிவரவு: கைம்மானம் தரு விடை மிக்கானை வந்தாய் எஞ்சா பெற்றார் கற்றார் கண்ணார் செரு வண்டார்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
எட்டாம் பத்து

பத்தாம் திருமொழி - வண்டார்
திருக்கண்ணபுரம் 10

** வண்டார் பூ மாமலர் மங்கை * மண நோக்கம்
உண்டானே! * உன்னை உகந்து உகந்து * உன் தனக்கே
தொண்டானேற்கு ** என் செய்கின்றாய்? சொல்லு * நால் வேதம்
கண்டானே! * கண்ணபுறத்துறை அம்மானே! 1

பெரு நீரும் விண்ணும் * மலையும் உலகேழும் *
ஒரு தாரா நின்னுள் ஒடுக்கிய * நின்னை அல்லால் **
வரு தேவர் மற்றுளர் என்று * என் மனத்து இறையும்
கருதேன் நான் * கண்ணபுரத்துறை அம்மானே! 2

** மற்றும் ஓர் தெய்வம் உளதென்று * இருப்பாரோடு
உற்றிலேன் * உற்றதும் உன் அடியார்க்கு அடிமை **
மற்றெல்லம் பேசிலும் * நின் திருவெட்டெழுத்தும்
கற்று நான் * கண்ணபுரத்துறை அம்மானே! 3

பெண் ஆனாள் * பேர் இளம் கொங்கையின் ஆரழல் போல் *
உண்ணா நஞ்சுண்டு உகந்தாயை * உகந்தேன் நான் **
மண் ஆளா! வாள் நெடுங்கண்ணி * மதுமலராள்
கண்ணாளா! * கண்ணபுரத்துறை அம்மானே! 4

பெற்றாரும் சுற்றமும் * என்றிவை பேணேன் நான் *
மற்றாரும் பற்றிலேன் * ஆதலால் நின் அடைந்தேன் **
உற்றான் என்று உள்ளத்து வைத்து * அருள் செய் கண்டாய் *
கற்றார் சேர் * கண்ணபுரத்துறை அம்மானே! 5

ஏத்தி உன் சேவடி * எண்ணி இருப்பாரை *
பார்த்திருந்து அங்கு * நமன் தமர் பற்றாது **
சோத்த நாம் அஞ்சுதும் என்று * தொடாமை நீ
காத்தி போல் * கண்ணபுரத்துறை அம்மானே! 6

வெள்ளை நீர் வெள்ளத்து * அணைந்த அரவணை மேல் *
துள்ளு நீர் மெள்ளத் * துயின்ற பெருமானே! **
வள்ளலே! உன் தமர்க்கு என்றும் * நமன் தமர்
கள்ளர் போல் * கண்ணபுரத்துறை அம்மானே! 7

மாணாகி * வையம் அளந்ததுவும் * வாள் அவுணன்
பூண் ஆகம் கீண்டதுவும் * ஈண்டு நினைந்து இருந்தேன் **
பேணாத வல்வினையேன் * இடர் எத்தனையும்
காணேன் நான் * கண்ணபுரத்துறை அம்மானே! 8

நாட்டினாய் என்னை * உனக்கு முன் தொண்டாக *
மாட்டினேன் அத்தனையே கொண்டு * என் வல்வினையை **
பாட்டினால் உன்னை * என் நெஞ்சத்து இருந்தமை
காட்டினாய் * கண்ணபுரத்துறை அம்மானே! 9

** கண்ட சீர்க் * கண்ணபுரத்துறை அம்மானை *
கொண்ட சீர்த் தொண்டன் * கலியன் ஒலி மாலை **
பண்டமாய்ப் பாடும் * அடியவர்க்கு எஞ்ஞான்றும் *
அண்டம் போய் ஆட்சி * அவர்க்கு அது அறிந்தோமே 10

அடிவரவு: வண்டார் பெரு மற்று பெண் பெற்றார் ஏத்தி வெள்ளை மாண் நாட்டினாய் கண்டசீர் வங்கம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

ஒன்பதாம் பத்து

முதல் திருமொழி - வங்கமாமுந்நீர்
திருக்கண்ணங்குடி

** வங்க மா முந்நீர் வரி நிறப் பெரிய *
வாள் அரவின் அணை மேவி *
சங்கமார் அங்கைத் தடமலர் உந்திச் *
சாம மாமேனி என் தலைவன் **
அங்கம் ஆறு ஐந்து வேள்வி நால் வேதம் *
அருங்கலை பயின்று * எரி மூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர் *
திருக்கண்ணங்குடியுள் நின்றானே 1

கவள மா கதத்த கரி உய்யப் * பொய்கைக்
 கராம் கொளக் கலங்கி * உள் நினைந்து
துவள மேல் வந்து தோன்றி * வன் முதலை
 துணி படச் சுடு படை துரந்தோன் **
குவளை நீள் முளரி குமுதம் ஒண்கழுநீர் *
 கொய்ம்மலர் நெய்தல் ஒண்கழனி *
திவளும் மாளிகை சூழ் செழுமணிப் புரிசைத் *
 திருக்கண்ணங்குடியுள் நின்றானே 2

வாதை வந்தடர வானமும் நிலனும் *
 மலைகளும் அலைகடல் குளிப்ப *
மீது கொண்டு உகளும் மீன் உருவாகி *
 விரிபுனல் வரி அகட்டொளித்தோன் **
போதலர் புன்னை மல்லிகை மௌவல் *
 புது விரை மதுமலர் அணைந்து *
சீத ஒண்தென்றல் திசை தொறும் கமழும் *
 திருக்கண்ணங்குடியுள் நின்றானே 3

வென்றி சேர் திண்மை விலங்கல் மாமேனி *
 வெள் எயிற்று ஒள் எரித் தறு கண் *
பன்றியாய் அன்று பார்மகள் பயலை
 தீர்த்தவன் * பஞ்சவர் பாகன் **
ஒன்றலா உருவத்து உலப்பில் பல்காலத்து *
 உயர் கொடி ஒளி வளர் மதியம் *
சென்று சேர் சென்னிச் சிகர நன்மாடத் *
 திருக்கண்ணங்குடியுள் நின்றானே 4

மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய் *
 மூவடி நீரொடும் கொண்டு *
பின்னும் ஏழுலகும் ஈரடியாகப் *
 பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன் **
அன்ன மென்கமலத்து அணி மலர்ப் பீடத்து *
 அலைபுனல் இலைக் குடை நீழல் *
செந்நெல் ஒண்கவரி அசைய வீற்றிருக்கும் *
 திருக்கண்ணங்குடியுள் நின்றானே 5

மழுவினால் அவனி அரசை மூவெழுகால் *
 மணிமுடி பொடி படுத்து * உதிரக்
குழுவு வார்புனலுள் குளித்து * வெங்கோபம்
 தவிர்ந்தவன் குலை மலி கதலி **
குழுவும் வார் கமுகும் குரவும் நற்பலவும் *
 குளிர் தரு சூத மாதவியும் *
செழுமையார் பொழில்கள் தழுவும் நன்மாடத் *
 திருக்கண்ணங்குடியுள் நின்றானே 6

வான் உளார் அவரை வலிமையால் நலியும் *
மலிகடல் இலங்கையார் கோனை *
பானு சேர் சரத்தால் பனங்கனி போலப் *
பருமுடி உதிர வில் வளைத்தோன் **
கான் உலா மயிலின் கணங்கள் நின்றாடக் *
கணமுகில் முரசம் நின்று அதிர *
தேன் உலா வரி வண்டு இன்னிசை முரலும் *
திருக்கண்ணங்குடியுள் நின்றானே 7

அரவு நீள்கொடியோன் அவையுள் ஆசனத்தை *
அஞ்சிடாதே இட * அதற்குப்
பெரிய மாமேனி அண்டம் ஊடுருவப் *
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன் **
வரையின் மாமணியும் மரதகத் திரளும் *
வயிரமும் வெதிர் உதிர் முத்தும் *
திரை கொணர்ந்து உந்தி வயல் தொறும் குவிக்கும் *
திருக்கண்ணங்குடியுள் நின்றானே 8

பன்னிய பாரம் பார்மகட்கு ஒழியப் *
பாரத மாபெரும் போரில் *
மன்னர்கள் மடிய மணி நெடும் திண்தேர் *
மைத்துனற்கு உய்த்த மாமாயன் **
துன்னு மாதவியும் சுரபுனைப் பொழிலும் *
சூழ்ந்தெழு செண்பக மலர் வாய் *
தென்னவென்று அளிகள் முரன்று இசை பாடும் *
திருக்கண்ணங்குடியுள் நின்றானே 9

** கலை உலா அல்குல் காரிகை திறத்துக் *
கடல் பெரும் படையொடும் சென்று *
சிலையினால் இலங்கை தீ எழச் செற்ற *
திருக்கண்ணங்குடியுள் நின்றானை **
மலை குலா மாட மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் *
உலவு சொல் மாலை ஒன்பதோடு ஒன்றும் *
வல்லவர்க்கு இல்லை நல்குரவே 10

அடிவரவு: வங்கம் கவளம் வாதை வென்ரி மன்னவன் மழுவினால் வானுளார் அரவு பன்னிய கலை பொன்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

இரண்டாம் திருமொழி - பொன்னிவர்
திருநாகை
[தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்குக் கூறிய பாசுரம்]

** பொன் இவர் மேனி மரதகத்தின் *
பொங்கிளம் சோதி அகலத்து ஆரம்
மின் * இவர் வாயில் நல் வேதம் ஓதும் *
வேதியர் வானவர் ஆவர் தோழீ! **
என்னையும் நோக்கி என் அல்குலும் நோக்கி *
ஏந்து இளம் கொங்கையும் நோக்குகின்றார் *
அன்னை என் நோக்கும் என்று அஞ்சுகின்றேன் *
அச்சோ ஒருவர் அழகியவா! 1

தோடவிழ் நீலம் மணம் கொடுக்கும் *
சூழ் புனல் சூழ் குடந்தைக் கிடந்த *
சேடர் கொல் என்று தெரிக்க மாட்டேன் *
செஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி **
பாடக மெல்லடியார் வணங்கப் *
பன்மணி முத்தொடு இலங்கு சோதி *
ஆடகம் பூண்டொரு நான்கு தோளும் *
அச்சோ ஒருவர் அழகியவா! 2

வேய் இருஞ்சோலை விலங்கல் சூழ்ந்த *
மெய்ய மணாளர் இவ்வையம் எல்லாம் *
தாயின நாயகர் ஆவர் தோழீ! *
தாமரைக் கண்கள் இருந்தவாறு **
சேய் இருங்குன்றம் திகழ்ந்தது ஒப்பச் *
செவ்வியவாகி மலர்ந்த சோதி *
ஆயிரம் தோளொடு இலங்கு பூணும் *
அச்சோ ஒருவர் அழகியவா! 3

வம்பவிழும் துழாய் மாலை தோள் மேல் *
கையன ஆழியும் சங்கும் ஏந்தி *
நம்பர் நம் இல்லம் புகுந்து நின்றார் *
நாகரிகர் பெரிதும் இளையர் **
செம்பவளம் இவர் வாயின் வண்ணம் *
தேவர் இவரது உருவம் சொல்லில் *
அம்பவளத் திரளேயும் ஒப்பர் *
அச்சோ ஒருவர் அழகியவா! 4

கோழியும் கூடலும் கோயில் கொண்ட *
கோவலரே ஒப்பர் குன்றம் அன்ன *
பாழி அந்தோளும் ஓர் நான்குடையர் *
பண்டு இவர் தம்மையும் கண்டறியோம் **
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில் *
மாகடல் போன்றுளர் கையில் வெய்ய *
ஆழி ஒன்று ஏந்தி ஓர் சங்கு பற்றி *
அச்சோ ஒருவர் அழகியவா! 5

வெஞ்சின வேழம் மருப்பொசித்த *
வேந்தர் கொல்? ஏந்திழையார் மனத்தை *
தஞ்சுடையாளர் கொல்? யான் அறியேன் *
தாமரைக் கண்கள் இருந்தவாறு **
கஞ்சனை அஞ்ச முன் கால் விசைத்த *
காளையர் ஆவர் கண்டார் வணங்கும் *
அஞ்சன மாமலையேயும் ஒப்பர் *
அச்சோ ஒருவர் அழகியவா! 6

பிணி அவிழ் தாமரை மொட்டலர்த்தும் *
பேரருளாளர் கொல்? யான் அறியேன் *
பணியும் என் நெஞ்சம் இதென் கொல்? தோழீ! *
பண்டு இவர் தம்மையும் கண்டறியோம் **
அணி கெழு தாமரை அன்ன கண்ணும் *
அங்கையும் பங்கயம் மேனி வானத்து *
அணி கெழு மாமுகிலேயும் ஒப்பர் *
அச்சோ ஒருவர் அழகியவா! 7

மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட *
மாலிருஞ்சோலை மணாளர் வந்து * என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார் *
நீர்மலையார் கொல்? நினைக்க மாட்டேன் **
மஞ்சுயர் பொன்மலை மேல் எழுந்த *
மாமுகில் போன்றுளர் வந்து காணீர் *
அஞ்சிறைப் புள்ளும் ஒன்று ஏறி வந்தார் *
அச்சோ ஒருவர் அழகியவா! 8

எண்திசையும் எறி நீர்க் கடலும் *
ஏழுலகும் உடனே விழுங்கி *
மண்டி ஓர் ஆலிலைப் பள்ளி கொள்ளும் *
மாயர் கொல்? மாயம் அறிய மாட்டேன் **
கொண்டல் நன்மால் வரையேயும் ஒப்பர் *
கொங்கலர் தாமரைக் கண்ணும் வாயும் *
அண்டத்து அமரர் பணிய நின்றார் *
அச்சோ ஒருவர் அழகியவா! 9

** அன்னமும் கேழலும் மீனும் ஆய *
ஆதியை நாகை அழகியாரை *
கன்னி நன்மாமதிள் மங்கை வேந்தன் *
காமரு சீர்க் கலிகன்றி ** குன்றா
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை *
ஏழும் இரண்டும் ஒரொன்றும் வல்லார் *
மன்னவராய் உலகாண்டு * மீண்டும்
வானவராய் மகிழ்வு எய்துவரே 10

அடிவரவு: பொன் தோடு வேய் வம்பு கோழி வெஞ்சினம் பிணி மஞ்சுயர் எண்திசை அன்னம் தன்னை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

மூன்றாம் திருமொழி - தன்னை
திருப்புல்லாணி 1
[தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாமை மிகுதியால் தலைவனிடம் செல்லத் துணிந்து நெஞ்சையும் தோழியையும் துணை வேண்டிய பாசுரம்]

** தன்னை நைவிக்கிலென் * வல்வினையேன் தொழுதும் எழு *
பொன்னை நைவிக்கும் * அப்பூஞ்செருந்தி மண நீழல் வாய் **
என்னை நைவித்து * எழில் கொண்டு அகன்ற பெருமான் இடம் *
புன்னை முத்தம் பொழில் சூழ்ந்து * அழகாய புல்லாணியே 1

உருகி நெஞ்சே! நினைந்து இங்கு இருந்தென்? * தொழுதும் எழு *
முருகு வண்டுண் மலர்க் கைதையின் நீழலில் * முன்னொரு நாள் **
பெருகு காதன்மை * என் உள்ளம் எய்தப் பிரிந்தான் இடம் *
பொருது முந்நீர்க் கரைக்கே * மணி உந்து புல்லாணியே 2

ஏது செய்தால் மறக்கேன்? * மனமே! தொழுதும் எழு *
தாது மல்கு தடம் சூழ் பொழில் * தாழ்வர் தொடர்ந்து ** பின்
பேதை நினைப் பிரியேன் இனி * என்று அகன்றான் இடம் *
போது நாளும் கமழும் * பொழில் சூழ்ந்த புல்லாணியே 3

கொங்குண் வண்டே கரி ஆக வந்தான் * கொடியேற்கு * முன்
நங்கள் ஈசன் * நமக்கே பணித்த மொழி செய்திலன் **
மங்கை நல்லாய்! தொழுதும் எழு * போய் அவன் மன்னும் ஊர் *
பொங்கு முந்நீர்க் கரைக்கே * மணி உந்து புல்லாணியே 4

உணரில் உள்ளம் சுடும் ஆல் * வினையேன் தொழுதும் எழு *
துணரி ஞாழல் நறும் போது * நம் சூழ் குழல் பெய்து ** பின்
தணரில் ஆவி தளரும் என * அன்பு தந்தான் இடம் *
புணரி ஓதம் பணிலம் * மணி உந்து புல்லாணியே 5

எள்கி நெஞ்சே! நினைந்து இங்கு இருந்தென்? * தொழுதும் எழு *
வள்ளல் மாயன் * மணிவண்ணன் எம்மான் மருவும் இடம் **
கள் அவிழும் மலர்க் காவியும் * தூமடல் கைதையும் *
புள்ளும் அள்ளல் பழனங்களும் சூழ்ந்த * புல்லாணியே 6

பரவி நெஞ்சே! தொழுதும் எழு * போய் அவன் பாலமாய் *
இரவும் நாளும் இனிக் * கண் துயிலாது இருந்தென் பயன்? **
விரவி முத்தம் * நெடு வெண்மணல் மேல் கொண்டு * வெண்திரை
புரவி என்னப் புதம் செய்து * வந்துந்து புல்லாணியே 7

அலமும் ஆழிப் படையும் உடையார் * நமக்கு அன்பராய் *
சலம் அதாகித் தகவொன்றிலர் * நாம் தொழுதும் எழு **
உலவு கால் நற்கழி ஓங்கு * தண்பைம்பொழில் ஊடு * இசை
புலவு கானல் * களிவண்டினம் பாடு புல்லாணியே 8

ஓதி நாமம் குளித்து உச்சி தன்னால் * ஒளி மாமலர் *
பாதம் நாளும் பணிவோம் * நமக்கே நலம் ஆதலில் **
ஆது தாரான் எனிலும் தரும் * அன்றியும் அன்பராய் *
போது மாதே! தொழுதும் * அவன் மன்னு புல்லாணியே 9

** இலங்கு முத்தும் பவளக் கொழுந்தும் * எழில் தாமரை *
புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து * அழகாய புல்லாணி மேல் **
கலங்கல் இல்லாப் புகழான் * கலியன் ஒலி மாலை *
வலங்கொள் தொண்டர்க்கு இடம் ஆவது * பாடில் வைகுந்தமே 10

அடிவரவு: தன்னை உருகி ஏது கொங்கு உணரில் எள்கி பரவி அலம் ஓதி இலங்கு காவார்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

நான்காம் திருமொழி - காவார்
திருப்புல்லாணி 2
[பிரிவாற்றாத தலைவி பறவைகளைத் தூது விட்டும், பிறை தென்றல் முதலியவற்றால் வருந்தியும் கூறிய பாசுரம்]

** காவார் மடல் பெண்ணை * அன்றில் அரி குரலும் *
ஏவாயின் ஊடு இயங்கும் * எஃகிற் கொடிதாலோ! **
பூவார் மணம் கமழும் * புல்லாணி கை தொழுதேன் *
பாவாய்! இது நமக்கோர் * பான்மையே ஆகாதே 1

முன்னம் குறள் உருவாய் * மூவடி மண் கொண்டளந்த *
மன்னன் சரிதைக்கே * மால் ஆகிப் பொன் பயந்தேன் **
பொன் அங்கழிக் கானல் * புள்ளினங்காள்! புல்லாணி *
அன்னமாய் நூல் பயந்தாற்கு * ஆங்கு இதனைச் செப்புமினே 2

வவ்வித் துழாய் அதன் மேல் * சென்ற தனி நெஞ்சம் *
செவ்வி அறியாது * நிற்குங்கொல்? நித்திலங்கள் **
பவ்வத் திரை உலவு * புல்லாணி கை தொழுதேன் *
தெய்வச் சிலையாற்கு * என் சிந்தை நோய் செப்புமினே 3

பரிய இரணியனது ஆகம் * அணி உகிரால் *
அரி உருவாய்க் கீண்டான் * அருள் தந்தவா! நமக்கு **
பொரு திரைகள் போந்துலவு * புல்லாணி கை தொழுதேன் *
அரி மலர்க் கண் நீர் ததும்ப * அந்துகிலும் நில்லாவே 4

** வில்லால் இலங்கை மலங்கச் * சரம் துரந்த *
வல்லாளன் பின் போன * நெஞ்சம் வரும் அளவும் **
எல்லாரும் என் தன்னை * ஏசிலும் பேசிடினும் *
புல்லாணி எம்பெருமான் * பொய் கேட்டு இருந்தேனே 5

சுழன்று இலங்கு வெங்கதிரோன் * தேரோடும் போய் மறைந்தான் *
அழன்று கொடிதாகி * அஞ்சுடரில் தான் அடுமால் **
செழுந்தடம் பூஞ்சோலை சூழ் * புல்லாணி கை தொழுதேன் *
இழந்திருந்தேன் என் தன் * எழில் நிறமும் சங்குமே 6

கனையார் இடிகுரலின் * கார்மணியின் நா ஆடல் *
தினையேனும் நில்லாது * தீயில் கொடிதாலோ **
புனையார் மணிமாடப் * புல்லாணி கை தொழுதேன் *
வினையேன் மேல் வேலையும் * வெந்தழலே வீசுமே 7

தூம்புடைக் கை வேழம் * வெருவ மருப்பு ஒசித்த *
பாம்பின் அணையான் * அருள் தந்தவா! நமக்கு **
பூஞ்செருந்தி பொன் சொரியும் * புல்லாணி கை தொழுதேன் *
தேம்பல் இளம்பிறையும் * என் தனக்கோர் வெந்தழலே 8

வேதமும் வேள்வியும் * விண்ணும் இருசுடரும் *
ஆதியும் ஆனான் * அருள் தந்தவா! நமக்கு **
போதலரும் புன்னை சூழ் * புல்லாணி கை தொழுதேன் *
ஓதமும் நானும் * உறங்காது இருந்தேனே 9

** பொன் அலரும் புன்னை சூழ் * புல்லாணி அம்மானை *
மின் இடையார் வேட்கை நோய் கூர * இருந்ததனை **
கல் நவிலும் திண்தோள் * கலியன் ஒலி வல்லார் *
மன்னவராய் மண்ணாண்டு * வானாடும் உன்னுவரே 10

அடிவரவு: காவார் முன்னம் வவ்வி பரிய வில் சுழன்று கனை தூம்புடை வேதம் பொன்னலரும் தவளம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

ஐந்தாம் திருமொழி - தவளவிளம்பிறை
திருக்குறுங்குடி 1
[தலைவி தனது தலைமகன் உள்ள இடத்தில் கொண்டு
விடும்படி உற்றாரை வேண்டிக் கூறிய பாசுரம்]

** தவள இளம்பிறை துள்ளு முந்நீர்த் *
தண்மலர்த் தென்றலோடு அன்றில் ஒன்றித்
துவள * என் நெஞ்சகம் சோர ஈரும் *
சூழ் பனி நாள் துயிலாது இருப்பேன் **
இவளும் ஓர் பெண்கொடி என்று இரங்கார் *
என் நலம் ஐந்தும் முன் கொண்டு போன *
குவளை மலர் நிற வண்ணர் மன்னு *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 1

தாதவிழ் மல்லிகை புல்லி வந்த *
தண்மதியின் இள வாடை இன்னே *
ஊதை திரிதந்து உழறி உண்ண *
ஓர் இரவும் உறங்கேன் ** உறங்கும்
பேதையர் பேதைமையால் இருந்து *
பேசிலும் பேசுக பெய் வளையார் *
கோதை நறுமலர் மங்கை மார்வன் *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 2

காலையும் மாலை ஒத்துண்டு * கங்குல்
நாழிகை ஊழியின் நீண்டுலாவும் *
போல்வதோர் தன்மை புகுந்து நிற்கும் *
பொங்கழலே ஒக்கும் வாடை சொல்லில் **
மாலவன் மாமணிவண்ணன் மாயம் *
மற்றும் உள அவை வந்திடா முன் *
கோல மயில் பயிலும் புறவில் *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 3

கருமணி பூண்டு வெண்ணாகு அணைந்து *
கார் இமில் ஏற்றணர் தாழ்ந்துலாவும் *
ஒரு மணி ஓசை என் உள்ளம் தள்ள *
ஓர் இரவும் உறங்காது இருப்பேன் **
பெருமணி வானவர் உச்சி வைத்த *
பேரருளாளன் பெருமை பேசி *
குருமணி நீர் கொழிக்கும் புறவில் *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 4

திண்திமில் ஏற்றின் மணியும் * ஆயன்
தீங்குழல் ஓசையும் தென்றலோடு *
கொண்டதோர் மாலையும் அந்தி ஈன்ற *
கோல இளம்பிறையோடு கூடி **
பண்டைய அல்ல இவை நமக்குப் *
பாவியேன் ஆவியை வாட்டம் செய்யும் *
கொண்டல் மணி நிற வண்ணர் மன்னு *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 5

எல்லியும் நன்பகலும் இருந்தே *
ஏசிலும் ஏசுக ஏந்திழையார் *
நல்லர் அவர் திறம் நாம் அறியோம் *
நாண் மடம் அச்சம் நமக்கு இங்கில்லை **
வல்லன சொல்லி மகிழ்வரேலும் *
மாமணி வண்ணரை நாம் மறவோம் *
கொல்லை வளர் இளமுல்லை புல்கு *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 6

செங்கண் நெடிய கரிய மேனித் *
தேவர் ஒருவர் இங்கே புகுந்து * என்
அங்கம் மெலிய வளை கழல *
ஆது கொலோ? என்று சொன்ன பின்னை **
ஐங்கணை வில்லி தன் ஆண்மை *
என்னோடு ஆடும் அதனை அறிய மாட்டேன் *
கொங்கலர் தண்பணை சூழ் புறவில் *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 7

கேவலம் அன்று கடலின் ஓசை *
கேண்மின்கள் ஆயன் கை ஆம்பல் வந்து * என்
ஆவி அளவும் அணைந்து நிற்கும் *
அன்றியும் ஐந்து கணை தெரிந்திட்டு **
ஏவலம் காட்டி இவன் ஒருவன் *
இப்படியே புகுந்து எய்திடா முன் *
கோவலர் கூத்தன் குறிப்பு அறிந்து *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 8

சோத்தென நின்று தொழ இரங்கான் *
தொன்னலம் கொண்டு எனக்கு இன்று தாறும் *
போர்ப்பதோர் பொற்படம் தந்து போனான் *
போயின ஊர் அறியேன் ** என் கொங்கை
மூத்திடுகின்றன * மற்றவன் தன்
மொய் அகலம் அணையாது வாளா *
கூத்தன் இமையவர் கோன் விரும்பும் *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 9

** செற்றவன் தென்னிலங்கை மலங்கத் *
தேவ பிரான் திருமாமகளைப்
பெற்றும் * என் நெஞ்சகம் கோயில் கொண்ட *
பேரருளாளன் பெருமை பேசக்
கற்றவன் ** காமரு சீர்க் கலியன் *
கண்ணகத்தும் மனத்தும் அகலாக்
கொற்றவன் * முற்றுலகு ஆளி நின்ற *
குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் 10

அடிவரவு: தவளம் தாதவிழ் காலை கருமணி திண்திமில் எல்லி செங்கண் கேவலம் சோத்தென செற்றவன் அக்கு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

ஆறாம் திருமொழி - அக்கும்
திருக்குறுங்குடி 2

** அக்கும் புலியின் * அதளும் உடையார் * அவர் ஒருவர்
பக்கம் நிற்க நின்ற * பண்பர் ஊர் போலும் **
தக்க மரத்தின் * தாழ் சினை ஏறி * தாய் வாயில்
கொக்கின் பிள்ளை * வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே 1

துங்கார் அரவத் * திரை வந்துலவத் * தொடுகடலுள்
பொங்கார் அரவில் துயிலும் * புனிதர் ஊர் போலும் **
செங்கால் அன்னம் * திகழ் தண்பணையில் பெடையோடும் *
கொங்கார் கமலத்து * அலரில் சேரும் குறுங்குடியே 2

வாழக் கண்டோம் * வந்து காண்மின் தொண்டீர்காள்! *
கேழல் செங்கண் * மாமுகில் வண்ணர் மருவும் ஊர் **
ஏழைச் செங்கால் * இன் துணை நாரைக்கு இரை தேடி *
கூழைப் பார்வைக் * கார் வயல் மேயும் குறுங்குடியே 3

சிர முன் ஐந்தும் ஐந்தும் * சிந்தச் சென்று * அரக்கன்
உரமும் கரமும் துணித்த * உரவோன் ஊர் போலும் **
இரவும் பகலும் * ஈன் தேன் முரல * மன்றெல்லாம்
குரவின் பூவே தான் * மண நாறும் குறுங்குடியே 4

கவ்வைக் களிற்று மன்னர் மாளக் * கலி மான் தேர்
ஐவர்க்காய் * அன்று அமரில் உய்த்தான் ஊர் போலும் **
மை வைத்து இலங்கு * கண்ணார் தங்கள் மொழி ஒப்பான் *
கொவ்வைக் கனி வாய்க் * கிள்ளை பேசும் குறுங்குடியே 5

தீ நீர் வண்ண * மாமலர் கொண்டு விரை ஏந்தி *
தூ நீர் பரவித் * தொழுமின் எழுமின் தொண்டீர்காள்! **
மா நீர் வண்ணர் * மருவி உறையும் இடம் * வானில்
கூன் நீர் மதியை * மாடம் தீண்டும் குறுங்குடியே 6

வல்லிச் சிறு நுண் இடையார் இடை * நீர் வைக்கின்ற *
அல்லல் சிந்தை தவிர * அடைமின் அடியீர்காள்! **
சொல்லில் திருவே அனையார் * கனி வாய் எயிறொப்பான் *
கொல்லை முல்லை * மெல்லரும்பு ஈனும் குறுங்குடியே 7

நாரார் இண்டை * நாண்மலர் கொண்டு நந்தமர்காள்! *
ஆரா அன்போடு * எம்பெருமான் ஊர் அடைமின்கள் **
தாரா ஆரும் * வார் புனல் மேய்ந்து வயல் வாழும் *
கூர் வாய் நாரை * பேடையொடு ஆடும் குறுங்குடியே 8

நின்ற வினையும் துயரும் கெட * மாமலர் ஏந்தி *
சென்று பணிமின் எழுமின் * தொழுமின் தொண்டீர்காள்! **
என்றும் இரவும் பகலும் * வரிவண்டு இசை பாட *
குன்றின் முல்லை * மன்றிடை நாறும் குறுங்குடியே 9

** சிலையால் இலங்கை செற்றான் * மற்றோர் சின வேழம் *
கொலையார் கொம்பு கொண்டான் * மேய குறுங்குடி மேல் **
கலையார் பனுவல் வல்லான் * கலியன் ஒலி மாலை *
நிலையார் பாடல் பாடப் * பாவம் நில்லாவே 10

அடிவரவு: அக்கு துங்கார் வாழ் சிரமுன் கவ்வை தீநீர் வல்லி நாரார் நின்ற சிலையால் தந்தை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

ஏழாம் திருமொழி - தந்தைதாய்
திருவல்லவாழ்

** தந்தை தாய் மக்களே * சுற்றம் என்று
        உற்றவர் பற்றி நின்ற *
பந்தமார் வாழ்க்கையை * நொந்து நீ
        பழி எனக் கருதினாயேல் **
அந்தமாய் ஆதியாய் * ஆதிக்கும்
        ஆதியாய் ஆயன் ஆய *
மைந்தனார் வல்லவாழ் * சொல்லுமா
        வல்லையாய் மருவு நெஞ்சே! 1

மின்னு மாவல்லியும் வஞ்சியும்
வென்ற * நுண்ணிடை நுடங்கும் *
அன்ன மென் நடையினார் கலவியை *
அருவருத்து அஞ்சினாயேல் **
துன்னு மாமணி முடிப் பஞ்சவர்க்காகி *
முன் தூது சென்ற *
மன்னனார் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 2

பூண் உலா மென்முலைப் பாவைமார் *
பொய்யினை மெய் இதென்று *
பேணுவார் பேசும் அப்பேச்சை * நீ
பிழை எனக் கருதினாயேல் **
நீணிலா வெண்குடை வாணனார் *
வேள்வியில் மண் இரந்த *
மாணியார் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 3

பண் உலா மென்மொழிப் பாவைமார் *
பணைமுலை அணைதும் நாம் என்று *
எண்ணுவார் எண்ணம் அது ஒழித்து * நீ
பிழைத்து உய்யக் கருதினாயேல் **
விண்ணுளார் விண்ணின் மீதியன்ற *
வேங்கடத்து உளார் * வளங்கொள் முந்நீர்
வண்ணனார் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 4

மஞ்சு தோய் வெண்குடை மன்னராய் *
வாரணம் சூழ வாழ்ந்தார் *
துஞ்சினார் என்பதோர் சொல்லை * நீ
துயர் எனக் கருதினாயேல் **
நஞ்சு தோய் கொங்கை மேல் அங்கை வாய்
வைத்து * அவள் நாளை உண்ட *
மைந்தனார் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 5

உருவின் ஆர் பிறவி சேர் * ஊன் பொதி
நரம்பு தோல் குரம்பையுள் புக்கு *
அருவி நோய் செய்து நின்று ஐவர் தாம் *
வாழ்வதற்கு அஞ்சினாயேல் **
திருவின் ஆர் வேதம் நான்கு ஐந்து தீ *
வேள்வியோடு அங்கம் ஆறும் *
மருவினார் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 6

நோய் எலாம் பெய்ததோர் ஆக்கையை *
மெய் எனக் கொண்டு * வாளா
பேயர் தாம் பேசும் அப்பேச்சை * நீ
பிழை எனக் கருதினாயேல் **
தீ உலா வெங்கதிர்த் திங்களாய் *
மங்குல் வானாகி நின்ற *
மாயனார் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 7

மஞ்சு சேர் வான் எரி * நீர் நிலம்
கால் இவை மயங்கி நின்ற *
அஞ்சு சேர் ஆக்கையை * அரணம் அன்று
என்று உய்யக் கருதினாயேல் **
சந்து சேர் மென்முலைப் * பொன்மலர்ப்
பாவையும் தாமும் * நாளும்
வந்து சேர் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 8

வெள்ளியார் பிண்டியார் போதியார் *
என்றிவர் ஓதுகின்ற *
கள்ள நூல் தன்னையும் * கருமம் அன்று
என்று உய்யக் கருதினாயேல் **
தெள்ளியார் கைதொழும் தேவனார் *
மா முநீர் அமுது தந்த *
வள்ளலார் வல்லவாழ் * சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 9

** மறை வலார் குறைவிலார் உறையும் ஊர் *
வல்லவாழ் அடிகள் தம்மை *
சிறை குலா வண்டறை சோலை சூழ் *
கோல நீள் ஆலி நாடன் **
கறை உலா வேல் வல்ல * கலியன்
வாய் ஒலி இவை கற்று வல்லார் *
இறைவராய் இருநிலம் காவல் பூண்டு *
இன்பம் நன்கு எய்துவாரே 10

அடிவரவு: தந்தை மின்னும் பூண் பண் மஞ்சு உருவின் நோய் மஞ்சுசேர் வெள்ளியார் மறை முந்துற

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

எட்டாம் திருமொழி - முந்துற
திருமாலிருஞ்சோலை 1

** முந்துற உரைக்கேன் விரைக் குழல் மடவார் *
கலவியை விடு தடுமாறல் *
அந்தரம் ஏழும் அலைகடல் ஏழும்
ஆய * எம் அடிகள் தம் கோயில் **
சந்தொடு மணியும் அணி மயில் தழையும் *
தழுவி வந்து அருவிகள் நிரந்து *
வந்திழி சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 1

இண்டையும் புனலும் கொண்டு இடை இன்றி *
எழுமினோ தொழுதும் என்று * இமையோர்
அண்டரும் பரவ அரவணைத் துயின்ற *
சுடர் முடிக் கடவுள் தம் கோயில் **
விண்டலர் தூளி வேய் வளர் புறவில் *
விரை மலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் *
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 2

பிணி வளர் ஆக்கை நீங்க நின்றேத்தப் *
பெருநிலம் அருளில் முன் அருளி *
அணி வளர் குறளாய் அகல் இடம் முழுதும் *
அளந்த எம் அடிகள் தம் கோயில் **
கணி வளர் வேங்கை நெடு நிலம் அதனில் *
குறவர் தம் கவண் இடைத் துரந்த *
மணி வளர் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 3

சூர்மயில் ஆய பேய் முலை சுவைத்துச் *
சுடு சரம் அடு சிலைத் துரந்து *
நீர்மை இலாத தாடகை மாள *
நினைந்தவர் மனம் கொண்ட கோயில் **
கார் மலி வேங்கை கோங்கலர் புறவில் *
கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் *
வார் புனல் சூழ் தண்மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 4

வணங்கலில் அரக்கன் செருக் களத்து அவிய *
மணிமுடி ஒருபதும் புரள *
அணங்கெழுந்து அவன் தன் கவந்தம் நின்றாட *
அமர் செய்த அடிகள் தம் கோயில் **
பிணங்கலில் நெடுவேய் நுதி முகம் கிழிப்பப் *
பிரசம் வந்து இழிதரப் * பெருந்தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 5

விடங்கலந்து அமர்ந்த அரவணைத் துயின்று *
விளங்கனிக்கு இளங்கன்று விசிறி *
குடங்கலந்தாடிக் குரவை முன் கோத்த *
கூத்த எம் அடிகள் தம் கோயில் **
தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத் *
தடவரைக் களிறென்று முனிந்து *
மடங்கல் நின்று அதிரும் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 6

தேனுகன் ஆவி போய் உக அங்கோர் *
செழுந்திரள் பனங்கனி உதிர *
தான் உகந்து எறிந்த தடங்கடல் வண்ணர் *
எண்ணி முன் இடங்கொண்ட கோயில் **
வானகச் சோலை மரதகச் சாயல் *
மாமணிக் கல் அதர் நிறைந்து *
மானுகர் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 7

புத மிகு விசும்பில் புணரி சென்று அணவப் *
பொருகடல் அரவணைத் துயின்று *
பத மிகு பரியின் மிகு சினம் தவிர்த்த *
பனி முகில் வண்ணர் தம் கோயில் **
கத மிகு சினத்த கட தடக் களிற்றின் *
கவுள் வழிக் களி வண்டு பருக *
மத மிகு சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 8

புந்தியில் சமணர் புத்தர் என்றிவர்கள் *
ஒத்தன பேசவும் உகந்திட்டு *
எந்தை பெம்மானார் இமையவர் தலைவர் *
எண்ணி முன் இடங்கொண்ட கோயில் **
சந்தனப் பொழிலின் தாழ் சினை நீழல் *
தாழ் வரை மகளிர்கள் நாளும் *
மந்திரத்து இறைஞ்சும் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 9

** வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை *
மாமணி வண்ணரை வணங்கும் *
தொண்டரைப் பரவும் சுடர் ஒளி நெடு வேல் *
சூழ் வயல் ஆலி நன்னாடன் **

கண்டல் நல்வேலி மங்கையர் தலைவன் *
கலியன் வாய் ஒலி செய்த பனுவல் *
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள் *
ஆள்வர் இக்குரைகடல் உலகே 10

அடிவரவு: முந்துற இண்டை பிணி சூர்மையில் வணங்கலில் விடம் தேனுகன் புதமிகு புந்தி வண்டமர் மூவர்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - மூவரில்
திருமாலிருஞ்சோலை 2
[பிரிவாற்றாது தலைவனை நாடிச் சென்ற தலைவியின் நிலையைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறிய பாசுரம்]

** மூவரில் முன் முதல்வன் * முழங்கார் கடலுள் கிடந்து *
பூவலர் உந்தி தன்னுள் * புவனம் படைத்து உண்டுமிழ்ந்த **
தேவர்கள் நாயகனைத் * திருமாலிருஞ்சோலை நின்ற *
கோவலர் கோவிந்தனைக் * கொடி ஏர் இடை கூடுங்கொலோ? 1

** புனை வளர் பூம்பொழிலார் * பொன்னி சூழ் அரங்க நகருள்
முனைவனை * மூவுலகும் படைத்த * முதல் மூர்த்தி தன்னை **
சினை வளர் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்றான் *
கனை கழல் காணுங்கொலோ? * கயற்கண்ணி எம் காரிகையே 2

உண்டு உலகேழினையும் * ஒரு பாலகன் ஆலிலை மேல் *
கண் துயில் கொண்டு உகந்த * கரு மாணிக்க மாமலையை **
திண்திறல் மா கரி சேர் * திருமாலிருஞ்சோலை நின்ற *
அண்டர் தம் கோவினை இன்று * அணுகுங்கொல்? என் ஆயிழையே 3

சிங்கம் அதாய் அவுணன் * திறல் ஆகம் முன் கீண்டுகந்த *
பங்கய மாமலர்க் கண் * பரனை எம் பரஞ்சுடரை **
திங்கள் நன்மாமுகில் சேர் * திருமாலிருஞ்சோலை நின்ற *
நங்கள் பிரானை இன்று * நணுகுங்கொல்? என் நன்னுதலே 4

தானவன் வேள்வி தன்னில் * தனியே குறளாய் நிமிர்ந்து *
வானமும் மண்ணகமும் * அளந்த திரிவிக்கிரமன் **
தேன் அமர் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
வானவர் கோனை இன்று * வணங்கித் தொழ வல்லள் கொலோ? 5

** நேசம் இலாதவர்க்கும் * நினையாதவர்க்கும் அரியான் *
வாச மலர்ப் பொழில் சூழ் * வட மாமதுரைப் பிறந்தான் **
தேசம் எல்லாம் வணங்கும் * திருமாலிருஞ்சோலை நின்ற *
கேசவ நம்பி தன்னைக் * கெண்டை ஒண்கண்ணி காணுங்கொலோ? 6

புள்ளினை வாய் பிளந்து * பொரு மா கரி கொம்பொசித்து *
கள்ளச் சகடு உதைத்த * கரு மாணிக்க மாமலையை **
தெள்ளருவி கொழிக்கும் * திருமாலிருஞ்சோலை நின்ற *
வள்ளலை வாணுதலாள் * வணங்கித் தொழ வல்லள் கொலோ? 7

பார்த்தனுக்கு அன்று அருளிப் * பாரதத்து ஒரு தேர் முன் நின்று *
காத்தவன் தன்னை * விண்ணோர் கரு மாணிக்க மாமலையை **
தீர்த்தனைப் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
மூர்த்தியைக் கை தொழவும் * முடியுங்கொல்? என் மொய்குழற்கே 8

** வலம்புரி ஆழியனை * வரையார் திரள் தோளன் தன்னை *
புலம்புரி நூலவனைப் * பொழில் வேங்கட வேதியனை **
சிலம்பியல் ஆறுடைய * திருமாலிருஞ்சோலை நின்ற *
நலந்திகழ் நாரணனை * நணுகுங்கொல்? என் நன்னுதலே 9

** தேடற்கு அரியவனைத் * திருமாலிருஞ்சோலை நின்ற *
ஆடல் பறவையனை * அணி ஆயிழை காணும் என்று **
மாடக் கொடி மதிள் சூழ் * மங்கையார் கலிகன்றி சொன்ன **
பாடல் பனுவல் பத்தும் * பயில்வார்க்கு இல்லை பாவங்களே 10

அடிவரவு: மூவரில் புனை உண்டு சிங்கமது தானவன் நேஸம் புள்ளினை பார்த்தனுக்கு வலம்புரி தேடற்கு எங்கள்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
ஒன்பதாம் பத்து

பத்தாம் திருமொழி - எங்கள்
திருக்கோட்டியூர்

** எங்கள் எம் இறை எம் பிரான் *
        இமையோர்க்கு நாயகன் * ஏத்தடியவர்
தங்கள் தம் மனத்துப் *
        பிரியாது அருள் புரிவான் **
பொங்கு தண்ணருவி புதம் செய்யப் *
        பொன்களே சிதறும் இலங்கொளி *
செங்கமலம் மலரும் *
        திருக்கோட்டியூரானே 1

எவ்வ நோய் தவிர்ப்பான் * எமக்கிறை
இன் நகைத் துவர் வாய் * நிலமகள்
செவ்வி தோய வல்லான் *
திருமாமகட்கு இனியான் **
மௌவல் மாலை வண்டாடும் *
மல்லிகை மாலையொடும் அணந்து * மாருதம்
தெய்வ நாற வரும் *
திருக்கோட்டியூரானே 2

வெள்ளியான் கரியான் * மணி நிற வண்ணன்
விண்ணவர் தமக்கு இறை * எமக்கு
ஒள்ளியான் உயர்ந்தான் *
உலகேழும் உண்டு உமிழ்ந்தான் **
துள்ளு நீர் மொண்டு கொண்டு சாமரைக்
கற்றை * சந்தனம் உந்தி வந்தசை *
தெள்ளு நீர்ப் புறவில் *
திருக்கோட்டியூரானே 3

ஏறும் ஏறி இலங்கும் ஒண்மழுப் பற்றும் *
ஈசற்கு இசைந்து * உடம்பில் ஓர்
கூறு தான் கொடுத்தான் * குலமாமகட்கு
இனியான் **
நாறு சண்பக மல்லிகை மலர் புல்கி *
இன்னிள வண்டு * நன்னறும்
தேறல் வாய் மடுக்கும் *
திருக்கோட்டியூரானே 4

வங்க மாகடல் வண்ணன் * மாமணி வண்ணன்
விண்ணவர் கோன் * மது மலர்த்
தொங்கல் நீள்முடியான் * நெடியான் படி
கடந்தான் **
மங்குல் தோய் மணி மாட வெண்கொடி *
மாக மீது உயர்ந்து ஏறி * வான் உயர்
திங்கள் தான் அணவும் *
திருக்கோட்டியூரானே 5

காவலன் இலங்கைக்கிறை கலங்கச் *
சரம் செல உய்த்து * மற்று அவன்
ஏவலம் தவிர்த்தான் * என்னை ஆளுடை
எம்பிரான் **
நாவலம் புவி மன்னர் வந்து வணங்க *
மால் உறைகின்றது இங்கென *
தேவர் வந்து இறைஞ்சும் *
திருக்கோட்டியூரானே 6

கன்று கொண்டு விளங்கனி எறிந்து *
ஆநிரைக்கு அழிவு என்று * மாமழை
நின்று காத்துகந்தான் * நிலமாமகட்கு
இனியான் **
குன்றின் முல்லையின் வாசமும் * குளிர் மல்லிகை
மணமும் அளைந்து * இளந்
தென்றல் வந்துலவும் *
திருக்கோட்டியூரானே 7

பூங்குருந்து ஒசித்து ஆனை காய்ந்து * அரிமாச்
செகுத்து * அடியேனை ஆள் உகந்து
ஈங்கு என்னுள் புகுந்தான் * இமையோர்கள் தம்
பெருமான் **
தூங்கு தண்பலவின் கனி * தொகு வாழையின்
கனியொடு மாங்கனி *
தேங்கு தண்புனல் சூழ் *
திருக்கோட்டியூரானே 8

கோவை இன் தமிழ் பாடுவார் * குடம்
ஆடுவார் தட மாமலர் மிசை *
மேவு நான்முகனில் * விளங்கு
புரிநூலர் **
மேவு நான்மறை வாணர் ஐவகை வேள்வி *
ஆறங்கம் வல்லவர் தொழும் *
தேவ தேவ பிரான் *
திருக்கோட்டியூரானே 9

** ஆலு மாவலவன் கலிகன்றி * மங்கையர்
தலைவன் * அணி பொழில்
சேல்கள் பாய் கழனித் *
திருக்கோட்டியூரானை **
நீல மாமுகில் வண்ணனை நெடுமாலை *
இன் தமிழால் நினைந்த * இந்
நாலும் ஆறும் வல்லார்க்கு * இடம் ஆகும்
வான் உலகே 10

அடிவரவு: எங்கள் எவ்வம் வெள்ளியான் ஏறு வங்கம் காவலன் கன்று பூங்குருந்து கோவை ஆலும் ஒருநல்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

பத்தாம் பத்து

முதல் திருமொழி - ஒருநல்சுற்றம்
பல திவ்யதேசங்கள்

** ஒரு நல் சுற்றம் * எனக்கு உயிர் ஒண்பொருள் *
வரு நல் தொல் கதி * ஆகிய மைந்தனை **
நெருநல் கண்டது * நீர்மலை இன்று போய் *
கரு நெல் சூழ் * கண்ணமங்கையுள் காண்டுமே 1

** பொன்னை மாமணியை * அணி ஆர்ந்ததோர்
மின்னை * வேங்கடத்து உச்சியில் * கண்டு போய் **
என்னை ஆளுடை ஈசனை * எம்பிரான்
தன்னை * யாம் சென்று காண்டும் * தண்காவிலே 2

வேலை ஆலிலைப் * பள்ளி விரும்பிய *
பாலை ஆர் அமுதத்தினைப் * பைந்துழாய் **
மாலை ஆலியில் * கண்டு மகிழ்ந்து போய் *
ஞாலம் உன்னியைக் காண்டும் * நாங்கூரிலே 3

துளக்கமில் சுடரை * அவுணன் உடல்
பிளக்கும் மைந்தனைப் * பேரில் வணங்கிப் போய் **
அளப்பில் ஆரமுதை * அமரர்க்கு அருள்
விளக்கினை * சென்று வெள்ளறைக் காண்டுமே 4

சுடலையில் * சுடு நீறன் அமர்ந்ததோர் *
நடலை தீர்த்தவனை * நறையூர் கண்டு ** என்
உடலை உள் புகுந்து * உள்ளம் உருக்கி உண் *
விடலையைச் சென்று காண்டும் * மெய்யத்துளே 5

வானை ஆரமுதம் * தந்த வள்ளலை *
தேனை நீள் வயல் * சேறையில் கண்டு போய் **
ஆனை வாட்டி அருளும் * அமரர் தம்
கோனை * யாம் குடந்தைச் சென்று காண்டுமே 6

கூந்தலார் மகிழ் கோவலனாய் * வெண்ணெய்
மாந்த அழுந்தையில் * கண்டு மகிழ்ந்து போய் **
பாந்தள் பாழியில் * பள்ளி விரும்பிய *
வேந்தனைச் சென்று காண்டும் * வெஃகாவுளே 7

** பத்தர் ஆவியைப் * பால் மதியை * அணித்
தொத்தை * மாலிருஞ்சோலைத் தொழுது போய் **
முத்தினை மணியை * மணிமாணிக்க
வித்தினை * சென்று விண்ணகர்க் காண்டுமே 8

கம்ப மா களிறு அஞ்சிக் கலங்க * ஓர்
கொம்பு கொண்ட * குரை கழல் கூத்தனை **
கொம்புலாம் பொழில் * கோட்டியூர்க் கண்டு போய் *
நம்பனைச் சென்று கண்டும் * நாவாயுளே 9

** பெற்றம் ஆளியைப் * பேரில் மணாளனை *
கற்ற நூல் * கலிகன்றி உரை செய்த **
சொல் திறம் இவை * சொல்லிய தொண்டர்கட்கு *
அற்றம் இல்லை * அண்டம் அவர்க்கு ஆட்சியே 10

அடிவரவு: ஒரு பொன்னை வேலை துளக்கம் சுடலையில் வானை கூந்தல் பத்தர் கம்பம் பெற்ற இரக்கம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

இரண்டாம் திருமொழி - இரக்கமின்றி
இராமாவதாரத்தில் ஈடுபாடு 1
[இராமனிடம் தோல்வியுற்ற அரக்கர் அபயம் வேண்டிக் கூத்தாடுதல்]

** இரக்கம் இன்றி எங்கோன் செய்த தீமை *
இம்மையே எமக்கு எய்திற்றுக் காணீர் *
பரக்க யாம் இன்று உரைத்தென்? இராவணன்
பட்டனன் * இனி யாவர்க்கு உரைக்கோம்? **
குரக்கு நாயகர்காள்! இளங்கோவே! *
கோல வல்வில் இராமபிரானே! *
அரக்கர் ஆடழைப்பார் இல்லை * நாங்கள்
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 1

பத்து நீள்முடியும் அவற்று இரட்டிப் *
பாழித் தோளும் படைத்தவன் செல்வம் *
சித்தம் மங்கையர் பால் வைத்துக் கெட்டான் *
செய்வது ஒன்று அறியா அடியோங்கள் **
ஒத்த தோள் இரண்டும் ஒரு முடியும் *
ஒருவர் தம் திறத்தோம் அன்றி வாழ்ந்தோம் *
அத்த! எம்பெருமான்! எம்மைக் கொல்லேல் *
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 2

தண்டகாரணியம் புகுந்து * அன்று
 தையலைத் தகவிலி எங்கோமான் *
கொண்டு போந்து கெட்டான் எமக்கு இங்கோர்
 குற்றம் இல்லை * கொல்லேல் குல வேந்தே! **
பெண்டிரால் கெடும் இக்குடி தன்னைப் *
 பேசுகின்றது என்? தாசரதீ! * உன்
அண்ட வாணர் உகப்பதே செய்தாய் *
 அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 3

எஞ்சலில் இலங்கைக்கு இறை எங்கோன்
 தன்னை * முன் பணிந்து எங்கள் கண்முகப்பே *
நஞ்சு தான் அரக்கர் குடிக்கு என்று *
 நங்கையை அவன் தம்பியே சொன்னான் **
விஞ்சை வானவர் வேண்டிற்றே பட்டோம் *
 வேரி வார் பொழில் மாமயில் அன்ன *
அஞ்சல் ஓதியைக் கொண்டு நடமின் *
 அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 4

செம்பொன் நீள்முடி எங்கள் இராவணன் *
 சீதை என்பதோர் தெய்வம் கொணர்ந்து *
வம்புலாம் கடி காவில் சிறையா
 வைத்ததே * குற்றம் ஆயிற்றுக் காணீர் **
கும்பனோடு நிகும்பனும் பட்டான் *
 கூற்றம் மானிடமாய் வந்து தோன்றி *
அம்பினால் எம்மைக் கொன்றிடுகின்றது *
 அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 5

ஓத மாகடலைக் கடந்தேறி *
 உயர் கொள் மாக்கடி காவை இறுத்து *
காதல் மக்களும் சுற்றமும் கொன்று *
 கடி இலங்கை மலங்க எரித்து **
தூது வந்த குரங்குக்கே * உங்கள்
 தோன்றல் தேவியை விட்டுக் கொடாதே *
ஆதர் நின்று படுகின்றது அந்தோ! *
 அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 6

தாழம் இன்றி முந்நீரை அஞ்ஞான்று *
 தகைந்ததே கண்டு வஞ்சி நுண்மருங்குல் *
மாழை மான் மட நோக்கியை விட்டு *
 வாழகில்லா மதியில் மனத்தானை **
ஏழையை இலங்கைக்கு இறை தன்னை *
 எங்களை ஒழியக் கொலை அவனை *
சூழுமா நினை மாமணி வண்ணா! *
 சொல்லினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 7

மனங்கொண்டு ஏறும் மண்டோதரி முதலா *
அங்கயல் கண்ணினார்கள் இருப்ப *
தனங்கொள் மென்முலை நோக்கம் ஒழிந்து *
தஞ்சமே சில தாபதர் என்று **
புனங்கொள் மென்மயிலைச் சிறை வைத்த *
புன்மையாளன் நெஞ்சில் புக எய்த *
அனங்கன் அன்ன திண்தோள் எம் இராமற்கு *
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 8

புரங்கள் மூன்றும் ஓர் மாத்திரைப் போதில் *
பொங்கெரிக்கு இரை கண்டவன் அம்பில் *
சரங்களே கொடிதாய் அடுகின்ற *
சாம்பவான் உடன் நிற்கத் தொழுதோம் **
இரங்கு நீ எமக்கு எந்தை பிரானே! *
இலங்கு வெங்கதிரோன் சிறுவா! *
குரங்குகட்கு அரசே! எம்மைக் கொல்லேல் *
கூறினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 9

** அங்கு வானவர்க்கு ஆகுலம் தீர *
அணி இலங்கை அழித்தவன் தன்னை *
பொங்கு மாவலவன் கலிகன்றி *
புகன்ற பொங்கத்தம் கொண்டு ** இவ்வுலகினில்
எங்கும் பாடி நின்று ஆடுமின் தொண்டீர்! *
இம்மையே இடர் இல்லை * இறந்தால்
தங்கும் ஊர் அண்டமே கண்டு கொண்மின் *
சாற்றினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ 10

அடிவரவு: இரக்கம் பத்து தண்டக எஞ்சல் செம்பொன் ஓதம் தாழம் மனம் புரங்கள் அங்கு ஏத்து

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

மூன்றாம் திருமொழி - ஏத்துகின்றோம்
இராமாவதாரத்தில் ஈடுபாடு 2
[இராமனிடம் தோல்வியுற்ற அரக்கர் அபயம் வேண்டிக் கூத்தாடுதல்]

** ஏத்துகின்றோம் நாத்தழும்ப * இராமன் திருநாமம் *
சோத்தம் நம்பீ! சுக்கிரீவா! * உம்மைத் தொழுகின்றோம் **
வார்த்தை பேசீர் எம்மை * உங்கள் வானரம் கொல்லாமே *
கூத்தர் போல ஆடுகின்றோம் * குழமணி தூரமே 1

எம்பிரானே! என்னை ஆள்வாய்! * என்றென்று அலற்றாதே *
அம்பின் வாய்ப்பட்டு ஆற்றகில்லாது * இந்திரசித்து அழிந்தான் **
நம்பி அனுமா! சுக்கிரீவா! * அங்கதனே! நளனே! *
கும்பகர்ணன் பட்டுப் போனான் * குழமணி தூரமே 2

ஞாலம் ஆளும் உங்கள் கோமான் * எங்கள் இராவணற்கு *
காலன் ஆகி வந்தவா! கண்டு * அஞ்சிக் கருமுகில் போல் **
நீலன் வாழ்க சுடேணன் வாழ்க * அங்கதன் வாழ்க என்று *
கோலம் ஆக ஆடுகின்றோம் * குழமணி தூரமே 3

மணங்கள் நாறும் வார் குழலார் * மாதர்கள் ஆதரத்தை *
புணர்ந்த சிந்தைப் புன்மையாளன் * பொன்ற வரி சிலையால் **
கணங்கள் உண்ண வாளி ஆண்ட * காவலனுக்கு இளையோன் *
குணங்கள் பாடி ஆடுகின்றோம் * குழமணி தூரமே 4

வென்றி தந்தோம் மானம் வேண்டோம் * தானம் எமக்காக *
இன்று தம்மின் எங்கள் வாணாள் * எம்பெருமான் தமர்காள்! **
நின்று காணீர் கண்கள் ஆர * நீர் எம்மைக் கொல்லாதே *
குன்று போல ஆடுகின்றோம் * குழமணி தூரமே 5

கல்லின் முந்நீர் மாற்றி வந்து * காவல் கடந்து * இலங்கை
அல்லல் செய்தான் உங்கள் கோமான் * எம்மை அமர்க்களத்து **
வெல்லகில்லாது அஞ்சினோம் காண் * வெங்கதிரோன் சிறுவா! *
கொல்ல வேண்டா ஆடுகின்றோம் * குழமணி தூரமே 6

மாற்றம் ஆவது இத்தனையே * வம்மின் அரக்கர் உள்ளீர்! *
சீற்றம் நும்மேல் தீர வேண்டில் * சேவகம் பேசாதே **
ஆற்றல் சான்ற தொல் பிறப்பில் * அனுமனை வாழ்க என்று *
கூற்றம் அன்னார் காண ஆடீர் * குழமணி தூரமே 7

கவள யானை பாய் புரவி * தேரோடு அரக்கர் எல்லாம்
துவள * வென்ற வென்றியாளன் * தன் தமர் கொல்லாமே **
தவள மாட நீடு அயோத்தி * காவலன் தன் சிறுவன் *
குவளை வண்ணன் காண ஆடீர் * குழமணி தூரமே 8

ஏடொத்த ஏந்தும் நீளிலை வேல் * எங்கள் இராவணனார்
ஓடிப் போனார் * நாங்கள் எய்த்தோம் * உய்வதோர் காரணத்தால் **
சூடிப் போந்தோம் உங்கள் கோமன் ஆணை * தொடரேன்மின் *
கூடிக் கூடி ஆடுகின்றோம் * குழமணி தூரமே 9

** வென்ற தொல் சீர்த் தென்னிலங்கை * வெஞ்சமத்து * அன்று அரக்கர்
குன்றம் அன்னார் ஆடி உய்ந்த * குழமணி தூரத்தை **
கன்றி நெய்ந்நீர் நின்ற வேற்கைக் * கலியன் ஒலி மாலை *
ஒன்றும் ஒன்றும் ஐந்தும் மூன்றும் * பாடி நின்று ஆடுமினே 10

அடிவரவு: ஏத்துகின்றோம் எம்பிரானே ஞாலம் மணங்கள் வென்றி கல்லின் மாற்றம் கவளம் ஏடு வென்ற சந்தம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

நான்காம் திருமொழி - சந்தமலர்
க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 1
[கண்ணனை முலையுண்ண அழைத்தல்]

** சந்த மலர்க் குழல் தாழத் *
தான் உகந்தோடித் தனியே
வந்து * என் முலைத் தடந்தன்னை
வாங்கி * நின் வாயில் மடுத்து **
நந்தன் பெறப் பெற்ற நம்பீ! *
நான் உகந்துண்ணும் அமுதே! *
எந்தை பெருமனே! உண்ணாய் *
என் அம்மம் சேமம் உண்ணாயே 1

வங்க மறிகடல் வண்ணா! *
மாமுகிலே ஒக்கும் நம்பீ! *
செங்கண் நெடிய திருவே! *
செங்கமலம் புரை வாயா! **
கொங்கை சுரந்திட உன்னைக் *
கூவியும் காணாது இருந்தேன் *
எங்கிருந்து ஆயர்களோடும் *
என் விளையாடுகின்றாயே? 2

திருவில் பொலிந்த எழில் ஆர் *
ஆயர் தம் பிள்ளைகளோடு *
தெருவில் திளைக்கின்ற நம்பீ! *
செய்கின்ற தீமைகள் கண்டிட்டு **
உருகி என் கொங்கையின் தீம்பால் *
ஓட்டந்து பாய்ந்திடுகின்ற *
மருவிக் குடங்கால் இருந்து *
வாய் முலை உண்ண நீ வாராய் 3

மக்கள் பெறு தவம் போலும் *
வையத்து வாழும் மடவார் *
மக்கள் பிறர் கண்ணுக்கு ஒக்கும்
முதல்வா! * மதக் களிறு அன்னாய்! **
செக்கர் இளம்பிறை தன்னை
வாங்கி * நின் கையில் தருவன் *
ஒக்கலை மேல் இருந்து அம்மம்
உகந்து * இனிதுண்ண நீ வாராய் 4

மைத்த கருங்குஞ்சி மைந்தா! *
மாமருதூடு நடந்தாய்! *
வித்தகனே! விரையாதே! *
வெண்ணெய் விழுங்கும் விகிர்தா! **
இத்தனை போதன்றி என்தன் *
கொங்கை சுரந்திருக்க கில்லா *
உத்தமனே! அம்மம் உண்ணாய் *
உலகளந்தாய்! அம்மம் உண்ணாய் 5

பிள்ளைகள் செய்வன செய்யாய் *
பேசின் பெரிதும் வலியை *
கள்ளம் மனத்தில் உடையை *
காணவே தீமைகள் செய்தி **
உள்ளம் உருகி என் கொங்கை *
ஓட்டந்து பாய்ந்திடுகின்ற *
பள்ளிக் குறிப்புச் செய்யாதே *
பாலமுது உண்ண நீ வாராய் 6

தன் மகனாக வன்பேய்ச்சி *
தான் முலை உண்ணக் கொடுக்க *
வன்மகனாய் அவள் ஆவி
வாங்கி * முலை உண்ட நம்பீ! **
நன்மகள் ஆய்மகளோடு *
நானில மங்கை மணாளா! *
என் மகனே! அம்மம் உண்ணாய் *
என் அம்மம் சேமம் உண்ணாயே 7

உந்தம் அடிகள் முனிவர் *
உன்னை நான் என் கையில் கோலால் *
நொந்திட மோதவும் கில்லேன் *
நுங்கள் தம் ஆநிரை எல்லாம் **
வந்து புகுதரும் போது *
வானிடைத் தெய்வங்கள் காண *
அந்தியம் போது அங்கு நில்லேல் *
ஆழியங்கையனே! வாராய் 8

பெற்றத் தலைவன் எங்கோமான் *
பேரருளாளன் மதலாய்! *
சுற்றக் குழாத்து இளங்கோவே! *
தோன்றிய தொல் புகழாளா! **
கற்றினம் தோறும் மறித்துக் *
கானம் திரிந்த களிறே! *
எற்றுக்கென் அம்மம் உண்ணாதே *
எம்பெருமான் இருந்தாயே? 9

** இம்மை இடர் கெட வேண்டி *
ஏந்தெழில் தோள் கலிகன்றி *
செம்மைப் பனுவல் நூல் கொண்டு *
செங்கண் நெடியவன் தன்னை **
அம்மம் உண் என்று உரைக்கின்ற *
பாடல் இவை ஐந்தும் ஐந்தும் *
மெய்ம்மை மனத்து வைத்தேத்த *
விண்ணவர் ஆகலுமாமே 10

அடிவரவு: சந்தம் வங்கம் திருவில் மக்கள் மைத்த பிள்ளைகள் தன்மகன் உந்தம் பெற்றம் இம்மை பூங்கோதை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

ஐந்தாம் திருமொழி - பூங்கோதை
க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 2
[கண்ணனைக் கைகொட்டி விளையாடும்படி கூறுதல்]

** பூங்கோதை ஆய்ச்சி * கடைவெண்ணை புக்குண்ண *
ஆங்கவள் ஆர்த்துப் * புடைக்கப் புடை உண்டு **
ஏங்கி இருந்து * சிணுங்கி விளையாடும் *
ஓங்கோத வண்ணனே! சப்பாணி * ஒளி மணிவண்ணனே! சப்பாணி 1

தாயர் மனங்கள் தடிப்ப * தயிர் நெய் உண்
டே எம்பிராக்கள் ** இருநிலத்து எங்கள் தம் *
ஆயர் அழக! * அடிகள் அரவிந்த
வாயவனே! கொட்டாய் சப்பாணி * மால்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 2

தா மோர் உருட்டித் * தயிர் நெய் விழுங்கிட்டு *
தாமோ தவழ்வர் என்று * ஆய்ச்சியர் தாம்பினால் **
தாமோதரக் கையால் * ஆர்க்கத் தழும்பிருந்த *
தாமோதரா! கொட்டாய் சப்பாணி * தாமரைக் கண்ணனே! சப்பாணி 3

பெற்றார் தளை கழலப் * பேர்ந்தங்கு அயல் இடத்து *
உற்றார் ஒருவரும் இன்றி * உலகினில் **
மற்றாரும் அஞ்சப் போய் * வஞ்சப் பெண் நஞ்சுண்ட *
கற்றாயனே! கொட்டாய் சப்பாணி * கார்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 4

சோத்தென நின்னைத் * தொழுவன் வரம் தர *
பேய்ச்சி முலை உண்ட பிள்ளாய்! ** பெரியன
ஆய்ச்சியர் அப்பம் தருவர் * அவர்க்காகச்
சாற்றி ஓர் ஆயிரம் சப்பாணி * தடங்கைகளால் கொட்டாய் சப்பாணி 5

கேவலம் அன்று உன் வயிறு * வயிற்றுக்கு
நான் * அவல் அப்பம் தருவன் ** கருவிளைப்
பூவலர் நீள்முடி * நந்தன் தன் போர் ஏறே! *
கோவலனே! கொட்டாய் சப்பாணி * குடமாடீ! கொட்டாய் சப்பாணி 6

புள்ளினை வாய் பிளந்து * பூங்குருந்தம் சாய்த்து *
துள்ளி விளயாடித் * தூங்குறி வெண்ணெயை **
அள்ளிய கையால் * அடியேன் முலை நெருடும் *
பிள்ளைப் பிரான்! கொட்டாய் சப்பாணி * பேய்முலை உண்டானே! சப்பாணி 7

யாயும் பிறரும் * அறியாத யாமத்து *
மாய அலவைப் * பெண் வந்து முலை தர **
பேய் என்று அவளைப் * பிடித்து உயிரை உண்ட *
வாயவனே! கொட்டாய் சப்பாணி * மால்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 8

கள்ளக் குழவியாய்க் * காலால் சகடத்தை *
தள்ளி உதைத்திட்டுத் * தாயாய் வருவாளை **
மெள்ளத் தொடர்ந்து * பிடித்து ஆருயிர் உண்ட *
வள்ளலே! கொட்டாய் சப்பாணி * மால்வண்ணனே! கொட்டாய் சப்பாணி 9

** காரார் புயற்கைக் * கலிகன்றி மங்கையர் கோன் *
பேராளன் நெஞ்சில் * பிரியாது இடங்கொண்ட
சீராளா! ** செந்தாமரைக் கண்ணா! தண்துழாய் *
தாராளா! கொட்டாய் சப்பாணி * தடமார்வா! கொட்டாய் சப்பாணி 10

அடிவரவு: பூங்கோதை தாயர் தாமோர் பெற்றார் சோத்தென கேவலம் புள்ளினை யாயும் காரார் எங்கானும்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

ஆறாம் திருமொழி - எங்கானும்
க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 3
[மற்றை அவதாரங்களின் மேன்மையோடு க்ருஷ்ணாவதாரத்தின் எளிமையை அநுபவித்தல்]

** எங்கானும் ஈதொப்பதோர் மாயம் உண்டே? *
நர நாரணனாய் உலகத்து அற நூல் *
சிங்காமை விரித்தவன் எம்பெருமான் *
அது அன்றியும் செஞ்சுடரும் நிலனும் **
பொங்கார் கடலும் பொருப்பும் நெருப்பும்
நெருக்கிப் புகப் * பொன் மிடறு அத்தனை போது *
அங்காந்தவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 1

குன்றொன்று மத்தா அரவம் அளவிக் *
குரை மாகடலைக் கடைந்திட்டு * ஒருகால்
நின்றுண்டை கொண்டு ஓட்டி வன்கூன் நிமிர *
நினைந்த பெருமான் அது அன்றியும் முன் **
நன்றுண்ட தொல் சீர் மகரக் கடல் ஏழ் *
மலையேழ் உலகேழ் ஒழியாமை நம்பி *
அன்றுண்டவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 2

உளைந்திட்டு எழுந்த மது கைடவர்கள் *
உலப்பில் வலியால் அவர் பால் * வயிரம்
விளைந்திட்டது என்று எண்ணி விண்ணோர் பரவ *
அவர் நாள் ஒழித்த பெருமான் முன நாள் **
வளைந்திட்ட வில்லாளி வல்வாள் எயிற்று *
மலை போல் அவுணன் உடல் வள்ளுகிரால் *
அளைந்திட்டவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 3

தளர்ந்திட்டு இமையோர் சரண் தா எனத் * தான்
சரணாய் முரணாயவனை * உகிரால்
பிளந்திட்டு அமரர்க்கு அருள் செய்து உகந்த *
பெருமான் திருமால் விரி நீர் உலகை **
வளர்ந்திட்ட தொல் சீர் விறல் மாவலியை *
மண் கொள்ள வஞ்சித்து ஒரு மாண் குறளாய் *
அளந்திட்டவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 4

நீண்டான் குறளாய் நெடுவான் அளவும் *
அடியார் படும் ஆழ் துயராய எல்லாம் *
தீண்டாமை நினைந்து இமையோர் அளவும் *
செல வைத்த பிரான் அது அன்றியும் முன் **
வேண்டாமை நமன் தமர் என் தமரை *
வினவப் பெறுவார் அலர் என்று * உலகேழ்
ஆண்டான் அவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 5

பழித்திட்ட இன்பப் பயன் பற்றறுத்துப் *
பணிந்தேத்த வல்லார் துயராய எல்லாம் *
ஒழித்திட்டு அவரைத் தனக்காக்க வல்ல *
பெருமான் திருமால் அது அன்றியும் முன் **
தெழித்திட்டு எழுந்தே எதிர் நின்ற மன்னன் *
சினத் தோள் அவை ஆயிரமும் மழுவால் *
அழித்திட்டவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 6

படைத்திட்டது இவ்வையம் உய்ய முன நாள் *
பணிந்தேத்த வல்லார் துயராய எல்லாம் *
துடைத்திட்டு அவரைத் தனக்காக்க என்னத் *
தெளியா அரக்கர் திறல் போய் அவிய **
மிடைத்திட்டு எழுந்த குரங்கைப் படையா *
விலங்கல் புகப் பாய்ச்சி விம்ம * கடலை
அடைத்திட்டவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 7

நெறித்திட்ட மென்கூழை நன்னேர் இழையோடு *
உடனாய வில்லென்ன வல்லே அதனை *
இறுத்திட்டு அவள் இன்பம் அன்போடு அணைந்திட்டு *
இளங்கொற்றவனாய்த் துளங்காத முந்நீர் **
செறித்திட்டு இலங்கை மலங்க அரக்கன் *
செழு நீள்முடி தோளொடு தாள் துணிய *
அறுத்திட்டவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 8

சுரிந்திட்ட செங்கேழ் உளைப் பொங்கரிமாத் *
தொலையப் பிரியாது சென்று எய்தி * எய்தாது
இரிந்திட்டு இடங்கொண்டு அடங்காத அதன் வாய் *
இருகூறு செய்த பெருமான் முன நாள் **
வரிந்திட்ட வில்லால் மரம் ஏழும் எய்து *
மலை போல் உருவத்தொர் இராக்கதி மூக்கு *
அரிந்திட்டவன் காண்மின் இன்று ஆய்ச்சியரால் *
அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே 9

** நின்றார் முகப்புச் சிறிதும் நினையான் *
வயிற்றை நிறைப்பான் உறிப் பால் தயிர் நெய் *
அன்று ஆய்ச்சியர் வெண்ணெய் விழுங்கி * உரலோடு
ஆப்புண்டிருந்த பெருமான் அடி மேல் **
நன்றாய தொல் சீர் வயல் மங்கையர் கோன் *
கலியன் ஒலி செய் தமிழ் மாலை வல்லார் *
என்றானும் எய்தார் இடர் இன்பம் எய்தி *
இமையோர்க்கும் அப்பால் செல எய்துவாரே 10

அடிவரவு: எங்கானும் குன்று உளைந்து தளர்ந்து நீண்டான் பழித்திட்ட படை நெறி சுரி நின்றார் மானம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

ஏழாம் திருமொழி - மானமுடைத்து
க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 4
[கண்ணன் செய்தியைக் குறித்து ஆய்ச்சியரும் யசோதையும் முறை இடுதல்]

** மானம் உடைத்து உங்கள் ஆயர் குலம்
அதனால் * பிறர் மக்கள் தம்மை *
ஊனம் உடையன செய்யப் பெறாய் என்று *
இரப்பன் உரப்ப கில்லேன் **
நானும் உரைத்திலேன் நந்தன் பணித்திலன் *
நங்கைகாள்! நான் என் செய்கேன்? *
தானும் ஓர் கன்னியும் கீழை அகத்துத் *
தயிர் கடைகின்றான் போலும் 1

காலை எழுந்து கடைந்த இம்மோர் விற்கப்
போகின்றேன் * கண்டே போனேன் *
மாலை நறுங்குஞ்சி நந்தன் மகன் அல்லால் *
மற்று வந்தாரும் இல்லை **
மேலை அகத்து நங்காய்! வந்து காண்மின்கள் *
வெண்ணெயே அன்று * இருந்த
பாலும் பதின் குடம் கண்டிலேன் * பாவியேன்
என் செய்கேன்? என் செய்கேனோ? 2

தெள்ளிய வாய்ச் சிறியான் நங்கைகாள்! * உறி
மேலைத் தடா நிறைந்த *
வெள்ளி மலை இருந்தால் ஒத்த வெண்ணெயை *
வாரி விழுங்கியிட்டு **
கள்வன் உறங்குகின்றான் வந்து காண்மின்கள் *
கை எல்லாம் நெய் வயிறு
பிள்ளை பரம் அன்று * இவ்வேழ் உலகும் கொள்ளும் *
பேதையேன் என் செய்கேனோ? 3

மைந்நம்பு வேற்கண் நல்லாள் * முன்னம் பெற்ற வளை
வண்ண நன்மாமேனி *
தன்னம்பி நம்பியும் இங்கு வளர்ந்தது *
அவன் இவை செய்தறியான் **
பொய்ந்நம்பி புள்ளுவன் கள்வம் பொதி அறை *
போகின்றவா தவழ்ந்திட்டு *
இந்நம்பி நம்பியா ஆய்ச்சியர்க்கு உய்வில்லை *
என் செய்கேன்? என் செய்கேனோ? 4

தந்தை புகுந்திலன் நான் இங்கு இருந்திலேன் *
தோழிமார் ஆரும் இல்லை *
சந்த மலர்க் குழலாள் * தனியே
விளையாடும் இடம் குறுகி **
பந்து பறித்துத் துகில் பற்றிக் கீறிப் *
படிறன் படிறு செய்யும் *
நந்தன் மதலைக்கு இங்கு என் கடவோம்? நங்காய்! *
என் செய்கேன்? என் செய்கேனோ? 5

மண்மகள் கேள்வன் மலர்மங்கை நாயகன் *
நந்தன் பெற்ற மதலை *
அண்ணல் இலைக் குழல் ஊதி நம் சேரிக்கே *
அல்லில் தான் வந்த பின்னை **
கண்மலர் சோர்ந்து முலை வந்து விம்மிக் *
கமலச் செவ்வாய் வெளுப்ப *
என் மகள் வண்ணம் இருக்கின்றவா நங்காய்! *
என் செய்கேன்? என் செய்கேனோ? 6

ஆயிரம் கண் உடை இந்திரனாருக்கு என்று *
ஆயர் விழவு எடுப்ப *
பாசன நல்லன பண்டிகளால் *
புகப் பெய்த அதனை எல்லாம் **
போய் இருந்து அங்கொரு பூத வடிவு கொண்டு *
உன் மகன் இன்று நங்காய்! *
மாயன் அதனை எல்லாம் முற்ற * வாரி
வளைத்து உண்டிருந்தான் போலும் 7

தோய்த்த தயிரும் நறுநெய்யும் பாலும் *
ஓரோ குடம் துற்றிடும் என்று *
ஆய்ச்சியர் கூடி அழைக்கவும் * நான் இதற்கு
எள்கி இவனை நங்காய்! **
சோத்தம் பிரான்! இவை செய்யப் பெறாய் என்று *
இரப்பன் உரப்ப கில்லேன் *
பேய்ச்சி முலை உண்ட பின்னை * இப்பிள்ளையைப்
பேசுவது அஞ்சுவனே 8

ஈடும் வலியும் உடைய * இந்நம்பி
பிறந்த எழு திங்களில் *
ஏடலர் கண்ணியினானை வளர்த்தி *
யமுனை நீராடப் போனேன் **
சேடன் திருமறு மார்பன் * கிடந்து
திருவடியால் * மலை போல்
ஓடும் சகடத்தைச் சாடிய பின்னை *
உரப்புவது அஞ்சுவனே 9

அஞ்சுவன் சொல்லி அழைத்திட நங்கைகாள்! *
ஆயிர நாழி நெய்யை *
பஞ்சிய மெல்லடிப் பிள்ளைகள் உண்கின்று *
பாகந்தான் வையார்களே **
கஞ்சன் கடியன் கறவெட்டு நாளில் *
என் கைவலத்து ஆதும் இல்லை *
நெஞ்சத்து இருப்பன செய்து வைத்தாய் நம்பீ! *
என் செய்கேன்? என் செய்கேனோ? 10

அங்ஙனும் தீமைகள் செய்வர்களோ நம்பீ! *
ஆயர் மடமக்களை *
பங்கய நீர் குடைந்து ஆடுகின்றார்கள் *
பின்னே சென்று ஒளித்திருந்து **
அங்கவர் பூந்துகில் வாரிக் கொண்டிட்டு *
அரவேர் இடையார் இரப்ப *
மங்கை நல்லீர்! வந்து கொண்மின் என்று *
மரம் ஏறி இருந்தாய் போலும் 11

அச்சம் தினைத்தனை இல்லை இப்பிள்ளைக்கு *
ஆண்மையும் சேவகமும் *
உச்சியில் முத்தி வளர்த்து எடுத்தேனுக்கு *
உரைத்திலன் தான் இன்று போய் **
பச்சிலைப் பூங்கடம்பேறி * விசை கொண்டு
பாய்ந்து புக்கு * ஆயிர வாய்
நச்சு அழல் பொய்கையில் நாகத்தினோடு *
பிணங்கி நீ வந்தாய் போலும் 12

தம் பரம் அல்லன ஆண்மைகளைத் * தனியே
நின்று தாம் செய்வாரோ? *
எம்பெருமான்! உன்னைப் பெற்ற வயிறுடையேன் *
இனி யான் என் செய்கேன்? **
அம்பரம் ஏழும் அதிரும் இடிகுரல் *
அங்கனல் செங்கண் உடை *
வம்பவிழ் கானத்து மால் விடையோடு *
பிணங்கி நீ வந்தாய் போலும் 13

** அன்ன நடை மடவாய்ச்சி வயிறடித்து
அஞ்ச * அருவரை போல் *
மன்னு கருங்களிற்று ஆருயிர் வவ்விய *
மைந்தனை மாகடல் சூழ் **
கன்னி நன்மாமதிள் மங்கையர் காவலன் *
காமரு சீர்க் கலிகன்றி *
இன்னிசை மாலைகள் ஈரேழும் வல்லவர்க்கு *
ஏதும் இடர் இல்லையே 14

அடிவரவு: மானம் காலை தெள்ளிய மை தந்தை மண்மகள் ஆயிரம் தோய்த்த ஈடும் அஞ்சுவன் அங்ஙனம் அச்சம் தம்பரம் அன்னம் காதில்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

எட்டாம் திருமொழி - காதில் கடிப்பு
க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 5
[ஆய்ச்சி ஒருத்தி கண்ணனோடு ஊடுதல்]

** காதில் கடிப்பிட்டுக் * கலிங்கம் உடுத்து *
தாது நல்ல * தண்ணந்துழாய் கொடணிந்து **
போது மறித்துப் * புறமே வந்து நின்றீர் *
ஏதுக்கு இதுவென்? * இதுவென் இதுவென்னோ? 1

துவர் ஆடை உடுத்து * ஒரு செண்டு சிலுப்பி *
கவர் ஆக முடித்துக் * கலிக் கச்சுக் கட்டி **
சுவர் ஆர் கதவின் புறமே * வந்து நின்றீர் *
இவர் ஆர் இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 2

கருளக் கொடி ஒன்றுடையீர்! * தனிப் பாகீர் *
உருளச் சகடம் அது * உறக்கில் நிமிர்த்தீர் **
மருளைக் கொடு பாடி வந்து * இல்லம் புகுந்தீர் *
இருளத்து இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 3

நாமம் பலவும் உடை * நாரண நம்பீ! *
தாமத் துளபம் * மிக நாறிடுகின்றீர் **
காமன் எனப் பாடி வந்து * இல்லம் புகுந்தீர் *
ஏமத்து இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 4

சுற்றும் குழல் தாழச் * சுரிகை அணைத்து *
மற்றும் பல * மாமணி பொன் கொடணிந்து **
முற்றம் புகுந்து * முறுவல் செய்து நின்றீர் *
எற்றுக்கு இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 5

ஆன் ஆயரும் * ஆநிரையும் அங்கொழிய *
கூன் ஆயதோர் * கொற்ற வில் ஒன்று கை ஏந்தி **
போனார் இருந்தாரையும் * பார்த்துப் புகுதீர் *
ஏனோர்கள் முன் என்? * இதுவென்? இதுவென்னோ? 6

மல்லே பொருத திரள் தோல் * மணவாளீர்! *
அல்லே அறிந்தோம் * நும் மனத்தின் கருத்தை **
சொல்லாது ஒழியீர் * சொன்ன போதினால் வாரீர் *
எல்லே! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 7

புக்கு ஆடரவம் * பிடித்தாட்டும் புனிதீர்! *
இக்காலங்கள் * யாம் உமக்கு ஏதொன்றும் அல்லோம் **
தக்கார் பலர் * தேவிமார் சால உடையீர் *
எக்கே! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 8

ஆடி அசைந்து * ஆய் மடவாரொடு நீ போய் *
கூடிக் குரவை பிணை * கோமளப் பிள்ளாய்! **
தேடித் திருமாமகள் * மண்மகள் நிற்ப *
ஏடி! இதுவென்? * இதுவென்? இதுவென்னோ? 9

** அல்லிக் கமலக் கண்ணனை * அங்கோர் ஆய்ச்சி *
எல்லிப் பொழுது ஊடிய * ஊடல் திறத்தை **
கல்லின் மலி தோள் * கலியன் சொன்ன மாலை *
சொல்லித் துதிப்பார் அவர் * துக்கம் இலரே 10

அடிவரவு: காதில் துவர் கருளக்கொடி நாமம் சுற்றும் ஆனாயர் மல்லே புக்கு ஆடி அல்லி புள்ளுரு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

ஒன்பதாம் திருமொழி - புள்ளுருவாகி
க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 6
[தலைவியின் ஆற்றாமைக்குத் தாய் இரங்கித் தலைவனை வேண்டும் பாசுரம்]

** புள் உருவாகி நள் இருள் வந்த *
பூதனை மாள * இலங்கை
ஒள் எரி மண்டி உண்ணப் பணித்த *
ஊக்கம் அதனை நினைந்தோ? **
கள் அவிழ் கோதை காதலும் * எங்கள்
காரிகை மாதர் கருத்தும் *
பிள்ளை தன் கையில் கிண்ணமே ஒக்கப் *
பேசுவது எந்தை பிரானே! 1

மன்றில் மலிந்து கூத்துவந்தாடி *
மால் விடை ஏழும் அடர்த்து * ஆயர்
அன்று நடுங்க ஆநிரை காத்த *
ஆண்மை கொலோ? அறியேன் நான் **
நின்ற பிரானே! நீள்கடல் வண்ணா! *
நீ இவள் தன்னை நின் கோயில் *
முன்றில் எழுந்த முருங்கையில் தேனா *
முன் கைவளை கவர்ந்தாயே 2

ஆர் மலி ஆழி சங்கொடு பற்றி *
ஆற்றலை ஆற்றல் மிகுத்துக் *
கார் முகில் வண்ணா! கஞ்சனை முன்னம் *
கடந்த நின் கடுந்திறல் தானோ? **
நேர் இழை மாதை நித்திலத் தொத்தை *
நெடுங்கடல் அமுது அனையாளை *
ஆர் எழில் வண்ணா! அங்கையில் வட்டாம் *
இவள் எனக் கருதுகின்றாயே 3

மல்கிய தோளும் மான் உரி அதளும் *
உடையவர் தமக்கும் ஓர் பாகம் *
நல்கிய நலமோ? நரகனைத் தொலைத்த *
கரதலத்து அமைதியின் கருத்தோ? **
அல்லி அங்கோதை அணி நிறம் கொண்டு
வந்து * முன்னே நின்று போகாய் *
சொல்லி என்? நம்பீ! இவளை நீ உங்கள் *
தொண்டர் கைத் தண்டு என்றவாறே 4

செரு அழியாத மன்னர்கள் மாளத் *
தேர் வலங்கொண்டு அவர் செல்லும் *
அரு வழி வானம் அதர்படக் கண்ட *
ஆண்மை கொலோ? அறியேன் நான் **
திருமொழி எங்கள் தேமலர்க் கோதை *
சீர்மையை நினைந்திலை அந்தோ! *
பெரு வழி நாவற்கனியினும் எளியள் *
இவள் எனப் பேசுகின்றாயே 5

அரக்கியர் ஆகம் புல்லென வில்லால் *
அணி மதிள் இலங்கையார் கோனை *
செருக்கழித்து அமரர் பணிய முன் நின்ற *
சேவகமோ? செய்தது இன்று **
முருக்கிதழ் வாய்ச்சி முன் கை வெண்சங்கம்
கொண்டு * முன்னே நின்று போகாய் *
எருக்கிலைக்காக எறி மழு ஓச்சல் *
என் செய்வது? எந்தை பிரானே! 6

ஆழி அந்திண்தேர் அரசர் வந்து இறைஞ்ச *
அலைகடல் உலகம் முன் ஆண்ட *
பாழி அந்தோள் ஓர் ஆயிரம் வீழப் *
படை மழுப் பற்றிய வலியோ? **
மாழை மென்னோக்கி மணி நிறம் கொண்டு
வந்து * முன்னே நின்று போகாய் *
கோழி வெண்முட்டைக்கு என் செய்வது? எந்தாய்! *
குறுந்தடி நெடுங்கடல் வண்ணா! 7

பொருந்தலன் ஆகம் புள் உவந்து ஏற *
வள் உகிரால் பிளந்து * அன்று
பெருந்தகைக்கு இரங்கி வாலியை முனிந்த *
பெருமை கொலோ? செய்தது இன்று **
பெருந்தடங்கண்ணி சுரும்புறு கோதை *
பெருமையை நினைந்திலை பேசில் *
கருங்கடல் வண்ணா! கவுள் கொண்ட நீராம் *
இவள் எனக் கருதுகின்றாயே 8

நீர் அழல் வானாய் நெடுநிலம் காலாய் *
நின்ற நின் நீர்மையை நினைந்தோ? *
சீர் கெழு கோதை என்னலது இலள் என்று *
அன்னதோர் தேற்றன்மை தானோ? **
பார் கெழு பவ்வத்து ஆரமுதனைய *
பாவையைப் பாவம் செய்தேனுக்கு *
ஆர் அழல் ஓம்பும் அந்தணன் தோட்டமாக *
நின் மனத்து வைத்தாயே 9

** வேட்டத்தைக் கருதாது அடி இணை வணங்கி *
மெய்ம்மை நின்று எம்பெருமானை *
வாள் திறல் தானை மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் **
தோட்டலர் பைந்தார்ச் சுடர் முடியானைப் *
பழமொழியால் பணிந்து உரைத்த *
பாட்டிவை பாடப் பத்திமை பெருகிச் *
சித்தமும் திருவொடு மிகுமே 10

அடிவரவு: புள் மன்றில் ஆர் மல்கிய செரு அரக்கியர் ஆழி பொருந்தலன் நீர் வேட்டத்தை திருத்தாய்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பத்தாம் பத்து

பத்தாம் திருமொழி - திருத்தாய்
தலைமகனைப் பிரிந்த தலைமகள் ஆற்றாது கூறிய பாசுரம்

** திருத்தாய் செம்போத்தே! *
திருமாமகள் தன் கணவன் **
மருத் தார் தொல் புகழ் * மாதவனை வர *
திருத்தாய் செம்போத்தே! 1

கரையாய் காக்கைப் பிள்ளாய்! *
கரு மாமுகில் போல் நிறத்தன் **
உரை ஆர் தொல் புகழ் * உத்தமனை வர *
கரையாய் * காக்கைப் பிள்ளாய்! 2

கூவாய் பூங்குயிலே! *
குளிர் மாரி தடுத்துகந்த **
மாவாய் கீண்ட மணிவண்ணனை வர *
கூவாய் பூங்குயிலே! 3

கொட்டாய் பல்லிக் குட்டி! *
குடம் ஆடி உலகளந்த **
மட்டார் பூங்குழல் * மாதவனை வர *
கொட்டாய் பல்லிக் குட்டி! 4

** சொல்லாய் பைங்கிளியே! *
சுடர் ஆழி வலன் உயர்த்த **
மல்லார் தோள் * வட வேங்கடவனை வர *
சொல்லாய் பைங்கிளியே! 5

கோழி கூவென்னும் ஆல் *
தோழி! நான் என் செய்கேன்? **
ஆழி வண்ணர் * வரும் பொழுது ஆயிற்று *
கோழி கூவென்னும் ஆல் 6

காமற்கு என் கடவேன்? *
கரு மாமுகில் வண்ணற்கு அல்லால் **
பூ மேல் ஐங்கணை கோத்துப் * புகுந்து எய்ய *
காமற்கு என் கடவேன்? 7

** இங்கே போதுங்கொலோ? *
இன வேல் நெடுங்கண் களிப்ப **
கொங்கார் சோலைக் * குடந்தைக் கிடந்த மால் *
இங்கே போதுங்கொலோ? 8

இன்னார் என்று அறியேன் *
அன்னே! ஆழியொடும் **
பொன்னார் சார்ங்கம் * உடைய அடிகளை *
இன்னார் என்று அறியேன் 9

** தொண்டீர்! பாடுமினோ *
சுரும்பார் பொழில் மங்கையர் கோன் **
ஒண்தார் வேல் * கலியன் ஒலி மாலைகள் *
தொண்டீர்! பாடுமினோ 10

அடிவரவு: திருத்தாய் கரையாய் கூவாய் கொட்டாய் சொல்லாய் கோழி காமற்கு இங்கே இன்னார் தொண்டீர் குன்றமொன்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி

பதினோராம் பத்து

முதல் திருமொழி - குன்றமொன்று
பிரிவாற்றாத தலைவி இரங்கிக் கூறும் பாசுரம்

** குன்றம் ஒன்று எடுத்து ஏந்தி * மாமழை
அன்று காத்த அம்மான் ** அரக்கரை
வென்ற வில்லியார் * வீரமே கொலோ? *
தென்றல் வந்து * தீ வீசும் என் செய்கேன்? 1

காரும் வார் பனிக் * கடலும் அன்னவன் *
தாரு மார்வமும் * கண்ட தண்டமோ? **
சோரு மாமுகில் * துளியினூடு வந்து *
ஈர வாடை தான் * ஈரும் என்னையே 2

சங்கும் மாமையும் * தளரும் மேனி மேல் *
திங்கள் வெங்கதிர் * சீறும் என் செய்கேன்? **
பொங்கு வெண்திரைப் * புணரி வண்ணனார் *
கொங்கலார்ந்த தார் * கூவும் என்னையே 3

அங்கோர் ஆய்க்குலத்துள் * வளர்ந்து சென்று *
அங்கோர் தாய் உருவாகி வந்தவள் **
கொங்கை நஞ்சு உண்ட * கோயின்மை கொலோ? *
திங்கள் வெங்கதிர் * சீறுகின்றதே 4

அங்கோர் ஆள் அரியாய் * அவுணனை *
பங்கமா * இரு கூறு செய்தவன் **
மங்குல் மாமதி * வாங்கவே கொலோ? *
பொங்கு மாகடல் * புலம்புகின்றதே 5

சென்று வார் சிலை வளைத்து * இலங்கையை *
வென்ற வில்லியார் * வீரமே கொலோ? **
முன்றில் பெண்ணை மேல் * முளரிக் கூட்டகத்து *
அன்றிலின் குரல் * அடரும் என்னையே 6

பூவை வண்ணனார் * புள்ளின் மேல் வர *
மேவி நின்று நான் * கண்ட தண்டமோ? **
வீவில் ஐங்கணை * வில்லி அம்பு கோத்து *
ஆவியே * இலக்காக எய்வதே! 7

மால் இனம் துழாய் * வரும் என் நெஞ்சகம் *
மாலின் அந்துழாய் * வந்து என்னுள் புக **
கோல வாடையும் * கொண்டு வந்ததோர் *
ஆலி வந்ததால் * அரிது காவலே 8

கெண்டை ஒண்கணும் துயிலும் * என் நிறம்
பண்டு பண்டு போல் ஒக்கும் ** மிக்க சீர்த்
தொண்டர் இட்ட * பூந்துளவின் வாசமே *
வண்டு கொண்டு வந்து * ஊதும் ஆகிலே 9

** அன்று பாரதத்து * ஐவர் தூதனாய் *
சென்ற மாயனைச் * செங்கண் மாலினை **
மன்றில் ஆர் புகழ் * மங்கை வாட்கலி
கன்றி * சொல் வல்லார்க்கு * அல்லல் இல்லையே 10

அடிவரவு: குன்றம் காரும் சங்கு அங்கோராய் அங்கோராளரி சென்று பூவை மால் கெண்டை அன்று குன்றமெடுத்து

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பதினோராம் பத்து

இரண்டாம் திருமொழி - குன்றமெடுத்து
தலைவி பிறிவாற்றாது வருந்திக் கூறும் பாசுரம்

** குன்றம் எடுத்து மழை
தடுத்து * இளையாரொடும் *
மன்றில் குரவை பிணைந்த
மால் * என்னை மால் செய்தான் **
முன்றில் தனி நின்ற பெண்ணை
மேல் * கிடந்து ஈர்கின்ற *
அன்றிலின் கூட்டைப் * பிரிக்க
கிற்பவர் ஆர் கொலோ? 1

பூங்குருந்து ஒசித்து ஆனை
காய்ந்து * அரிமாச் செகுத்து *
ஆங்கு வேழத்தின் கொம்பு
கொண்டு * வன்பேய் முலை
வாங்கி உண்ட ** அவ்வாயன்
நிற்க * இவ்வாயன் வாய் *
ஏங்கு வேய்ங்குழல் * என்னோடு
ஆடும் இளமையே 2

மல்லொடு கஞ்சனும் துஞ்ச *
வென்ற மணிவண்ணன் *
அல்லிமலர்த் தண்துழாய் *
நினைந்து இருந்தேனையே **
எல்லியின் மாருதம் வந்தடும் *
அது அன்றியும் *
கொல்லை வல் ஏற்றின் மணியும் *
கோயின்மை செய்யுமே 3

பொருந்து மாமரம் * ஏழும்
எய்த புனிதனார் *
திருந்து சேவடி * என்
மனத்து நினை தொறும் **
கருந்தண் மாகடல் * கங்குல்
ஆர்க்கும் அது அன்றியும் *
வருந்த வாடை வரும் *
இதற்கு இனி என் செய்கேன்? 4

அன்னை முனிவதும் * அன்றிலின்
குரல் ஈர்வதும் *
மன்னு மறிகடல் ஆர்ப்பதும் *
வளை சோர்வதும் **
பொன் அங்கலை அல்குல் * அன்ன
மென்னடைப் பூங்குழல் *
பின்னை மணாளர் * திறத்தம் ஆயின
பின்னையே 5

ஆழியும் சங்கும் உடைய *
நங்கள் அடிகள் தாம் *
பாழிமையான கனவின் *
நம்மைப் பகர்வித்தார் **
தோழியும் நானும் ஒழிய *
வையம் துயின்றது *
கோழியும் கூகின்றது இல்லை *
கூர் இருள் ஆயிற்றே! 6

காமன் தனக்கு முறை
அல்லேன் * கடல் வண்ணனார் *
மாமணவாளர் * எனக்குத்
தானும் மகன் சொல்லில் **
யாமங்கள் தோறு எரி வீசும் *
என் இளம் கொங்கைகள் *
மாமணி வண்ணர் * திறத்தவாய்
வளர்கின்றவே 7

** மஞ்சுறு மாலிருஞ்சோலை *
நின்ற மணாளனார் *
நெஞ்சம் நிறை கொண்டு போயினார் *
நினைகின்றிலர் **
வெஞ்சுடர் போய் விடியாமல் *
எவ்விடம் புக்கதோ! *
நஞ்சு உடலம் துயின்றால் *
நமக்கு இனி நல்லதே 8

காமன் கணைக்கு ஓர் இலக்கமாய் *
நலத்தின் மிகு *
பூமரு கோல * நம் பெண்மை
சிந்தித்து இராது போய் **
தூமலர் நீர்கொடு * தோழி!
நாம் தொழுது ஏத்தினால் *
கார் முகில் வண்ணரைக் * கண்களால்
காணலாம் கொலோ? 9

** வென்றி விடை உடன் *
ஏழ் அடர்த்த அடிகளை *
மன்றில் மலிபுகழ் * மங்கை மன்
கலிகன்றி சொல் **
ஒன்று நின்ற ஒன்பதும் *
உரைப்பவர் தங்கள் மேல் *
என்றும் நில்லா வினை * ஒன்றும்
சொல்லில் உலகிலே 10

அடிவரவு: குன்றம் பூ மல்லொடு பொருந்து அன்னை ஆழி காமன்தனக்கு மஞ்சுறு காமன்கணைக்கு வென்றி மன்னிலங்கு

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பதினோராம் பத்து

மூன்றாம் திருமொழி - மன்னிலங்கு
தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்: அறத்தொடுநிற்றல்

** மன் இலங்கு பாரதத்துத் * தேர் ஊர்ந்து * மாவலியைப்
பொன்னிலங்கு திண் விலங்கில் வைத்து * பொரு கடல் சூழ் **
தென்னிலங்கை ஈடழித்த * தேவற்கு இது காணீர் *
என் இலங்கு சங்கோடு * எழில் தோற்று இருந்தேனே 1

இருந்தான் என் உள்ளத்து இறைவன் * கறை சேர்
பருந்தாள் களிற்றுக்கு * அருள் செய்த செங்கண் **
பெருந்தோள் நெடுமாலைப் * பேர் பாடி ஆட *
வருந்தாது என் கொங்கை * ஒளி மன்னும் அன்னே! 2

அன்னே! இவரை அறிவன் * மறை நான்கும்
முன்னே உரைத்த * முனிவர் இவர் வந்து **
பொன் ஏய் வளை கவர்ந்து * போகார் மனம் புகுந்து *
என்னே? இவர் எண்ணும் * எண்ணம் அறியோமே 3

அறியோமே என்று * உரைக்கலாமே? எமக்கு *
வெறி ஆர் பொழில் சூழ் * வியன் குடந்தை மேவி **
சிறியான் ஓர் பிள்ளையாய் * மெள்ள நடந்திட்டு *
உறி ஆர் நறுவெண்ணெய் * உண்டுகந்தார் தம்மையே 4

தம்மையே நாளும் * வணங்கித் தொழுவார்க்கு *
தம்மையே ஒக்க * அருள் செய்வர் ஆதலால் **
தம்மையே நாளும் * வணங்கித் தொழுது இறைஞ்சி *
தம்மையே பற்றா * மனத்து என்றும் வைத்தோமே 5

வைத்தார் அடியார் * மனத்தினில் வைத்து * இன்பம்
உய்த்தார் ஒளிவிசும்பில் * ஓர் அடி வைத்து ** ஓர் அடிக்கும்
எய்த்தாது மண் என்று * இமையோர் தொழுது இறைஞ்சி *
கைத்தாமரை குவிக்கும் * கண்ணன் என் கண்ணனையே 6

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் * கைவளைகள்
என்னோ கழன்ற? * இவை என்ன மாயங்கள்? **
பெண் ஆனோம் * பெண்மையோம் நிற்க * அவன் மேய
அண்ணல் மலையும் * அரங்கமும் பாடோமே 7

பாடோமே? எந்தை பெருமானைப் * பாடி நின்று
ஆடோமே? * ஆயிரம் பேரானை * பேர் நினைந்து
சூடோமே? ** சூடும் துழாய் அலங்கல் * சூடி நாம்
கூடோமே? * கூடக் குறிப்பாகில் நன்னெஞ்சே! 8

நன்னெஞ்சே! நம்பெருமான் * நாளும் இனிதமரும் *
அன்னம் சேர் கானல் * அணி ஆலி கை தொழுது **
முன்னம் சேர் வல்வினைகள் போக * முகில் வண்ணன் *
பொன்னஞ்சேர் சேவடி மேல் * போது அணியப் பெற்றோமே 9

** பெற்றாரார் * ஆயிரம் பேரானைப் * பேர் பாடப்
பெற்றான் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை **
கற்றார் ஓ! முற்றுலகாள்வர் * இவை கேட்கல்
உற்றார்க்கு * உறுதுயர் இல்லை உலகத்தே 10

அடிவரவு: மன்னிலங்கு இருந்தான் அன்னே அறியோம் தம்மை வைத்தார் கண்ணன் பாடோமே நன்னெஞ்சே பெற்றாரார் நிலை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பதினோராம் பத்து

நான்காம் திருமொழி - நிலையிடம்
அவதாரங்களின் மகிமை

** நிலை இடம் எங்கும் இன்றி நெடு வெள்ளம்
உம்பர் * வள நாடு மூட இமையோர் *
தலை இட மற்று எமக்கோர் சரண் இல்லை
என்ன * அரண் ஆவன் என்னும் அருளால் **
அலை கடல் நீர் குழம்ப அகடாட
ஒடி * அகல் வான் உரிஞ்ச * முதுகில்
மலைகளை மீது கொண்டு வரு மீனை
மாலை * மறவாது இறைஞ்சு என் மனனே! 1

செரு மிகு வாள் எயிற்ற அரவொன்று
சுற்றித் * திசை மண்ணும் விண்ணும் உடனே *
வெருவர வெள்ளை வெள்ள முழுதும்
குழம்ப * இமையோர்கள் நின்று கடைய **
பரு வரை ஒன்று நின்று முதுகில்
பரந்து * சுழலக் கிடந்து துயிலும் *
அரு வரை அன்ன தன்மை அடல் ஆமை
ஆன * திருமால் நமக்கோர் அரணே 2

தீதறு திங்கள் பொங்கு சுடர் உம்பர்
உம்பர் * உலகு ஏழினோடும் உடனே *
மாதிர மண் சுமந்த வட குன்று
நின்ற * மலை ஆறும் ஏழு கடலும் **
பாதமர் சூழ் குளம்பின் அக மண்டலத்தின் *
ஒரு பால் ஒடுங்க வளர் சேர் *
ஆதி முன் ஏனம் ஆகி அரணாய
மூர்த்தி * அது நம்மை ஆளும் அரசே 3

தளை அவிழ் கோதை மாலை இரு பால்
தயங்க * எரி கான்ற இரண்டு தறுகண் *
அளவெழ வெம்மை மிக்க அரியாகி
அன்று * பரியோன் சினங்கள் அவிழ **
வளை உகிர் ஆளி மொய்ம்பின் மறவோனது ஆகம் *
மதியாது சென்று ஒரு உகிரால் *
பிளவெழ இட்ட குட்டம் அது வைய மூடு *
பெரு நீரின் மும்மை பெரிதே 4

வெந்திறல் வாணன் வேள்வி இடம் எய்தி *
அங்கோர் குறள் ஆகி மெய்ம்மை உணர *
செந்தொழில் வேத நாவின் முனி ஆகி *
வையம் அடி மூன்று இரந்து பெறினும் **
மந்தர மீது போகி மதி நின்று
இறைஞ்ச * மலரோன் வணங்க வளர் சேர் *
அந்தரம் ஏழினூடு செல உய்த்த
பாதம் அது * நம்மை ஆளும் அரசே 5

இரு நில மன்னர் தம்மை இரு நாலும்
எட்டும் * ஒரு நாலும் ஒன்றும் உடனே *
செரு நுதலூடு போகி அவர் ஆவி
மங்க * மழு வாளில் வென்ற திறலோன் **
பெரு நில மங்கை மன்னர் மலர் மங்கை
நாதர் * புல மங்கை கேள்வர் புகழ் சேர் *
பெரு நிலம் உண்டு உமிழ்ந்த பெரு வாயர் ஆகி
அவர் * நம்மை ஆள்வர் பெரிதே 6

இலை மலி பள்ளி எய்தி இது மாயம்
என்ன * இனம் ஆய மான் பின் எழில் சேர் *
அலை மலி வேற்கணாளை அகல்விப்பதற்கு *
ஓர் உருவாய மானை அமையா *
கொலை மலி எய்துவித்த கொடியோன்
இலங்கை * பொடியாக வென்றி அமருள் *
சிலை மலி செஞ்சரங்கள் செல உய்த்த
நங்கள் * திருமால் நமக்கோர் அரணே 7

முன் உலகங்கள் ஏழும் இருள் மண்டி உண்ண *
முதலோடு வீடும் அறியாது *
என் இது? வந்தது என்ன இமையோர்
திசைப்ப * எழில் வேதம் இன்றி மறைய **
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும்
நல்கி * இருள் தீர்ந்து இவ்வைய மகிழ *
அன்னம் அதாய் இருந்து அங்கு அற நூல்
உரைத்த * அது நம்மை ஆளும் அரசே 8

துணை நிலை மற்றெமக்கோர் உளது என்றிராது *
தொழுமின்கள் தொண்டர்! * தொலைய
உண முலை முன் கொடுத்த உரவோளது ஆவி *
உக உண்டு வெண்ணெய் மருவி **
பணைமுலை ஆயர் மாதர் உரலோடு
கட்ட * அதனோடும் ஓடி அடல் சேர் *
இணை மருதிற்று வீழ நடை கற்ற
தெற்றல் * வினை பற்றறுக்கும் விதியே 9

** கொலை கெழு செம்முகத்த களிறு ஒன்று
 கொன்று * கொடியோன் இலங்கை பொடியா *
சிலை கெழு செஞ்சரங்கள் செல உய்த்த
 நங்கள் * திருமாலை வேலை புடை சூழ் **
கலி கெழு மாட வீதி வயல் மங்கை
 மன்னு * கலிகன்றி சொன்ன பனுவல் *
ஒலி கெழு பாடல் பாடி உழல்கின்ற
 தொண்டர் * அவர் ஆள்வர் உம்பர் உலகே 10

அடிவரவு: நிலை செருமிகு தீதறு தளை வெந்திறல் இருநிலம் இலைமலி முன் துணை கொலை மான்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பதினோராம் பத்து

ஐந்தாம் திருமொழி - மானமரும்
இரண்டு தோழியர் எம்பெருமானது ஸௌலப்யத்தையும் பரத்வத்தையும் எதிர் எதிராகக் கூறுதல்

** மான் அமரு மென்னோக்கி * வைதேவி இன் துணையா *
கான் அமரும் கல் அதர் போய்க் * காடுறைந்தான் காண் ஏடீ! **
கான் அமரும் கல் அதர் போய்க் * காடுறைந்த பொன் அடிக்கள் *
வானவர் தம் சென்னி * மலர் கண்டாய் சாழலே! 1

தந்தை தளை கழலத் * தோன்றிப் போய் * ஆய்ப்பாடி
நந்தன் குல மதலையாய் * வளர்ந்தான் காண் ஏடீ! **
நந்தன் குல மதலையாய் வளர்ந்தான் * நான்முகற்குத்
தந்தை காண் * எந்தை பெருமான் காண் சாழலே! 2

ஆழ் கடல் சூழ் வையகத்தார் * ஏசப் போய் * ஆய்ப்பாடித்
தாழ் குழலார் வைத்த * தயிர் உண்டான் காண் ஏடீ! **
தாழ் குழலார் வைத்த * தயிர் உண்ட பொன் வயிறு * இவ்
வேழ் உலகும் உண்டும் * இடம் உடைத்தால் சாழலே! 3

அறியாதார்க்கு * ஆனாயன் ஆகிப் போய் * ஆய்ப்பாடி
உறி ஆர் நறுவெண்ணெய் * உண்டுகந்தான் காண் ஏடீ! **
உறி ஆர் நறுவெண்ணெய் * உண்டுகந்த பொன் வயிற்றுக்கு *
எறி நீர் உலகனைத்தும் * எய்தாதால் சாழலே! 4

வண்ணக் கருங்குழல் * ஆய்ச்சியால் மொத்துண்டு *
கண்ணிக் குறுங்கயிற்றால் * கட்டுண்டான் காண் ஏடீ! **
கண்ணிக் குறுங்கயிற்றால் * கட்டுண்டான் ஆகிலும் *
எண்ணற்கு அரியன் * இமையோர்க்கும் சாழலே! 5

கன்றப் பறை கறங்கக் * கண்டவர் தம் கண் களிப்ப *
மன்றில் மரக்கால் * கூத்தாடினான் காண் ஏடீ! **
மன்றில் மரக்கால் * கூத்தாடினான் ஆகிலும் *
என்றும் அரியன் * இமையோர்க்கும் சாழலே! 6

கோதை வேல் ஐவர்க்காய் * மண் அகலம் கூறிடுவான் *
தூதனாய் மன்னவனால் * சொல் உண்டான் காண் ஏடீ! **
தூதனாய் மன்னவனால் * சொல் உண்டான் ஆகிலும் *
ஓத நீர் வையகம் * முன் உண்டு உமிழ்ந்தான் சாழலே! 7

பார் மன்னர் மங்கப் * படை தொட்டு வெஞ்சமத்து *
தேர் மன்னர்க்காய் * அன்று தேர் ஊர்ந்தான் காண் ஏடீ! **
தேர் மன்னர்க்காய் * அன்று தேர் ஊர்ந்தான் ஆகிலும் *
தார் மன்னர் தங்கள் * தலை மேலான் சாழலே! 8

கண்டார் இரங்கக் * கழியக் குறள் உருவாய் *
வண்தாரான் வேள்வியில் * மண் இரந்தான் காண் ஏடீ! **
வண்தாரான் வேள்வியில் * மண் இரந்தான் ஆகிலும் *
விண்டேழ் உலகுக்கும் * மிக்கான் காண் சாழலே! 9

** கள்ளத்தால் மாவலியை * மூவடி மண் கொண்டளந்தான் *
வெள்ளத்தான் வேங்கடத்தான் * என்பரால் காண் ஏடீ! **
வெள்ளத்தான் * வேங்கடத்தானேலும் * கலிகன்றி
உள்ளத்தின் உள்ளே * உளன் கண்டாய் சாழலே! 10

அடிவரவு: மானமரும் தந்தை ஆழ்கடல் அறியாதார்க்கு வண்ணம் கன்ற கோதை பார்மன்னர் கண்டார் கள்ளத்தால் மைந்நின்ற

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பதினோராம் பத்து

ஆறாம் திருமொழி - மைந்நின்ற
ப்ரளய ஆபத்தில் பாதுகாத்த எம்பெருமானையே ஆஶ்ரயிக்கும்படி உலகத்தார்க்கு உபதேசித்தல்

** மைந்நின்ற கருங்கடல் வாய் உலகின்றி *
வானவரும் யாமும் எல்லாம் *
நெய்ந்நின்ற சக்கரத்தன் திருவயிற்றில் *
நெடுங்காலம் கிடந்தது ஓரீர் **
எந்நன்றி செய்தாரா * ஏதிலோர்
தெய்வத்தை ஏத்துகின்றீர்? *
செய்ந்நன்றி குன்றேன்மின் * தொண்டர்காள்!
அண்டனையே ஏத்தீர்களே 1

நில்லாத பெருவெள்ளம் * நெடுவிசும்பின்
மீதோடி நிமிர்ந்த காலம் *
மல் ஆண்ட தடக்கையால் * பகிரண்டம்
அகப்படுத்த காலத்து ** அன்று
எல்லாரும் அறியாரோ? * எம்பெருமான்
உண்டுமிழ்ந்த எச்சில் தேவர் *
அல்லாதார் தாம் உளரே? * அவன் அருளே
உலகாவது அறியீர்களே? 2

நெற்றி மேல் கண்ணானும் * நிறை மொழி வாய்
நான்முகனும் நீண்ட நால் வாய் *
ஒற்றைக் கை வெண்பகட்டின் * ஒருவனையும்
உள்ளிட்ட அமரரோடும் **
வெற்றிப் போர்க் கடல் அரையன் * விழுங்காமல்
தான் விழுங்கி உய்யக் கொண்ட *
கொற்றப் போர் ஆழியான் * குணம் பரவாச்
சிறு தொண்டர் கொடியவாறே! 3

பனிப் பரவைத் திரை ததும்பப் * பார் எல்லாம்
நெடுங்கடலே ஆன காலம் *
இனிக் களைகண் இவர்க்கில்லை என்று * உலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி **
முனித் தலைவன் முழங்கொளி சேர் * திருவயிற்றில்
வைத்து உம்மை உய்யக் கொண்ட *
கனி களவத் திரு உருவத்து ஒருவனையே *
கழல் தொழுமா கல்லீர்களே 4

பார் ஆரும் காணாமே * பரவை மா
நெடுங்கடலே ஆன காலம் *
ஆரானும் அவனுடைய திருவயிற்றில் *
நெடுங்காலம் கிடந்தது ** உள்ளத்து
ஓராத உணர்விலீர்! உணருதிரேல் *
உலகளந்த உம்பர் கோமான் *
பேராளன் பேர் ஆன * பேர்கள்
ஆயிரங்களுமே பேசீர்களே 5

பேய் இருக்கு நெடுவெள்ளம் * பெருவிசும்பின்
மீதோடிப் பெருகு காலம் *
தாய் இருக்கும் வண்ணமே * உம்மைத் தன்
வயிற்று இருத்தி உய்யக் கொண்டான் **
போயிருக்க மற்று இங்கோர் * புதுத் தெய்வம்
கொண்டாடும் தொண்டீர்! * பெற்ற
தாய் இருக்க மணை வெந்நீர் ஆட்டுதிரோ? *
மாட்டாத தகவற்றீரே 6

மண்ணாடும் விண்ணாடும் * வானவரும்
தானவரும் மற்றும் எல்லாம் *
உண்ணாத பெருவெள்ளம் * உண்ணாமல்
தான் விழுங்கி உய்யக் கொண்ட **
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் *
கழல் சூடி அவனை உள்ளத்து *
எண்ணாத மானிடத்தை * எண்ணாத
போது எல்லாம் இனியவாறே 7

மறம் கிளர்ந்த கருங்கடல் நீர் * உரம் துரந்து
பரந்தேறி அண்டத்து அப்பால் *
புறம் கிளர்ந்த காலத்துப் * பொன் உலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி **
அறம் கிளர்ந்த திருவயிற்றின் * அகம்படியில்
வைத்து உம்மை உய்யக் கொண்ட *
நிறம் கிளர்ந்த கருஞ்சோதி * நெடுந்தகையை
நினையாதார் நீசர் தாமே 8

அண்டத்தின் முகடழுந்த * அலை முந்நீர்த்
திரை ததும்ப ஆவா! என்று *
தொண்டர்க்கும் அமரர்க்கும் * முனிவர்க்கும்
தான் அருளி ** உலகம் ஏழும்
உண்டொத்த திருவயிற்றின் * அகம்படியில்
வைத்து உம்மை உய்யக் கொண்ட *
கொண்டற்கை மணிவண்ணன் * தண்குடந்தை
நகர் பாடி ஆடீர்களே 9

** தேவரையும் அசுரரையும் * திசைகளையும்
கடல்களையும் மற்றும் முற்றும் *
யாவரையும் ஒழியாமே * எம்பெருமான்
உண்டுமிழ்ந்தது அறிந்து சொன்ன **
கா வளரும் பொழில் மங்கைக் * கலிகன்றி
ஒலி மாலை கற்று வல்லார் *
பூ வளரும் திருமகளால் அருள் பெற்றுப் *
பொன் உலகில் பொலிவர் தாமே 10

அடிவரவு: மை நில்லாத நெற்றி பனி பாராரும் பேய் மண் மறம் அண்டத்தின் தேவரை நீள்நாகம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பதினோராம் பத்து

ஏழாம் திருமொழி - நீள்நாகம்
'எம்பெருமான் திறத்தில் ஈடுபடாத அவயங்கள் பயன் அற்றன' என்று கூறல்

** நீள் நாகம் சுற்றி * நெடு வரை நட்டு * ஆழ் கடலைப்
பேணான் கடைந்து * அமுதம் கொண்டு உகந்த பெம்மானை **
பூண் ஆர மார்வனைப் * புள் ஊரும் பொன் மலையை *
காணாதார் கண் என்றும் * கண்ண் அல்ல கண்டாமே 1

நீள்வான் குறள் உருவாய் * நின்று இரந்து மாவலி மண் *
தாளால் அளவிட்ட * தக்கணைக்கு மிக்கானை **
தோளாத மாமணியைத் * தொண்டர்க்கு இனியானை *
கேளாச் செவிகள் * செவி அல்ல கேட்டாமே 2

தூயானைத் * தூய மறையானை * தென் ஆலி
மேயானை * மேவாள் உயிருண்டு அமுதுண்ட
வாயானை ** மாலை வணங்கி * அவன் பெருமை
பேசாதார் * பேச்சென்றும் * பேச்சல்ல கேட்டாமே 3

கூடா இரணியனைக் * கூர் உகிரால் மார்விடந்த *
ஓடா அடல் அரியை * உம்பரார் கோமானை **
தோடார் நறுந்துழாய் * மார்வனை ஆர்வத்தால் *
பாடாதார் பாட்டென்றும் * பாட்டல்ல கேட்டாமே 4

மை ஆர் கடலும் * மணி வரையும் மாமுகிலும் *
கொய் ஆர் குவளையும் * காயாவும் போன்று இருண்ட
மெய்யானை * மெய்ய மலையானைச் * சங்கேந்தும்
கையானை * கை தொழாக் * கை அல்ல கண்டாமே 5

கள்ளார் துழாயும் * கணவலரும் கூவிளையும் *
முள்ளார் முளரியும் * ஆம்பலும் முன் கண்டக்கால் **
புள்ளாய் ஓர் ஏனமாய்ப் * புக்கிடந்தான் பொன் அடிக்கு என்று *
உள்ளாதார் உள்ளத்தை * உள்ளமாக் கொள்ளோமே 6

கனையார் கடலும் * கருவிளையும் காயாவும்
அனையானை * அன்பினால் ஆர்வத்தால் ** என்றும்
சுனையார் மலர் இட்டுத் * தொண்டராய் நின்று *
நினையாதார் நெஞ்சென்றும் * நெஞ்சல்ல கண்டாமே 7

வெறியார் கருங்கூந்தல் * ஆய்ச்சியர் வைத்த *
உறியார் நறுவெண்ணெய் * தான் உகந்து உண்ட
சிறியானை ** செங்கண் நெடியானைச் * சிந்தித்து
அறியாதார் * என்றும் அறியாதார் கண்டாமே 8

** தேனோடு வண்டாலும் * திருமாலிருஞ்சோலை *
தான் இடமாக் கொண்டான் * தடமலர்க் கண்ணிக்காய் **
ஆன்விடை ஏழ் அன்று அடர்த்தாற்கு * ஆளானார் அல்லாதார் *
மானிடவர் அல்லர் என்று * என் மனத்தே வைத்தேனே 9

** மெய் நின்ற பாவம் அகல * திருமாலைக்
கை நின்ற ஆழியான் * சூழும் கழல் சூடி **
கை நின்ற வேற்கைக் * கலியன் ஒலி மாலை *
ஐயொன்றும் ஐந்தும் * இவை பாடி ஆடுமினே 10

அடிவரவு: நீள்நாகம் நீள்வான் தூயான் கூடா மையார் கள்ளார் கனை வெறி தேனொடு மெய் மாற்றம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமொழி
பதினோராம் பத்து

எட்டாம் திருமொழி - மாற்றமுள
'தேஹ சம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேண்டும்'
என்று ஆழ்வார் எம்பெருமானைப் ப்ரார்த்தித்தல்

** மாற்றம் உள * ஆகிலும் சொல்லுவன் * மக்கள்
தோற்றக் குழி * தோற்றுவிப்பாய் கொல்? என்று இன்னம் **
ஆற்றங்கரை வாழ் மரம் போல * அஞ்சுகின்றேன் *
நாற்றச் சுவை * ஊறொலி ஆகிய நம்பீ! 1

சீற்றம் உள * ஆகிலும் செப்புவன் * மக்கள்
தோற்றக் குழி * தோற்றுவிப்பாய் கொல் என்று அஞ்சி **
காற்றத்து இடைப்பட்ட * கலவர் மனம் போல *
ஆற்றத் துளங்கா நிற்பன் * ஆழி வலவா! 2

தூங்கார் பிறவிக்கள் * இன்னம் புகப் பெய்து *
வாங்காய் என்று சிந்தித்து * நான் அதற்கு அஞ்சி **
பாம்போடு ஒரு கூரையிலே * பயின்றாற் போல் *
தாங்காது உள்ளம் தள்ளும் * என் தாமரைக் கண்ணா! 3

உருவார் பிறவிக்கள் இன்னம் புகப் பெய்து *
திரிவாய் என்று சிந்தித்தி * என்று அதற்கு அஞ்சி **
இரு பாடு எரி கொள்ளியின் * உள் எறும்பே போல் *
உருகா நிற்கும் என் உள்ளம் * ஊழி முதல்வா! 4

கொள்ளக் குறையாத * இடும்பைக் குழியில் *
தள்ளி புகப் பெய்தி கொல்? * என்று அதற்கு அஞ்சி **
வெள்ளத்து இடைப்பட்ட * நரி இனம் போலே *
உள்ளம் துளங்கா நிற்பன் * ஊழி முதல்வா! 5

** படை நின்ற * பைந்தாமரையோடு * அணி நீலம்
மடை நின்று அலரும் * வயல் ஆலி மணாளா! **
இடையன் எறிந்த மரமே * ஒத்து இராமே *
அடைய அருளாய் * எனக்கு உன்தன் அருளே 6

** வேம்பின் புழு * வேம்பு அன்றி உண்ணாது * அடியேன்
நான் பின்னும் * உன் சேவடி அன்றி நயவேன் **
தேம்பல் இளந்திங்கள் * சிறை விடுத்து * ஐவாய்ப்
பாம்பின் அணைப் * பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ! 7

** அணியார் பொழில் சூழ் * அரங்க நகர் அப்பா! *
துணியேன் இனி * நின் அருள் அல்லது எனக்கு **
மணியே! மணி மாணிக்கமே! * மதுசூதா! *
பணியாய் எனக்கு உய்யும் வகை * பரஞ்சோதீ! 8

** நந்தா நரகத்து அழுந்தா வகை * நாளும்
எந்தாய்! தொண்டர் ஆனவர்க்கு * இன்னருள் செய்வாய் **
சந்தோகா! தலைவனே! * தாமரைக் கண்ணா! *
அந்தோ! அடியேற்கு * அருளாய் உன் அருளே 9

** குன்றம் எடுத்து * ஆநிரை காத்தவன் தன்னை *
மன்றில் புகழ் * மங்கை மன் கலிகன்றி சொல் **
ஒன்று நின்ற ஒன்பதும் * வல்லவர் தம் மேல் *
என்றும் வினை ஆயின * சார கில்லாவே 10

அடிவரவு: மாற்றம் சீற்றம் உருவார் கொள்ள படை வேம்பின் அணியார் நந்தா குன்றம் நிதியினை

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

திருக்குறுந்தாண்டகம்

** நிதியினைப் பவளத் தூணை * நெறிமையால் நினைய வல்லார் *
கதியினைக் கஞ்சன் மாளக் * கண்டு முன் அண்டம் ஆளும் **
மதியினை மாலை வாழ்த்தி * வணங்கி என் மனத்து வந்த *
விதியினைக் கண்டு கொண்ட * தொண்டனேன் விடுகிலேனே 1

காற்றினைப் புனலைத் தீயைக் * கடி மதிள் இலங்கை செற்ற
ஏற்றினை * இமயம் மேய * எழில் மணித் திரளை ** இன்ப
ஆற்றினை அமுதம் தன்னை * அவுணன் ஆர் உயிரை உண்ட
கூற்றினை * குணம் கொண்டு உள்ளம்! * கூறு நீ கூறுமாறே 2

பாய் இரும் பரவை தன்னுள் * பருவரை திரித்து * வானோர்க்
காய் இருந்து அமுதம் கொண்ட * அப்பனை எம்பிரானை **
வேய் இருஞ்சோலை சூழ்ந்து * விரி கதிர் இரிய நின்ற *
மாயிருஞ்சோலை மேய * மைந்தனை வணங்கினேனே 3

கேட்க யான் உற்றதுண்டு * கேழலாய் உலகம் கொண்ட *
பூக் கெழு வண்ணனாரைப் * போதரக் கனவில் கண்டு **
வாக்கினால் கருமம் தன்னால் * மனத்தினால் சிரத்தை தன்னால் *
வேட்கை மீதூர வாங்கி * விழுங்கினேற்கு இனியவாறே 4

இரும்பு அனன்றுண்ட நீர் போல் * எம்பெருமானுக்கு * என்தன்
அரும் பெறல் அன்பு புக்கிட்டு * அடிமை பூண்டு உய்ந்து போனேன் **
வரும் புயல் வண்ணனாரை * மருவி என் மனத்து வைத்து *
கரும்பின் இன்சாறு போலப் * பருகினேற்கு இனியவாறே 5

மூவரில் முதல்வனாய * ஒருவனை உலகம் கொண்ட *
கோவினைக் குடந்தை மேய * குருமணித் திரளை ** இன்பப்
பாவினைப் பச்சைத் தேனைப் * பைம்பொன்னை அமரர் சென்னிப்
பூவினை * புகழும் தொண்டர் * என் சொல்லிப் புகழ்வர் தாமே? 6

இம்மையை மறுமை தன்னை * எமக்கு வீடாகி நின்ற *
மெய்ம்மையை விரிந்த சோலை * வியன் திருவரங்கம் மேய **
செம்மையைக் கருமை தன்னைத் * திருமலை ஒருமையானை *
தன்மையை நினைவார் என்தன் * தலை மிசை மன்னுவாரே 7

வானிடைப் புயலை மாலை * வரை இடைப் பிரசம் ஈன்ற *
தேன் இடைக் கரும்பின் சாற்றைத் * திருவினை மருவி வாழார் **
மானிடப் பிறவி அந்தோ! * மதிக்கிலர் கொள்க * தந்தம்
ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு * உறுதியே வேண்டினாரே 8

உள்ளமோ ஒன்றில் நில்லாது * ஓசையின் எரி நின்றுண்ணும் *
கொள்ளி மேல் எறும்பு போலக் * குழையுமால் என்தன் உள்ளம் **
தெள்ளியீர்! தேவர்க்கெல்லாம் * தேவராய் உலகம் கொண்ட *
ஒள்ளியீர்! உம்மை அல்லால் * எழுமையும் துணை இலோமே 9

சித்தமும் செவ்வை நில்லாது * என் செய்கேன் தீ வினையேன்? *
பத்திமைக்கு அன்புடையேன் ஆவதே? * பணியாய் எந்தாய்! **
முத்தொளி மரகதமே! * முழங்கொளி முகில் வண்ணா! * என்
அத்த! நின் அடிமை அல்லால் * யாதும் ஒன்று அறிகிலேனே 10

தொண்டெல்லாம் பரவி நின்னைத் * தொழுது அடி பணியுமாறு
கண்டு * தான் கவலை தீர்ப்பான் ஆவதே? * பணியாய் எந்தாய்! **
அண்டமாய் எண்திசைக்கும் * ஆதியாய்! நீதி ஆன *
பண்டமாம் பரம சோதி! * நின்னையே பரவுவேனே 11

ஆவியை அரங்க மாலை * அழுக்குடம்பு எச்சில் வாயால் *
தூய்மையில் தொண்டனேன் நான் * சொல்லினேன் தொல்லை நாமம் **
பாவியேன் பிழைத்த ஆறென்று * அஞ்சினேற்கு அஞ்சல் என்று *
காவி போல் வண்ணர் வந்து * என் கண்ணுளே தோன்றினாரே 12

இரும்பு அனன்றுண்ட நீரும் * போதரும் கொள்க * என்தன்
அரும் பிணி பாவம் எல்லாம் * அகன்றன என்னை விட்டு **
சுரும்பமர் சோலை சூழ்ந்த * அரங்க மா கோயில் கொண்ட *
கரும்பினைக் கண்டு கொண்டு * என் கண்ணிணை களிக்குமாறே! 13

காவியை வென்ற கண்ணார் * கலவியே கருதி * நாளும்
பாவியேன் ஆக எண்ணி * அதனுள்ளே பழுத்தொழிந்தேன் **
தூவி சேர் அன்னம் மன்னும் * சூழ் புனல் குடந்தையானை *
பாவியேன் பாவியாது * பாவியேன் ஆயினேனே 14

முன் பொலா இராவணன் தன் * முது மதிள் இலங்கை வேவித்து *
அன்பினால் அனுமன் வந்து * ஆங்கு அடியிணை பணிய நின்றார்க்கு **
என்பெலாம் உருகி உக்கிட்டு * என்னுடை நெஞ்சம் என்னும் *
அன்பினால் ஞான நீர் கொண்டு * ஆட்டுவன் அடியனேனே 15

மாய மான் மாயச் செற்று * மருதிற நடந்து * வையம்
தாய மா பரவை பொங்கத் * தடவரை திரித்து * வானோர்க்கு
ஈயு மால் எம்பிரானார்க்கு * என்னுடைச் சொற்கள் என்னும் *
தூய மா மாலை கொண்டு * சூட்டுவன் தொண்டனேனே 16

பேசினார் பிறவி நீத்தார் * பேர் உளான் பெருமை பேசி *
ஏசினார் உய்ந்து போனார் * என்பது இவ்வுலகின் வண்ணம் **
பேசினேன் ஏச மாட்டேன் * பேதையேன் பிறவி நீத்தற்கு *
ஆசையோ பெரிது கொள்க * அலை கடல் வண்ணர் பாலே 17

இளைப்பினை இயக்கம் நீக்கி * இருந்து முன் இமையைக் கூட்டி *
அளப்பில் ஐம்புலன் அடக்கி * அன்பு அவர் கண்ணே வைத்து **
துளக்கமில் சிந்தை செய்து * தோன்றலும் சுடர் விட்டு * ஆங்கே
விளக்கினை விதியின் காண்பார் * மெய்ம்மையே காண்கிற்பாரே 18

** பிண்டியார் மண்டை ஏந்திப் * பிறர் மனை திரிதந்து உண்ணும் *
முண்டியான் சாபம் தீர்த்த * ஒருவன் ஊர் ** உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம் * கச்சி பேர் மல்லை என்று
மண்டினார் * உய்யல் அல்லால் * மற்றையார்க்கு உய்யலாமே? 19

** வானவர் தங்கள் கோனும் * மலர் மிசை அயனும் * நாளும்
தேமலர் தூவி ஏத்தும் * சேவடிச் செங்கண் மாலை **
மான வேல் கலியன் சொன்ன * வண்தமிழ் மாலை நாலைந்தும் *
ஊனம் அதின்றி வல்லார் * ஒளி விசும்பு ஆள்வர் தாமே 20

அடிவரவு: நிதியினை காற்றினை பாயிரும் கேட்க இரும்பு மூவரில் இம்மையை வானிடை உள்ளம் சித்தம் தொண்டு ஆவியை இரும்பு காவியை முன்பொலா மாயம் பேசினார் இளைப்பினை பிண்டியார் வானவர் மின்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

திருநெடுந்தாண்டகம்

** மின் உருவாய் முன் உருவில் வேதம் நான்காய் *
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய் *
பின் உருவாய் முன் உருவில் பிணி மூப்பு இல்லாப் *
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது ** எண்ணும்
பொன் உருவாய் மணி உருவில் பூதம் ஐந்தாய்ப் *
புனல் உருவாய் அனல் உருவில் திகழும் சோதி *
தன் உருவாய் என் உருவில் நின்ற எந்தை *
தளிர் புரையும் திருவடி என் தலை மேலவே 1

பார் உருவி நீர் எரி கால் விசும்பும் ஆகிப் *
பல் வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற *
ஏர் உருவில் மூவருமே என்ன நின்ற *
இமையவர் தம் திருவுரு வேறு எண்ணும் போது **
ஓர் உருவம் பொன் உருவம் ஒன்று செந்தீ *
ஒன்று மாகடல் உருவம் ஒத்து நின்ற *
மூ உருவும் கண்ட போது ஒன்றாம் சோதி *
முகில் உருவம் எம் அடிகள் உருவம் தானே 2

திருவடிவில் கருநெடுமால் சேயன் என்றும் *
திரேதைக்கண் வளை உருவாய்த் திகழ்ந்தான் என்றும் *
பெருவடிவில் கடல் அமுதம் கொண்ட காலம் *
பெருமானைக் கரு நீல வண்ணன் தன்னை **
ஒரு வடிவத்து ஓர் உருவென்று உணரல் ஆகா *
ஊழிதோறூழி நின்று ஏத்தல் அல்லால் *
கருவடிவில் செங்கண்ண வண்ணன் தன்னைக் *
கட்டுரையே யார் ஒருவர் காண்கிற்பாரே? 3

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை *
இருநிலம் கால் தீ நீர் விண் பூதம் ஐந்தாய் *
செந்திறத்த தமிழ் ஓசை வட சொல் ஆகித் *
திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறாகி **
அந்தரத்தில் தேவர்க்கும் அறியல் ஆகா
அந்தணனை * அந்தணர் மாட்டு அந்தி வைத்த
மந்திரத்தை * மந்திரத்தால் மறவாதென்றும்
வாழுதியேல் * வாழலாம் மட நெஞ்சமே! 4

ஒண்மிதியில் புனல் உருவி ஒருகால் நிற்ப *
ஒருகாலும் காமரு சீர் அவுணன் உள்ளத்து *
எண்மதியும் கடந்து அண்ட மீது போகி *
இருவிசும்பின் ஊடு போய் எழுந்து ** மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித் *
தாரகையின் புறம் தடவி அப்பால் மிக்கு *
மண் முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை *
மலர் புரையும் திருவடியே வணங்கினேனே 5

அலம் புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன் *
அஞ்சிறைப் புள் தனிப் பாகன் அவுணர்க்கு என்றும் *
சலம் புரிந்து அங்கு அருள் இல்லாத் தன்மையாளன் *
தான் உகந்த ஊர் எல்லாம் தன் தாள் பாடி **
நிலம் பரந்து வரும் கலுழிப் பெண்ணை ஈர்த்த *
நெடு வேய்கள் படு முத்தம் உந்த உந்தி *
புலம் பரந்து பொன் விளைக்கும் பொய்கை வேலிப் *
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே! 6

வற்புடைய வரை நெடுந்தோள் மன்னர் மாள *
வடிவாய மழுவேந்தி உலகம் ஆண்டு *
வெற்புடைய நெடுங்கடலுள் தனி வேல் உய்த்த *
வேள் முதலா வென்றான் ஊர் விந்தை மேய **
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட *
கடிபொழில் சூழ் நெடுமறுகில் கமல வேலி *
பொற்புடைய மலை அரையன் பணிய நின்ற *
பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே! 7

** நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்! *
நிலாத் திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய் * ஒண் துறை நீர் வெஃகா உள்ளாய்! *
உள்ளுவார் உள்ளத்தாய்! ** உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா! *
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! * பேராது என் நெஞ்சின் உள்ளாய்! *
பெருமான்! உன் திருவடியே பேணினேனே 8

வங்கத்தால் மாமணி வந்துந்து முந்நீர்
மல்லையாய்! * மதிட்கச்சி ஊராய்! பேராய்! *
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன் *
குல வரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! ** பாற்கடலாய்! பாரின் மேலாய்! *
பனி வரையின் உச்சியாய்! பவள வண்ணா! *
எங்குற்றாய்? எம்பெருமான்! உன்னை நாடி *
ஏழையேன் இங்ஙனமே உழி தருகேனே! 9

பொன் ஆனாய்! பொழில் ஏழும் காவல் பூண்ட *
புகழ் ஆனாய்! இகழ்வாய தொண்டனேன் நான் *
என் ஆனாய்! என் ஆனாய்! என்னல் அல்லால் *
என் அறிவன் ஏழையேன்? ** உலகம் ஏத்தும்
தென் ஆனாய்! வட ஆனாய்! குடபால் ஆனாய்! *
குணபால மத யானாய்! இமையோர்க்கு என்றும்
முன் ஆனாய்! * பின்னானார் வணங்கும் சோதி! *
திருமூழிக்களத்தானாய்! முதல் ஆனாயே! 10

பட்டுடுக்கும் அயர்த்து இரங்கும் பாவை பேணாள் *
பனி நெடுங்கண் நீர் ததும்பப் பள்ளி கொள்ளாள் *
எட்டுனைப் போது என் குடங்கால் இருக்க கில்லாள் *
எம்பெருமான் திருவரங்கம் எங்கே? என்னும் **
மட்டு விக்கி மணி வண்டு முரலும் கூந்தல் *
மட மானை இது செய்தார் தம்மை * மெய்யே
கட்டுவிச்சி சொல் என்னச் சொன்னாள் நங்காய்! *
கடல் வண்ணர் இது செய்தார் காப்பார் ஆரே? 11

நெஞ்சுருகிக் கண் பனிப்ப நிற்கும் சோரும் *
நெடிது உயிர்க்கும் உண்டறியாள் உறக்கம் பேணாள் *
நஞ்சரவில் துயில் அமர்ந்த நம்பீ! என்னும் *
வம்பார் பூம் வயல் ஆலி மைந்தா! என்னும் **
அஞ்சிறைய புட்கொடியே ஆடும் பாடும் *
அணி அரங்கம் ஆடுதுமோ? தோழீ! என்னும் *
என் சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன் *
இருநிலத்து ஓர் பழி படைத்தேன் ஏ! பாவமே! 12

கல் எடுத்துக் கல் மாரி காத்தாய்! என்றும் *
காமரு பூங்கச்சி ஊரகத்தாய்! என்றும் *
வில் இறுத்து மெல்லியல் தோள் தோய்ந்தாய்! என்றும் *
வெஃகாவில் துயில் அமர்ந்த வேந்தே! என்றும் **
மல் அடர்த்து மல்லரை அன்று அட்டாய்! என்றும் *
மா கீண்ட கைத்தலத்து என் மைந்தா! என்றும் *
சொல் எடுத்துத் தன் கிளியைச் சொல்லே என்று *
துணை முலை மேல் துளி சோரச் சோர்கின்றாளே! 13

முளைக் கதிரைக் குறுங்குடியுள் முகிலை * மூவா
மூ உலகும் கடந்து அப்பால் முதலாய் நின்ற *
அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய
அந்தணனை * அந்தணர் தம் சிந்தையானை **
விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில் *
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு *
வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக என்று *
மடக் கிளியைக் கை கூப்பி வணங்கினாளே 14

கல் உயர்ந்த நெடுமதிள் சூழ் கச்சி மேய
களிறு என்றும் * கடல் கிடந்த கனியே! என்றும் *
அல்லி அம்பூமலர்ப் பொய்கைப் பழன வேலி *
அணி அழுந்தூர் நின்றுகந்த அம்மான்! என்றும் **
சொல் உயர்ந்த நெடு வீணை முலை மேல் தாங்கித் *
தூ முறுவல் நகை இறையே தோன்ற நக்கு *
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே *
மென்கிளி போல் மிக மிழற்றும் என் பேதையே 15

** கன்று மேய்த்து இனிது உகந்த காளாய்! என்றும் *
கடி பொழில் சூழ் கணபுரத்து என் கனியே! என்றும் *
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும் *
வட திருவேங்கடம் மேய மைந்தா! என்றும் **
வென்று அசுரர் குலம் களைந்த வேந்தே! என்றும் *
விரி பொழில் சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும் *
துன்று குழல் கருநிறத்து என் துணையே! என்றும் *
துணை முலை மேல் துளி சோரச் சோர்கின்றாளே! 16

பொங்கார் மெல்லிளம் கொங்கை பொன்னே பூப்பப் *
பொருகயல் கண் நீர் அரும்பப் போந்து நின்று *
செங்கால மடப் புறவம் பெடைக்குப் பேசும் *
சிறு குரலுக்கு உடல் உருகிச் சிந்தித்து ** ஆங்கே
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித் *
தண்கோவலூர் பாடி ஆடக் கேட்டு *
நங்காய்! நம் குடிக்கு இதுவோ நன்மை? என்ன *
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே 17

கார் வண்ணம் திருமேனி கண்ணும் வாயும் *
கைத்தலமும் அடி இணையும் கமல வண்ணம் *
பார் வண்ண மட மங்கை பத்தர் * பித்தர்
பனி மலர் மேல் பாவைக்குப் பாவம் செய்தேன் **
ஏர் வண்ண என் பேதை என் சொல் கேளாள் *
எம்பெருமான் திருவரங்கம் எங்கே? என்னும் *
நீர் வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும் *
இதுவன்றோ நிறைவு அழிந்தார் நிற்குமாறே! 18

முற்றாரா வனமுலையாள் பாவை * மாயன்
மொய் அகலத்துள் இருப்பாள் அஃதும் கண்டும்
அற்றாள் * தன் நிறைவு அழிந்தாள் ஆவிக்கின்றாள் *
அணி அரங்கம் ஆடுதுமோ? தோழீ! என்னும் **
பெற்றேன் வாய்ச் சொல் இறையும் பேசக் கேளாள் *
பேர் பாடித் தண்குடந்தை நகரும் பாடி *
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள் *
பொருவற்றாள் என் மகள் உம் பொன்னும் அஃதே 19

தேர் ஆளும் வாள் அரக்கன் செல்வம் மாளத் *
தென் இலங்கை முன் மலங்கச் செந்தீ ஒல்கி *
போர் ஆளன் ஆயிரம் தோள் வாணன் மாளப் *
பொரு கடலை அரண் கடந்து புக்கு மிக்க
பார் ஆளன் ** பார் இடந்து பாரை உண்டு
பார் உமிழ்ந்து பார் அளந்து * பாரை ஆண்ட
பேர் ஆளன் * பேர் ஓதும் பெண்ணை மண் மேல் *
பெருந்தவத்தள் என்று அல்லால் பேசலாமே? 20

** மை வண்ண நறுங்குஞ்சி குழல் பின் தாழ *
மகரம் சேர் குழை இருபாடு இலங்கி ஆட *
எய் வண்ண வெஞ்சிலையே துணையா * இங்கே
இருவராய் வந்தார் என் முன்னே நின்றார் **
கை வண்ணம் தாமரை வாய் கமலம் போலும் *
கண் இணையும் அரவிந்தம் அடியும் அஃதே *
அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ! *
அவரை நாம் தேவர் என்று அஞ்சினோமே! 21

நைவளம் ஒன்று ஆராயா நம்மை நோக்கா *
நாணினார் போல் இறையே நயங்கள் பின்னும் *
செய்வளவில் என் மனமும் கண்ணும் ஓடி *
எம்பெருமான் திருவடிக் கீழ் அணைய ** இப்பால்
கை வளையும் மேகலையும் காணேன் * கண்டேன்
கன மகரக் குழை இரண்டும் நான்கு தோளும் *
எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில்? என்றேற்கு *
இதுவன்றோ எழில் ஆலி என்றார் தாமே 22

உள்ளூரும் சிந்தை நோய் எனக்கே தந்து * என்
ஒளி வளையும் மா நிறமும் கொண்டார் இங்கே *
தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச் *
சேல் உகளும் திருவரங்கம் நம் ஊர் என்ன **
கள்ளூரும் பைந்துழாய் மாலையானைக் *
கனவிடத்தில் யான் காண்பன் கண்ட போது *
புள்ளூரும் கள்வா! நீ போகேல் என்பன் *
என்றாலும் இது நமக்கோர் புலவி தானே 23

இரு கையில் சங்கு இவை நில்லா எல்லே பாவம்! *
இலங்கொலி நீர் பெரும் பௌவம் மண்டி உண்ட *
பெரு வயிற்ற கருமுகிலே ஒப்பர் வண்ணம் *
பெருந்தவத்தர் அருந்தவத்து முனிவர் சூழ **
ஒரு கையில் சங்கு ஒரு கை மற்றாழி ஏந்தி *
உலகுண்ட பெரு வாயர் இங்கே வந்து * என்
பொருகயற் கண் நீர் அரும்பப் புலவி தந்து *
புனல் அரங்கம் ஊர் என்று போயினாரே 24

மின் இலங்கு திரு உருவும் பெரிய தோளும் *
கரி முனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும் *
தன் அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே *
தாழ்ந்து இலங்கு மகரம் சேர் குழையும் காட்டி **
என் நலனும் என் நிறைவும் என் சிந்தையும் *
என் வளையும் கொண்டு என்னை ஆளும் கொண்டு *
பொன் அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலின் ஊடே *
புனல் அரங்கம் ஊர் என்று போயினாரே 25

தே மருவு பொழில் இடத்து மலர்ந்த போதைத் *
தேன் அதனை வாய் மடுத்து உன் பெடையும் நீயும் *
பூ மருவி இனிதமர்ந்து பொறியில் ஆர்ந்த *
அறு கால சிறு வண்டே! தொழுதேன் உன்னை **
ஆ மருவி நிரை மேய்த்த அமரர் கோமான் *
அணி அழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று *
நீ மருவி அஞ்சாதே நின்று ஓர் மாது *
நின் நயந்தாள் என்றிறையே இயம்பிக் காணே 26

** செங்கால மட நாராய்! இன்றே சென்று *
திருக்கண்ணபுரம் புக்கு என் செங்கண் மாலுக்கு *
என் காதல் என் துணைவர்க்கு உரைத்தி ஆகில் *
இது ஒப்பது எமக்கு இன்பம் இல்லை ** நாளும்
பைங்கானம் ஈதெல்லாம் உனதே ஆகப் *
பழன மீன் கவர்ந்து உண்ணத் தருவன் * தந்தால்
இங்கே வந்து இனிது இருந்து உன் பெடையும் நீயும் *
இருநிலத்தில் இனிது இன்பம் எய்தலாமே 27

தென் இலங்கை அரண் சிதறி அவுணன் மாளச் *
சென்றுலகம் மூன்றினையும் திரிந்தோர் தேரால் *
மன் இலங்கு பாரதத்தை மாள ஊர்ந்த *
வரை உருவின் மா களிற்றைத் தோழீ! * என்தன்
பொன் இலங்கு முலைக் குவட்டில் பூட்டிக் கொண்டு *
போகாமை வல்லேனாய்ப் புலவி எய்தி *
என்னில் அங்கம் எல்லாம் வந்து இன்பம் எய்த *
எப்பொழுதும் நினைந்து உருகி இருப்பன் நானே 28

** அன்று ஆயர் குலமகளுக்கு அரையன் தன்னை *
அலை கடலைக் கடைந்தடு ஐத்த அம்மான் தன்னை *
குன்றாத வலி அரக்கர் கோனை மாளக் * கொடுஞ்சிலை
வாய்ச் சரம் துரந்து குலம் களைந்து
வென்றானை ** குன்றெடுத்த தோளினானை *
விரி திரை நீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானை * தண்குடந்தைக் கிடந்த மாலை *
நெடியானை அடி நாயேன் நினைந்திட்டேனே 29

** மின்னு மாமழை தவழும் மேக வண்ணா! *
விண்ணவர் தம் பெருமானே! அருளாய் என்று *
அன்னமாய் முனிவரோடு அமரர் ஏத்த *
அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை **
மன்னு மாமணி மாட மங்கை வேந்தன் *
மான வேல் பரகாலன் கலியன் சொன்ன *
பன்னிய நூல் தமிழ் மாலை வல்லார் * தொல்லைப்
பழ வினையை முதல் அரிய வல்லார் தாமே 30

அடிவரவு: மின் பார் திருவடிவில் இந்திரற்கும் ஒண்மிதி அலம் வற்பு நீரகம் வங்கத்தால் பொன் பட்டு நெஞ்சு கல் முளை கல்லுயர்ந்த கன்று பொங்கு கார் முற்று தேராளும் மை நைவளம் உள்ளூரும் இருகை மின் தேமருவு செங்கால தென்னிலங்கை அன்றாயர் மின்னுமா வையம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

சாற்றுமுறை

பெரியாழ்வார் அருளிச் செய்தது

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படை போர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

பெரிய ஜீயர் அருளிச் செய்தது

ஸர்வதே3ஸ த3ஶாகாலேஷ்வவ்யாஹத பராக்ரமா |
ராமாநுஜார்ய தி3வ்யாஜ்ஞா வர்த4தாம் அபி4வர்த4தாம் |

கந்தாடை அண்ணன் அருளிச் செய்தது

ராமாநுஜார்ய தி3வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரம் உஜ்வலா |
தி3க3ந்தவ்யாபிநீ பூ4யாத் ஸா ஹி லோக ஹிதைஷிணீ ||

உடையவர் அருளிச் செய்தது

ஸ்ரீமந்! ஸ்ரீரங்க3ஶ்ரியம் அநுபத்3ரவாம் அநுதி3நம் ஸம்வர்த4ய |
ஸ்ரீமந்! ஸ்ரீரங்க3ஶ்ரியம் அநுபத்3ரவாம் அநுதி3நம் ஸம்வர்த4ய ||

பெரிய ஜீயர் அருளிச் செய்தது

நம: ஸ்ரீஶைல நாத2ாய குந்தீ நக2ர ஜந்மநே |
ப்ரஸாத3லப்3த4 பரம ப்ராப்ய கைங்கர்ய ஶாலிநே ||

நம்பெருமாள் அருளிச் செய்தது

ஸ்ரீஶைலேஶ த3யாபாத்ரம் தீ4பக்த்யாதி3 கு3ணார்ணவம் |
யதீந்த்3ர ப்ரவணம் வந்தே3 ரம்ய ஜாமாதரம் முநிம் ||

மடத்துப் பிள்ளை அருளிச் செய்தது

வாழி திருவாய்மொழிப் பிள்ளை மா தகவால்
வாழும் மணவாள மாமுனிவன் - வாழியவன்
மாறன் திருவாய்மொழிப் பொருளை மாநிலத்தோர்
தேறும்படி உரைக்கும் சீர்

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச் செய்தது

செய்ய தாமரைத் தாளிணை வாழியே
சேலை வாழி திருநாபி வாழியே
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத் திருத்தோளிணை வாழியே
கையும் ஏந்திய முக்கோலும் வாழியே
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாள மாமுனி
புந்தி வாழி புகழ் வாழி வாழியே

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ
சடகோபன் தண்தமிழ் நூல் வாழ - கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே
இன்னும் ஒரு நூற்றாண்டிரும்

நாலாயிர திவ்யப்ரபந்தம்

இரண்டாம் ஆயிரம் முற்றியது